# உதயன்

28°c
கூடிய வெப்பநிலை 32 c
குறைந்த வெப்பநிலை 26 c
மேக மூட்டம், மழையுடன் கூடிய காலநிலை

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ். – 30/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 159 வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 21, ஞாயிறு 04.05.2014



வலி. தெற்கு பிரதேச சபை
04 MAY 2014
பொது சன நூலகம்
ஏழாலை



உதயன் அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே...


## பாக். தீவிரவாதிகளுடன் தொடர்பு; யாழ். வாசி சென்னையில் கைது

யாழ்ப்பாணம், மே 04

பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட இருவரைத் தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சென்னையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்ட இவர்கள் சில தினங்களுக்கு முன்னர் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கண்டியைச் சேர்ந்த ஷுகீர் ஹூசைனுடன் உறவுகளைப் பேணியதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவபாலன் (வயது - 39), சென்னை ராயபுரத்தைச் சேர்ந்த முஹமது சலீம் (வயது - 37) ஆகியோராவர்.

25ஆம் பக்கம் பார்க்க

## பாக். தீவிரவாதிகளுக்கு இலங்கை இந்தியாவைச் சீர்குலைக்கப் பயிற்சி

### பா.ஜ.க பகிரங்கக் குற்றச்சாட்டு

சென்னை, மே 4

இந்தியாவைச் சீர்குலைக்கப் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற பயங்கரவாத அமைப்புகள் இலங்கையில் பயிற்சியைப் பெற்று வருகின்றன. இது இலங்கை அரசுக்கும் தெரிந்தே நடைபெறுகின்றது என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் இல. கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

திருச்சியில் நேற்று மதியம் நடந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவைச் சீர்குலைப்பதற்காகப் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற பயங்கரவாத அமைப்

25ஆம் பக்கம் பார்க்க

# தமிழர்களின் வாழ்விடங்களை சிங்கள மயமாக்குகிறது அரசு

## இராணுவத்தைக் கொண்டு இதைச் செய்விப்பதாக மாவை யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கடும் சீற்றம்

யாழ்ப்பாணம். மே. 4

தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஜனநாயகம் என்ற பெயரில் ஒரு சர்வாதிகார ஆட்சியே நடக்கிறது. இராணுவத்தைப் பயன்படுத்தி தமிழர் வாழ்விடங்களைச் சிங்கள மயமாக்கும் முயற்சியிலே அரசு ஈடுபடுகிறது. தமிழர்களின் இன அடையாளங்களை அழிக்கவும் சதி செய்யப்படுகிறது.

இவ்வாறு காட்டமாகச் சாடினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா.



மாவை சேனாதிராசா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. கிழக்குத் தொகுதிக் கான பிரதேசப் பணிமனைத் திறப்பு விழா நேற்று இடம்பெற் றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மத்தியில் சரியானதொரு கூட்டுத்திட்டத்தை உருவாக்க வேண்டியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாத அதிகாரங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருக்கின்றன.

### உறுப்பினர்கள் கட்சிக்கு கட்டுப்படவில்லை

தேர்தலில் உறுப்பினர்கள் வெற்றி பெற்றதை விட ஒரு சில இடத்தில் நாம் காயப்பட்டிருக்கின்றோம். அந்தக் காயத்தை மாற்றவேண்டும். உறுப்பினர்கள் தங்கள் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப நடந்து கொள்வதுடன் கட்சியின் வேண்டுகோளை நிறைவேற்றாமல் கொள்கைகளை மீறி மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி வருகிறார்கள். வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் இந்தப் பிரச்சினை உள்ளது.

நாங்கள் ஒரு கட்சியாகச் செயற்படவேண்டும் என்ற கருத்து உள்ளது. கூட்டமைப்பு ஒன்றுபட்டு இயங்கவேண்டும். இந்த விடயத்தில் கொள்கை அடிப்படையில், இலட்சியத்

25ஆம் பக்கம் பார்க்க

## 77 ஊடகவியலாளர்கள் கொலை

பரிஸ், மே 4

கடந்த ஆண்டில் 77 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்று, கடந்த ஆண்டில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள், கொல்லப்பட்ட ஊடகப் பணியாளர்கள் மற்றும் சமூக ஊடகவியலாளர்கள் தொடர்பிலான

25ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு ஆசிரியர்களின் சம்பளம் நிறுத்தப்படாது

மேலதிக தகவல்கள் 02 ஆம் பக்கத்தில்

## கமலின் சகோதரர் வீட்டில் ஏ.கே. மீட்பு

யாழ்ப்பாணம், மே 04

ஈ.பி.டி.பியின் முன்னாள் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரனின் சகோதரர் ஒருவரின் வீட்டிலிருந்து நேற்று சனிக்கிழமை இராணுவத்தினரால் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

25ஆம் பக்கம் பார்க்க



தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வலி. கிழக்கு தொகுதிக்கான பணிமனை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் நேற்று திறந்து வைக்கப் பட்டது. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா பணிமனையை திறந்து வைத்தார். (த-14)

## இலங்கையில் மத தீவிரவாதம் பாப்பரசர் பிரான்சிஸ் கண்டனம்

வத்திக்கான், மே. 04

இலங்கையில் மதத் தீவிரவாதிகள் ஒரு மத அடையாளத்தின் அடிப்படையிலான தேசிய ஒற்றுமையைத் தவறான அர்த்தத்தில் ஊக்குவித்து வருவதாகப் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

வத்திக்கான் சென்றுள்ள கொழும்புப் பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான ஆயர்கள் குழு பாப்பரசரைச் சந்தித்தபோதே அவர்



பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும் கருதினால் மல்கம் ரஞ்சித்

25ஆம் பக்கம் பார்க்க

## ஆப்கான் மண்சரிவில் 2,700 பேர் சாவு

காபூல், மே 4

ஆப்கானிஸ்தானின் வடகிழக்கு பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 2,700 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என்று அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் அந்த நாட்டு ராணுவமும், மருத்துவக் குழுக்களும் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. ஆப்கானிஸ்தானின் பாதாக்ஷன் மாகாணத்தில் கடந்த சில நாள்களா

25ஆம் பக்கம் பார்க்க

## தமிழருக்கு நிரந்தரத் தீர்வு தரும் ஆட்சியே வேண்டும்

### நீர்வேலியில் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம். மே 4

தென்னிலங்கையில் யார் ஆட்சி அமைக்கிறார்கள் என்பது பற்றி எமக்கு கவலையில்லை. எமக்கு வேண்டியதெல்லாம் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வே.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. கிழக்குத் தொகுதிக்

25ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீனவர்களின் பிரச்சினை குறித்து இரு தரப்பு அமைச்சுகளும் பேச்சு

கொழும்பு, மே 4

இலங்கை - இந்திய மீனவர் பேச்சைத் தொடர்ந்து இரு தரப்பு அமைச்சரவை மட்டப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளதாகக் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் பேச்சாளர் நரேந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கிடையிலான இரண்டாம் கட்டப் பேச்சு எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து இரு நாட்டு அமைச்சர்களுக்கும் இடையில் முக்கிய பேச்சு நடத்த தமது அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர்களிடையே, எல்லை தாண்டுதல் தொடர்பில் முரண்பாடு ஏற்பட்டிருந்து. இதனையடுத்து இரு தரப்பு அமைச்சரவை மட்டத்திலான பேச்சு டில்லியில் கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையிலான பேச்சு சென்னையில் ஜனவரி 27 ஆம் திகதி இடம் பெற் றிருந்தது.


> “ இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் எதிர் வரும் 12 ஆம் திகதி இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சுக்கு பின்னர் இரு நாட்டு அமைச் சுக்களிடையே 3 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராய திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இரண்டாம் கட்டப் பேச்சு மார்ச் மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தினால் அந்தப் பேச்சு ஒத்தி வைக்கப்பட்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அதுவும் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சியாகத் தடைப்பட்டிருந்த இரண்டாம் கட்டப் பேச்சு எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது. இந்தப் பேச்சு தொடர்பில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில்:

இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சுக்கு பின்னர் இரு நாட்டு அமைச்சுக்களிடையே 3 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராய திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் இந்த விசேட குழு எப்போது சந்தித்துப் பேசும் என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கூட்டத்துக்குச் சென்னையில் இருந்து 28 பேர் கொண்ட குழுவினர் 11 ஆம் திகதி இலங்கை வரவுள்ளனர். அத்துடன் இலங்கை சார்பாகவும் 28 பேர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்திய மத்திய அரசு முன்வைத்த கோரிக்கையை தொடர்ந்து இந்த கூட்டத்தை நடத்த நாம் ஒப்புக் கொண்டுள்ளோம் - என்றார். (த-5)



நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள மிகப்பெரிய இராணுவ மருத்துவமனை

## மிகப் பெரிய மருத்துவமனை நாளை திறக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு.மே 4

இலங்கையில் மிகப்பெரிய மருத்துவமனையான. இராணுவ மருத்துவமனையை நாளை திறந்து வைக்கவுள்ளார் மஹிந்த ராஜபக்ஷ. நாரஹேன்பிட்டியில் 10 மாடிகளைக் கொண்டதாக இந்த இராணுவ மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

6542.4 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனையே இலங்கையில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனையாகும். இந்த இராணுவ மருத்துவ மனையில் 1024 படுக்கைகளைக் கொண்ட விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இலங்கையில் மிகப்பெரிய மருத்துவமனையாக விளங்கிய ஸ்ரீஜெயவர்த்தனபுர தேசிய மருத்துவ மனை 1021 படுக்கைகளை மட்டுமே கொண்டதாகும். (த)

## வடக்கு ரயில் சேவை வழமைக்கு திரும்பியது



கொழும்பு.மே 4

குருநாகல், பொத்துஹெர பகுதியில் கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்ற ரயில் விபத்தைத் தொடர்ந்து. இடைநிறுத்தப்பட்டிருந்த வடபகுதிக்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து பளைக்கான ரயில் சேவை அட்டவணையின்படி நேற்று இடம்பெற்றதாகவும் சிறு திருத்தங்கள் நேற்றுக் காலையுடன் பூர்த்தியடைந்துள்ளதாகவும் பிற்பகல் இரண்டு மணியுடன் ரயில் பாதை முற்று முழுதாகத் தயாராகிவிட்டதெனவும் ரயில்வே அத்தியட்சகர் எல்.ஏ. ஆர்.ரத்நாயக்க தெரிவித்தார். (த)





மத்தள சர்வதேச விமான நிலையத்தைப் பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்கியும் ஆயுதங்களை காட்டியும் அச்சுறுத்தியவர்கள் தொடர்பாகப் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்து நேற்று அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த)

## குண்டுத் தாக்குதலில் 5 பேர் காயம்

கொழும்பு.மே 4

விடுமுறையில் வீட்டுக்கு சென்றிருந்த இராணு வத்தினர் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை காலி - எல்பிட்டியவின் நவதகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. விடுமுறைக்காக வீட்டுக்கு சென்றிருந்த சிப்பாய்கள் நடத்திய விருந்துபசார நிகழ்விலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் விருந்தை நடத்திய மூன்று சிப்பாய்களுடன் [illegible] கிருந்த இருவரும் காயமடை[illegible]தனர். காயமடைந்தவர்கள் எல்பிட்டிய வைத்தியசாலை[illegible] சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பது கண்டறியப்படவில்லை இது குறித்த விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (த)

# பஸ் நிலையத்துக்குள் நுழைய திடீர் தடை மன்னாரில் பயணிகள் பெரும் சிரமம்

மன்னார், மே 04

மன்னார் இ.போ.ச. பஸ் நிலையத்துக்கு செல்லும் பிரதான வீதியூடாக மக்களை உள்ளே செல்ல விடாது மாற்றுப்பாதையூடாகச் செல்லுமாறு அவ்விடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் நேற்று தடை விதித்ததால் மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

தனியார் வாகனங்கள் எவையும் இ.போ.ச. பஸ் நிலையத்துக்குள் செல்லக் கூடாதென ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் நகர சபை குறித்த வீதிக்கு வீதித் தடை ஒன்றை அமைத்து மன்னார் இ.போ.ச. பஸ் நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

[illegible]ல் சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பன [illegible] குறித்த வீதியால் செல்ல இடம் விடப்பட்டிருந்தது.

> “ நேற்று மதியம் கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரி நடந்து செல்பவர்களையும் மற்றும் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்வோரையும் அந்த வீதியூடாக செல்ல அனுமதிக்கவில்லை.

எனினும் நேற்று மதியம் கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரி நடந்து செல்பவர்களையும் மற்றும் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்வோரையும் அந்த வீதியூடாக செல்ல அனுமதிக்கவில்லை.

இதனால் பஸ் நிலையத்துக்குள் பல்வேறு தேவைகளுக்காக சென்றுவருவோர் சிரமங்களை எதிர்கொண்டனர். அத்துடன் பஸ் நிலைய வளாகத்தில் வர்த்தக நிலையங்களை நடத்திவருவோரும் நெருக்கடியை எதிர்கொண்ட தாகத் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மன்னார் நகர சபைத் தலைவருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் அங்கு வந்த அவர் பஸ் நிலைய அதிகாரிகளுடன் கலந்துரையாடி பிரச்சினையை முடிவுக்குகொண்டுவந்தார். (ஐ-56)

# எந்தவொரு அலுவலரினது சம்பளத்தையும் வடக்கில் நான் நிறுத்தச் சொல்லவில்லை

## ஆசிரியர் சங்கத்தின் குற்றச்சாட்டுக்கு பிரதம செயலர் மறுப்பு

யாழ்ப்பாணம்.மே 4

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் எந்தவொரு அலுவலர்களினதும் சம்பளத்தை நிறுத்தி வைக்குமாறு. எந்தவொரு அமைச்சின் செயலாளருக்கோ அல்லது திணைக்களத் தலைவருக்கோ தான் அறிவுறுத்தல் வழங்கவில்லை என்று வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள மேலதிக ஆசிரியர்களின் வேதனத்தை நிறுத்துமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு, வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அறிவுறுத்தியுள்ளதாகவும் இதனைக் கண்டிப்பதாகவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள குற்றச் சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதம செயலர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினைப் பொறுத்தவரை ஆசிரிய நியமனங்கள் யாவும் மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் அவர்களுக்குரிய சம்பளங்கள், படிகள் குறித்த ஆண்டில் அந்த அமைச்சு மற்றும் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகின்றன.

குறித்த ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத்தில், மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட கடமை புரியும் அலுவலர்களின் எண்ணிக்கை அவர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம், படிகள் போன்ற விபரங்களின் அடிப்படையில் அந்த அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட நிதித் தொகை உள்ளடக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் இந்த ஆண்டுக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்ச்சியாக இன்று வரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்தத் தொகை இந்த ஆண்டு முடியும் வரை வழங்கப்படும். இந்த ஒதுக்கீட்டினுள் கல்வித் துறைசார் அனைத்து அலுவலர் களினதும் சம்பளங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன - என்று அவர் தெரிவித்துள்ளார். (த-5)

# மன்னாரில் அபகரிக்கப்பட்ட காணிகளை தமிழ்க் கூட்டமைப்பினர் நேரில் பார்வை

மன்னார், மே 4

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற காணி அபகரிப்பு மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அங்கு நேரடியாகச் சென்று ஆராய்ந்துள்ளது.

குறித்த குழுவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண கல்வி அமைச்சர் ரி.குருகுலராசா, வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின், மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை, செயலாளர் பி.ரி.சிந்தாத்துரை, மன்னார் பிரதேச சபை உப தலைவர் அந்தோனி சகாயம் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

மன்னார் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட உவரி கருப் பன்குடியிருப்புப் பகுதியில் தென்பகுதியைச் சேர்ந்த தனி நபர் ஒருவர் அரசியல் செல்வாக்குடன் அப்பகுதியில் உள்ள சுமார் 500 ஏக்கருக்கும் அதிக மான தனியார் காணியை அபகரித்து சுற்று வேலி போட்டுள்ளார்.

குறித்த பகுதிக்குச் சென்ற குழுவினர் அபகரிக்கப்பட்ட காணியைப் பார்வையிட்டதோடு அங்குள்ள மக்களோடும் உரையாடினர். இதனைத் தொடர்ந்து குறித்த குழுவினர் பேசாலை பகுதியில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வு மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்ட இடத்துக்குச் சென்று நிலமையை ஆராய்ந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மாலை முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மல்வத்து ஓயா பகுதியில் படைத்தரப்பினர் சட்டவிரோதமான முறையில் மேற்கொண்டு வரும் மணல் மண் அகழ்வை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து மறிச்சுக்கட்டி கிராமத்துக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினர். அந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

இறுதியாக இந்தக் குழு வினர் முள்ளிக்குளம் கிராமத் துக்குச் சென்று சுமார் 5 வருடங்களுக்கு மேலாக காடு களில் அகதிவாழ்வு வாழ்ந்து வரும் தமிழ் மக்களைச் சந்தித் தனர்.



காணி அபகரிக்கப்பட்ட இடத்தை அவதானிக்கும்
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள்...

முள்ளிக்குளம் கிரா மத்தைச் சேர்ந்த 174 குடும் பங்கள் இன்றுவரை காடுகளில் தற்காலிகக் கூடாரங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றன. தம்மை சொந்த இடமான முள்ளிக்குளத்தில் குடி யேற்ற வேண்டும் என அந்த மக்கள் இந்தக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-தற்போது அடிப்படை வசதி கள் எவையும் அற்ற நிலையில் மன்னார் ஆயர் வழங்குகின்ற உதவிகளை வைத்தே தாம் தமது வாழ்க்கையை நடத்தி வருவதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த பிரச்சினைகள் தொடர்பாக உடனடியாக விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ள நிலையில் அவை வடமா காண முதலமைச்சரிடம் சமர்ப்பிக் கப்பட்டு உடனடியாக உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்என குறித்த குழு வினர் தெரிவித்தனர். (த-56)

## 9 வயதுச் சிறுவனைத் தாக்கிய சிறிய தந்தைக்கு மறியல்

மன்னார், மே 4

மன்னார் வங்காலையில் 9 வயதுச் சிறுவனொருவனைத் தாக்கிக் காயப்படுத்திய அச்சிறுவனின் சிறிய தந்தையை எதிர்வரும் 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சிறுவனின் தாயின் இரண்டாவது கணவரான சிறிய தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை குறித்த சிறுவனை அவருடைய சிறிய தந்தையார் கயிற்றினால் தாக்கியுள்ளார். இதன்போது கண் பகுதியில் காயமடைந்த குறித்த சிறுவன் உடனடியாக மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் குறித்த சிறுவன் மேலதிக சிகிச்சைக்காகக் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குறித்த சிறுவன் வழங்கிய தகவலின் அடிப்படையில் அவனது சிறிய தந்தையை மன்னார் பொலிஸார் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

விசாரணைகளின் பின் குறித்த நபர் மன்னார் நீதிவான் முன்னிலையில் நேற்று சனிக்கிழமை காலை முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 14 தினங்கள் விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த-56)

## இறைச்சிக் கடைகள் மூடப்படும் அபாயம்

சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்பால்

தென்மராட்சி, மே 4

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்வதால் யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் உள்ளூராட்சிச் சபைகளால் குத்தகைக்கு வழங்கப்பட்ட இறைச்சிக் கடைகள் மூடப்படும் அபாய நிலை காணப்படுகிறது.

சில உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாக எல்லைக்குள் இயங்கும் இறைச்சிக் கடைகளில் வெட்டப்படும் கால்நடைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பரி சோதனை செய்யப்படாததால் இறைச்சிக் கடைகள் திறக்கப்படுவ தில்லையெனவும் இதனால் உள்ளூராட்சிச் சபைகளுக்கு மாதாந்தம் குத்தகையாளர்களால்செலுத்தப்படவேண்டிய மாதாந்தத் தொகையை அறவிடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை சில உள்ளூராட்சிச் சபைகள் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளை அந்தந்தப் பிரிவு கால்நடை வைத்தியரின் மூலம் பரிசோதனைக்கு உட்படுத்துகின்ற போதிலும், கால்நடை வைத்தியருக்கு நாளாந்தம் கணிசமான தொகையைக் கட்டணமாகச் செலுத்தி வருகின்றன. பொதுச் சுகாதாரப் பரிசோதகரை ஆளணியாக வைத்துள்ள உள்ளூராட்சிச் சபைகளும் கால்நடை வைத்தியரின் சேவைகளைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## சோதிடம் கூறுவதாக நடித்து நகைகளை அபகரித்தார் பெண்

நவாலியில் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

நவாலி, மே 4

சோதிடம் கூறுவதாகக் கூறி பெண்ணொருவருக்கு விபூதி கொடுத்து மயக்கி அவர் அணிந்திருந்த நகைகளை கழற்றிக் கொண்டு சென்ற பெண்ணொருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் நவாலியில் இடம்பெற்றுள்ளது.

நவாலி சங்கையான் வீதியில் சில தினங்களுக்கு முன்னர் பெண்ணொருவர் சாத்திரம் பார்க்கவில்லையா என்று பல தடவைகள் அவ்வீதியால் உரத்துக் கூவியவாறு சென்றுள்ளார். அவரை அவ்விடத்திலுள்ள குடும்பமொன்று அழைத்து ஒவ்வொருவராக சோதிடம் கேட்டுள்ளனர்.

இறுதியாக அவ்வீட்டைச் சேர்ந்த பாடசாலை மாணவியொருவர் தன்கையைக் காட்டி சோதிடம் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது அருகில்யாரும் இல்லாத வேளை பார்த்து அந்தப் பெண் தன்னிடமிருந்த விபூதியை எடுத்து பெண்ணின் நெற்றி உடம்பெல்லாம் பூசக்கொடுத்ததையடுத்து பூசியவுடன் அம் மாணவி மயக்க நிலையையடைந்துள்ளார்.

சோதிடம் கூறிய பெண்ணோ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த மாணவியின் கையிலிருந்த தங்க வளையல், சங்கிலி என்பவற்றை கழற்றிக் கொண்டு தலைமறைவானார் சிறிது நேரத்தில் அவ்விடத்துக்கு வந்த அந்த மாணவியின் தாயார் தனது மகள் மயக்கமடைந்திருந்ததையும், அவரிடமிருந்த நக்ககள் அபகரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து உறவினர்களுடன் சேர்ந்து குறித்த பெண்ணைத் துரத்திச் சென்றார்.

சோதிடம் கூறிய பெண் அப்போது ஓட்டோ ஒன்றில் புறப்படுவதற்குத் தயாராக இருந்தார்.

அவரை மடக்கிப் பிடித்து அவரிட மிருந்து கைப்பையைப் பறித்துப் பார்த்த போது அதற்குள் மாணவியிடமிருந்து திருடப்பட்ட நகைகள் காணப்பட்டன. குறித்த மாணவியின் தாயார் நகைகளை அப் பெண்களிட மிருந்து கைப்பற்றிக்கொண்டு பெண்ணை எச்சரித்து அனுப்பி வைத்தார். (த-100)

மலிவான-காத்திரமான-நுட்பமான-திடமான
விசா ஆலோசனை வாய்ப்புக்கள்

ஐரோப்பியநாடான சைப்பிரஸ்
படிக்க உழைக்க வெறும் 5 இலட்சம் போதும்.
4 வருட விசா
இதுவரையில் 6 ஆண்கள்
4 பெண்கள் விசா வென்றனர்.
50 வயது வரை இணையலாம்.

இத்தாலி,பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே
2 வாரத்தில் நாட்டை விட்டுப்பறக்கலாம்.
சட்ட ஆலோசனை இலவசம்

கனடா
வெறும் 24 இலட்சம் போதும்

நியூசிலாந்து, UK ஆஸ்திரேலியா
நியூசிலாந்து IELTS தேவையில்லை
O/L போதும்
UK ஆஸ்திரேலியா IELTS தேவை.

விசிற்விசா, மறுக்கப்பட்டவிசா- விரைவாகவும் மதிநுட்பமாகவும்
சட்ட ஆலோசனை வழங்கப்படும்.
7 நாள்களும் (சனி, ஞாயிறு உட்பட) திறந்திருப்போம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com
(சி/14162)
(64)



## 3 நகர சபைகளுக்கு கணக்காளர் நியமனம்

தென்மராட்சி, மே 4

சாவகச்சேரி, பருத்தித்துறை, வல் வெட்டித்துறை ஆகிய நகர சபைகளுக்கு முதல் தடவையாக இலங் கைக் கணக்காளர் சேவை தரம் III ஐச் சேர்ந்த உத்தி யோ கத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைகணக்காளர்சேவைக்குத் தெரிவு செய்யப் பட்ட 42 பேரில் ஆறுபேர்வடக்குமாகாண சபையின் கீழ் கடைமையாற்ற ஒதுக்கப்பட்டதாகவும் இவர்களில் மூவர் உள்ளூராட்சி சபைகளுக்கு(நகரசபைகளுக்கு) வட மாகாணப் பிரதம செயலாளரினால் நியமிக்கப் பட்டதாகவும், புதிதாக நியமிக்கப்பட்ட கணக்காளர்கள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை தமது கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளதாகவும் தெரிவிக் கப் பட்டது. (த-9)

## ஒரே இரவில் இரு வீடுகளில் ஜன்னல்கள் உடைத்து திருட்டு

தென்மராட்சி, மே 4

ஒரே இரவில் அருகருகே உள்ள இரு வீடுகளில் ஜன்னல்கள் உடைக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இயக்கச்சி ஊர் வணிகன்பற்றுப் பகுதியில் இடம்பெற்றது.

வீட்டுக்குள் கடும் வெப்பம் காரணமாக வீட்டில் இருந்தோர் இரவு முற்றத்தில் உள்ள மாமர நிழலில் படுத் திருந்ததாகவும் காலையில் எழுந்து கதவைத் திறந்து பார்த்தபோது வீடுகளின் ஜன்னல்களை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி அகப்பட்ட பொருள் களை திருடிச்சென்றிந்தது தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வீட்டில் 20 பவுண் தங்க நகைகளும் 18 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதாகவும், மற்றைய வீட்டில் திருட்டுப் போன பொருள்களின் விவரங்களை அறியமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலி ஸார் சம்பவ இடங்களுக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதாகவும் கூறப்பட்டது. (த-9)

**German Institute**

ஜேர்மன், சுவிஸ் மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் ஜேர்மனியில் இருந்து வந்த ஆசிரியரால் நடத்தப்படுகின்றன.

அடுத்த பிரிவுகள் 07.05.2014 அன்று ஆரம்பம் தொலைபேசியில் தொடர்பு கொண்டபின் நேரில் வரவும்.

தொடர்பு: Mrs.Kajenthini 0771604823

# மாகாண மட்ட தமிழ்த்தின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.30

வட மாகாண கல்வித் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய தமிழ்த்தினப் போட்டிகளின் எழுத்தாக்கற் போட்டிகளின் முடிவுகள் மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவால் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் மற்றும் பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**ஆக்கம் எழுத்து**

ஸ்ரீபாலகிருஷ்ணன் வனோஜா - யா /சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, ரவிச்சந்திரநாதன் அர்ச்சனா - மு/ ஸ்ரீசுப்ரமணிய வித்தியாலயம், பரமேஸ்வரன் பிரவீணா- யா/யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.

**கட்டுரை வரைதல் பிரிவு 2**

இராசமோகன் ரோஜிதா- மு/ கலைமகள் வித்தியாலயம், ஏகானந்தநாதன் தவசுதன்-யா /சென். ஜோன்ஸ் கல்லூரி. இராஜகுமார் நிலோஜிதா -யா /கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி.

**கட்டுரை வரைதல் பிரிவு 3**

ஜெகசீலன் பானுஜா- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யோகரத்தினம் டிலோசிகா- கிளி/ இந்துக் கல்லூரி. இரவிச்சந்திரன் யாழினி-மு/ வள்ளிபுனம் கனிஸ்ட உ. வித்தியாலயம்.

**கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்**

பி.தரன்நிகா-வ /கனகராயன்குளம் ம.வி. இராஜேந்திரம் இனோஜா- யா / அளவெட்டி அருணோதயா கல்லூரி. சி.மயூரன் - வ/ தமிழ் மத்திய ம .வி.

**தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்**

பத்மகாந்தன் அனுஷா-யா /மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி. யோசப் அமிர்தம் மேரியூட் பவிஸ்கா -யா /நெடுந்தீவு ம.வி. கணேசமூர்த்தி கஜானா - யா /ஸ்கந்தவரோதயா கல்லூரி.

**இலக்கணப் போட்டி பிரிவு 4**

சுபேந்திரன் விஜேந்தினி - யா/ வட. இந்து மகளிர் கல்லூரி. அமிர்தலிங்கம் திலக்ஸனா - மு /செம்மலை ம.வி. வ.சங்கரி மன்/ முருங்கன் ம.வி.

**இலக்கணப் போட்டி பிரிவு 5**

செல்வராஜா இமாஜினி - யா / யாழ்ப்பாணக் கல்லூரி, யோகச்சந்திரன் யுசாந்தி- கிளி/ கிளிநொச்சி மத்திய ம.வி .ர.ட. ஷாமினி - வ /விபுலானந்தாக் கல்லூரி.

**திறனாய்வுப் போட்டி**

பிரேமகுமாரன் சிந்துஜா -யா /இந்து மகளிர் கல்லூரி, சுப்பிரமணியம் சோபிகா -யா/ மகாஜனக் கல்லூரி, விக்னேஸ்வரன் தனுசியா -கிளி/ திருவையாறு ம.வி.

**குறுநாடக ஆக்கம் பிரிவு 4**

ஸ்ரீஉதயமோகன் வேதிகா - யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சண்முகலிங்கம் சங்கீதா -யா/சன்மார்க்க வித்தியாலயம், சி.கேமலதா - வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

**குறுநாடக ஆக்கம் பிரிவு 5**

சிவநேசன் இனுசுயா- யா /அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, பா.பாலதர்சினி - வ. கனகராயன்குளம் ம.வி. ச.கஜிதா- மு /பாண்டியன்குளம் ம.வி.

**கவிதை ஆக்கம் பிரிவு 4**

பங்கயன் த்னுஜா- மு /விசுவமடு ம.வி.. கொன்ஸ்ரன்ரைன் பிலிஸ்ரன்ராஜ்-யா /புங்குடுதீவு ம.வி. மோசஸ் தாசியஸ் டிலோஜினி -கிளி / புனித தெரேசா பெண்கள் கல்லூரி.

**கவிதை ஆக்கம் பிரிவு 5**

சுரேஷ்குமார் ஜனனி- கிளி / கிளிநொச்சி மத்திய ம.வி., சி.பாக்கியராஜ் - மன் /அடம்பன் ம.ம.வி., சகாயதாஸன் டெனிக்ஸன்-யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

**சிறுகதை ஆக்கம் பிரிவு 4**

வி.ஆன் கில்டா-மன்/ தோட்டவெளி அ.த.க. பாடசாலை. தேவதாஸன் உமையாழினி- யா / அளவெட்டி அருணோதயாக் கல்லூரி. மகேஸ்வரன் பிருந்தினி - யா /வேம்படி மகளிர் உ.பாடசாலை.

**சிறுகதை ஆக்கம் பிரிவு 5**

ஜெயச்சந்திரன் சோபனா- யா / நாவற்குழி ம. முருகானந்ததாஸ் பாவலன் - யா /ஹாட்லிக் கல்லூரி, லீ. பேலிக்ஸ் லாவண்யா குரூஸ்-மன்/ புனித ஆனாள் மத்திய ம.வி.,

**தமிழ் உறுப்பெழுத்து (சிங்கள மாணவர்களுக்கு ) விசேடபிரிவு 1**

உ.. விதிசயா -வ /மடுகந்த ம.வி., பி.பி.செயாமி உதேசிக்கா -மு / எகட்டுவெவ வித்தியாலயம்.

**தமிழ் உறுப்பெழுத்து ( சிங்கள மாணவர்களுக்கு) வி.பி 2**

சங்கலா செலுமினி - வ/மடுகந்த ம.வி.

(ஓ-9)

## மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி நடராசா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், காளிகோவிலடி பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி நடராசா 30.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் (குமார் மில் உரிமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சீவரத்தினத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசையா, தணிகாசலம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் காஞ்தர்சினி, மனோரஞ்சிதம், கமலகுமாரி (ஜேர்மனி), சிவகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற ரவிக்குமார் மற்றும் பாலகுமார் (சவுதி அரேபியா), தனறஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகநாயகம் மற்றும் ஸ்ரீகாந்தன் தியாகராஜா (ஜேர்மனி), மனோராணி (சுவிஸ்), ஜெயகௌரி (கொழும்பு), சற்குணராசா ஆகியோரின் அன்பு மாமியும், நிஷாந்தி, நிலானி (இலங்கை சட்டக் கல்லூரி மாணவி), கேசவன், தர்சிகா, தர் சனா, தரண்ஜா, கோகுலன் (ஜேர்மனி), தரண்ஜா, கோகுலன் (ஜேர்மனி), ஆதவன் (ஜேர்மனி), சிவசூர்யா (சுவிஸ்), சுவஸ்திகன் (கொழும்பு), ததுர்ஷன் (கொழும்பு), அபிராமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோவிலடி,**
**பத்தமேனி,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Lebara

OMI

METHTHA Foundation

திறப்புவிழா

'அமதிக்கரங்கள்'

அவயவங்களை இழந்தவர்க்கான லிபாறா நலவாழ்வு மையம்

**இடம்**
A 9 வீதி, பனிக்கன்குளம், மாங்குளம்

**காலம்**
வைகாசி 5ம் திகதி 2014
(திங்கட்கிழமை)

**எமது நோக்கு**
அவயவங்களை இழந்தவர்கள் உயர்வாக மதிக்கப்பட்டு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் என்பதை ஆழமாக உணர்ந்து தமது உறவுகளுடன் சாந்தியும் அமைதியும் மாண்பும் நிறைந்த நலமான வாழ்வை அனுபவிப்பதே!

**இது ஒரு அயரா முயற்சி**
லிபாறா அறக்கொடை நிறுவனம்
மெத்தா அறக்கொடை அமைப்பு
அமல மரித்தியாகிகள் சபை
தாராள சிந்தையுடையோர்

இம் மகிழ்ச்சிகரமான நிகழ்வில் வட மாகாண சபை சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் மற்றும் அரச, அரசசார்பற்ற, சமய, சமூக பிரதிநிதிகளும் கலந்து சிறப்பிப்பார்கள்

மாகாண முதல்வர், அமலமரித் தியாகிகள் சபை, தொடர்பகம், 657/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## கல்வியங்காடு முன்பள்ளியில் திருட்டு

யாழ்ப்பாணம், மே 4
கல்வியங்காடு வீதியில் உள்ள முத்தமிழ் முன்பள்ளியின் ஜன்னல் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒருதொகைப் பணமும், மாணவர்களுக்கான கற்றல், விளையாட்டு உபகரணங்களும் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
முன்பள்ளி ஆசிரியை நேற்று முன்தினம் பாடசாலைக்குச் சென்ற போது கதவு, ஜன்னல்கள் உடைக்கப்பட்டுள் ளதை அவதானித்து இது தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
10 ஆயிரம் ரூபா பணமும், ரேடியோ, பாண்ட் வாத்தியக் கருவிகள், சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மண்வெட்டி, கோடரி போன்ற பொருள்களும்களவுபோயுள்ளனஎன்று கூறப்பட்டது. (ஒ-7)

# பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர்கள் களங்கண்ணி வலை பயன்படுத்தலாம்

## அனுமதி வழங்கியது நீரியல்வளத்துறை திணைக்களம்

பளை, மே 4
பச்சிலைப்பள்ளி பிரதேச மீனவர்களின் வருமானத்தைப் பாதிக்காத வகையிலும் கடல் வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடனும் ஜூன் மாதத்திலிருந்து கிளிநொச்சி மாவட்ட கடல் பிரதேசத்தில் கூட்டைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதற்குத் தடை விதித்துள்ள கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள், அந்தத் தொழிலுக்கு மாற்றீடாக 5½ முழ களங்கண்ணி வலையை மட்டும் பாவிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.
பூநகரியிலுள்ள கடற்றொழில் திணைக்களக் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் மற்றும் கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
குடாநாட்டு மீனவர்களால் தொழில் ரீதியரகப் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி மீனவர்கள் தங்களின் நிலைப்பாடு குறித்து கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களப் பிரதிப் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, இதற்குத் தீர்வு காணும் முகமாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-
♦ சங்குப்பிட்டி கேரதீவுப் பாலத்துக்கு நெடுக்காக இரு பக்கமும் 100 மீற்றருக்குள் வலை பாய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
♦ தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் பட்டி வலையின் கண்ணளவு வேலி வலையின் கண்ணளவு குறிப்பிடப்பட்டுள்ள அளவில் இருக்க வேண்டும்.
♦ வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கிளிநொச்சி மாவட்டத் துக்கு கலங்கள் கட்டுவதானால் குறித்த பிரதேச சங்கங்களின் அனுமதியைப் பெற வேண்டும். அத்துடன் சந்தைப்படுத்துவ தானாலும் சங்கங்களுடன் கலந்துரையாடப்பட வேண்டும்.
♦ இரண்டு இயந்திரங்களைப் பயன் படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் 25 குதிரை வலு கொண்ட இயந்திரங்களை மட்டும் பயன்படுத்த வேண்டும்.
♦ இழுவை வலு(சங்கிலிமடு) இம்மாத இறுதிக்குள் தடை செய்யப்பட வேண்டும்.
♦ இரும்புக் குழாய்க்குப் பதிலாகத் தடியைப் பயன்படுத்த விரும்புபவர்கள் வனபரி பாலனத் திணைக்களத்துடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இதற்கான பரிந்துரைக் கடிதத்தை கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலருக்கும், கடற்றொழில் பரிசோதகர் ஊடாக உதவிப் பணிப்பாளருக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.
♦ கரையிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்துக்குள் நிலக் குழையைப் பயன்படுத்தி கணவாய் பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
♦ சங்குப்பிட்டி பாலத்துக்கு மேற்குப் பக்கமாக பள்ளிக்குடா பிரதேசத்தில் தொழில் செய்ய விரும்புவோர் சங்கங்களில் அனுமதியைப் பெற்று பத்திமா கோவிலடியில் படகு கட்டலாம்.
♦ மூடப்பட்டுள்ள ஆனையிறவுப் பாலத்தை மீனவர்களின் நலன் கருதி மீண்டும் திறக்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (வ-115)

## பனங்காடு எரிந்து நாசம்

வரணி, மே 4
விசமிகளால் பற்றைகளுக்கு வைக்கப்பட்ட தீ பற்றிப் படர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட இளம் பனைகள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட வடலிகள் எரிந்து ஓலைகள் கருகி நாசமாகியுள்ள சம்பவம் வரணி வடக்கு சைவக் குடியிருப்பு பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.
அதேசமயம் பக்கத்தில் உள்ள இரண்டு குடும்பத்தவர்களின் வீட்டுவேலிகளும்கூடத் தீப்பற்றி எரிந்து எல்லைகளில் இருந்த பூவரச மரங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.
சட்டவிரோதமாக விறகு தறிப்பவர்களே இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் எனக் காணி உரிமையாளர் தெரிவித்தார்.
இந்தப் பகுதியில் வசித்து வந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வசித்து வரும் நிலையில் தற்போது இந்தப் பகுதி சன நடமாட்டம் இல்லாத பகுதியாக உள்ளது.
இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி விறகு சேகரிப்பவர்கள் இந்த நாசகார வேலையில் ஈடுபட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இந்தப்பகுதியில்சட்டவிரோதமாக பனை மரங்களைத் தொகையாகத் தறித்துச் சென்றவர்கள் கடந்த சில மாதங்களில் கொடிகாமம் பொலிஸாரால் வாகனங்களுடன் கைது செய்யப்பட்ட சம்பவம் குறிப்பிடத்தக்கது.
(ஒ-122)



அதிபரின் அலுவலகம்



சேதமடைந்த வீடு

*வவுனியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கடும் காற்றுடன் பெய்த மழை காரணமாக வவுனியா கல்நாட்டியகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கட்டடங்கள் பாதிக்கப்பட்டதுடன் வவுனியா ஈரட்டைப் பகுதியில் உள்ள இரண்டு வீடுகள் மீது மரம் விழுந்து வீடு பாதிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். (ஒ-421)*

## சாதாரணதர மாணவர் பெற்றோருடன் சந்திப்பு

தென்மராட்சி, மே 4
தென்மராட்சி கல்வி வலய அதிகாரிகள், அந்தக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 32 பாடசாலைகளிலிருந்து இந்த வருடம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பெற்றோர்களைச் சந்திக்கும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வாரத்தில் மூன்று தினங்கள் பி.ப. ஒரு மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை பாடசாலை ரீதியாக பெற்றோர் சந்திப்பை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இதன் பிரகாரம் மே மாதத்தில் பின்வரும் திகதிகளில் வலயக் கல்வி அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் அவர் தம் பெற்றோர் பாடசாலை அதிபர் பாட ஆசிரியர்கள் சந்திப்பு இடம்பெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.
மே மாதத்தில் 5 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 6 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 8 ஆம்திகதி மட்டுவில் கமலாசினி வித்தி., 12 ஆம் திகதி மீசாலை விக்னேஸ்வரா ம.வி., 13 ஆம் திகதி உசன் இராமநாதன் ம.வி., 19 ஆம் திகதி நாவற்குழி ம.வி., 20 ஆம் திகதி மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி., 22 ஆம் திகதி மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி., 26 ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, 27 ஆம் திகதி கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் இச்சந்திப்புக்கள். இடம்பெறவுள்ளன.
ஏப்ரல் 22 ஆம் திகதி ஆரம்பமான இந்தச் செயற் றிட் டம் ஜூலை 14 ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# வவுனியாவாசியின் ரூ.35 ஆயிரம் ரயில் நிலையத்தில் தட்டிப் பறிப்பு

## கொழும்பு கோட்டையில் சம்பவம்

வவுனியா, மே 4
கொழும்புகோட்டைரயில்நிலையத்தில் பத்திரிகை வாங்க பணத்தை எடுத்த வேளை பணப்பையைப் (பேர்ஸ்) பறிகொடுத்தார் வவுனியா வாசியொருவர்பணப்பையைப்பறித்தவன் ஓடித் தப்பிவிட்டான்.
வவுனியா குவாட்ஸ் வீதியைச் சேர்ந்த எஸ்.குபேரன் என்பவரே இவ்விதம் 35 ஆயிரம் ரூபாவைப் பறிகொடுத்தவராவர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:
கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணம் செய்வதற்காகக் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு வந்த வவுனியாவாசி அங்கு பத்திரிகை ஒன்றை வாங்குவதற்குப் பணப்பையை எடுத்தபோது பின்னால் வந்த நபரொருவர் அவரைத் தள்ளிக் கீழே விழுத்திவிட்டு பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓட்டமெடுத்தான்.
அவரது கூக்குரலைக் கேட்டு சம்பவ இடத்துக்கு வந்த ரயில் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் பணத்தைத் திருடியவனை துரத்திய போதும் அவன் தப்பி ஓடிவிட்டான் என்று பணத்தைப் பறிகொடுத்தவர் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-400-421)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்



கோப்புப் படம்

யாழ்ப்பாணம், மே 4
யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.
தின்மும் முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரையும், முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரையும் இரண்டு வெவ்வேறு இடங்களில் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும். நாளை 5 ஆம் திகதி மூத்தவிநாயகர் சனசமூகநிலையம், ஆசீர்வாதப்பர் வீதியிலிலுள்ள சுகாதாரக் கல்வி மையம் ஆகிய இடங்களிலும், 6 ஆம் திகதி நாயன்மார் வீதி மற்றும் கடுக்காய் வீதியிலுள்ள சுகாதார கல்வி மையங்கள், 7 ஆம் திகதி கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள சுகாதார கல்வி மையம், நாவலர் வீதியின் நாற்சந்தி, 8 ஆம் திகதி செட்டியார் தோட்டம், விவசாயக் கந்தோர் லேன், 9 ஆம் திகதி ஜமுனா வீதியிலுள்ள சுகாதார மையம், பருத்தித்துறை வீதியிலுள்ள சங்கிலியன் மன்றம் ஆகிய இடங்களிலும் தடுப்பூசி ஏற்றப்படும். உரிமக் கட்டணமாக ரூபா 20+ வற்வரி செலுத்தப்படவேண்டும் எனவும் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறியத்தந்துள்ளார்.
(சு-7)

# கிளாலி ஆரம்ப சுகாதார நிலையம் இன்னும் முழுமை பெறாத நிலையில்

## 2000 இல் கட்டடப்பணிகள் ஆரம்பமான போதும்

பளை, மே 4
கிளாலிப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கான மருத்துவச் சேவையைக் கருத்தில் கொண்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 10 வருடங்கள் கடந்த நிலையிலும் முழுமையாகக் கட்டி முடிக்கப்படாமல் காட்சியளிக்கின்றது.
இந்தநிலை குறித்து கவலையடைந்துள்ள பொது மக்களும் பொது அமைப்புக்களும் விரைவாகக் குறித்த கட்டடத்தை நிறைவு செய்து ஆரம்ப சுகாதார நிலையத்தை இயங்க வைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கிளாலிப் பகுதியில் வசிக்கும் மக்கள் மருத்துவ சேவையை இலகுவாகப் பெறுவதற்கு வசதியாகக் கடந்த 2000 ஆம் ஆண்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான கட்டட வேலைகள் ஆரம்பமாகின.
நாட்டில் ஏற்பட்டிருந்த போர்ச் சூழ்நிலை காரணமாக பல லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படிநிலையம் கட்டி முடிக்கப்படாமல் அரைகுறையுடன் கைவிடப்பட்டது. இந்த வேலைத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு மாற்றப்பட்டது.
இந்த நிலையில் தற்போது 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.
அவர்கள் இலகுவாக மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு வசதியாக அரைகுறையுடன் காட்சியளிக்கும் ஆரம்ப சுகாதார வைத்தியநிலையத்தைமுழுமையாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பொது மக்களும் பொது அமைப்புக்களும் கோரியுள்ளனர். (வ-115)

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கு, சுன்னாகத்தில் பலாலி வீதியில் இருந்து சுன்னாகம் செல்லும் திலீபன் வீதியை (22 அடி அகலமுடைய பாதை) முகப்பு எல்லையாகவும் வீதிப்பக்கமாக கூடுதல் நீளம் கொண்டதுமான 18 பரப்பு (180 Perches ) காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 732 8370/071 829 6065 (சி/13776) (6.4)

## மணப்பெண் அலங்காரம் DISCOUNT

இலங்கையின் எந்த பாகத்திலும் பெண் அழகுக்கலை நிபுணர்களால் மணமகள் அலங்காரம் செய்ய விலைக்கழிவு செய்யப்பட்டுள்ளது

தற்போது அறவிடப்படும் தொகை - 40.000/- ரூபா.

(பழைய ஓடர்களுக்கும் இது பொருந்தும்)

(சி/13776) தொடர்பு

Patricia Beauty Salon Dehiwala

Usha : 0771 161 849 / Akila : 0773 584 622

## CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## மணமகன் தேவை

சைவ போசனமுள்ள 1983 கார்த்திகை 2ஆம் பாதம், கிரக பாவம் 35 (முதலாம் சுற்று) 61 (3ஆம் சுற்று), செவ்வாய்க் குற்றமற்ற, மணமகளுக்கு மணமகன் தேவை.

(அசைவமும் ஏற்கப்படும்) தரகரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு : 077 236 7508 (47629) (7.6)

## வீடு வாடகைக்கு

நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 104 3575 (47509) (7.6)

## வீடு விற்பனை

மானிப்பாய், சங்குவேலி தெற்கில் மூன்று பரப்பு 02.92 குழி சகல வசதிகளுடன் மூன்று அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு 077 312 3772 (47503)(6.4)

## CLASSES

6-11 வரையான மாணவர்களுக்கு Maths Personal Class, Group Class, O/L day classes இலகுவாக விளங்கும் வகையில் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 884 9259 (47550) (7.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வளன்புரத்தில் 1½ பரப்புக் காணியுடனான சகல வசதிகளுடன் வீடு (3 அறைகள்) விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 615 6236 (47617) (7.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரசடி வீதி மத்திய வங்கி அலுவலகத்திற்கு அருகிலுள்ள லேனில் 2 பரப்பு 0.326 குழி பரப்பளவு கொண்ட கிணறு. சுற்றுமதிலுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 775 1162 (47624) (7.6)

## மணமகள் தேவை

UK நிரந்தர வதிவுடமை உள்ள 36 வயதுடைய மணமகனுக்கு (பொறியியலாளர்) கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமகளைத் தேடுகின்றோம்.

தொடர்பு: நல்லூர் மணவீடு

(47633) (12.6) 077 651 0434

## வாடகைக்கு / விற்பனைக்கு

உடுவில் துன்மலை வீதி (Love lane) No. 44, வீடு ஒரு வருடத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்படும் கூடிய விலை கோரினால் உடன் விற்கவும் சம்மதம்.

தொடர்பு : (சி/13774)

0773 792 193 / 0112 725 974

## வீடு வாடகைக்குண்டு

சிவலிங்கப்புலியடி வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 076 669 5141 (47634) (3.6.4)

## அறை வாடகைக்குண்டு

திருநெல்வேலியில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான அறை வாடகைக்குண்டு.

தொடர்பு : 077 412 8067 (47631) (7.6)

## வாடகைக்கு

மானிப்பாயில் சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரசாங்கம், வங்கி சேவைக் குடும்பத்தினர் விரும்பத்தக்கது.

தொடர்பு : 072 346 0771 (சி/13770) (7.6)

## TV கள் திருத்திக் கொடுக்கப்படும்

LCD, LED மற்றும் சகலவிதமான TVகள் மின் உபகரணங்கள் உடனுக்கு உடன் திருத்திக் கொடுக்கப்படும்.

(வீடுகளுக்கு வந்தும் திருத்திக் கொடுக்கப்படும்)

தொடர்பு: S.K. குமரேஸ் 077 044 0570

சொனி ரேட் சென்ரர்

56, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (47632) (7.6)

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)

Hotel Villa City

422 Galle Road, Wellawatte

T.P: 072 255 2222 (சி/12214)(3.5.4)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் தற்போது பாவித்துக்கொண்டிருக்கின்ற

PHOTO QUALITY Roland RS640

டிஜிட்டல் பிரிண்டிங் மெசின்



Banners | Sticker
Transparent Sticker
Sand Blast | Canvas
One way Vision
Backlit Flex
Reflective Sticker
Synthetic

Made in Japan

5 அடி. 18 மாதங்கள் மட்டுமே பாவித்தது. (சி/13773)

Maintained & Serviced by Agent புத்தம் புதிய நிலையிலுள்ளது

0777413374 | Colombo

## காணி விற்பனைக்கு

சங்கானை பிளாக்கர் வீதியில் உள்ள 20 பரப்பு மேட்டுக் காணி பனை மரங்களுடன் விற்பனைக்குண்டு. தோட்டம் செய்வதற்கு, அரிசி மில் போடுவதற்கு உகந்தது.

தொடர்பு: 052 225 8433

S.செல்வநாதன்

20, பிரதான வீதி, தலவாக்கலை (47442) (3.6.4)

## வீடு வாடகைக்குண்டு

கோண்டாவில் மேற்கு, பாடசாலை ஒழுங்கையில் 3 அறைகள் மற்றும் சகல வசதிகள் கொண்ட வீடுவாடகைக்குண்டு.

(47641) (6.4) தொடர்பு: 077 790 0947

## Home Service

LCD TV மற்றும் பழுதடைந்த சகல விதமானTVகளும் உங்களின் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

(47551) (6.4) தொடர்பு: இல.07, விசவடிக்குளம், அச்செழு, நீர்வேலி. 077 919 4670

## உடன் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் Koolair Northern Engineering (Pvt) Ltd. நிறுவனத்துக்கு கணினி அனுபவம் உள்ள Accounts Clerk உடன் தேவை. சம்பள விவரம் நேரில். தொடர்பு : (47644) (7.6)

021 221 9411, 077 734 4926, 077 200 1283

## காணி விற்பனைக்கு

பாண்டியன்தாழ்வு சந்தனமாதா கோயில் அருகில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 077 771 9392 (47615) (7.6)

## வீடு, காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை, 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள 5 பரப்பு காணியுடன் 5 அறையைக் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. பலன் தரும் மரங்களும் உண்டு.

தொடர்பு : 077 361 3112 (47621) (7.6)


## சின்மயா மிஷனில் இரத்ததான முகாம்

பூஜ்ய குரு தேவர் சின்மயானந்தரின்ஜெயந்தி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் இன்று காலை 9 மணிக்கு இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

நல்லூர், செட்டித்தெரு, இல.9 இல் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரிஜாக்ரத் சைதன்யா சுவாமிகள் தலைமையில் இந்த இரத்த தான முகாம் நடைபெறும்.

உயிர் காக்கும் இந்த உன்னத பணியில் சகலரும் இணைந்து கொள்ளலாம் என்று மிஷனின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 4

கோண்டாவில் கிழக்கு கல்வி மேம்பாட்டுக் கழகம் நடத்தும் கல்விச் சாதனையாளர்களைப்பாராட்டிக்கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

க.றமேஸ்நேசன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.தேவராசா கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் ஆசியுரைகளை ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ இரவீந்திரகுமாரக் குருக்களும், அசெம்பிளி ஒவ் கோட் அருட்தந்தை க.ராஜாவும் நிகழ்த்துவர். (ஒ-400)

## ஈஸ்வரம்மா தின விழா

யாழ்ப்பாணம், மே 4

அன்னை ஈஸ்வரம்மா தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி, சேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வு காலையில் பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து நண்பகல் மதிய போசனத்துடன் நிறைவு பெறும்.

மேலும் நாளை மறுதினம் 6 ஆம் திகதியும் விசேட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (க)


## நிரந்தர தொழில் வாய்ப்பு

உங்கள் எதிர்கால வாழ்க்கையை இன்பமயமாக்க இன்றே நிரந்தர தொழிலைப் பெற எம்மோடு இணையுங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜாம்/ரொபி/பிஸ்கற்/PVC/கிளவுஸ்/காமெண்ட்/Paint... மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல் போன்ற பிரிவுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் முதல் மாதம் 18000/=, 24000/=, 2ஆம், 3ஆம் மாதங்களில் 28000/=, 32000/= + வரை பெறலாம். உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். நண்பர்கள், குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில். வருகை அன்றே வேலைக்குச் செல்லலாம்.

(43281)(7.6) தொடர்பு: 077 683 8231

## மருந்தாளர் (Pharmacist) தேவை

தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பே.இலக்கம்:

077 732 8434

077 618 4646

(47627) (12.5.6)

## இனி இல்லை நெஞ்சுவலி !!!

- இருதயநோய்
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புகள்
- மூட்டுவலி, முதுகு வலி
- புரோஸ்ட்ரேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- சைனஸ் பிரச்சினைகள்
- மனஅழுத்தம்
- இருமல், சளி
- படுக்கைப்புண்கள்
- நீரிழிவுப்புண்கள்
- நச்சுவைரஸ் பாதிப்பு
- பாலியல் குறைபாடு

நெஞ்சுவலி நீங்கி நலமான வாழ்வைப்பெற முடியும். எமது மருந்து இருதய இரத்தவோட்டத்தை சீர்படுத்தும். சிக்கலான சிகிச்சை அவசியமில்லை.




இருதய அடைப்பின் அறிகுறி

- நெஞ்சில் இறுக்கம்
- நெஞ்சில் எரிவு, மனஎழுச்சி
- சுவாசக்குறைவு
- நெஞ்சுவலி

FAIR PHARMA (PVT) LTD Sponsored by

(Kerala Ayurvedic Medicine)

(சி/13766)

0114 388101, 4 388102

Free Consultation

Daily @ Ceylinco House

Weekdays 9.00 a.m. - 5.00 p.m.

Saturdays 9.00 a.m. - 2.00 p.m.

Monthly Clinics are conducted islandwide

Ceylinco House, 11th Floor, No : 69, Janadhipathi Mawatha, Colombo 01.

Website : www.ayurveda.lk

E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 330 / 0777 708 310

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## POST OF SITE SUPERVISOR

We are looking for experienced site supervisor for a proposed large scale development in Jaffna.

**Qualifications**

- NCT (Civil) with 10 years experience or,
- NDT / NDES with 03 years experience

The selected candidate will be required to be "hands on " on site, liaising with the consultants, contractor and suppliers and reporting to the consultants and owner will be required to maintain and update work program. Knowledge of **Auto CAD, Microsoft Excel, word** and email, and **English** is a pre – requisite. A working knowledge of Sinhala is an advantage.

Salary negotiable.

Apply with a copy of your CV with 02 non – related referees and a contact number within 10 days to :

Managing Director,
Sascon Holdings (Pvt) Ltd,
752/5, Dr.Danister de Silva Mw, Colombo 9
Email to : exec-np@sascongroup.com (47625)(10.6)

## உடனடி வேலைவாய்ப்பு

TROLLEY BOYS-QATAR AIRWAYS

மூன்று வாரங்களில் பிரயாணம்

கட்டார் நாட்டின் சர்வதேச விமான நிலையத்தில் பிரயாணிகளின் வண்டிகளைத் தள்ளும் சிப்பந்திகள் தேவை.

★ இலவச தங்குமிடம்,மருத்துவம், போக்குவரத்து . சாப்பாடு ஆகியவைகளுடன் கூடிய சம்பளமும் கொடுக்கப்படும்.

★ உங்களது முழுவிவரத்துடன் கூடிய விண்ணப்பத்துடன் போஸ்கார்ட் அளவிலான கலர் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.

★ வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டுப்பணம் மாத்திரமே அறவிடப்படும்.

★ அத்துடன் சுப்பர் மார்கற் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களுக்கு சுத்திகரிப்பாளர்கள் தேவை.

தொடர்பு:

N EXCELLENT MANAGEMENT SERVICE (nems)

(Labour Licence 2499)

SPS Building,1st Floor, Main Street,Akkaraipattu.

Phone : 067 227 9766 / 075 66 32 620

Email : mkt@nexcellent.net / cv@nexcellent.net

Web : www.nexcellent.net

## Vacancies

Vacancies exist for the post of Radiographer / Nuclear Physicist / Radiation Scientist ( preferably with SLMC registration ) in a fast expanding modern multispecialty hospital .Science Graduate with any of the above specialty is eligible to apply. Eligible candidates are requested to send their applications to reach the undersigned on or before 19th may 2014 Applications should be accompanied by :

1. Complete Bio-data
2. Copies of educational certificates
3. Copy of National Identity Card
4. Copy of Birth Certificate
5. Letter from G.S.

**Director, Human Resources**
**Northern Central Hospitals ( Pvt ) Ltd.**
**342, Palaly Road, Jaffna**
**T.P : 021 222 2263**

(C/ 14163)(5.6)

## திருமுருகன் கொம் ஹெற்

மிகக் குறைந்த கட்டணத்தில் 220 ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
**துரித தபால்கள், பொதிகள் சேவை**

அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பண்டங்களை
வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
3-5 நாள்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

- அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு. அதற்கான ஆலோசனைகள்
- கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விசா விண்ணப்ப சேவை

WESTERN UNION | MMBL Money Master

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

(வி/13571)

இல.271 A , கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.(ஆல் சிலோனிற்கு முன்பாக)
தொ.பே: 021 222 7835

பிரதான கிளைகள்:
இல.18, பிரதான வீதி, நெல்லியடி
இல.46,ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
பிரதான வீதி சங்கானை
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி


# மாவைக் கந்தன் ஆலயத்தில் இன்று புத்தாண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 4

ப்ருந்த கான லய ஏற்பாட்டில் புத்தாண்டை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட விசேட நிகழ்ச்சி இன்று ஞாயிறு மாவைக் கந்தன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மாவை ஆதீனகர்த்தா ஷ.இரத்தினசபாபதிக் குருக்களின் ஆசியுடன் வலி.வடக்கு பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதர் பெ.மகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியையான ஹரிப்பிரியா மோகனும் கலந்து கொள்வர்.

இந்த புத்தாண்டு நிகழ்வில் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-10)


### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகரத்தில் உள்ள கணேசபுரத்தில் 5 அறைகள் 2 குளியலறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (ஏ-9 வீதியிலிருந்து 950m ) அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0772397050

### காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் பகுதியில் காணி விற்பனைக்குள்ளது.

(G/13777)(12.3.6) தொடர்புகளுக்கு: 077 492 7947

### றோயல் ஹாட்வெயர்

S.L.S. முறுக்குக் கம்பிகள் பிளேன் கம்பிகள் GI பைப்(HL) Lகேடர், GI பொக்ஸ்பார், பட்டம், கம்பி ஆணி, சிமெந்து என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
இல.129, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
021 221 9300, 077 754 7049


# தமிழரசுக் கட்சி வடமராட்சிக் கிளை கரணவாயில் திறப்பு

யாழ்ப்பாணம், மே 4

தமிழரசுக் கட்சியின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வடமராட்சிக் கிளை அலுவலகம் நேற்றுமுன்தினம் கரணவாய் மூத்த விநாயகர் கோயிலுக்கு அண்மையில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சி.எக்ஸ்.குலநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் புதிய அலுவலகத்தின் பெயர்ப் பலகையை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா திரைநீக்கம் செய்து வைத்தார். இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறீதரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், ஏ.பரம்சோதி, சி.சிவயோகன், பா.கஜதீபன், இ.ஆனல்ட், எம்.கே.சிவாஜிலிங்கம் உட்படப் பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் எனப் பலரும் சிறப்புரையாற்றினர்.


## அறிவித்தல்

யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

மேற்படி தேவஸ்தான பெறுநகராக நான் சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றத்தால் நியமிக்கப்பட்டு தேவஸ்தானத்தின் சகல நிர்வாகமும் பொறுப்பேற்கப்பட்டு திருப்பணி நிதி அர்ச்சனை, அபிஷேகங்கள், பூசைகள், காணிக்கைப் பொருள்கள், ஆபரணங்கள் உட்பட சகல பொருள்களுக்கும் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. தற்பொழுது எம்மால் நீதிமன்றின் அனுமதியுடன் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், இத்திருப் பணிக்கென உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தவறான முறையில் நிதி சேகரிப்பதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதால் இத்திருப் பணிக்கென நிதியோ, பொருள்களோ சேகரிக்கத் தொண்டர்கள், அடியார்கள், குருக்கள், உபயகாரர்கள், தர்மகர்த்தாக்கள் என எவருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன் அடியார்கள் மனமுவந்து அளிக்கும் நன் கொடைகள், காணிக்கைகள் முதலியவற் றைத் தேவஸ்தான அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் திருப்பணி நிதியை வங்கி மூலம் அனுப்ப விரும்பும் அடியார்கள் **யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக் கிளையில் பெறுநர் (RECEIVER) யாழ் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்** என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள **நடைமுறைக் கணக்கு இல.75767001** இற்கு அனுப்பி அதன் விவரத்தைக் கடித மூலம் அல்லது தொலைபேசி மூலம் தெரிவித்து திருப்பணிப் பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாமென அறியத்தருகின்றேன்.

து.சிறீமோகன்
பெறுநர்/பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.
தொ.பே: 077 921 0099

தேவஸ்தான தொ.பே.இல. 021 221 9720
140, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(47566)(5.6)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திக் கிரியை அழைப்பும்



கடந்த 15.05.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர்**

## நாராணபிள்ளை அருணகிரிநாதன்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 09 -01 -1945 | 15 - 05 - 2013 |

அவர்களின் முதலாம் ஆண்டுக் கிரியைகள் இன்று (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வங்கியடி,
ஆவரங்கால், புத்தூர்

**குடும்பத்தினர்.**

(47576)

# 6ஆம் மாத நினைவலைகள்



உருவாய்
11.04.1993

அருவாய்
07.12.2013

## அமரர் சண்முகானந்தன் யதுஷென்



வெள்ளைச் சிரிப்போடு வெண்ணீற்று ஒளிவிளங்க
இல்லமெல்லாம் நிறைவெய்த எம்மோடு வீற்றிருப்பாய்
செல்லக் கதைபேசி அன்பாற் செழிக்க வைக்கும்
நல்லதோர் பிள்ளையினைப் பெற்றதால் மகிழ்ந்திருந்தோம்
நள்ளிரவில் வீடுவந்த காலனவன் தூதுவர்கள்
கொள்ளி வைத்துப் போனாரே! குலவிளக்கை அழித்தாரே!
ஆண்டுகள் நூறானாலும் ஐயனே உன் நினைவைத் தாங்கியே
நாம் வாழ்வோம் தங்கமே உனை மறவோம்!!!
உன் ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகரை வேண்டி நிற்கிறோம்

எமது செல்வனின் 6ஆம் மாத நினைவாக இன்று (04.05.2014) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**செல்வன் சண்முகானந்தன் யதுஷெனின்**
**ஆறாம் மாத நினைவு பேருரை**
**இணுவில் அறிவாலயத்தில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.**

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(47494) (45.6)

கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# பொன் விழாவும் மலர் வெளியீடும்

தும்பளை, நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் நடத்தும் சிவஸ்ரீ தியாக சோமஸ் கந்தராஜக் குருக்களின்பொன்விழா வும், சோமாஸ் கந்த ராஜ தரிசனம் - I இன் மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தும்பளை சைவப் பிரகாசமகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக வடமாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்து கொள்வர். அறிமுகவுரையை ஆசிரிய ஆலோசகர் வேல் நந்தகுமாரும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணியும் நிகழ்த்துவர்.

இந்தநிகழ்வில்சோமாஸ் கந்த தரிசனம் என்ற நூலின் மதிப்புரையை கலாநிதிமனோன்மணி சண்முகதாஸூம், அருள் நங்கை I என்றநூலின் மதிப்பீட்டுரையையாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் சிவலிங்கராசாவும், அக்கினி காரியம் என்ற நூலின் மதிப்பீட்டுரையை கொம்மாந்துறை மனோன்மணி தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்களும் நிகழ்த்துவர். (ஓ-400)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.10.1937

மறைவு
04.05.2013

## T.A. மரியநாயகம்



மற்றோரை மகிழ வைக்க
மணி மணியாய் கதைகள் கூறி
அதிலே மகிழ்வுற்று வாழ்ந்த
உங்கள் நினைவுகள்
ஆண்டாண்டு சென்றாலும்
எம் மனதைவிட்டு அகலாது

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி (சுகிர்தா)

(சீ.14103)(45.3.8)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் பேருந்து தரிப்பிட திறப்பு விழாவும்



## அமரர் நல்லதம்பி வேலாயுதம்

அன்னை மடியில்
04.02.1942

ஆண்டவன் அடியில்
14.05.2013



பாசமுடன் வாழ்ந்த என் அன்புக் கணவரே!
பாதியிலே எம்மை விட்டு சென்றதேனோ
ஆண்டு ஒன்று ஆனது அப்பா!
உங்கள் அன்பு முகம் காணாமல்
பாசமுடன் எம்மை வளர்த்த அப்பாவே!
உங்கள் பாசத்திற்கு ஏங்கித் தவிக்கின்றோம் அப்பா!
அன்புடன் எம்மை அரவணைத்த அன்புத் தாத்தாவே!
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது அப்பா எங்கள் துயர்
நீங்காது அப்பா உங்கள் நினைவுகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

CO - OP.றோட்,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

(45824)(45.6)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Hero
கேளிக்கை உலகின் புதிய பரிணாமம்
அறிமுகப்படுத்துகின்றோம் கண்களை கவரும் விதத்தில் அமையப்பெற்ற புதிய ஹீரோ ப்லஷர், நவீன வசதிகளுடன் ஓட்டிச்செல்லுங்கள் புதிய புத்துணர்ச்சியுடன்
புதிய ஹீரோ ப்லஷர் உங்கள் மனதை கொள்ளை கொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய மாற்றங்களின்றி வாழ்வின் புத்துணர்ச்சி ஏது?
புதிய
Pleasure
The light 'n' zippy scooter
2014
அறிமுக விலை
ரூ. 178,563 + vat
Hero
5
WARRANTY
கைப்பேசிகளை ச்சார்ஜ் செய்ய ஏற்ற வசதிகள்
டியுப் லெஸ் டயர்கள் மற்றும் தரமான ப்ரேக் முறை
லக்கேஜ் பெட்டியில் லைட் வசதி
அழகிய மீற்றர் தொகுதி
Abans
☎: 011 5777000
நாடெங்கிலுமுள்ள் அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.


4rever
SKIN NATURALS
By Chandhani Bandara
புதிய வருகை
Price Rs. 650/=
GOLD Fairness
Day & Night Cream
UNISEX
GOLD Fairness
Day & Night Cream
விட்டமின் A,B3,C மற்றும் E போன்ற போசணைகளும் கற்றாளையின் குணநலனும் அடங்கியது.
சூரிய ஒளியிலிருந்து சருமத்தை பாதுகாக்கும், சருமம் பொழிவற்று போதல் மற்றும் பருக்களை கட்டுப்படுத்தும்.
சருமத்தின் பொழிவுத்தன்மையை சரியான அளவில் பேணுகின்றது.
Make –up செய்யும் போது Foundation பூச்சாகவும் உபயோகிக்கலாம்
இயற்கையாகவே தோலை பொன்னிரமாக்கி மிளிரச்செய்யும்.
சருமத்தின் ஈரலிப்பை பாதுகாப்பதோடு சருமத்தை மென்மையாக்கும்.
Chandhani Bandara
4REVER FOUNDER & PROPRIETOR
(Cosmetologist)
ISO 9001:2008
CERTIFIED COMPANY
011 440 3283
shopping online
Visit: www.4everskinnaturals.lk
உங்கள் புகழ்பெற்ற ஃபோரெவர் உற்பத்திகள் தற்போது இணையத்தின் மூலம் உங்கள் வீடுகளுக்கே தருவித்துக்கொள்ள பிரவேசியுங்கள்....


IPM
Sri Lanka
The Nation's Leader in HRM
இப்பொழுது
யாழ் மண்ணில்
IIS CITY CAMPUS
தொழில்சார் மனிதவள முகாமைத்துவ
தகைமையினைப் பெற
உங்களுக்கான அதிவேகப் பாதை
எமது யாழ் கிளை மூலம்
வடக்கிலுள்ள மாணவர்கள் மனிதவள முகாமைத்துவத்திற்கான தொழில்சார் தகைமையினை இப்போது பெற்றுக்கொள்ள ஏதுவாயிருக்கும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தற்போது மனிதவள நிபுணர்களுக்கான அதிகரித்துச் செல்லும் தேவையினை பூர்த்தி செய்துகொள்ள இவ்வரிய சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ளுங்கள். எங்களின் தொழில்சார் தகைமையை 2 வருடங்களில் நீங்கள் பூர்த்திசெய்வதன் மூலம் நீங்கள் ஓர் (MBA) பட்டதாரியாகவோ அல்லது (Honors Degree) சிறப்புப் பட்டதாரியாகவோ அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் இலங்கையின் பல்கலைக்கழகங்களிலும் பட்டங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் உங்கள் முன்னேற்றத்தினை துரிதகதியில் அடைய இம்முறை ஏதுவாக இருக்கும்.
PCGD
Programme in Career Guidance and Development
For Students after O/L's
Mould your caring personality into a lucrative career
மே 25ம் திகதி முதல் ஆரம்பம்
FCHRM
Foundation Course in Human Resource Management
For those who are employed and full time students
காலம்: 2 மாதங்கள்
A solid foundation for professional growth
மே 11ம் திகதி முதல் ஆரம்பம்
CCHRM
Certificate Course in Human Resource Management
For Supervisors, Junior Executives and University Undergraduates
காலம்: 3 மாதங்கள்
We make you right for the picking
மே 4ம் திகதி முதல் ஆரம்பம்
யாழ் கல்வி நிலையம்
ipmjaffna@gmail.com / info@iis.edu.lk
www.ipmlk.org


micromax
பரிசுகள் என்றால் max
அதிகமதிகமாக மைக்ரோமெக்ஸ் ஃபோன்களை வாங்கி அதிகமதிகமாகப் பரிசுகளை வெல்லுங்கள்.
BOLT A59
BOLT A61
Canvas SOCIAL
Canvas 4
LED TV, ரீ சேட், பயணப் பொதி, குடை, தொப்பி போன்ற உடனடிப் பரிசுகளில் ஒன்றைப் பெறாதவர்கள் சீட்டிழுப்பின் மூலம் மோட்டார் சைக்கிள்களை வெல்ல முடியும். சீட்டிழுப்பில் பங்குபற்றுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். நீங்கள் வாங்கும் மைக்ரோமெக்ஸ் ஃபோனுடன் வழங்கப்படும் கரண்டும் அட்டையில் காணப்படும் இலக்கத்தை, 0777 389 389 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்.
metropolitan

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 166

## மகத்துவமான தாய்ப்பால்

தாய்ப்பால் குழந்தைக்கான நிறையுணவாகும். ஒரு தாயினால் தனது பிள்ளைக்கு வழங்கக் கூடிய மிகச் சிறந்த அன்பளிப்பும் தாய்ப்பாலே. குழந்தை பிறந்ததிலிருந்து 6 மாதங்கள் வரையான குழந்தையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் தேவையான அனைத்து போசனைகளையும் தாய்ப்பால் வழங்குகிறது.

**தாய்ப்பாலூட்டுவதால் உங்கள் குழந்தை பெறும் நன்மைகள்**

உயர்ந்த போசனைச் சத்துக்களை உள்ளடக்கியுள்ளது.

மாப்பொருள், புரதம், கொழுப்பு, விற்றமின்கள், கனியுப்புக்கள், நீர், அயன்கள் என்பவற்றை குழந்தையின் வளர்ச்சிக்கு தேவையான அளவிலும், எளிதில் சமிபாடடையக் கூடிய நிலையிலும் கொண்டுள்ளது. 6 மாத காலம் வரையான வயதை உடைய பிள்ளைகளுக்கு தேவையான அளவு நீரை தாய்ப்பால் கொண்டுள்ளதால், மேலதிகமாக நீரை வழங்க வேண்டிய அவசியமில்லை.

* குழந்தைக்கு நோயெதிர்ப்புச் சக்தியை வழங்குகிறது.

தாய்ப்பாலில் குழந்தைக்கு தேவையான பாதுகாப்பு காரணிகள் (Protective tactors) அடங்கியுள்ளன. இதனால் சிறந்த முறையில் தாய்ப்பாலூட்டப்படும் பிள்ளைக்கு கிருமித் தொற்று ஏற்படும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன. சிறந்த முறையில் தாய்ப்பாலூட்டப்படும் பிள்ளைகளில் வயிற்றோட்டத்தினால் இறக்கும் சந்தர்ப்பம் 14.2 தடவைகளாலும் சுவாச நோய்களினால் இறக்கும் சந்தர்ப்பம் 3.6 தடவைகளாலும் குறைவாக உள்ளது.

* அத்துடன் தாய்ப் பாலில் குழந்தைகளுக்கு தேவையான பல வளர்ச்சிக் காரணிகளும், நொதியங்களும், ஓமோன்கள் என்பனவும் காணப்படுகின்றன.
* தாய்ப்பால் வழங்கப்படும் பிள்ளைகளுக்கு ஒவ்வாமை தாக்கங்கள், காதில் ஏற்படும் தொற்றுக்கள், பல் சம்பந்தமான நோய்கள் (Orthodontic problem) என்பன ஏற்படும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன. அத்துடன் குழந்தைக்கு பிற்காலத்தில் ஏற்படக் கூடிய சலரோகம், உயர் குருதி அமுக்கம், இதய நோய்கள், உடல் பருமனடைதல், குருதிப் புற்றுநோய் (Lymphona) ஆகிய நோய்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் குறைவாகவே உள்ளன.
* உளவிருத்திக்கு உதவுகிறது

தாய்ப்பாலூட்டப்படும் குழந்தைகள் தாயுடன் சிறந்த பிணைப்பில் உள்ளனர். குறை மாதத்தில் பிறந்த பிள்ளைகளில் (Pre term babies) சிறந்த முறையில் தாய்ப்பாலூட்டப்படும் பிள்ளைகளின் புத்திக்கூர்மை தாய்ப்பால் தவிர மற்றைய செயற்கையான பால் குடிக்கும் பிள்ளைகளின் புத்திக் கூர்மையை விட அதிகமாக உள்ளது என்று ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.


**தாய்ப்பாலூட்டுவதால் தாய்மாரும் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.**

* குழந்தை பிறந்தவுடன் தாய்ப்பாலூட்டுதல் தாய்மாரின் கருப்பை பழைய நிலையை அடைவதற்கும் அதனால் அதிக இரத்தப் போக்கு ஏற்படுவதையும் பெருமளவில் தடுக்கிறது.
* முழுதாக தாய்ப்பாலூட்டும் தாயொருவரின் கர்ப்பம் தரிக்கும் தன்மை 6 மாத காலத்துக்கு இயற்கையாகவே தற்காலிகமாக தடுக்கப்படுகிறது. இது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சனத்தொகையை கட்டுப்படுத்தும் ஒரு காரணியாக உள்ளது.
* மிகவும் சுலபமானதாகவும் நேரத்தை மீதப்படுத்தக் கூடியதுமான தாய்ப்பாலூட்டல் பெண்களுக்கு ஏற்படக் கூடிய மார்பக மற்றும் சூலக புற்று நோய்க்கான சந்தர்ப்பங்களையும் குறைக்கிறது. அத்துடன் தாய்மாரின் உடற்கட்டமைப்பையும் பேண உதவுகிறது.

**தாய்ப்பாலூட்டும் முறை**

பல தாய்மார்கள் வெற்றிகரமாக தமது பிள்ளைகளுக்கு தாய்ப்பாலூட்டுகின்ற போதிலும், சில தாய்மார்கள் தாய்ப்பாலூட்டுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். முக்கியமாக முதன்முறையாக கர்ப்பம் தரிப்போர், மார்பகங்களில் குறைபாடு உள்ள தாய்மார் தாய்ப்பாலூட்டுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

* தாய் முதலில் தனக்கும் பிள்ளைக்கும் வசதியான நிலையில் இருந்தவாறோ அல்லது படுத்திருந்த நிலையிலோ தாய்ப்பாலூட்டலாம். தாயின் முதுகுப் பகுதிக்கு போதுமானளவு ஆதாரம் (Support)வழங்க வேண்டும்.
* குழந்தையின் முழு உடலும் தாயை நோக்கியவாறு இருத்தல் வேண்டும். குழந்தையின் தலை, கழுத்து என்பன உடலுடன் ஒரே நேர்கோட்டில் இருக்கக் கூடியவாறு குழந்தையை நிலைப்படுத்துதல் வேண்டும். தாயுடன் மிக நெருக்கமாக குழந்தையை வைத்திருப்பதற்காக குழந்தையின் உடலிலிருந்து மிகையான உடைகளை அகற்றி விடவும்.



* குழந்தையும் தாயும் சரியாக நிலைப்படுத்தப்பட்ட பின்னர் குழந்தையின் வாயருகிலுள்ள கன்னப்பகுதியில் தீண்டும் போது குழந்தை வாயை நன்கு திறக்கும். (Rooting reflex)
* குழந்தை வாயை நன்கு திறந்ததும் முலைக்காம்பும், அதனைச் சூழவுள்ள கருமையான பகுதியும் குழந்தையின் வாயினுள் இருக்கத் தக்கவாறு பிடித்தல் வேண்டும். தற்பொழுது உங்கள் குழந்தை சரியான முறையில் பாலூட்டப்படும்.


**உங்கள் குழந்தை சரியான முறையில் பாலூட்டப்படுகிறதா என்பதை அறிந்து கொள் ளக் கூடிய வழிகள்**

* பால் குடிக்கும் போது குழந்தையின் வாய் அகலத் திறந்திருக்கும்.
* குழந்தையின் நாடி மார்பகத்தை தொட்டவாறு இருக்கும்.
* குழந்தையின் கீழ் உதடு வெளிநோக்கியிருக்கும்.
* முலைக்காம்பைச் சுற்றியுள்ள கருமை நிறமான பகுதியில் பெரும்பகுதி குழந்தையின் வாயினுள் இருக்கும்.
* குழந்தையின் கன்னப் பகுதி பாலினால் நிறைந்திருக்கும்.
* குழந்தை பாலை உறிஞ்சுவதும் நிறுத்துவதும் ஒரு சீரான இடைவெளியில் இருக்கும்.
* குழந்தை பாலை விழுங்கும் சத்தம் தாய்க்குக் கேட்க கூடியதாகவும் இருக்கலாம்.
* குழந்தை அமைதியாகவும் தளர்வாகவும் இருக்கும்.
* தாயின் முலைக்காம்பில் வலி உணரப்படாது இருக்கும்.

குழந்தை பிறந்தவுடன் முதலாவதாக சுரக்கப்படும் தாய்ப்பாலில் அதிகளவிலான நோயெதிர்ப்புச் சக்தியை வழங்கக் கூடிய பிறபொருளெதிரிகள் காணப்படுவதால் உங்கள் குழந்தை பிறந்து 30 நிமிடங்களுக்குள் தாய்ப்பாலை கட்டாயம் வழங்குங்கள்.

*மருத்துவர் கிந்துஷா ஸ்ரீசெல்வசதீஸ்குமார்,*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

## நீரிழிவு நோயால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்புகள் தடுக்கப்படக் கூடியனவா?



நீரிழிவு நோயானது எமது உடலின் சகல உறுப்புகளிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. எனினும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் நீரிழிவு நோயினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

நீரிழிவு விழித்திரைப் பாதிப்புகள் பொதுவாக நீரிழிவு நோய் ஏற்பட்டு 10-20 ஆண்டுகளின் பின்னரே ஏற்படுகிறது. எனினும் கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயினால் விழித்திரைப் பாதிப்புகள் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவே ஏற்படுகிறது.

2030 ஆம் ஆண்டு நீரிழிவு விழித்திரைப் பாதிப்புகள் காணப்படுவோரின் எண்ணிக்கை 440 மில்லியனாகக் காணப்படும் என எதிர்வு கூறப்படுகிறது. இது 2010 இல் இருந்ததை விட 54 வீதம் அதிகமாகும். நீரிழிவு விழித்திரைப் பாதிப்புகளில் மிகவும் மோசமானது நிரந்தரப் பார்வை இழப்பாகும். 2012 ஆம் ஆண்டில் 133 நீரிழிவு நோயாளர்களில் ஒருவருக்கு நிரந்தரப் பார்வை இழப்பு காணப்பட்டது. ஆனால் 2030 ஆம் ஆண்டில் இந்த நிலைமை மிகவும் அதிகரிக்கும் எனவும் 3.3 மில்லியன் நீரிழிவு நோயாளர்கள் நிரந்தரப் பார்வை இழப்பு உள்ளவர்களாக காணப்படுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**நீரிழிவு விழித்திரைப் பாதிப்புகளை எவ்வாறு குறைக்கலாம்?**

01. நீரிழிவு நோயை ஆரம்பத்திலேயே கண்டறிதல்.

நீரிழிவு விழித்திரைப் பாதிப்புகளையும், இவற்றால் ஏற்பட்ட நிரந்தர பார்வை இழப்பை உடையவர்களையும் எடுத்துக்கொண்டால், இவர்களில் பெரும்பாலானோர் நீரிழிவு நோய் இருப்பதை மிகவும் பிந்திய நிலையிலேயே கண்டறிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். அத்துடன் இவர்களில் பலருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டும் தகுந்த முறையில் அறிவுறுத்தல் வழங்கப்படவில்லை. எனவே நீரிழிவு நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து , சரியான அறிவுறுத்தல்களின்படி குருதிக் குளுக்கோசு மட்டத்தையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பின் நீரிழிவு விழித்திரைப் பாதிப்புகளை பிற்போடலாம்.

02. தகுந்த முறையில் நீரிழிவு உயர்குருதி அமுக்கம் என்பவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

வகை 1 நீரிழிவு நோயாளர்கள் சரியான நீரிழிவு கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தால் 9 ஆண்டுகளின் பின்னர் நீரிழிவு விழித்திரைப் பாதிப்புகள் 26 வீதத்தினால் குறைவடைகிறது. இதே போன்று வகை 2 நோயாளர்களிலும் குறிப்பிட்ட அளவு குறைவடைகின்றது. அதே போன்று உயர் குருதி அமுக்கம் உடையோர் தமது குருதி அமுக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் விழித்திரைப் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

03. தகுந்த முறையில் கண் பரிசோதனை செய்வதன் மூலம் நீரிழிவு விழித்திரைப் பாதிப்புகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை எடுத்தல். நீரிழிவு நோய் உள்ளவர்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவை எனினும் கண் பரிசோதனை செய்து கொள்ளல் வேண்டும். அத்துடன், ஆரம்பப் பாதிப்புகள் காணப்படின், உரிய முறையில் கண் மருத்துவரிடம் சிகிச்சை எடுக்கவேண்டும்.

**உங்கள் கவனத்துக்கு...**

01. நீரிழிவு நோய் கண், மூளை, இதயம், சிறுநீரகம் என்பவற்றைப் பாதிக்கும்.
02. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மற்றவர்களை விட பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகமாகும்.
03. கண்ணில் முக்கியமாக பின்புறமாகவுள்ள விழித்திரையின் இரத்த நாளங்களைப் பாதிக்கும்.
04. விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களால் மட்டுமே பரிசோதித்துக் கண்டறிய முடியும்.
05. நீரிழிவு நோயினால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்பு, நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பொறுத்தது.
06. 25 வருடங்கள் நீரிழிவு நோய் உள்ளவர்களில் 70-80 வீதமானவர்களுக்கு விழித்திரைப் பாதிப்பு ஏற்படும்.
07. நீரிழிவு நோயாளர்களுக்கு மற்றவர்களை விட 25 மடங்கு பார்வை இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகும்.
08. குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரை எந்தவித அறிகுறிகளும் தெரியாது.
09. விழித்திரைப் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து லேசர் சிகிச்சையளித்தால் கணிசமான அளவில் பார்வை இழப்பைத் தடுக்கலாம்.
10. லேசர் சிகிச்சையினால் இருக்கும் பார்வையைப் பாதுகாக்க முடியுமே தவிர இழந்த பார்வையை திரும்பப் பெற முடியாது.
11. விழித்திரைப் பாதிப்பால் ஏற்படும் பார்வை இழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவரும் 12 மாதங்களுக்கு ஒரு முறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண் பார்வையை முற்றிலும் இழக்காமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

*மருத்துவர் கஜேந்தினி [illegible]ப்பிள்ளை,*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை.*

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தகவல் அறியும் சட்டம் நிறைவேற்றப்படுமா ?

"ஊடக சுதந்திரத்தையும், ஒழுக்கபூர்வமான பொறுப்புடனான செய்தி அறிக்கைகளையும் இந்த அரசு எப்போதும் பாதுகாத்து வந்திருக்கிறது."

இப்படியான ஒரு கருத்தை யார் கூறியிருப்பார்கள். சந்தேகமில்லாமல் இன்றைய அரசின் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அதுகல தான் இந்த அருமையான உண்மையை திருவாய் மலர்ந்திருக்கிறார். இலங்கையில் நிலவும் ஊடக சுதந்திரம் குறித்து வெகுவாகப் புகழ்ந்து தள்ளிவிட்டு, இங்கு காணப்படும் குறைபாடுகளை ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிட்டு நியாயப்படுத்திக் கொண்டு அவர் மேலும் கூறுகையில்; இன்றைய இலங்கையில் காணப்படும் ஊடக பன்முகத் தன்மையானது உலகின் பல நாடுகளில் ஊடக சுதந்திரம் தாக்குதலுக்குள்ளாவது அதிகரித்துவரும் காலகட்டத்தில் இலங்கையில் ஊடக சுதந்திரம் வளர்ச்சியடைந்து வருவதை தெளிவாகக் காட்டுவதாய் உள்ளது என்கிறார். அது மட்டுமல்ல அரசில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதி ஒருவரைப் போல அவர் மேலும் கூறுகையில், மேற்குலகினால் ஆதரவளிக்கப்படும் சில நிறுவனங்களால் ஊடக சுதந்திரம் ஒரு கருவியாகவும் பயன் படுத்தப்படுகின்றது என்கிறார்.

ஆனால் போர் முடிவுற்றதன் பின்னர் ஊடகங்களின் நிலைமை பற்றி ஆங்கிலப் பத்திரிகையொன்று குறிப்பிடுகையில், கடந்த ஒன்பது ஆண்டுகளில் சிறப்பாக, ஊடக சுதந்திரம் பெருமளவில் நசுக்கப்பட்டுள்ளது. இவைகளில் சில, ராஜபக்ஷ ஆட்சியாளரினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில் சில, கோடீஸ்வர வர்த்தகர்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவர்கள் ஆட்சியிலிருக்கும் மிகமிக முக்கியமான நபர்களுக்கு பெரும் தொகுதிப் பணப் பொதிகளை பிரசாரங்களுக்காக வழங்கி வருகிறார்கள் என்று பேசுகிறது.

இலங்கை அமைதிக்கும் நீதிக்குமான இயக்கம் தனது அறிக்கையில், 2005 ஆம் ஆண்டிலிருந்து 35 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். அதே நேரம் இதில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு கொலையாளியும் சிறைக்கு அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. அதேவேளை குறைந்தது 25 ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள் என்கின்றது.

இது பொதுவான கருத்தாக இருந்தாலும், எம்மைப் பொறுத்தவரை ஊடக சுதந்திரத்துக்காக உதயன் பத்திரிகை நிறுவனமும் அதன் ஊடகவியலாளர்களும் செந்நீரும், கண்ணீரும் சிந்திய சமீபத்திய காலகட்டத்தை மறந்துவிட இயலாது. அரசியல்வாதிகளின் தில்லுமுல்லுகளை மக்கள் முன் அம்பலப்படுத்தியமைக்காக 2006 ஆம் ஆண்டு மே 2 ஆம் நாள், ஊடக சுதந்திர தினத்துக்கு முந்திய தினம் உதயன் நிறுவனத்துக்குள் புகுந்த ஆயுதம் தரித்த கூலிப்படையொன்று மிலேச்சத்தனமாக ஊடகவியலாளர்கள் இருவரைக் கொன்றொழித்து வேறு பலருக்கு காயம் ஏற்படுத்தி, முக்கிய கருவிகள், ஆவணங்களை அழித்துவிட்டுச் சென்றது. அதன் சூத்திரதாரி யார் – எவர் என்பதைப் பொதுவாக மக்கள் அறிவார்கள். ஆனால் அரசின் ஆயுதப்படைகளோ காவல்துறையினரோ இன்னமும் அவர்களை வெளிப்படுத்தவும் இல்லை. வெளிப்படையாக விசாரிக்க முயற்சிக்கவும் இல்லை. அதேபோல்தான் கடந்த 13.04.2013 அன்றிரவு நிறுவனத்துக்குள் புகுந்த முகமூடி நபர்கள் பிரதான இயந்திரத்தையே முற்றாக அழித்துவிட்டு தாக்குதல் நடத்திச் சென்றார்கள். அது பற்றியும் இன்னமும் அரச அதிகாரிகளால் முறையான விசாரணையோ வேறு நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை. எவரும் கைது செய்யப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை.

ஊடக சுதந்திரம் இந்த நாட்டில் உண்மையில் நிலை பெற வேண்டுமானால் அதற்கான சூழ்நிலையை அரசு தனது செயற்பாடுகள் மூலம் உணர்த்த வேண்டும். அவ்வப்போது ஜனாதிபதி பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து தேநீர் விருந்தளித்தால், ஊடக சுதந் திரம் இருப்பதாக அர்த்தமாகிவிடாது. அதற்கான சில பல நடவடிக்கைகள் அவசியம். குறிப்பாக இந்த அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் ஊடகவியலாளர் கள், ஊடக நிறுவனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து நடத்தப்பட்டுள்ள விசாரணைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். விசாரணை நடக்காதவிடத்து அவைகளை விரைவுபடுத்த வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் எவராக இருந்தாலும் அவர் கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; தண்டிக்கப்பட வேண்டும். தாக்குதல்களுக்குள்ளான ஊடகவியலாளர்கள், நிறுவனங்களுக்கு நியாயமான அளவு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.

இவைகள் மாத்திரமன்றி வேறு நாடுகளில், குறிப்பாக இந்தியாவில் இருப்பது போன்ற தகவல் அறியும் உரிமைக்கான சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும்.

நாட்டில் ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்படுவதற்கு இந்த முக்கிய விடயம் நிறைவேற்றப்படுமானால் இங்கும் ஊடக சுதந்திரம் பிரமாதமாக நிலவுகிறது என்று கூறிக் கொள்ளலாம். இல்லையேல் தகவல் துறை பணிப்பாளரின் அறிவிப்புகள் போன்ற அரசைத் துதிபாடும் செய்திகள் அரசு துறை ஊடகங்களில் மட்டும் தலைப்புச் செய்திகளாக வந்து கொண்டிருக்கத்தான் படும்.

# கானல் நீராகத் தெரியும் அதிகாரப் பகிர்வு

சேரலாதன்



சிறுபான்மை இனங்களுடன் அதிகாரத்தைப் பகிர்வு செய்வதற்குப் பெரும்பாலான சிங்கள மக்கள் ஆதரவு தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இது எந்த அளவுக்கு உண்மையானது என்பது உடனடியாகத் தெரியவில்லை. ஆனால் சிங்கள மக்களிடையே மன மாற்றம் ஏற்படவேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஏனென்றால் இந்த நாட்டின் எதிர்காலத்தின் தலைவிதி அவர்களின் கரங்களிலேயே உள்ளது.

இலங்கை அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற கையோடு சிறுபான்மையினத்தவர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கியிருந்தால் இந்த நாடு மோசமான வேதனைகளையும், சோதனைகளையும் அனுபவித்திருக்க வேண்டி இருந்திருக்காது. ஆனால் இத்தனையும் நடந்து முடிந்த பின்னரும் எதிர்காலத்தைப் பற்றியதான சிந்தனை உருவாகாத நிலையே இங்கு தொடர்ந்து காணப்படுகின்றது.

அரசியல்வாதிகள் தமது எதிர்கால நன்மைகள் தொடர்பான கனவுகளில் மூழ்கி இருக்கின்றனரே தவிர நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. பெருந்தன்மைக் குணாங்களும் இவர்களை விட்டு தூர விலகிச் சென்றுவிட்டன. இந்த நாட்டை மீள முடியாததொரு அவலநிலைக்குள் இட்டுச் செல்வதையே இவர்கள் குறியாகக் கொண்டுள்ளமை தெரிகின்றது.

நாடாளுமன்றம் என்பது இந்த நாட்டின் அதியுயர்ந்த கௌரவத்தைக் கொண்டுள்ளதொரு இடமாகும். இந்த வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கௌரவத்துக்கு உரியவர்கள். ஆனால் இந்தக் கௌரவம் உரியமுறையில் பேணப்படுகின்றதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

காற்று நுழைய முடியாததொரு இடம் இருக்கலாம். ஆனால் அரசியல வாதிகள் எங்கும் எதிலும் தமது மூக்கை நுழைத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இந்த நாட்டின் எந்தவொரு விடயமும் அரசியல்வாதிகளின் தயவின்றி இடம் பெற முடியாது என்றதொரு நிலை இன்று உருவாகி விட்டது. அதிகாரப் பகிர்வும் இவர்களின் கைகளில் சிக்குண்டு அவஸ்தைக்குள்ளாகி வருகின்றது.

முதலில் அதிகாரப் பகிர்வு என்றால் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரேயிடத்தில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பல்வேறு மட்டங்களில் பகிர்ந்தளித்து அதன் மூலமாக நிர்வாகத்தைச் சிறப்பாகக் கொண்டு செல்ல முடியும். இதன் மூலமாக அந்தந்தப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தித் தமது தேவைகளையும், அபிலாஷைகளையும் பூர்த்திசெய்து கொள்ள முடியும்.

இந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனமாக விளங்கும் தமிழ் மக்கள் நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைத் தமது பூர்வீகமாகக் கொண்டவர்கள். இந்தப் பிரதேசங்கள் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் கணிசமான பகுதியைக் கொண்டுள்ளன. இது எப்போதுமே பெரும்பான்மை அரசியல்வாதிகளின் கண்களைக் குத்திக் கொண்டே இருந்தது. சிறுபான்மையினராகிய தமிழர்களுக்கு இந்தளவு நிலம் தேவைதானா என்ற கேள்வியும் அவர்களின் மனங்களில் எழுந்தது. இதன் விளைவாகவே கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டன. இன விகிதாசாரத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. கிழக்கு மாகாணம் தமிழர்களின் பூர்வீக நிலம் என்ற நிலைக்கு ஆப்பு வைக்கப்பட்டது. வடக்கைப் பொறுத்தவரையிலும் போர் ஓய்ந்ததன் பின்னர் திட்டமிடப்பட்ட வகையில் பல காரியங்கள் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன. இதற்கு அரசின் ஆசீர்வாதமும் உள்ளதால் இவற்றைத் தடுக்க முடியவில்லை. இதன் விளைவுகளைத் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் அனுபவிக்கத்தான் போகின்றனர்.

இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இன்று வரை பெரும்பான்மையினத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியதாகவே வரலாறு தெரிவிக்கின்றது. அதிகாரப் பகிர்வு என்ற சொல்லை உச்சரிக்கக்கூட விரும்பாத அவர்கள் அதனை மறைத்து காலத்துக்குக் காலம் தமிழர்களை ஏமாற்றி வருகின்றனர். இந்த வகையில் பண்டா- செல்வா ஒப்பந்தம், டல்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியன கிழித்தெறியப்பட்டன; கைவிடப்பட்டன.

இந்த வகையில் 1987இல் மேற்கொள்ளப்பட்ட ராஜீவ்காந்தி, ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆகியோரால் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமும் செயலற்றதும், பயனற்றதும் ஆகிய ஒன்றாக அமைந்து விட்டது. மாகாண சபைகளை உருவாக்கி அதிகாரப் பகிர்வு வழங்குவதற்கென உருவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தம் செல்லாக் காசாகக் காணப்படுகின்றது.

இரண்டு நாடுகளின் தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக உடைத்தெறியப்பட்டது. இதிலிருந்து இந்த ஒப்பந்தத்தின் பலத்தைப் புரிந்துகொள்ள முடியும். மேலும் அதிகாரங்கள் எதுவும் இல்லாத மாகாண சபைகள் இலங்கை அரசைப் பொறுத்தவரை வெள்ளை யானைகளாகவே கருதப்படுகின்றன. இந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் இயங்கி வரும் மாகாண சபை தமிழர்களை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கும் வகையில் அமைச்சரவையில் ஒரு தமிழர் கூட இல்லாத நிலையில் அரசின் கைப்பாவையாக இயங்கி வருகின்றது. அதிகாரப் பகிர்வு எல்லை தொடர்பாக அங்கு எவரும் மூச்சு விடுவதில்லை. வழங்கப் பட்ட சில அதிகாரங்கள் கூட அங்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. தமிழர் விரோதப்போக்கு அங்கு தலைதூக்கிக் காணப்படுகின்றது. அண்மையில் தேர்தல் இடம்பெற்று மக்கள் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்ட வடமாகாண சபை பெயரளவுக்கு மட்டுமே இயங்கி வருகின்றது. ஆளுநர் சகல அதிகாரங்களையும் தமது கைக்குள் போட்டுக் கொண்டு மாகாண சபையின் நிர்வாகத்தை மேற்கொண்டு செல்கின்றார். மக்கள் பிரதிநிதிகள் இதை வெறுமனே தமது ஆவல் நிறைந்த கண்களால் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களோ மாகாண சபை மீதான நம்பிக்கையை இழந்து வருகின்றனர். தமக்கு மிகப் பெரிய அரணாக விளங்குமென அவர்கள் எதிர்பார்த்த மாகாண சபை பலவீனமான நிலையில் அல்லாடிக் கொண்டிருக்கின்றது.



ஆகவே காலத்துக் காலம் கதை சொல்லிக் கொண்டிருப்பதை விடுத்து மனச் சுத்தியுடன் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதில் பெரும் பான்மை மக்களும் அவர்களின் தலைவர்களும் மனமொத்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். கடந்த கால நடவடிக்கைகளை ஒரு கணம் இவர்கள் சீர்தூக்கிப் பார்ப்பார்களேயானால் இதன் அவசரமும் அவசியமும் அவர்களுக்குப் புரியும். இதை விடுத்து இவர்கள் மீண்டும் மீண்டும் முன்னர் செய்த தவறுகளையே செய்து கொண்டிருப்பார்களாயின் இந்த நாடு தாங்காது என்பது நிதர்சனமாகும்.

# ஜய வருட

## புத்தாண்டு பலன்கள்

### குரு, ராகு, கேது, சனிப்பெயர்ச்சி



**இந்தத் தமிழ்ப் புத்தாண்டில் மிக முக்கிய கிரகங்கள் பெயர்ச்சியாவது இந்த ஆண்டின் சிறப்பு அம்சமாகும். குரு பெயர்ச்சி, ராகு, கேது பெயர்ச்சி, சனி பெயர்ச்சி என முக்கிய கிரகங்கள் இடம்மாறுகின்றன. 12.06.2014 வியாழக்கிழமை மிதுன ராசியிலிருந்து தனது உச்சவீடான கடகத்துக்கு குரு பகவான் பெயர்ச்சியாகின்றார். 20.06.2014 வெள்ளிக்கிழமை ராகுபகவான் துலாத்தில் இருந்த கன்னிக்கும், கேது பகவான் மேஷத்திலிருந்து மீனராசிக்கும் பெயர்ச்சியாகின்றார்கள். 18.12.2014 வியாழக்கிழமை சனி பகவான் துலாம் இராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு பெயர்ச்சியாகின்றார்.**

**நல்லதும் கெட்டதுமான கிரக நிலைக்கும் தமது தனிப்பட்ட ஜாதகத்துக்கும் ஏற்ப பல நிகழ்வுகள் நடைபெற காத்திருக்கின்றன. எனவே அன்பர்கள் தமது ராசிப்படியும் ஜாதகத்தின் படியும் நடக்க விருக்கும் நிகழ்வுகளை அறிந்து எதிர்கால வாழ்க்கையை ஜோதிட ரீதியாகத் திட்டமிட்டுக் கொள்ளலாம்.**

## சிம்மம்

மகம், பூரம் உத்திரம் 1 ஆம் பாதம்



அசாத்தியமான தைரியத்துடன் சற்று முரட்டுத்தனமும் கொண்டவர்கள். எதையும் தலைமையேற்று செய்யக் கூடியவர்கள். எடுத்த முயற்சியை முடிக்கும் வரை சளைக்காமல் முயற்சிக்கக் கூடியவர்கள். தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் உடையவர்கள். தன்னை நம்பியவர்களை எப்போதும் கைவிடாது காப்பாற்றக்கூடியவர்கள். அவ்வாறான கொள்கை மாறாத சிம்மராசிக்காரர்களே!

தமிழ்ப் புத்தாண்டு ஆரம்பத்திலிருந்து 12.06.2014 வரை குரு இலாபஸ்தானம் எனப்படும் 11 ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் வரவேண்டிய பழைய கடன் பாக்கிகள் வசூலாக வாய்ப்புண்டு. தடைப்பட்ட காரியங்கள் தடையின்றி நிறைவேறும். இழுபட்ட விடயங்கள் இனிமையாய் நடந்தேறும். செல்வமும் செல்வாக்கும் உயரும். அதிர்ஷ்டங்கள் கூடிவரும். குழந்தைச் செல்வத்தை எதிர்பார்த்தோருக்கு அந்தச் செல்வம் கைகூடும். திருமணம் போன்ற சுபகாரியங்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரம் உயர்ச்சியாகும். உத்தியோகத்தில் பதவி அல்லது சம்பள உயர்வு ஏற்பட வாய்ப்புண்டு. வெளிநாட்டுப் பிரயாணத்தில் முயற்சிகள் கைகூடும். புதிய முயற்சிகள் வெற்றி அளிக்கும். பிள்ளைகளால் இலாபமுண்டாகும். வீடு கட்டும் திட்டம், அல்லது இருக்கும் வீட்டை விரிவுபடுத்தும் முயற்சிகள் கைகூடிவரும். புதிய பதவி கூடிவரும். சுபகாரியங்களை முன்னின்று நடத்தி மகிழ்ச்சி அடைவீர்கள். நன்மைகளே நடக்கும்.

13.06.2014 இற்கு பின் குருபகவான் உங்கள் ராசிக்கு விரையஸ்தானம் என்ற 12 ஆம் வீட்டுக்கு வருகின்றார். இது பெரும் நன்மை அல்ல. வீண்அலைச்சல், வீண் செலவு, தேவையற்ற பிரயாணங்கள், மனதில் விரக்தியை கொடுக்கும். வரவை மிஞ்சிய செலவைக் காட்டும். சேமிப்பு குறையும் அல்லது கரையும். தேவையற்ற விமர்சனத்துக்கு உள்ளாவீர்கள். பிணை, பொறுப்பு, பிணைக் கையெழுத்தைத் தவிர்க்கவும். எதற்கும் யாரையும் பெரிதாக நம்பி ஏமாறாதீர்கள். மனதில் அமைதி குறையும். தூக்கம் கெட்டு தேவையற்ற சிந்தனைகளும் மனதில் ஒருவித பயமும் தோன்றும். புதிய முயற்சிகள், புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். முடிந்த மட்டும் செலவைக் கட்டுப்படுத்தவும். கௌரவம், செல்வாக்கில் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதால் தேவையற்ற விடயங்கள், சர்ச்சைகளில் தலையிடுவதைத் தவிர்க்கவும். வியாபாரம், உத்தியோகம் புதிய முயற்சிகள் என்பவற்றில் மீண்டும் இழுபறி காட்டும், கவனம்.

20.06.2014 வரை கேது 9 இல் இருப்பதால் உங்களை அறியாமலேயே உங்களுக்குள் தாழ்வு மனப்பான்மை வந்து போகும். தந்தையாருடன் வீண் மனஸ்தாபங்கள் வந்து போகும். சற்று அனுசரித்து நடவுங்கள். தந்தையின் ஆரோக்கியமும் பாதிக்கும். அக்கறை காட்டுங்கள். அவசரமாக மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம். தந்தையின் வழிச் சொத்துக்களில் சில சிக்கல்கள் வந்து பின் உங்களுக்கு சாதகமாய் தீரும்.

3 ஆம் வீட்டில் இருக்கும் ராகு உங்களுக்கு நல்ல தைரியத்தைக் கொடுப்பார். எந்த முடிவும் தைரியமாக எடுப்பீர்கள். புதிய முயற்சிகளை தைரியமாகச் செய்வீர்கள். எதையும் சமாளிக்க, சாதிக்கக் கூடிய தைரியம் உங்களுக்கு உண்டு. வழக்குகளில், வெற்றி கிடைக்கும். அரச உதவிகளை எதிர்பார்க்கலாம். மனதில் சில இனிய அனுபவங்கள் மகிழ்ச்சியைத் தரும். எதையும் இருமுறை சிந்தித்துச் செய்யவும்.

21.06.2014 முதல் வருட இறுதி வரை 2 இல் ராகுவும் 8 இல் கேதுவும் இருப்பது உங்கள் ராசிப் படி நன்மை இல்லைத் தான். பேச்சில் நிதானமாய் இருங்கள். நீங்கள் சாதாரணமாய் பேசுவதுகூட மற்றவர்களைப் புண்படுத்தும். கண்டபடி வாக்குறுதிகளைக் கொடுக்காதீர்கள்.

உங்களால் அதைக் காப்பாற்ற முடியாமல் போகும். வீண் வம்புகள் தானே வரும். விழிப்புணர்வுடன் எப்போதும் இருங்கள். மறைமுக எதிரிகளால் எதிர்ப்புக்கள் தலைதூக்கும். அதிக கோபம் வரப் பார்க்கும். பெரும்பாலும் பொறுமையை இழக்க வேண்டி வரும். நிதானமாய் இருங்கள். வாகனங்களைக் கவனமாய் செலுத்துங்கள். விபத்துகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தோல், நரம்பு நோய்கள் வரவாய்ப்புண்டு. கொசு மற்றும் விசப்பூச்சிகளால் ஆபத்தான நோய்கள் வரலாம். எதிலும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய காலமிது. நிதானம், பொறுமை, சகிப்புத் தன்மை என்பன உங்களை எல்லாப் பிரச்சினைகளிலும் இருந்து காப்பாற்றும்.

18.12.2014 வரை சனி உங்களுக்கு 3 ஆம் வீட்டில் இருப்பதால் குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். பெரிய பதவிகள் உங்களைத் தேடிவரும். மனதில் உற்சாகமும், தெம்பும், தைரியமும் பெருகும். பிறர் உதவிகள் கிடைக்கும். சில தடைகள் நீங்கும். பழைய பொருள்கள், வீடு, வாகனங்கள் போன்றவற்றை நீங்கள் எதிர்பார்த்த விலைக்கு விற்கலாம். அயலவர்களின் உதவிகள் உங்களுக்கு ஒத்தாசையாக இருக்கும். சகோதர வழியில் சில பிரச்சினைகள் வந்தாலும் உதவிகள் கிடைக்கும். வேற்று இன, மத, மொழியினரால் இலாபமுண்டு. பிரயாணங்களினால் இலாபமுண்டு. பெரியோர் சபையில் மரியாதை கிடைக்கும்.

18.12.2014 இற்கு பின் சனி உங்கள் ராசிக்கு 4 இல் அமைவதால் உங்களுக்கு அர்த்தாஷ்டம சனி. தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படலாம். முதுகு, முள்ளந்தண்டில் வலி உருவாகலாம். தாயாருடன் சில மனஸ்தாபங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. கொஞ்சம் அனுசரித்துப் போங்கள். விட்டுக்கொடுத்து நடவுங்கள். வீடு, வாகனத்தினால் செலவுகள் வர வாய்ப்புண்டு. தேவைக்கு பணம் கையில் இருக்காது. கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். வீண் செலவுகளும் வந்து போகும். உடல் பலவீனப்பட்டது போல் தோன்றும். அசதி, சோர்வு காட்டும். மனம் அடிக்கடி சலித்துக் கொள்ளும். விரக்தி மனப்பான்மை தோன்றி மறையும். கடமையில் கண்ணாயிருங்கள். செய்ய வேண்டியதைச் சரியாய் செய்யுங்கள். நடப்பவை நல்லதாய் நடக்கும் என நம்புங்கள்.

**வியாபாரிகளுக்கு:** புதிய முதலீடுகள் நன்மை தரும். வியாபாரத்தில் சிறிது மாற்றம் செய்யுங்கள். போட்டி சிறிது கடினமாக இருந்தாலும் உங்கள் முயற்சிக்கு பலன் உண்டு.

**உத்தியோகத்தர்களுக்கு:** அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். இடமாற்றத்துக்கு இடமுண்டு. பதவி, சம்பள உயர்வும் உண்டு.

**மாணவர்களுக்கு:** கல்வியில் முன்னேற்றம் உண்டு. கலைத்துறையில் முன்னேற்றம் உண்டு. போட்டிகளில் வெற்றியுண்டு. நண்பர்களால் நன்மை உண்டு.

**பரிகாரம்:** தினசரி சூரிய வழிபாடு செய்யுங்கள். குரு வாரம், குருவுக்கு நெய்த்தீபம் ஏற்றி மனமுருகி வழிபடுங்கள். குருவழிபாடு குறைகளைப் போக்கும்.

**தானதர்மம்:** முதியோருக்கு உதவிடுங்கள். குருவுக்கு குரு சேவை செய்யுங்கள். ஒரு பெரியவரை குருவாய் ஏற்றுப் போற்றி வழிபடுங்கள். அவருக்கு வஸ்திர (ஆடை) தானம் செய்யுங்கள். உத்தம பிராமணர்களுக்குக் கடலை தானம் கொடுங்கள்.

மொத்தத்தில் இவ்வருடம் 50 சதவீத நன்மைகளைப் பெறுவீர்கள்.

## கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்



சிக்கனமாய் இருக்கும் அதேநேரம் அடுத்தவர்க்கு உதவும் குணம் கொண்டவர்கள். இரகசியங்களைக் காக்கக் கூடியவர்கள். எதையும் எப்படிப் பேசி நடந்து தனக்கு சாதகமாக காரியம் சாதிக்கும் இரகசியம் அறிந்தவர்கள். உலக அனுபவ அறிவு மிக்கவர்கள். ஞாபக சக்தியுடையோர். எக்காரியத்தில் ஈடுபடினும், அதில் தனக்கு என்ன உண்டு என எதிர்பார்ப்பவர்கள். இனிமையாகப் பேசி எல்லோரையும் வசப்படுத்தும் கன்னி ராசிக்காரர்களே!

சித்திரைப் புத்தாண்டு முதல் 12.06.2014 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு கர்மஸ்தானம், ஜீவஸ்தானம் என்ற 10ஆம் வீட்டில் இருப்பதால் வேலை, தொழில், உத்தியோகம் செய்யும் இடத்தில் சில தகராறுகள் வர வாய்ப்புண்டாகலாம். கூட வேலை செய்பவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். அவர்கள் உங்களுக்கு எதிரியாய்ச் செயற்படலாம். நீங்களே தொழில் செய்யும் இடத்தில் சில தவறுகளைச் செய்யலாம். எல்லாவற்றிலும் எச்சரிக்கையாய் இருங்கள். நிதானமாய் இருங்கள். சக ஊழியர்களிடம் கவனமாய்ப் பழகுங்கள். வாழ்க்கைத் துணையால் சில செலவுகள் ஏற்பட வாய்ப்பதிகமாகும். வீடு, தொழில், வியாபாரம் போன்ற எதிலாவது மாற்றத்தைச் செய்ய வேண்டிய சிந்தனை மேலோங்கும். சில வேளை ஏதாவது இடமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

13.06.2014 பின் குரு உங்கள் ராசிக்கு லாபஸ்தானமான 11 ஆம் வீட்டில் வருவதால் தடைப்பட்ட காரியங்கள் நடைபெறும். புதிய முயற்சிகள் வெற்றி அடையும். வீட்டில் நல்ல காரியங்கள் இனிதே நடைபெறும். செல்வமும், செல்வாக்கும் பெருகும். வெளி வட்டாரத்தில் உங்கள் மதிப்பு உயரும். மனப் பயம் நீங்கும். புதிய உற்சாகத்துடன் புதிய முன்னேற்றத் திட்டங்களைப் பற்றிச் சிந்திப்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்தபடி வீடு, வாகன யோகமாய் அமையும். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள். தள்ளிப் போன நேர்த்திக் கடன்கள் (நேர்த்திகளை)நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் இலாபம் கூடும். தேங்கிய சரக்கு விற்பனையாகும். புதிய யுக்திகள் இலாபம் கொடுக்கும். உத்தியோகத்தில் பதவி, சம்பள உயர்வு கிடைக்கும். மேல் அதிகாரிகளின் பாராட்டுதலால் மகிழ்ச்சி அடைவீர்கள். நல்லதையே நினையுங்கள். நல்லதே நடக்கும்.

20.06.2014 வரை உங்கள் ராசிக்கு 2 இல் ராகுவும் 8 இல் கேதுவும் இருப்பதால் தேவையற்ற பிரச்சினைகள் வந்து போகும். உங்கள் பேச்சினால் சில சிக்கல்கள் உருவாகும். ஒருமுறைக்கு இருமுறை யோசித்துப் பேசுங்கள். மனதில் நிம்மதி குறையும். விரக்தி உருவாகலாம். எப்போதும் எதற்கும் சலித்துக் கொள்வீர்கள். எதிலும் ஆர்வமின்மையும், அக்கறையின்மையும் காட்டும். ஆரோக்கியத்திலும் கவனம் எடுங்கள்.

21.06.2014 பின் உங்கள் ராசிக்கு ராசியில் அதாவது ஜன்மத்தில் ராகுவும் (முதலாம் இடம்) 7க்குள் கேதுவும் தொடர்வதால் எதிலும் அவசரம், படபடப்பு காட்டும், அதிக பதற்றத்தோடு காணப்படுவீர்கள். பொறுமையைக் கடைப்பிடியுங்கள். முடிந்தளவு விட்டுக்கொடுத்து நடவுங்கள். எதிலும் அசட்டையாக இருக்காதீர்கள். விழிப்புணர்வுடன் இருங்கள். கணவன், மனைவிக்குள் சிறுசிறு வேறுபாடுகள், சச்சரவுகள் வரக்கூடும். சமாளித்துக் கொள்ளுங்கள். உறவினர்கள் பகை வரலாம். பார்த்துக்கொள்ளுங்கள். வியா பாரங்களில் முறுகல் நிலைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

தலைவலி, வாயுத்தொல்லை போன்ற ஆரோக்கியக் குறைவுகள் தோன்றி மறையும். நிம்மதி பறிபோகும். தன்னம்பிக்கையுடன் இருங்கள். வெற்றி உங்களுக்கே!

17.12.2014 வரை உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சனி ஏழரைச் சனியாக தொடர்வதால் பிணைக் கையெழுத்து, பிணைப் பொறுப்பு என்பவற்றை முற்றாகத் தவிர்த்திடுங்கள். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள்.தேவைப்படின் ஒருமுறை கண் பரிசோதனை செய்யுங்கள். பிள்ளைகளின் பிரச்சினைகளைச் சற்றுப் புரிந்துகொண்டு செயற்படுங்கள். ரகசியத்தைப் பாதுகாத்திடுங்கள். உறவினர் பகை, அவமானங்கள் வரவாய்ப்புண்டு. ஜாக்கிரதையாய் இருங்கள்.

மருத்துவ செலவும் காட்டும். திடீரென தேவைக்கு பணம் கையில் இராது. உறவினர்களிடம் அளவாக பழகுங்கள். வீண்பழி வர வாய்ப்புண்டு. பொறுமையாய் இருங்கள். காலம் கனிந்துவரும்.

18.12.2014 பின் சனி 3 ஆம் வீட்டுக்கு வருவதால் தைரியம் கூடிவரும். நிம்மதி கூடும். பிரச்சினைகள், தடைகள் எல்லாம் படிப்படியாய் குறையும். தடைப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வாழ்வில் வசந்தம் களைகட்டும். உங்களை வெறுத்தவர்கள் இப்போது விரும்புவார்கள். உங்களை ஏளனம் செய்தோர் இப்போது உங்களைப் புகழ்ந்து பேசுவார்கள். சமுதாயத்தில் மதிப்பும், கௌரவமும் உயர்ந்து காணப்படும்.

**வியாபாரிகளுக்கு:**

கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள். வேலை ஆள்களை அதிகமாக பயன்படுத்துங்கள். அறிமுகம் இல்லாத 'வியாபாரத்தைச் செய்யாதீர்கள். வியாபாரத்தில் இலாபம் உண்டு.

**உத்தியோகத்தர்களுக்கு:**

ஜூன் மாதம் வரை வேலைப்பளு அதிகரிக்கும். ஜூன் மாதத்தின் பின் முயற்சிக்கு வெற்றி கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். சக ஊழியர்களினால் பாராட்டப்படுவீர்கள்.

**மாணவர்களுக்கு:**

கலைத்துறையில் ஆர்வம் அதிகரிக்கும். சக மாணவர்களால் பாராட்டுக் கிடைக்கும். பரீட்சையில் சித்தி அடைவீர்கள். போட்டிகளில் வெற்றி உண்டு.

**பரிகாரம்:**

ராகு கால பூஜையை செய்யுங்கள். விநாயகருக்கு அறுகம் புல் சாத்தி வழிபடுங்கள். துர்க்கைக்கு நெய்தீபம் ஏற்றுங்கள். துன்பங்கள் பறந்தோடும்.

**தானதர்மம்:**

தோல் நோய் உள்ளவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் உதவி, பிச்சை, தர்மம் செய்யுங்கள். உணவு கொடுங்கள். சுமங்கலி பூசை செய்யுங்கள். மங்கலப் பொருள்களை சுமங்கலிகளுக்கு தானம் செய்யுங்கள்.

மொத்தத்தில் இவ்வருடம் 65 சதவீத நன்மைகளைப் பெறுவீர்கள்.

# விசா பெற்றுக் கொள்ள இருப்பவர்கள்

**STUDENT VISA 100%**

(Genuine Student Only)



## June, July, September - Any other intake

- இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு! நீங்கள் விரும்பும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக் கடிதம் மிகவிரைவில் இயலுமான செலவில் நாம் பெற்றுத் தருவோம்.
- எமது விரைவான, வசதியான, இலாபகரமான சௌகர்யமான சேவையை இன்றே நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- எமது பயிற்சி பெற்ற சட்ட வல்லுனர்கள் புதிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக விசா தொடர்பான சகல கருமங்களையும் செய்து தருவார்கள்.

ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

## வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement

**UK, USA, AUSTRALIA, CANADA, NEW ZEALAND & All other Countries**

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions

**SKYWALK VISA SOLUTION**
No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)
Web: www.skywalk.com

Hotline: 0777 711 905

# விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சிபெற்ற சட்டத்தரணிகளால் விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்துகொடுக்கப்படும்.

## VISIT VISA

- சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அவமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- பெற்றோர், பேரன், பேத்தியர்களுக்கான சுப்பர் விசா - கனடா, மணமான தம்பதியருக்கான வதிவிட விசா - சகல நாடுகளுக்கும்.



ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**தாமதமாகிய விசாக்கள் - நிராகரிக்கப்பட்ட விசாக்கள் உள்ளதா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?**

**Refused? Rejected?**

- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் விசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் அது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.
- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- விசா விண்ணப்படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- Ticket, Hotel Booking, Travel Insurance செய்து தரப்படும்.
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

## வங்கியில் பணவைப்பு

*Savings Book, Fixed Deposit, Statement*

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

## உங்களின் விசா எங்களின் சவால்

Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals New Applications etc...

SKYWALK Visa Solutions

**SKYWALK VISA SOLUTION**
No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)
Web: www.skywalk.com

Hotline: 0777 711 905

(சி.13763)

# செலிங்கோ லைப்பின் ஓய்வூதியத் திட்டங்கள்



ஆயுள் காப்புறுதித் தலைவர்களான செலிங்கோ லைப் மே மாதம் முழுவதும் நாடு தழுவிய ரீதியில் ஓய்வுகால திட்டமிடல் ஊக்குவிப்புச் செயற்பாடுகளை முன்னெடுக் கவுள்ளது.

இதனை முன்னிட்டு 2014 ஏப்ரல் மாதத்தில் மூன்று வகையான ஓய்வுகால திட்டங்கள் அறிமுகம் செய்யப் படவுள்ளன.

2008ஆம் ஆண்டு முதல் கம்பனி மே மாதத்தை ஓய்வுகால திட்டமிடல் ஊக்குவிப்பு மாதமாக அனுஷ்டித்து வருகின்றது. வருடாந்தம் இந்தக் காலப்பகுதியில் இந்த ஊக்குவிப்புச் செயற்பாடுகளில் 5.000 பேர் கொண்ட செலிங்கோ விற்பனை படை ஈடுபடுத்தப்படுகின்றது.

இம்முறை மூன்று புதிய ஓய்வுகால திட்டங்கள் அமுல் செய்யப்படுவது இந்த நடவடிக்கைக்கு மேலும் உற்சாகம் ஊட்டியுள்ளது. வாடிக்கையாளர்களை வீட்டுக்கு வீடு தேடிச் சென்று ஊக்குவிப்பது உட்பட கம்பனியின் கிளை மட்டத்திலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ள தாக கம்பனி அறிவித்துள்ளது.

பெலிக்ஸி பிளான் ஒன்று. இரண்டு. மூன்று எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புதிய திட்டங்களில் பெலிக்ஸி பிளான் 1. மிகச் சிறிய தொகையான ஆயிரம் ரூபாவுடன் தொடங்கப்படக் கூடியது. ஐந்து ஆண்டு காலத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம். அல்லது காலாண்டுக்கான தொகை யாக அல்லது அரையாண்டுக்கான தொகையாக அல்லது வருடத்துக்கான தொகையாக மொத்தமாகவும் செலுத் தலாம்.

பெலிக்ஸி பிளான் 2. ஒரே தடவையில் ஒரு லட்சம் ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை செலுத்த வேண்டும். இதற்கான முதிர்ச்சிக் காலம் பத்தாண்டுகள். வாடிக்கையாளர் விருப்பப்படி இதை நீடிக்கவும் முடியும். பெலிக்ஸி பிளான் 3. ஒரே தடவையில் ஒரு லட்சம் ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைச் செலுத்தும் திட்டமாகும். ஆனால் இதனை ஐந்து முதல் ஒன்பது ஆண்டுகளுக்கு கட்டமைத்துக் கொள்ளலாம்.

செலிங்கோ லைப்பின் ஓய்வூதியத் திட்டங்கள் அனைத்தும் பொதுவாகவே வங்கிகள் வழங்கும் நிரந்தர வைப்புக் கணக்குகளுக்கான கூட்டு வருமானத்தை விட அதிகம் வழங்கக் கூடியதாகும். உதாரணமாக 2014ஆம் ஏப்ரல் மாதத்துக்கான வழங்கல் வீதமானது 11.42 வீதமாகும். அத்தோடு ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்துக்கு வரி விலக்கும் உண்டு.

இலங்கை போன்ற நாடுகளில் ஓய்வுகால திட்டமிடலின் அவசியம் தொடர்ந்து உணரப்பட்டு வருகின்றது. சனத்தொகையில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதும். பெரும்பாலான மக்கள் மத்தியில் ஓய்வு காலத் திட்டமிடல் இல்லாமல் இருப்பதும் இதற்கு முக்கிய காரணமாகும் என்று கூறினார் செலிங்கோ லைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர். ரெங்கநாதன்.

ஒரு தசாப்த காலத்துக்கு முன்பே இதை மிகவும் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டிய ஒரு விடயமாக நாம் அடையாளம் கண்டு விட்டோம். எனவே நாம் இலக்கு வைத்துள்ள பிரிவினர் மத்தியில் ஊடுருவி இதனை முன்னெடுத்துச் செல்ல இந்த ஓய்வு காலத் திட்டமிடல் மாதம் வழிவகுக்கின்றது' என்று அவர் மேலும் கூறினார். (த)

# ஓட்டோக்கள் வழங்கி சாரதிகளை வலுவூட்டும் ஜனசக்தி நிறுவனம்

ஜனசக்தி நிறுவனத்தின் மூலம் நாடுபூராகவும் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் மத்தியில் முன் னெடுக்கப்பட்ட ஸ்ரிக்கர் விளம்பர ஊக்குவிப்பு திட்டத்தின் மூலம் இரண்டு முச்சக்கர வண்டிகளைப் பெறும் அதிர்ஷ்டசாலிகள் அண்மையில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டனர். இக் குலுக்கல் தெரிவில் பெலியத்த பகுதியைச் சேர்ந்த அஜித் குமார வந்த போனா மற்றும் மகியங்கனை யைச் சேர்ந்த ஏ.ஜி.நதீகா சென விரத்ன ஆகியோரே வெற்றியாளர் களாக த் தெரிவு செய்யப்பட்டனர்.




இந்த குலுக்கல் தெரிவில் பங்கேற் கும் முகமாக கூப்பன்களை அனுப்பி வைத்திருந்த சுமார் 11,000 இற்கும் அதிகமானோரிடையே இவ்விரு அதிர்ஷ்ட சாலிகள் வெற்றியாளர்களாக தேர்ந்தெடுக் கப்பட்டனர். ஜனசக்தி நிறுவனத் தின் பணிப்பாளரும். பிரதம நிறை வேற்று அதிகாரியுமான ஜுட் பெர் னாண்டோ மூலம் முதல் வெற்றி யாளர் தனிப்பட்ட ரீதியில் தேர்ந்தெடுக் கப்பட்டதுடன், வருவாய் திணைக்களத்தின் சிரேஷ்ட வரி அதிகாரியின் பங்குபற்றலுடன் நடைபெற்ற நிகழ்வில் பொது விற்பனை பிரிவின் தேசிய விற்பனை முகாமையாளர் சுரேஷ் பஸ்நாயக்க அவர்களினால் இரண்டாவது வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த ஊக்குவிப்பு திட்டமானது முச்சக்கர வண்டி ஓட்டுநர்களை வலுப்படுத்தும் நோக்கிலும், தற்போதைய தனிநபர் விபத்து காப்பீட்டுக்கு மதிப்புச் சேர்க்கும் நோக்கிலும் முன்னெடுக் கப்பட்டது.

ஜனசக்தி நிறுவனத்தின் தனிநபர் விபத்து காப்புறுதி திட்டத்தின் அனுகூலங்களை பெறு வதற்கு முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் தமது முச்சக்கர வண்டியின் பின்புறத்தில் ஜனசக்தி ஸ்டிக்கர்களை ஒட்டியிருத்தல் வேண்டும்.

மேலும் விரிவான ஃபுல் ஒப்ஷன் திட்டத்தைக் கொண்டுள்ள முச்சக்கர வண்டி ஓட்டுநர் விபத்தின் போது மரணிக்கும் பட்சத்தில் அவரைச் சார்ந்தோருக்கு ரூபா 100,000/= நஷ்டஈடாக வழங்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, ஃபுல் ஒப்ஷன் திட்டத்தைக் கொண்டிராத முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் விபத்தின் போது மரணித் தால் அவரது குடும்பத்துக்கு ரூ.50,000/= வழங்கப்படுகிறது. (த)

### தகவல் தொடர்புத் தொழில்நுட்ப முதலீட்டுக்காக

# ஸ்ரீலங்கா ரெலிகொம்- முதலீட்டுச் சபை ஒப்பந்தம்

தேசிய தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் தீர்வுகள். அகலப்பட்டைச் சேவைகள் மற்றும் ஆதார உட்கட்டமைப்புச் சேவைகள் வழங்குநரான ஸ்ரீலங்கா ரெலிகொம். முதலீட்டுச் சபையினால் சிறப்பு நிலைத் தகுதியைத் தான் பெற்றிருப்பதைப் பெருமையுடன் அறிவிக்கிறது. அடுத்த இரண்டு வருடங்களுக்கு நாட்டின் தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம், அகலப்பட்டை மற்றும் உட்கட்டமைப்பு விரிவாக்கங்களுக்காக மொத்தமாக 415.44 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதாக உறுதியளித்ததையடுத்து இத்தகுதி வழங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 23, 2014 அன்று ஏற்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க இந்த முதலீட்டு ஒப்பந்தத்தில் இவ்விரு நிறுவனங்களின் சார்பாக, முதலீட்டுச்சபையின் தலைவரான லக்ஷ்மன் ஜயவீரவும். ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் தலைவர் நிமால்வெல்கமவும் ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் குழும பிரதான நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வாவின் முன்னிலையில் கைச்சாத்திட்டனர்.

இந்த முதலீடானது, பன்முகப்படுத்தப்பட்ட தேசிய த.தொ.தொ. உட்கட்டுமானங்களின் இணையத்தரவு நிலையங்கள், குரல்வழிச் சேவைகள், வணிகவிற்பனை மற்றும் மொத்த விற்பனைச் சேவைகள், அதிவேக அகலப்பட்டைச் சேவைகள், பியோ ரிவி விரிவாக்கம், இழைய ஒளியியல் வலைய விரிவாக்கம், 4 ஜி எலி.ரி.ஈ விரிவாக்கம், சர்வதேச இணைப்பு மற்றும் கம்பியற்ற அகலப்பட்டைச் செயற்றிட்டங்கள் போன்றவற்றின் விரிவாக்கத்துக்கானதாகும். 2007 இல் முதலீட்டுச்சபையின் கீழ்வந்ததிலிருந்து, ஸ்ரீலங்கா ரெலிகொம் குழுமம் தொலைத்தொடர்பாடல்கள் சேவைக்காக 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் முதலீடு செய்துள்ளது.

இத்தொகையில் இப்புதிய உடன்படிக்கையின் தொகையும் உள்ளடக்கம் என்பதுடன், இக்குழுமம் தனது முழு 150 வருடகாலத்தில் முதலீடு செய்த தொகையானது மிகப் பெரியதாகும். 2007 முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றதிலிருந்து, ஸ்ரீ.ல.ரெ., நாட்டின் தொலைத்தொடர்பு உட்கட்டுமான மேம்பாட்டுக்காக ரூ.57 பில்லியனுக்கும் அதிகமாக (485 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) முதலீடு செய்துள்ளது. ஸ்ரீலங்கா ரெலிகொம் குழுமத்தின் தலைவர் நிமால் வெல்கம இது குறித்து கருத்துரைக்கையில்,

கடந்த 150 வருடங்களாக இந்நாட்டில் ஸ்ரீ.ல.ரெ. செய்துள்ள முதலீடுகள் இலங்கையையும் அதன் த.தொ.தொ. துறையையும் இப்பிராந்தியத்தின் முன்னிலையில் வைத்து நாட்டின் பன்முக த.தொ.தொ. தீர்வுகளை எளிதாக்குவதுடன் அது புவியியல் ரீதியில் முன்னணியில் இருப்பதற்கும் உதவுகிறது. இலங்கை அரசாங்கமும் முதலீட்டுச் சபையும் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நாம் பாத்திரமாயிருப்பது பற்றி மகிழ்வடைகிறோம் என்றார். (த)




# மார்ச் மாதத்தில் வாகனப் பதிவு நான்கு வீதத்தினால் அதிகரிப்பு

மார்ச் மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4 வீதத்தால் அதிகரித்து 26,921 ஆக பதிவாகியிருந்ததாக ஜே.பி.செக்கியுரிட்டீஸ் மூலம் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதேவேளை, இந்தக் காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக நோக்கிலான வாகனங்களின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோட்டார் கார்களின் பதிவு என்பது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந் திருந்ததுடன், ஹைபிரிட் ரக வாகனங்களின் பதிவில் அதிகரிப்பை அவதானிக்க முடிந்ததாகவும், மோட்டார் சைக்கிள்களின் பதிவில் அதிகரிப்பு காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

சித்திரை-22 திங்கட்கிழமை 05.04.2014
திதி: ஷஷ்டி மா.05.25 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் மா.06.22 வரை
சுபநேரம்: 11.56- 01.26 வரை
இராகுகாலம்: 07.26-08.56 வரை

**மேடம்:** உங்கள் உறவினர் ஒருவரின் கூடுதல் பாசம் வியப்பைத் தரலாம். குடும்ப எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபார நடைமுறையில் புதிய மாற்றம் கொண்டு வருவீர்கள். பணவரவு அதிகரிப்பதில் இருந்த தாமதம் விலகும்.

**இடபம்:** உங்கள் மனதில் சிலகாலம் இருந்த குழப்பம் நீங்கும். நண்பருடன் ஆன்மிகம் தொடர்பான உரையாடலில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூல காரணி பலம் பெறும்.

**மிதுனம்:** உங்களைப் பற்றி அறியாத வரிடம் சொந்த விடயம் பேசுவதால் மனக் குழப்பம் வரலாம். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணியை நிறை வேற்றுவதால் வளர்ச்சி நிலை ஏற்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** உங்களைச் சுற்றி நடக்கிற விட யங்களை உணர்ந்து பேசுவீர்கள். சுமு கமான வாழ்வுமுறை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். கூடுதல் சொத்து சேர்க்கை கிடைக்கும்.

**சிங்கம்:** செயல்களை எளிதாக நிறை வேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி பூர்த்தியாகும். பண வரவும் நன்மையும் அதிகரிக்கும். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**கன்னி:** உங்களிடம் நன்றி மறந்த சிலரை நினைத்து மனம் வருந்த நேரலாம். இருப்பினும் அடுத்தவர் நலனில் தேவையான அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவா கின்ற குளறுபடியை கவனத்துடன் சரி செய்வீர்கள்.

**துலாம்:** இன்று, உங்களின் பணிசிறக்க, தேவை யான சுறுசுறுப்பு அவசியம். சக தொழில் சார்ந்த வரிடம் தேவையற்ற விவாதம் கூடாது. தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை, மாற்று உபாயத்தினால் சரி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் வாழ்வில் தெய்வ அனுக்கிரகத்தால், முக்கிய காரியம் ஒன்று நிறைவேறும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக பணிபுரிவீர்கள். இயன்றளவில் அறப்பணி செய்வீர்கள்.

**தனுசு:** உங்கள் நண்பருக்கு வாழ்வில் முன் னேற நல்ல ஆலோசனை வழங்குவீர்கள். தொழில் வளர்ச்சி பெற உற்சாகத்துடன் பணி புரிவீர்கள். குடும்பத்தேவை பெரிதும் நிறை வேறும்.

**மகரம்:** நிறைவேற்ற வேண்டிய செயல் தாம தமாகலாம். உங்கள் நலனில் அக்கறை உள்ள வர் தேவையான உதவி வழங்குவர். தொழில், வியாபார வளர்ச்சிக்காக அதிக நேரம் பணிபுரி வீர்கள். முக்கிய செலவுக்கு, சேமிப்பு பணம் பயன்படும்.

**கும்பம்:** சிலரது பேச்சு உங்கள் மனதை சங்கடப்படுத்தும். நிதானம், பெருந்தன்மை குணத்தால் சிரமத்தைத் தவிர்ப்பீர்கள். அதிக உழைப்பால் தொழில், வியாபார வளர்ச்சி நிலை சீராகும்.

**மீனம்:** உங்களைக் கடந்த காலத்தில் அவ மதித்துப் பேசியவர், அன்பு பாராட்டுவார். தொழில், வியாபார வளர்ச்சிப் பணிகளில் முன் னேற்றம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு அதி காரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 7 | | 2 | 1 | 9 | | |
| 4 | | 2 | 9 | | | 8 | | 7 |
| | 9 | | | 7 | | | | |
| | 3 | 5 | | | | | | 9 |
| | 7 | 1 | 2 | | 9 | 5 | 8 | |
| 9 | | | | | | 7 | 2 | |
| | | | | 5 | | | 4 | |
| 7 | | 3 | | | 6 | 2 | | 5 |
| | | 6 | 4 | 9 | | 3 | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 4 | 3 | 7 | 1 | 5 | 9 | 2 |
| 7 | 5 | 9 | 6 | 2 | 8 | 1 | 4 | 3 |
| 2 | 3 | 1 | 5 | 9 | 4 | 7 | 6 | 8 |
| 9 | 4 | 2 | 1 | 6 | 3 | 8 | 7 | 5 |
| 1 | 7 | 5 | 9 | 8 | 2 | 6 | 3 | 4 |
| 8 | 6 | 3 | 4 | 5 | 7 | 9 | 2 | 1 |
| 3 | 9 | 7 | 8 | 4 | 5 | 2 | 1 | 6 |
| 4 | 2 | 8 | 7 | 1 | 6 | 3 | 5 | 9 |
| 5 | 1 | 6 | 2 | 3 | 9 | 4 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நீகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


PLC

People's Leasing & Finance PLC

**OUR BRANCH NETWORK**

Akuressa, Ambalangoda, Ambalantota, Ampara, Anuradhapura, Avissawella, Badulla, Balangoda, Bandarawela, Battaramulla, Batticaloa, Chilaw, Chunnakam, Dambulla, Dehiwala, Deniyaya, Elpitiya, Empilipitiya, Galle, Gampaha, Gampola, Giriulla, Grandpass, Hambanthota, Hatton, Havelock, Homagma, Horana, Ja-Ela, Jaffna, Kadawatha, Kaduwela, Kalmunai, Kalutara, Kandy, Kanthale, Kattankudy, Kegalle, Kekirawa, Kelaniya, Kilinochchi, Kirindiwela, Kollupitiya, Kuliyapitiya, Kurunagala, Mahaiyawa, Mahiyangana, Mannar, Matale, Matara, Mathugama, Metropolitan, Melsiripura, Minuwangoda, Mirigama, Monaragala, Moratuwa, Mutur, Nawalapitiya, Negombo, Neluwa, Nittambuwa, Nugegoda, NuwaraeEliya, Panadura, Pettah, Pilimathalawa, Piliyandala, Polannaruwa, Puttalam, Ratnapura, Tangalle, Thambuttegama, Thissamaharamaya, Trincomalee, Union Place, Vavuniya, Ward Place, Wariyapola, Wattala, Welimada, Wellawatta, Wellawaya, Wennappuwa.



**The following career opportunities exist for young males who are Highly Result Oriented, Motivated Smart and dynamic individuals in the field of marketing in Jaffna, Chunnakam, Vavuniya, Mannar, Kilinochchi Branches and Manipay, Chankanai, Nelliady, Chavakachcheri, Palai, Point pedro, Mankulam and Mullaitivu window offices.**

Come... Join the Leader

People's Leasing & Finance PLC, a public quoted company is the flagship subsidiary of People's Bank and the largest Non-Banking Financial Institution as well as the largest Registered Finance Company with the highest rating AA-(lka) by Fitch Rating (Lanka) Ltd. Being a vibrant and superior leader in the leasing landscape with Rs. 100 Billion net assets, People's Leasing spreads its wings across the island with 88 strong branch network. We are the only company with two international rating B+/B by Standard & Poor's and B+ by Fitch Rating International.

Today People's Leasing & Finance PLC is also a formidable group of companies of People's Insurance Ltd., People's Fleet Management Ltd., People's Leasing Property Development Ltd., People's Microfinance Ltd. & People's Leasing Havelock Properties Ltd.

Our product range comprises of Finance Leasing, Hire Purchase, Fixed Deposits, Savings, Margin Trading, Quick Cash Loans, Approved Money Exchanger, Microfinance, Property Development, Fleet Management, Vehicle Valuation, Hiring Vehicles & Islamic Financial Services etc.

We are driven by a performance based culture with an unmatched level of quality and integrity bound by ethical business practices.

**Marketing Officers (Males)**

- G.C.E (A/L) with at least 2 credit Passes
- G.C.E (O/L) with credit pass for Mathematics and ordinary pass for Engilsh
- Good interpersonal skills
- Target oriented
- Age below 28 years
- Possession of a valid riding license
- Professional qualifications in the field of Marketing and 2 years experiences Will be an added advantage
- Fluency in English will be an added advantage

Remuneration
An attractive and negotiable remuneration package will be on offer to the selected candidates, depending on experience and qualifications.

If you are fulfill the above requirements, please send your detailed CV with names and contact details of two non-related referees indicating the position on the top left corner of the envelop to reach the address given below within 14 days of this advertisement.

**Chief Manager- HR**

**People's Leasing & Finance PLC**


No 1161, Maradana Road, Borella Colombo 08.

careers@plc.lk

*Canvassing in any form will be a disqualification. We will correspond only with applicants short-listed for interviews*

(C/14151)(10.6.3)







யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடம் கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்தர் அழகியல் கற்கை நெறி நிறுவனம் ஆகியவற்றின் மாணவர்கள் 100பேர் மூன்று நாள்கள் கொண்ட பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டிருந்தனர். யாழ்.பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.கே.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறை ஆரம்ப நிகழ்வின்போது யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதுவர் சுரேஸ் மேனன் மங்கல விளக்கை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்தப் பயிற்சிப் பட்டறை சென்னை சங்கீத சபையின் பொதுச் செயலாளரான கலாநிதி பப்புவேணு கோபாலராவ் மற்றும் கலாநிதி யசோதா தாகூர் ஆகியோரால் நடத்தப்பட்டது.



தெல்லிப்பழை, கட்டுவன் சோழங்கராயன் விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகமும், மண்டலாபிஷேகமும், 20 வருடாங்களுக்குப் பின்னர் இடம்பெற்றது. கும்பாபிஷேகக் காட்சிகளில் சில இங்கே... (ஒ-29)






யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்துடன் இணைந்து நான்கு கிட்ஸ்பார்க் முன்பள்ளிகளின் சிறார்களுக்கிடையில் நாற் கோண விளையாட்டுப் போட்டி ஒன்றை அண்மையில் உரும்பிராய் கிட்ஸ் பார்க் மைதானத்தில் நடத்தியது. இதில் பங்குபற்றிய சிறார்களுக்கு சான்றிதழ்களும்பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஒ)



இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம் மற்றும் சர்வதேச மாணவர்கள் தினம் அண்மையில் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பயின்ற வடமாகாணத்தைச் சேர்ந்த 20 பழைய மாணவர்கள் பங்குபற்றினர். (ஒ-10)





அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழு சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்கும் நிகழ்வில் தலைவர் இ.சந்திரன் சத்தியப்பிரமாணம் செய்வதையும், நெறியாளர் குழு உறுப்பினர்களையும் காணலாம். (ஒ-11)



கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு விழாவும், கலை விழாவும், நிலையத் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற போது வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 20 பேருக்கு இலவச கண் பரிசோதனை செய்வித்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மூக்குக் கண்ணாடிகளை வழங்கிய வர்த்தகர் து.மகேந்திரன் வயோதிபர் ஒரு வருக்கு கண்ணாடி அணிவிப்பதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் காணலாம். (ஒ-173)




பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராகவும், பல்வேறு பனை சார் நிறுவனங்களின் ஸ்தாபகராகவும் செயலாற்றி அளப்பெரும் சேவை புரிந்து, தற்போது ஆஸ்திரேலியாவில் பல்வேறு சமூக சேவைகளையும் புரிந்து வரும் க.நடராஜாவுக்கு 'உலக தமிழ் பண்பாட்டு இயக்கம்' சமீபத்தில் தமிழ்நாட்டில் நடத்திய பாராட்டு விழாவில் முதுபெரும் தமிழ் அறிஞர் அவ்வை நடராஜன் அன்னாருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துரை வழங்கினார். தமிழ் அறிஞர்களான முனைவர் க.ப.அறவாணன், டாக்டர் து.ராஜா, திருமதி மணிமேகலை கண்ணன் ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர். (ஓ)




தமிழ் நாடு சென்னை இராஜா அண்ணாமலை மன்றத் தமிழிசைச் சங்கத்தின் அரனருள் ஆண்டு திருமுறை விழாவில் தெய்வீக இசைச் சொற்பொழிவாற்றிய பிரம்மஸ்ரீ சிவ வை.நித்தியானந்த சர்மாவைப் பாராட்டி அரனருள் ஸ்தாபகர் சாமி தண்டபாணி ஓதுவார் பொன்னாடை போர்த்து இசைக் கதாரத்தினம் விருது வழங்கிக் கௌரவிப்பதையும் சிவபூஜா துரந்தர்சபா தலைவர் சபா சண்முகசுந்தரத்தையும் காணலாம். (ஓ-7)



யாழ்ப்பாணம் அத்தியடி வீரகத்தி விநாயகர் கோயில் மஹோற்சவத்தின் பக்திமுத்தி பாவனா உற்சவத்தன்று ஓதுவார் ஆர்.சண்முகராஜா பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். (ஓ)



யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவுக்கு, அங்கு தங்கியுள்ள விழிப்புலனிழந்தோரின் அடிப்படைத் தேவைக்காக பொற்கொல்லர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த அமரர் திருமதி இந்திராதேவி பரமராசா ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் ஒரு தொகை நிதியை அண்மையில் வழங்கி யுள்ளனர். நிதியை அமரரது சகோதரர்கள் விழிப்புலனிழந்தோரிடம் அண்மையில் கையளித்த வேளையில்.. (ஓ-288)



கோப்பாய் சந்திக்கு அண்மையில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள பஸ் தரிப்பிடத்தை வலி. கிழக்கு பிரதேச சபையின் பதில் தலைவர் கே.தர்மலிங்கம் திறந்து வைத்தார். அருகில் சபை உறுப்பினர் எஸ்.சுப் பிரமணியம். (ஓ-17)



கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். விழிப்புல னற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கி வரும் கைதடி தொழிற் பூங்காவுக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவர் லயன் ப.செல்லத்துரை விழிப்புலனிழந்தோரிடம் ஒரு தொகை நிதியை கையளிப்பதையும் அருகில் சரஸ்வதி சன சமூக நிலை யச் செயலாளர் தி.அல்கின் நிற்பதையும் காணலாம். (ஓ-288)




இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவைச் சேர்ந்த தொண்டர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்வதைக் காணலாம். (ஓ-7)







சங்கானை மாவடி இளைஞர் மன்றத்தினர் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு நடத்திய நிகழ்வுகளில் பாலர்கள் இருவர் போர்த்தேங்காய் அடித்தல் போட்டியில் பங்கு கொள்வதையும், யுவதிகளுக்கான சங்கீதக் கதிரைப் போட்டி நடைபெறுவதையும், அழகு ராணியாகவும், பாம்பு வேடத்திலும் விநோத உடைப் போட்டியில் பங்குபற்றிய சிறார்களையும் காணலாம். (ஓ-29)



# AMW

## யாழ்நகரில் பிரவேசிக்கிறது

இயற்கை வளம் நிறைந்த யாழ்ப்பாணத்திற்கு
உன்னத வாகன வகைகளைக்
கொண்டுவருவதற்காகத் திறந்துவைக்கப்படும்
புதிய AMW Multi Brand Showroom

சுசுக்கி, பியாஜியோ மற்றும் யமஹா
தொடர்பான விசேட சலுகைகளைப் பெற்றுக்கொள்ள
எமது புதிய காட்சியறைக்கு வாருங்கள்.*

புதிய காட்சியறை
2014 மே 07 மு.ப. 10.18க்கு
195, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில்
திறந்துவைக்கப்படும்.

சலுகைகள் 2014 ஜூன் 7 வரை செல்லுபடியாகும். நிபந்தனைகளுக்கு உட்பட்டது*

SUZUKI PIAGGIO YAMAHA Castrol

AMW bringing the world to you

அசோஷியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
195, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் : sales@amwltd.com

விற்பனை துரித அழைப்பு : 0117 609 609



## அழகான தோற்றத்துடன் என்றும் உங்களை வெளிக்காட்டுங்கள்

இளமைப்பருவத்திலிருந்து வாழ்க்கையின் மாறுபட்ட பல நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கும் பெண்ணானவள் இவ்வனைத்து நிகழ்வுகளிலும் அழகாக இருப்பின் அது அவள் பெற்ற அதிஷ்டமாகும். என்றும் மறையாத அழகினை வாழ்நாள் முழுவதும் பெற்றுத்தரும் Facia உங்கள் அழகினை என்றும் பாதுகாக்கின்றது. Facia சருமச்சுருக்கம், சருமத்தில் நிற மாற்றம் ஏற்படுவதை தடுத்து சருமத்திற்கு பளபளப்பான பொலிவினை சேர்க்கின்றது. Facia தலைமுடி உதிர் தலை தடுத்து தலைமுடிக்கு போஷணையை வழங்கி வலுமிக்க அழகான கூந்தலை உங்கள் உரிமையாக்குகின்றது.

Facia உங்களது நகங்களை அழகாக்கின்றது. Facia சருமம், தலைமுடி மற்றும் நகங்களின் அழகிற்கு தேவையான பிரதான போஷணை மூலக்கூறுகள் பலவற்றினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை உற்பத்தியாகும்.

Facia இல் அடங்கியுள்ள இயற்கை மூலக் கூறுகள்

கடல் கொலஜின் (Marine Collagen)- உடலின் அனைத்து பாகங்களினதும் பராமரிப்பிறகு தேவையான பிரதான மூலக்கூறாக இதனை வகைப்படுத்த முடியும்.

திராட்சை விதை சாறு (Grape Seed Extract)- சருமச்சுருக்கம், தலைமுடி உதிர்தல் போன்றவற்றை தடுக்கின்றது.

பயோடின்- தலைமுடிக்கு சிறந்த பராமரிப்பினையும் சக்திமிக்க நகங்களையும் பெற்றுத்தரும். இதற்கு மேலதிகமாக பல இயற்கை மூலக் கூறுகள் உள்ளடங்கியுள்ளது. Facia அவுஸ்திரேலியாவின் CMPS தனியார் நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்றது. அவுஸ்திரேலியாவின் TGA தரச் சான்று மற்றும் உலக சுகாதார அமைப்பின் தரச் சான்று (WHO - GMP) Facia உற்பத்திக்கு கிடைத்துள்ளது. இயற்கை மூலக்கூறுகளை மட்டுமே பயன்படுத்தி தயாரிக்கப்படும் உற்பத்தியான Facia இலங்கை ஆயுர்வேத திணைக் களத்தில் பதிவு செய்யப்பட்ட இயற்கை உற்பத்தியாகும்.

TGA பதிவிலக்கம் 67513






1717 FOLLOW US www.mobitel.lk

CASH BONANZA

ரூ. 150 மில்லியன் பணப்பரிசு
ரீலோட் அல்லது பில் கட்டணம் செலுத்தும்
ஒவ்வொரு ரூ. 50 இற்கும்
ஒரு வெற்றி வாய்ப்பு

வெற்றி வாய்ப்புகளை அறிந்து கொள்ள
அழையுங்கள் #151#



நிபந்தனைகளுக்குட்பட்டது.

Sri Lanka Telecom
Mobitel
உங்களுடனே என்றும்.



# நம்பிக்கையும் பொறுப்பும் மிக்க தங்க கடன் சேவை செலான் வங்கியில்...



## செலான் தங்கநகை அடகுச் சேவை


தலைமுறைகளை இணைப்பது தங்கம். அந்த தங்கமான உறவைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.
உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக நாங்கள் இருக்கின்றோம். வசதியான நாளொன்றில் எங்களிடம் வாருங்கள். உங்கள் தங்கமான உறவை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இன்றே வாருங்கள்.. நம்பிக்கையும் பொறுப்பும் மிக்க சேவையின் வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளுங்கள்..!

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கிக் கிளைகளில் அல்லது 011 200 88 88 www.eseylan.com

செலான் வங்கி

## பயன்படுத்த முடியாத நிலையில் பிரதேச சபைக்குரிய கிணறு



முல்லைத்தீவு, மே 4

கற்சிலைமடு கிராமத்தை அண்டிய பகுதியில் அமைந்துள்ள கிணறு துப்புரவு செய்யப்படாத நிலையில் காணப்படுவதால் மக்கள் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஒட்டுசுட்டான் உப அலுவலகத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்தக் கிணறு இந்தப் பகுதி மக்களின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வந்தது. ஆனால் இது துப்புரவு செய்யப்படாத நிலையில்காணப்படுவதால் பயன்பாட்டுக்கு உதவாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பகுதியில் கடும் வறட்சி நிலவி வருவதால் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்த நிலையில் கவனிப் பாரற்றுக் கிடக்கும் இந்தக் கிணற்றைத் துப்புரவு செய்து வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)




## சந்தையை புனரமைக்க கோரிக்கை

### முள்ளிவாய்க்கால்

கிளிநொச்சி, மே 4

போரால் பாதிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் பொதுச் சந்தையைப் புனரமைத்துத் தருமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த கால போரால் சேதமடைந்த முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை இன்று வரை புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

இதனால் சந்தையின் வர்த்தகச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அந்தப்பகுதி மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் குறித்த சந்தையைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-55)

## கண்டாவளையில் வறட்சியான பகுதிகளுக்கு குடி தண்ணீர்

கிளிநொச்சி, மே 4

கண்டாவளைப் பிரதேசத்தில் வறட்சி நிலவும் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த் பிரதேசத்துக்கு உட்பட்ட தட்டுவன் கொட்டி, கல்லாறு ஆகிய பகுதிகளுக்கு ஏற்கனவே வருடம் முழுவதும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதனை விட த்தற்போது நிலவுகின்ற வறட்சியால் குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்ற புன்னைநீராவி, காஞ்சிபுரம், உமையாள்புரம், ஊரியான், கண்டாவளை ஆகிய பகுதிகளுக்கு பிரதேச செயலாளரின் ஒழுங்குபடுத்தலின் குடி தண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டு குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (வ-55)

## புதுமாத்தளன் மருத்துவமனையை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குக

### அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மே 4

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் உள்ள மருத்துவமனையை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுமாத்தளன் பகுதியில் தற்போது மருத்துவமனை எதுவும் இல்லாததால் அங்குள்ள 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிரமங்களை எதிர்கொள்கின்றன.

அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, புதுமாத்தளன், வலைஞர்மடம், செம்மன் குன்று ஆகிய பகுதிகளில் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

மாத்தளன் பகுதியில் உள்ள மருத்துவமனை போரால் சேதமடைந்து மருத்துவ சேவைச் செயற்பாடுகள் செயலிழந்துள்ளன.

இந்த நிலையில் புதுமாத்தளன் பகுதியில் அமைக் கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அதன் பணிகள் நிறைவுற்றபோதும், இது வரை திறந்து வைக்கப்படவில்லை.

இதனால் அந்தப்பகுதி மக்கள் 10 கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று தமது அடிப்படை மருத்துவத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண் டியுள்ளது. (வ-55)

## கும்பாபிஷேகம்

ஊரெழு, கிளானை மனோன் மணி அம்பாள் ஆலய மகா கும் பாபிஷேகம் நாளை திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.
அன்றைய தினம் காலை 6.47 மணிமுதல்7.25மணிவரையில் அம்பாளுக்கும், சிந்தா மணி விநாயகர், சிவன், பார்வதி, மாரியம்மன், வள்ளிதெய் வயானை சமேத முருகப் பெரு மானுட்பட ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும்,பஞ்சதள இராஜ கோபுரம், மணிக்கூட்டு தூபி ஆகியவற்றுக்கும் மகா கும்பாபி ஷேகம் நடைபெறவுள் ளது.
கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷே கமும் நடைபெறும். (ஐ)

## தமிழ்த்தின விழா

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் தமிழ்த்தின விழாவும் எஸ்.எல்.ஐ.ஜி செயற் றிட்ட கற்றல் கையேடுகள் வெளி யீடும் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.45 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமை யில் நடைபெறும்.
பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரி.தர்மலிங்கமும் சிறப்பு விருந் தினராக வடமாகாண ஸ்ரீசத் தியசாயி சேவா நிறுவனத் தலைவர் இ.சரவணபவானும் கலந்து கொள்வர். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு நிர்வாகத்தினர் அறி வித்துள்ளனர். (ஒ-10)

# வித்தியானந்தா பெரு வெற்றி

முல்லைத்தீவு,மே 4
முள்ளியவளை வித்தியா னந்த கல்லூரி அணிக்கும் யாழ். ஸ்ரான்லி கல்லூரிக்கும் இடையில் வெள்ளி,சனி ஆகிய இரண்டு நாள்களும் நடை பெற்ற இரண்டு இனிங்ஸ் கொண்ட தொடரில் வித்தியா னந்த அணி நான்கு இலக்கு களால் வெற்றியீட்டியுள்ளது.
இறுதிவரை பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும், நடை பெற்ற இப்போட்டியில் வித்தி யானந்த அணி ஆக்ரோஷமாக விளையாடி வெற்றியை தன தாக்கிக் கொண்டது.
இத்தொடரில் முதல் இனிங்ஸ் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 46.1 பந்துப்பரி மாற்றத்தில் அனைத்து இலக்கு களையும் இழந்து 136ஓட்டங் களைப் பெற்றுக்கொண் டது.
பந்துவீச்சில் வித்தியானந்த அணி சார்பாக தாயனன் 11பந் துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 19 ஓட்டங்களுக்கு 5 இலக் குளையும் அருணா 16 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 56 ஓட்டங்களுக்கு 4 இலக்கு களையும் வினோசன் 7 பந் துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 19 ஓட்டங்களுக்கு 1 இலக்கை யும் வீழ்த்தினர்.
பின்னர் தமது முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத் தாடிய வித்தியானந்த அணி யினர் அனைத்து இலக்கு களையும் இழந்து 91 ஓட்டங் களை மட்டும் பெற்றுக்



கொண்டனர். அணி சார்பாக அதிகபட்சமாக இப்ராஸ் 47 ஓட்டங்களையும் அஞ்சயன் 18ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் ஸ்ரான்லி சார்பாக கம்சிகாந்த் 8.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், கலைச்செல் வன் 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 17ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், விதன் 3 பந் துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 17ஓட்டங்களுக்கு 1 இலக்கை யும், உதயசுரேசன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும் கைப்பற்றினர்.
முதலாவது இன்னிங்ஸில் வித்தியனந்தாவை விட 45 ஓட்டங்கள் முன்னிலைபெற் றிருந்த நிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸ் ஸிற்காக துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணியினர் அனைத்து இலக்குகளையும் இழந்து 85ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்ட னர். இதில் அதிகபட்சமாக விதன் 38 ஓட்டங்களையும், கலைச் செல்வன் 23 ஓட்டங்களை யும், விஸ்ணு 10ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டனர்.
பந்துவீச்சில் வித்தியானந்த சார்பில் அருணா 8.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 4 இலக்கு களையும், வினோசன் 7 பந் துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும், இப்ராஸ் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும், அஞ்சயன் 9 பந்துப்பரிமாற்றங் கள் பந்துவீசி 22 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு 131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்னும் இலக்கோடு துடுப்பெடுத்தாடிய வித்தியானந்த அணி 6 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந் தது. துடுப்பாட்டத்தில் வித்தியா னந்த அணி சார்பாக அதிகபட் சமாக இப்ராஸ் ஆட்டமிழக் காது 69 ஓட்டங்களையும், விதுசன் 24 ஓட்டங்களையும், வினோசன் 18 ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டனர் பந்துவீச்சில் ஸ்ரான்லி சார்பாக கம்சிகாந்த் 14 பந்துப்பரிமாற் றங்கள் பந்துவீசி 62 ஓட்டங் களுக்கு 3 இலக்குகளையும், கலைச்செல்வன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 2 இலக்கு களையும் உதயா 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக வித்தியானந்தா அணியின் இப்ராஸ் தெரிவானார். (த-102)

## தாச்சிச் சங்கத்தின் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், மே 4
யாழ். மாவட்ட தாச்சி விளை யாட்டுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் செ.சண் முகலிங்கம் தலைமையில் இணுவிலுள்ள தாச்சி விளை யாட்டுச் சங்க காரியாலயத்தில் நடைபெறும் என்று சங்கத் தின் செயலாளர் கே.ஜினதாஸ் அறிவித்துள்ளார்.
யாழ். மாவட்டத் தாச்சி விளை யாட்டுச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டு விழா உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்கவுள்ளதால் உறுப்பினர்கள் அனைவரை யும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஒ-288)

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 4
நல்லூர் பிரதேச சபைச் செய லாளர் மேரி யோசெவ் சாந்த சீலன் வடமாகாண உள்ளூ ராட்சித் திணைக்கள ஆணை யாளர் அலுவலகத்துக்கு நிர் வாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற் றுள்ளார்.
நல்லூர் பிரதேச சபையில் மக்கள் பிரதிநிதிகள் பதவி யேற்க முன்னர் இவரது நிர் வாகத்தின் கீழ் இயங்கிய நல் லூர் பிரதேச சபை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்துள் ளது.
கொக்குவில் சந்தைக் கட்டடத் திறப்பு விழாவில் பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர் கள் மற்றும் பிரமுகர்கள் இவ ரது பணியை மிகவும் பாராட் டிப் பேசியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஒ-7)

# வன்னியின் பெரும்போர் சமநிலையில் முடிந்தது



கிளிநொச்சி, மே 04
மழை காரணமாக வன்னி பெரும் போர் சமநிலையில் முடிவடைந்தது. வன்னியின் பெரும் போர் எனப்படும் கிளி., முல்லை நட்புக் கிண்ண கிரிக்கெட் போட்டி நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியும் புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் போரில் குதித்தன.
முதலில் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல் லூரி அணி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 77 ஓட்டங் களை பெற்றது தனது முதலா வது இனிங்ஸை ஆரம்பித்த கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 7 இலக்கு இழப்புக்கு 204 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டத்தை இடை நிறுத்தி புதுக்குடியிருப்பு மத் திய கல்லூரி துடுப்பெடுத் தாட ஆரம் பித்த போது மழை குறுக் கிட்ட தன் காரண மாக ஆட்டம் சமநிலையில் முடி வடைந் தது. கிளி நொச்சி அரச அதிபர் திரு மதி ரூபவதி கேதீஸ்வரன் மாணவர் களுக்கான பரிசில் களை வழங்கி னார்.


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி மகளிர் பாட சாலைக்கு அருகாமையில் நில.பர 1¾ அளவு கொண்ட சகல வசதிகளும் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. (47581) (10)
077 613 2444, 077 567 1965

## விற்பனைக்கு TOYOTA LORRY

Year - 1998, Model KC-BU105 CPJA -5xxx (47583) (10)
தொடர்புகளுக்கு: 077 367 0987

## நனைந்த விழிகள் நினைவுகள் சுமக்க நகர்ந்தது ஓராண்டு



மனம் மகிழ 06 . 04 . 1951
மனம் நெகிழ 15 . 04 . 2013

அமரர் சிவப்பிரகாசம் சாம்பசிவம்
04.05.2014

எங்கள் குடும்பத் தலைவர் எம்மைப் பிரிந்த ஓராண்டை நினைந்துருகி நிற்கும் இன்றைய நாளில் (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போச னத்திலும் எம்மோடு கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். (47582)(10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### பொன்னுச்சாமி நாகராசா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கற்பகப்பிள்ளையார் கோயிலடி உடு வில் கிழக்கை வசிப்பிடமாகவும் பிரான்சில் வசித்தவருமான பொன்னுச் சாமி நாகராசா (26.04.2014) சனிக்கிழமை பிரான்சில் இறைவனடி சேர்ந் தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி- இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- பொன் னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், ரதியின் பாசமிகு கணவரும், காலஞ் சென்றவர்களான அன்னபூரணம், செல்லையா, செல்வராசா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் ஞானசேகரம், தேவி, புஸ் பமலர், யோகேஸ்வரி, வேலாயுதபிள்ளை, புஸ்பராணி ஆகியோரின் மைத் துனரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, அன்னலட்சுமி மற்றும் குமார லிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், சுதாகரன் (தாதிய உத்தி யோகத்தர், யாழ். போதனா வைத்திய சாலை), திவாகரன் (பிரான்ஸ்), கவிதா (பிரான்ஸ்), கோபிகரன், அஜந்தா, ஜீவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சியாமினி- பத்மரட்ணம் (கனடா), சிவரூபன், ஜெயரூபன் (பொறியியலாளர் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை) ஆகியோரின் பெரிய தந்தையும், சுனித்ரா (அபிவிருத்தி உதவியாளர், அஞ்சல் திணைக்களம் யாழ்ப் பாணம்), இளங்கோ (பிரான்ஸ்), லிங்கரூபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை), கலைச்செல்வன் (பிரான்ஸ்), மற்றும் சந்திரகுமார், சயந்தினி (கனடா), கோபிகா (லண் டன்),ஆகியோரின் அன்பு மாமனும், பூஜிதா, டனிஸ், ஆகாஸ், அபிசரன், அனுசன், அகில், அஜினா, சுஜினா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (47580)(10)
தகவல்: குடும்பத்தினர்.


## கடையிற் சுவாமிகள் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 4
யாழ். நீர்வாவியடி கடையிற் சுவாமிகள் கோயில் வலாம் பிகா சமேத வைத்தியநாதர் தேவஸ்தானத்தில் நேற்று முன்தினம் பிரதிஷ்டை செய்யப் பட்ட கடையிற்சுவாமி களின் திருவுருவச் சிலைக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிமுதல் 11.30 மணிவரை யுள்ள சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஐ)


## மரண அறிவித்தல்



### கதிர்காமு குணநாயகம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட கதிர்காமு குணநாயகம் நேற்று (03.05.2014) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் கதிர்காமு-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், பொன்னையா-ஆச்சிமுத்து தம்பதிய ரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான ரஞ்சிதமலர், அரியரட்ணம், துரைபத்மநாதன் ஆகியோரின் சகோதரனும், சிவமணி யின் அன்புக் கணவரும், சிறிகணேஸ் (ஆசிரியர் கொழும்பு விவேகா னந்தா கல்லூரி), சிறிமுருகதாஸ், குணாலினி ஆகியோரின் அன்புத் தந்தை யும், விஜித்தா (ஆசிரியை, கொழும்பு விவேகானந்தா கல்லூரி), காலஞ் சென்ற சுஜேந்திரா ஆகியோரின் மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசியப்புல வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை. (47476) (10)
தகவல் : குடும்பத்தினர்.
0777 921 760

## சமுகமளிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 4

கடந்த 16 ஆம் திகதி பாலசுப்பிரமணியம் (வயது-64) என்பவர் வீதியால் சென்ற ஒருவரால் போதனா வைத்தியசாலைக்குக் கூட்டி வரப்பட்டு விடுதி இல 08 இல் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுவரை இவரது உறவினர்கள் யாரும் சமுகமளிக்க வில்லை. இவரது முகவரி தெரியாத நிலையில் நோய் குணமாகியும் வீடு செல்ல முடியாதுள் ளார். எனவே இவருடைய உறவினர்கள் வைத்திய சாலைக்கு உடன் சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## சமய சந்நிதிகளில்

வரணி, மே 4

விடத்தற்பளை வள்ளி தெய்வானை அம்பிகா சமேத அலங்கார வேலா யுதசுவாமி வருடாந்த அலங்கார உற்சவ பெருவிழா நாளை திங்கட்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்ப மாகி 10 நாள்கள் உற் சவம் இடம்பெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் காலை தீர்த்த உற்சவமும் வியாழக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் மறுநாள் வைரவர் மடை என்பன இடம்பெற்று உற்சவம் முடிவடையும்.

உற்சவ நாளான 10 தினங்களும் 'அன்ன தானம்' வழங்கப் படும்.

இரவு கலை நிகழ்வுகள், சொற்பொழிவுகள் என்பன இடம் பெறும்.

உற்சவ பிரதம குருவாக விடத்தற்பளை சம்பா வெளி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தே. கௌரிசங்கர்குருக்கள் செயற்படுவார். (ஓ-122)

♦♦♦

தென்மராட்சி, மே 4

கைதடி அருள்மிகு ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளன.

27 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

சிவஸ்ரீ இ.நகுலேஸ்வரக் குருக்கள் மஹோற் சவத்தின் போது பிரதம குருவாக இருந்து கிரியைகளை நடத்தி வைப்பார். (க)

## ஐந்தாவது நாள் நினைவு



அமரர்
**சம்சோன் பற்றிக் தேவராஜ்**

திகதி : 05.05.2014

மலர்வு
04.12.1977



உதிர்வு
30.04.2014

"மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது
ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது."
நாள்கள் பல கடந்தாலும் ஆயிரம் உறவுகள் வந்தாலும்
ஆனந்தமாய் நீ தந்தாய் எம்மவர்க்கு பாசம் அதை
அழியாத உம் அன்பு மொழிகளும்
எல்லையில்லா பொதுப் பணியும் ஜென்மங்கள் பல கடந்தாலும்
உம் சேவை மறவோம்.

இவரின் ஆன்மா சாந்தியடைய நெடுங்கண்டலில்
இவரது இல்லத்தில் நாளை (05.05.2014) திங்கட்கிழமை
நடைபெற இருக்கும் மதிய சாந்தி உணவில் கலந்து கொள்ளுமாறு
உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
அத்துடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
06.05.2014 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நெடுக்கண்டல்
புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும்
இரங்கல் திருப்பலியில் கலந்து கொண்டு
இவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்படியும்
வேண்டி நிற்கின்றோம்.

(C/14161) (7.6)

சம்சோன் ஜெனிங்ஸ்
செயலாளர்
மாந்தை மேற்கு பிரதேச சபை,
அடம்பன்.

மனைவி, பிள்ளைகள்,
உடன்பிறந்த சகோதரங்கள்,
உறவினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எனது சக பணியாளராகிய
**ஞானப்பிரகாசம் அன்ரன்**
கடந்த 02.05.2014 அன்று காலமான செய்தி அறிந்து மிகவும் வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

19, ஈச்சமோட்டை வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(C/14157) (6.3)

தி.மயில்வாகனம்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
த. ஜெயதாஸ் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி மனோன்மணி தங்கராசா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்..

அறுத்திநகர், பளை.

(47461) (10.6)

பாடசாலைச் சமூகம்,
கிளி/அல்லிப்பளை சி.சி.த.க
பாடசாலை.

## மரண அறிவித்தல்

**திருமதி மனோன்மணிதேவி சிவம்** (மணி - இணுவில்)



துரைவீதி, இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணிதேவி சிவம் 01.05.2014 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சோமசுந்தரம் சிவம் அவர்களின் அன்பு மனைவியும், கோபிகிருஷ்ணா (லண்டன்), பாபுஜி (பிரான்ஸ்), புரந்தரி (கனடா), மிருளாயினி (கனடா), உமையாழினி ஆகியோரின் அன்புத் தாயும், ஜனனி, சிவரூபன், சிவசத்தியகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியும், திவ்யன், அனுஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரைவீதி, இணுவில் தெற்கு.
021 205 4417

(47628)(12)(6)

தகவல்:
சோ.சிவம்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் வஸ்தியாம்பிள்ளை லூசியன் சுகேந்திரன் (சுகே/BASTI)**

உரிமையாளர் – வஸ்தியன் அச்சகம் (பழைய மாணவன் – யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி)



மண்ணில்
01.08.1960

விண்ணில்
05.05.2012

இன் முகம் மலர்ந்து எம்மை அரவணைத்து
புன் சிரிப்போடு மற்றோரையும் நேசித்து
செழிப்போடு குறையற்று வளர்த்தெடுத்து
உன்னத வாழ்வுதனை புகட்டிய எம் அப்பா

தூரதேசம் நோக்கி சூழ்நிலைகள் அனுப்பிவிட்டும்
தூக்கமின்றி எமையெண்ணி உறவாடி
துன்பநிலை தனை மறந்து
எமக்காக அன்பு கொண்ட எம் அப்பா

கண்கண்ட தெய்வமாக –அப்பா
கண் முன்னாலே வாழ்ந்து
வாழ்வின் ஒளி விளக்காய் ஏற்றம் கொள்ள வைத்தீரே
சீற்றமாகா உங்கள் குணம் நற்பண்பின் உருவாகும்
காலங்கள் உருண்டோடினும்
உங்கள் கால்தடம் வழிகாட்டும்
நேசமும் பாசமும் என்றும் நினைவாகும்
ஈடற்ற உம் இழப்பு ஆறாத எம் துயரம்

402, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## சிறுநீரகம் தேவை

27வயதுடைய நோயாளர் ஒருவருக்கு B+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(47646) (12.6) தொடர்பு: 077 843 5094

## வேலையாள்கள் தேவை

அச்சகத்திற்கு நன்கு கணினி அறிவுடைய பெண் பிள்ளைகளும், வைண்டிங் தெரிந்த பெண்பிள்ளைகளும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

(47639) (12.3.6) தொடர்புகளுக்கு: 077 814 1219

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபலகணினி நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்கு பின்வருவோர் தேவை.

01)விற்பனைமுகாமையாளர் (Sales Manager) 02)தொழில்நுட்பவியலாளர் (Technician)

கணினி அறிவும், அனுபவமும் உடையவர்கள் விரும்பத்தக்கது.

உங்கள் CV யினை கீழ் காணும் Email Adress க்கு அனுப்பவும். svsaths@gmail.com

அல்லது (C34158) (6.4)

மேலதிக விவரங்களுக்கு :071 406 5721 தொடர்புகொள்ளவும்.

## டோஹா கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு

| Job Category | Qty | Salary QR | Salary RS |
|---|---|---|---|
| Heavy Driver Trailor | 15 | 1800 + 200 | 72,000/= |

1 QR = Rs. 36.00

நிபந்தனைகள் & சலுகைகள் :

- ஒப்பந்தகாலம் 2 வருடம் தங்குமிடம்,போக்குவரத்து,மருத்துவ வசதி வழங்கப்படும்.
- இருவழி விமானச்சீட்டு 2 வருட ஒப்பந்த காலத்திற்கு பின்னர் வழங்கப்படும்.
- வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம்.48 மணிநேரம் வாரத்திற்கு
- மேலதிகவேலைநேரம் கட்டார் நாட்டு சட்டத்திற்கேற்ப
- ஏனைய நிபந்தனைகளும் விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மாத்திரம் அறவிடப்படும்.

வீசா கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்



G.C.C Valid லைசென்ஸ் அவசியம்

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY LL.No. : 2427 றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல. 287-1/2, ஹவ்லொக் றோட், கொழும்பு - 06. (மயூரா அம்மன் கோயில் எதிராக)

Tel : 0112552598|0112506900|0728911146|0718126094

max adz

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவராயின் (யாழ்,கொழும்பு,களனி, தெஹிவளை, கண்டி) மேசன்,பெயின்டர், தச்சு, இலத்திரனியன்,வெல்டர், (1200/=, 1500/=) கை உதவியாளர் (900/=, 1100/=) உடனடியாகத் தேவை. வயது 18 - 48. வருகை அன்றே வேலை வாய்ப்பு. (43242) (12.3.6)

தொடர்புகளுக்கு: 077 683 8231/077 431 2176

## உடனடியாகத் தேவை

எமது தனியார் காரியாலயத்திற்குப் பெண் எழுதுவினைஞர் (Clerk) சிங்களம் பேசக்கூடியவர் தேவை. (19 - 28 வயது) பயிற்சிகள் வழங்கப்படும். (தனியார் வகுப்பிற்குச் செல்லாதோர் விரும்பத்தக்கது) சம்பளம் 12000/=. வவுனியாவை அண்மித்தோர் விரும்பத்தக்கது.

(43272) (12.6) தொடர்புகளுக்கு: 077 556 1883

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ பெற்றோர் தங்களது 1979 ஓகஸ்ட்டில் பிறந்த M.Com, H.N.D.A தகைமையுடன் கொழும்பில் அரச சேவையில் பட்டதாரி நியமனம் வகிக்கும் மகளுக்கு அரச/வங்கி/தனியார் துறை மணமகனை எதிர்பார்க்கின்றனர். விசாகம் 04ஆம் கால் விருட்சிக இராசி. உயரம் 5' 4½" முதல் கற்று கிரகபாவம் 8. மொத்தக் கிரக பாவம் 28 இலக்கினத்தில் குற்றமற்ற செவ்வாய். (சி13778) (12.6)

தொடர்பு: 076 640 9321/077 649 2001

## விற்பனைக்கு

- போட்டோக் கொப்பி மெசின் Toshiba e - studio - 166 விலை - 65,000/=
- Dual core Computer UPS, Table - 19,000/=

(47642) (12.6) தொடர்பு: 075 760 1881

## வேலை வாய்ப்பு

உங்களுக்கு (தனியார்) துறைமுகம், விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? நீங்கள் 18 வயதை உடையவராயின் கப்பல் புனர் நிர்மாணப்பிரிவில் சாதாரண ஊழியர்கள், வெல்டர், தச்சு, விமானநிலையத்தில் சுத்திகரிப்பாளர், கேட்டரிங், லொன்றி. சம்பளம் முதல் மாதம் 18,000/=, 25,000/=, 02ஆம், 03ஆம் மாதங்களில் 28,000/=,38,000/=+ வரைபெறலாம். உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் செய்து தரப்படும். (43283) (12.6)

தொடர்பு: 077 556 1883/077 431 2176

## வேலையாள்கள் தேவை

வடமராட்சியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றிற்கு பெண் பயிற்சித் தாதியர்கள் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு: 077 284 5175 (சி13764)(7.6)

## Quick Visa

### Malaysia / Singapore

- அடிப்படை தகைமை : O/L மட்டுமே. * Conditions Apply's
- வயது : 16 - 45 வரை
- குறைந்த செலவில் பயணம்.
- மாதம் 65,000/- மேல் சம்பளம்.
- பகுதி நேர கல்வி.

Student & Visit Visa Sevices for UK,Canada New Zealand, Europe, Swiss,Cyprus,India, etc

Company Reg.No : W73381

**EBS Visa Center**

6A, Ramakrishna Terrace, Colombo-6. Tel : 011-2360934

Cool Line1 : 0722-419-418

Cool Line2 : 0722-419-419

10 நாட்களில் பயணம்.

managerlk2014@gmail.com

max adz

## VACANCY
## POST OF SALES REPRESENTATIVE

We are importers, dealers & distributors of all types of Glass, Clear float, Reflective, Laminated & Low E Glasses.

- We are looking for an enthusiastic person who possesses a good self drive for canvassing sales.
- Good ability in promoting sales on a target basis, mainly focusing promotion directly through the Northern Province.
- The prospective candidate should be fluent in English & Timil. Singala would be an added advantage.

Candidates interested, may furnish their CV with copies of educational & work experience certificates to the under mentioned. (சி13768) (12.6)

**Human Resources Manager**
**Lanka Glass & Mirrors (Pvt) Ltd,**
**No 38, Station Road, Wattala.**

# 04.05.2014 இன்று 70ஆவது பிறந்த தினம்

Wish is you a Happy Birthday

# வைத்திலிங்கம் துரைராசலிங்கம்



தனது 70ஆவது பிறந்த நாளை இன்று தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அன்பு மனைவி இந்திராதேவி, ஜேர்மனியில் வசிக்கும் மகள் கிருபாகினி, மருமகன் பாஸ்கரன்,
பேரப்பிள்ளைகளாகிய தட்ஷாயினி, திலக்ஷன், சாகித்தியா,
லண்டனில் வசிக்கும் மகன் கிரிதரன், மருமகள் சவீதா,
பேரப்பிள்ளைகள் கேஷியன், ஹரீன்,
இளைய மகன் கிரிஷாந்தன் மற்றும் சகோதரங்கள், மைத்துனர்மார்,
பெறாமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்
சகல சுகபோகத்துடன் வாழ ஞானவைரவர் துணைவேண்டி
வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

HAPPY BIRTHDAY

(47565)(7.6)

"கிரிமஹால்" சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராஜரத்தினம் றஞ்சித்

(பணியாளர்,சந்தைப்படுத்தல் அலுவலகம்; உதயன் பணிமனை)

தோற்றம் 01.06.1980 — மறைவு 02.05.2006

திதி: பஞ்சமி

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இல.02,
5 வீட்டுத்திட்டம்,
நாவற்குழிச் சந்தி.

தாய், தந்தை,
சகோதரர்கள், அம்மம்மா
மற்றும் குடும்பத்தினர்.

(47637)(5.6)

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில்
தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
சிவராசா லிங்கரூபன் அவர்களின் பாசமிகு மாமனார்

### பொன்னுச்சாமி நாகராசா



அவர்கள் 26.04.2014 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/7665)(7.6)

ஊழியர் நலன்புரி சங்கம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-பளை.

## கண்ணீர்ப் பூக்கள்



எமது ஆலயத்தின் குருக்களாகக் கடமையாற்றியவரும், தேவையான போது ஆலயத்துக்கு உதவி செய்து வருபவருமாகிய

**சிவஸ்ரீ சிங்காரவேல் ஸ்ரீதயாளக் குருக்கள் (கண்ணன் ஐயா)**

அவர்களின் மறைவையிட்டு பரிபாலன சபையினர் ஆழ்ந்த கவலையடைகின்றனர். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எச்சாட்டி மகாமாரி அம்மனை வேண்டுகின்றோம்.

கலட்டி அம்மன்வீதி,
யாழ்ப்பாணம்.

(47644)(10.6)

பரிபாலன சபையினர்,
கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



மலர்வு : 19.06.1955 உதிர்வு : 04.04.2014

கடந்த 04.04.2014 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி

### ஈஸ்வரி (ரோகினி) செல்வராசா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர், ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறும் அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)*

2ஆம் ஒழுங்கை,
இல.26, அரசடி வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.
077 356 5285

(சீ/14164)(5.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா தர்மலிங்கம்



அந்திரான்,சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரேசம்மா தர்மலிங்கம் 30.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர்-லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், அந்தோனிப் பிரான்சிஸ், ஜெசிந்தா, மேரி றோசலின், அன்ரனிஸ், எவாஞ்சலின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெர்மினா, சாந்தலிங்கம், சந்திரன், சுகிர்தா, ஞானம் ஆகியோரின் மாமியாரும், ஜெஸ்மின், ஜேம்ஸ், ஆன், அனிஸ்ரன், றெக்னோ, லொறன்சிகா, நிறோமி, ஆன்சன், அமலி, செறின், யூலியன், பியன்வெனோ, திரேசினி, பியோ நிறோன், எட்னா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற ஏபிரகாம் மற்றும் பரமு, காலஞ்சென்ற தேவசகாயம் மற்றும் யூபிலம்மா, றோசம்மா காலஞ்சென்ற மார்கிறேற் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகம்மா, மொனிக்கம்மா, அந்தோனிப் பிள்ளை, தவமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை(05.05.2014) திங்கட் கிழமை மு.ப. 10 மணிக்கு அந்திரான் அன்னை வேளாங் கன்னி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுவீதி,அந்திரான், சண்டிலிப்பாய்.
077 449 7473

(சி/14160)(5.6)

தகவல்: குடும்பத்தினர்.

கிளிநொச்சி – கரடிப்போக்கு – A9 றோடு அருகில் – மே முதல் ஆரம்பம்
MULTI MEDIA, MS Office, SPOKEN ENGLISH, மேற்கத்திய Keyboard இசைப்பயிற்சி

**PHOTO SHOP, FLASH, PREMIERE, SOUND BOOTH**
நோட்டிஸ் டிசைனிங், போட்டோ டிசைனிங், அல்பம் டிசைனிங், 2D அனிமேஷன்,
E-learning, Logo டிசைனிங்விடியோ எடிட்டிங் சவுண்ட் எடிட்டிங்

| | |
|---|---|
| MULTI MEDIA | காலை, மதியம், மாலை வகுப்புக்கள் (திங்கள்-வெள்ளி) -Rs. 5000/- per month மற்றும் வார இறுதி நாட்களிலும் நடைபெறுகின்றது. |
| MS Office, Internet, Email | காலை, மதியம், மாலை வகுப்புக்கள் (திங்கள்-வெள்ளி) -Rs. 1200/- per month மற்றும் வார இறுதி நாட்களிலும் நடைபெறுகின்றது. |
| Spoken English | காலை, மதியம், மாலை வகுப்புக்கள் (திங்கள்-வெள்ளி) -Rs. 1500/- per month மற்றும் வார இறுதி நாட்களிலும் நடைபெறுகின்றது. |
| Western Music (Keyboard) | சனி மற்றும் ஞாயிறுகளில், (காலை-மதியம்) -Rs. 1500/- per month |

DON BOSCO INSTITUTE
St.Theresa Girls' College Lane, Karadippokku, Kilinochchi.
Tel: 075 525 7201, 077 420 6155, 021 5688 602.
DBI

## HigherStudy.lk

யாழில் முதன் முறையாக

**Free** Seminar on 12th May
Spot Admissions on 13th May

- கற்கைநெறிகள் - Medical, IT, Engineering, Business, Humanities, Natural Sciences, Arts, Social Sciences
- Representing 7 State Universities
- 20 மணிநேர work permit உடன் கற்கைநெறிகள்.
- A/L 3 passes கட்டாயமானது.

ஐரோப்பிய ஒன்றியத்தின், Schengen நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை.

**September 2014 Intake**

உள்நுழைவுக்கான அனுமதிகளை (invitation) பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய இல

(47571)(5.6)

+94 774 083 570
enquiry@higherstudy.lk
www.higherstudy.lk

## விரிவுரையாளர் தேவை

எமது நிறுவனத்துக்கு AAT, Chartered கற்கை நெறிகளுக்கான கணக்காய்வு பாடத்துக்கு (Auditing) விரிவுரையாளர் தேவை. தகைமையுடையவர்கள் 9th May 2014 இற்கு முன்னர் உங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்

தொடர்புகளுக்கு:
**Spectra Skills**
19, Stanley Road, Jaffna.
Tel: 021 222 1422 / 1423

(47577)(10.6)

## மணப் பெண் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், மகம் நட்சத்திரம். கிரக பாவம் 28, 12 இல் செவ்வாய், 1978இல் பிறந்த நெதர்லாந்தில் வசிக்கும் மணமகனுக்கு மணப்பெண் தேவை

தொடர்பு:
077 314 4591, 077 691 3111

(47573)(19.6)

## வீடு வாடகைக்கு உண்டு

16 அறைகள், சகல வசதிகளுடனுமான மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு.
இடம்: No. 711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(47579)(19.6)

தொடர்பு: 077 160 6345

## Guest house விற்பனைக்கு

அரச அனுமதிப்பத்திரத்துடன் சகல தளபாட வசதிகளுடன் கூடிய நடைமுறை செயற்பாட்டுடன் உள்ள Guest house விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:
873, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9220, 077 476 6147

(47574)(19.6)

## மரண அறிவித்தல்



### திருமதி பத்மாவதி சிறிசேகரன்

யாழ்.புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Peine ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சிறிசேகரன் 22.04.2014 செவ்வாய்க்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கனகரெத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை (Teacher) - பராசக்தி (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நாகநாதி - வள்ளியம்மை, முத்துத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு பேர்த்தியும், சிறிசேகரன் அவர்களின் அன்பு மனைவியும், மயூரன், கார்த்திகா, நிர்சிகா, பிரசாந்த் ஆகியோரின் தாயாரும், பிரேமலேகா (கொழும்பு), சொர்ணவதனா (பாப்பா - பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், தங்கம்மா கனகசபை (கனடா), நாகரத்தினம், சந்திரகோபால் ஆகியோரின் பெறாமகளும், சண்முகநாதன் அன்னம்மா, சிவபாக்கியம் கண்ணையா ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற மகேந்திரராஜா, செல்வராஜா, செல்வராணி, சிறிஸ்கந்தராஜா, ராதிகா, சிந்துஜா, சுஜிதா, கார்த்தீபன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், கமலரஞ்சினி, மனுமேலா, கந்தசாமி, அன்னைமேரி காலஞ்சென்ற மனோகரன், இந்திரகலா, தர்சினி, தர்மினி, சதீஸ்கரன், வசீகரன், பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற மனோகரன், பாஸ்கரன், ஜெயகரன், கலாஜோதி, ஜீவகரன், சிவகரன் ஆகியோரின் அண்ணியும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி, சர்வதயாளன் ஆகியோரின் அன்புச் சகலியும், ஜெகதீசன், சுஜந்தன் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், விஜிதா, விஜயகாந்தன், வினோதா, விஜிகரன், விஜயதாஸ், விஜயரூபி, துசிந்தா, நிசிந்தா, பனிலியா, சுபரினா மிசேல் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2014) மு.ப.11.00 - 3.00 Krematorium Braunschweig helmstedter strae 38a, 38126. Braunschweig Germany நடைபெற்று, பூதவுடல் 3.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கணேசமூர்த்தி பிறேமா.
077 816 9041

நேரடித் தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| சிறிசேகரன் (ஜேர்மனி) | +495171174160 |
| மயூரன் (ஜேர்மனி) | +4915207915829 |
| காந்தன் (ஜேர்மனி) | +491792429207 |
| தாஸ் (ஜேர்மனி) | +4917275793806 |
| தயா (ஜேர்மனி) | +4915129426703 |
| செல்வராஜா (சுவிற்சர்லாந்து) | +41344228473 |

(சி13760)(12)(3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி இராசரத்தினம்



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி இராசரத்தினம் நேற்று (03.05.2014) சனிக்கிழமை அதி காலை காலமானார்.

அன்னார் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கோமதி(கனடா), சுமதி, வளர்மதி (லண்டன்), கோகுலன் (பிரான்ஸ்), சுதர்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனேஸ்வரன் (கனடா),தர்மகுலசிங்கம்,வாசுதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், லக்ஷியா(லண்டன்),லக்ஷனா(லண்டன்), சாயிசந்தோஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மலர்சோதி, சந்திரசேகரம் (ஜேர்மனி), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் பரிபூரணம், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், தங்கம்,சிவகுரு மற்றும் நகுலேஸ்வரி, இன்பராணி (கனடா), கிருஸ்ணமூர்த்தி (சுவிஸ்),யோகராணி, காலஞ்சென்ற தம்பிராசா சந்தானலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(05.05.2014) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக் காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,உரும்பிராய்.

(47635)(5.6)

தகவல் :குடும்பத்தினர்.

## நினைவுப் பேருரை

செல்வன் ச.யதுசனின் ஆறாம் மாத நினைவுப் பேருரை இன்று மாலை 4 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிச் சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து கொள்கிறார். (ஒ-10)

## சட்டவிரோதமாக இந்தியா செல்ல முயற்சித்த இருவருக்கு மறியல்

மன்னார்,மே 4

சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியாவுக்குச் செல்ல முயற்சித்தபோது மன்னார் கடலில் கைது செய்யப்பட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் குறித்த இருவர் உள்ளிட்ட நால்வர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த நால்வரும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேநபர்கள் மன்னார் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து இவர்களிடமிருந்த குழந்தையை விடுவித்த நீதவான் குழந்தையின் தாயாரை 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்துள்ளார்.

ஏனைய இருவரையும் நாளை வரை விளக்கமறியில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (த)

## வங்கக்கடலில் தாழமுக்கம்

யாழ்ப்பாணம், மே. 04

வங்கக்கடலில் உருவான காற்றமுத்த தாழ்வு நிலை காரணமாக இன்று மழை பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காற்றமுத்தத் தாழ்வு நிலை காரணமாக யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று கனமழை பொழிந்தது. இதேநிலை கிளிநொச்சி மாவட்டத்திலும் காணப்பட்டது. (த-5)

## கோப்பாய் அருள்நெறி மன்ற ஏற்பாட்டில் புத்தாண்டு கலைவிழா

யாழ்ப்பாணம், மே 4

வலி.கிழக்கு கோப்பாய் சைவ சமய அருள்நெறி மன்றத்தின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசர் சுவாமிகள் குருபூசை விழாவும் புத்தாண்டுக் கலை விழாவும் இன்று மாலை 5.30 மணிக்கு அருள்நெறி மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

கோப்பாய் சிவஸ்ரீ சோ.இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய மாணவிகளின் பண்ணிசை, பேச்சு மற்றும் புத்தூர் கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும்.

"திருநாவுக்கரசர் சிவத் தொண்டுகள்" எனும் தலைப்பில் சைவப்புலவர் செ.சத்தியதாசன் நிகழ்வில் சிறப்புரை ஆற்றுவார். (ஒ-10)

## குடியிருப்புகள் அமைக்க விண்ணப்பித்தோர் பிரதேச சபைகளுக்கு அலையும் நிலை

### சுகாதாரப் பரிசோதகர்களின் தொடர் பணிப் புறக்கணிப்பால்

தென்மராட்சி, மே 4

பொது சுகாதார பரிசோதகர்களின் தொடர் வேலை நிறுத்தத்தால் குடியிருப்புகள் அமைக்க விண்ணப்பங்கள் வழங்கிய பொதுமக்கள் தினமும் பிரதேச சபைக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கும் அலைவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபையின் அனுமதியின்றி கட்டடங்கள் அமைக்கக் கூடாது என்று அறிவித்தல்கள் வழங்கிய பிரதேச சபைகள் கட்டட விண்ணப்பங்களை அங்கீகரித்து வழங்காததால் கட்டட வேலைகளை உரிய காலத்தில் ஆரம்பிக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பிரதேச சபைகளுடன் தொடர்பு கொண்டபோது பொது மக்களால் வழங்கப்பட்ட கட்டட விண்ணப்பப் படிவங்கள் பொது சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கைக்காக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பியுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருவதால் உரிய அறிக்கைகள் தமக்கு கிடைக்காததால் கட்டட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்பு மனைகளுக்கு இடம் தெரிவு செய்யப்பட்டு பூமி பூஜைக்கு (நாள் அத்திபாரம்) நாள் குறிக்கப்பட்ட போதிலும் பிரதேச சபையால் அங்கீகாரம் வழங்காததால் செய்வதறியாது தவிப்பதாக பொது மக்களால் தெரிவிக்கப்பட்டது.

கட்டட விண்ணப்பத்துடன் பரிசோதனைக் கட்டணங்களும் செலுத்தப்பட்ட நிலையில் கட்டட அங்கீகாரம் வழங்கப்படாது தாமதிப்பது குறித்தும் பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஆப்கான்

கப் பெய்த தொடர் மழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டதில், ஒரு கிராமமே மண்ணில் புதையுண்டு போனதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

அந்த கிராமத்தில் வசித்த சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்த 2,100 பேர் இந்த நிலச்சரிவில் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. 4000 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

பலத்த மழை காரணமாக மலையின் ஒரு பகுதி கீழிருந்த கிராமத்தின் மீது விழுந்துள்ளது. இதில் பாதாக்ஷன் மாகாணத்திலுள்ள ஹோபோ பரிக் என்ற கிராமம் மண்ணில் புதையுண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

### 77 ஊடகவியலா

விவரங்களை எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு வெளியிட்டுள்ளது.

அதில் கடந்த 2013 ஆம் ஆண்டில் மாத்திரம் உலகளாவிய ரீதியில் 77 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆகக் கூடியதாக சிரியாவில் 12 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் சமூக ஊடகவியலாளர்கள் 47 பேர் சிரியாவில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த ஆண்டு இதுவரை 16 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 7 பேர் சிரியாவில் கொல்லப்பட்டுள்ளனர். (த-5)

### இலங்கையில்

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-.

இலங்கையில் அச்சுறுத்தல் மற்றும் வன்முறை உட்பட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தீவிரவாதிகள் குறிப்பிட்ட மதத்தவர் மீது அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இந்த அழுத்தங்கள் சர்வமத மற்றும் மத ரீதியான உறவுகளுக்கு அச்சுறுத்தல் என்றாலும் இலங்கையில் உள்ள தேவாலயங்கள் சமாதானப் பங்களிப்பு முயற்சிகளில் உறுதியாக இருக்க வேண்டும்.

அச்சுறுத்தலான சட்டங்கள் கத்தோலிக்க சமூகத்தைப் பாதிக்கும். எனவே அதற்குத் தேவையான நம்பிக்கையை மக்கள் மத்தியில் இன்னும் உறுதிப்படுத்த வேண்டும்-என்றார்.

25 ஆண்டுகளுக்கு மேலான உள்நாட்டு போருக்கு பின்னர், இலங்கைத் தீவில் நல்லிணக்கம் மற்றும் அது தொடர்பான விடயங்களை ஆயர்கள் ஊக்குவிக்க வேண்டும் எனவும் பாப்பரசர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மதத் தீவிரவாதிகள் என்று பாப்பரசர், பொது பலசேனாவையே மறைமுகமாகச் சாடியு ள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

### தமிழர்களின்

தின் அடிப்படையில் நாங்கள் எங்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

தேர்தலில் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் கிடைக்கப் பெற்ற வாக்குகள் மிக உயர்ந்தவையாக இருக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் 30 ஆண்டுகளாகத் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த வடக்கு மாகாண சபைக்குச் சர்வதேச அழுத்தங்கள் காரணமாகத் தேர்தல் நடத்தப்பட்டபோது மக்கள் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர்.

மாகாண சபைக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்று கூடக் கவலைப்படாமல் தங்கள் கண்ணீரைத் துடைக்கக் கூட்டமைப்பு இருக்கிறது என்று மக்கள் நம்பினார்கள்.

எங்கள் மண்ணில் நாங்கள் வாழ வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அந்த இலட்சியத்தை நோக்கி வாக்களிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்ட தருணத்தில் மக்கள் வாக்களித்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பை நாங்கள் தொடர வேண்டிய தருணத்தில் இருக்கின்றோம். அது இன்று முக்கிய தேவையாகவுள்ளது.

சர்வதேச அரங்கிலே நாங்கள் எதிர்பார்த்ததையும் விட மிகவும் தீவிரமாக அரசுக்கு எதிரான செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ள நேரத்தில் எங்களுக்கு அருமையாகக் கிடைத்திருக்கின்ற இந்தச் சர்வதேச அரங்கை மிகச் சிறந்த முறையில் ஜனநாயக முறையாக அணுகவேண்டும்.

எங்களுடைய அடையாளங்களைக் காக்க ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். நாங்கள் ஒரு தேசிய இனமாக ஒன்றுபடவேண்டும். வடக்கு மாகாண சபையில் முன்வைத்த தேர்தல் அறிக்கைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. இதற்குப் பல்வேறு இயக்கங்கள் தூண்டி விடப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டு நாம் பயந்து விடமுடியாது. அரசின் சூழ்ச்சிக்கும், நடவடிக்கைகளுக்கும் நாங்கள் அடிபணிந்து விடமுடியாது- என்றார். (த-14)

### பாக். தீவிரவாதிகளுக்கு

புக்கள் இலங்கையில் பயிற்சி பெறுகின்றன. இவ்வாறு இலங்கையில் பயிற்சி பெற்ற பாகிஸ்தானிய தீவிரவாதிகள், இலங்கை யிலிருந்து தமிழகம் வழியாக இந்தியாவுக்குள் நுழைகிறார்கள்.

இந்த விடயம் இலங்கை அரசுக்கும் தெரியும். தமிழக அரசுக்கும் தெரியும். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாகவே இதை நான் தெரிவித்தேன்.

இந்த நிலையில் நான்கு நாள்களுக்கு முன்பாகப் பயங்கரவாதி ஷாகீர் ஹுசைன் கைது செய்யப்பட்டிருப்பது நான் சொன்ன குற்றச்சாட்டுக்களை உண்மை என்று நிரூபித்துள்ளது.

இவரைப் போன்று இன்னும் பலரும் இந்தியாவுக்குள் வரலாம். எனவே இதை தடுப்பதற்கான முயற்சியை மத்திய-மாநில அரசுகள் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

சென்னையில் நடந்த குண்டு வெடிப்பு மோடியைக் குறிவைத்து மோடியின் பிரசாரத்தின்போது பீதியை உருவாக்க வேண்டும் என்பதற்காக நடந்த சதித் திட்டமாக நாங்கள் கருதுகிறோம்.

மோடி பிரதமரானவுடன், பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்குப் பயங்கரவாதப் பயிற்சி இலங்கையில் நடைபெறுவது தடுக்கப்படும். தேசவிரோத சக்திகளை ஒடுக்கும்போது மத்திய, மாநில அரசுகள் என்றோ மாறுபட்ட கருத்துக்களை கொண்ட கட்சிகள் என்றோ, பாகுபாடுகள் இன்றிச் சேர்ந்து செயல்பட வேண்டும். இது போன்ற வெடிகுண்டு தாக்குதல் இனிமேல் நடக்கக்கூடாது - என்று தெரிவித்தார். (த-5)

### பாக். தீவிரவாதிகளுடன்

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

சென்னையில் சிக்கிய ஷாகீர் ஹுசைனிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் அவர் வழங்கிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையிலேயே சிவபாலன் மற்றும் முஹமது சலீம் ஆகிய அவரது கூட்டாளிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவபாலன், சென்னை மேற்கு மாம்பலத்தில் தங்கி இருக்கிறார். வாரப் பத்திரிகை ஒன்றில் பணிபுரிவதாகப் போலியாக 'விசிட்டிங் கார்ட்' தயாரித்து வைத்திருந்தார். முகமது சலீம், தியாகராஜர் நகரில் அலங்கார நகை மற்றும் பொருள்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் நடத்தி வருகிறார்.

பிடிபட்ட இருவரும் சென்னையின் பல இடங்களில் போலி நாணயத் தாள்களைப் புழக்கத்தில் விட்டுள்ளமை தெரியவந்தது. அவர்களிடம் இருந்து 2.5 லட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைதான இருவரையும் சைதாப்பேட்டை நீதிமன்ற நீதிபதி வீட்டுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸார் அழைத்துச் சென்று முன்னிலைப்படுத்தினர். நீதிபதியின் உத்தரவின்பேரில் இருவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

கடந்தவியாழக்கிழமைசென்னை மத்திய ரயில் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து ஷாகீர் ஹுசைன் உள்ளிட்ட மூன்று பேரிடமும் கியூ பிரிவு பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். அதில் தகவல் எதுவும் கிடைக்காததால், அவர்களைக் காவலில் எடுத்து விசாரிக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

### தமிழருக்கு

கான பிரதேச பணிமனைத் திறப்புவிழா நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளைச் சந்தித்திருக்கிறார்கள். அதனைப்போன்று ஒவ்வொரு நாடுகளுக்கும் ஒவ்வொரு பிரச்சினை உள்ளது.

தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளது. அதற்கு இந்தச் சர்வதேச சமூகத்தை நாங்கள் சரியாகக் கையாண்டு அவர்களுக்கு அடிபணியாமல் தமிழ் மக்களுடைய நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டியுள்ளது.

எமது பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பதற்குக் கூட்டுச் சிந்தனையில் எடுக்கக் கூடிய தீர்மானங்களை அரசியல் தீர்வாகக் கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டும். வெற்றிகள் வரலாம். தோல்வியும் வரலாம். ஆனால் கூட்டமைப்பு கூட்டாக இயங்கவேண்டும்.

வேறு நாடுகள் எமது நாட்டில் ஏன் அக்கறை கொள்கின்றன? அவர்களுடைய தேவை என்ன? என்று நாங்கள் சிந்திக்கலாம். ஆட்சிகள் அடிக்கடி மாறலாம். தேர்தல் வந்தால் ஆட்சி மாற்றம் வேண்டும்.

ஆனால் சரியான தேர்தல் வேட்பாளர் இல்லாத பட்சத்தில் ஆட்சி மாறாமலும் போகலாம். எந்த ஆட்சி வந்தாலும் கூட தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொண்டு வருமா என்பது தான் கேள்வி. இனப் பிரச்சினைக்குத் தீர்வு தருவார்களா? அந்த தீர்வு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமா எனப் பல்வேறு கேள்விகள் உள்ளன. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொண்டுவரப்பட வேண்டும்.

மக்கள் கௌரவமான தீர்வைப் பெற்று வாழக்கூடிய சூழலைத் தமிழ் தேசியக் கூட்டைப்பு பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு இளைஞர், யுவதிகள் அரசியலுக்குள் உள்வாங்கப்படவேண்டும். இவர்கள் மிக மோசமாக இராணுவத்தினராலும் இராணுவப் புலனாய்வாளர்களாலும் பயன்படுத்தப்படுகின்றனர். அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

இலங்கை தொடர்பாகச் சரியான கொள்கையை இந்தியா ஏற்படுத்தவேண்டும். கூட்டு முயற்சியில் மக்களுக்கான சுதந்திரம், விடுதலை என்பவற்றை பெற்றுக்கொடுக்க வேண்டும்-என்றார். (த-14)

### கமலின்

கந்தசாமி வர்ணன் என்ற கமலேந்திரனின் சகோதரர் முன்னர் பயன்படுத்திய வீடு தற்போது பாவனையற்ற நிலையில் உள்ளது. குறித்த வீட்டின் கூரைச் சீற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களே இராணுவத்தினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

ஏ.கே - 47 துப்பாக்கி ஒன்றும் அதற்குப் பயன்படுத்தும் மகஸின் ஒன்று, 15 துப்பாக்கி ரவைகள் என்பனவுமே மீட்கப்பட்டுள்ளன. இவை பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கமலேந்திரனைக் கட்சியை விட்டு நீக்கியபோதே, கந்தசாமி வர்ணனையும் தமது கட்சியை விட்டு நீக்கியதாக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை- பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சி.தவராசாவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கமலேந்திரன் மட்டுமே கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (த-5)

# பெண்களுக்கான ஹொக்கியில் யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கூமே 4

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் அதிரடியாக யாழ்ப்பாணக் கல்லூரி வீராங்கனை ஏஞ்சல், முதல்பாதி ஆட்டத்தில் பெற்ற கோல்களினால் யாழ்ப்பாணக் கல்லூரி வலயச் சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லாரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்ட போதிலும் போட்டி ஆரம்பமாகி நான்காவது நிமிடத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி வீராங்கனை ஏஞ்சல் ஒரு கோலைப் போட்டார். உடுவில் மகளிர் கல்லூரி அதில் இருந்து மீள முன்னர் மீண்டும் ஒரு கோலை ஏஞ்சல் போட்டதும் போட்டி விறுவிறுப்படைந்தது.



யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர்

முதல் பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி 2:0 என முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலத்த எதிர்பார்ப்புடன் களமிறங்கி மோதிக் கொண்டன. இரு அணிகளும் மாறி மாறி எதிரணியினரின் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதிலும் கோல் எதுவும் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் உடுவில் மகளிர் கல்லூரியை வென்று சம்பியனாகியது. (த-86)

## வடக்கு மாகாண ஹொக்கிப் போட்டி; 2 பிரிவிலும் யாழ்ப்பாணம் முதலிடம்





யாழ்ப்பாணம், மே 4

வடமாகாண ரீதியிலான ஆண், பெண் இருபாலாருக்கு மான ஹொக்கிப் போட்டியின் இறுதியாட்டத்தில் இரு பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட ஹொக்கி அணி வெற்றி பெற்று சம்பியனானது.

நேற்று சனிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் ராஜா றணசிங்க, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஆர்.மோகனதாஸ் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான 2 ஆம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் சென். லூட்சியஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 4

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் யா.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23)

## நவஜீவன்ஸ் - யங்கம்பன்ஸ் இறுதியாட்டத்தில் மோதல்



யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர்

யாழ்ப்பாணம், மே 4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் அல்வாய் நண்பர் விளையாட்டுக் கழகத்தலைவர் குகதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனும் சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறைப் பிரதேசசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஐ.சிறிரங்கேஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக அல்வாய் சிறிலங்கா வித்தியாலய அதிபர் வி.இந்திரலிங்கம், வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர் மருத்துவர் கமலநாதன், பருத்தித் துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் அருளானந்த சோதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## சாவற்கட்டு சம்பியன்

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சாவற்கட்டு இளைஞர்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது. சாவற்கட்டு இளைஞர் கழக அணியை எதிர்த்து நவாலி வடக்கு சென்.பீற்றர்ஸ் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டதில் சாவற்கட்டு இளைஞர்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது. (த-23)

## மெலிஞ்சிமுனை இருதயராஜா உதைபந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம். மே 4

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி வெற்றுபெற்றுச் சம்பியன் ஆனது.



கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மெலிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## அரையிறுதி ஆட்டத்தில் உதயனின் பரிசு மழை

யாழ்ப்பாணம், மே 4

'உதயன் ஆதரவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டத்தின் போது உதயன் வழங்கிய பரிசுமழையில் வெற்றியீட்டிய 25 அதிர்ஷ்டசாலிகள் இவர்கள்:-

கே.குலசிங்கம்- (நீதிமன்றம் வீதி, பருத்தித்துறை), செல்வி அ.றொசானி -(கடற்கரை வீதி, பருத்தித்துறை), கி.ரவீந்திரன்-(ஈஸ்வரன் றேடேஸ், தும்பளை வீதி, பருத்தித்துறை), கே.அமல்ராஜ்- (தும்பளை, பருத்தித்துறை), தி.மதுமிதன்-(நாகர்கோவில் கிழக்கு), பி.கிறிஸ் வெவின்-(தும்பளை, பருத்தித்துறை), ஆர்.விஷ்ணுகாந்தன்-(என்.எம்.வீதி, பருத்தித்துறை), லோ.லாவண்ஜா-(வியாபாரிமூலை, பருத்தித்துறை), என்.எஸ்.தர்சன்-(அரசடி ஒழுங்கை, பருத்தித்துறை), ம.நிதர்ராசா-(தும்பளை, பருத்தித்துறை), என். குமாரு- (பிரதேச செயலகம், பருத்தித்துறை), செல்வி. கி.நிவேதா-(கந்தவுடையார் ஒழுங்கை, பருத்தித்துறை), கு.சகுந்தலாதேவி-(செம்பருத்தி தேநீர்ச்சாலை, பருத்தித்துறை), எம்.மனோஜ்-(பஞ்சுதோட்டம், வதிரி, அல்வாய்), கௌசிகன்-(மல்யன் தோட்டம், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை), த.கெங்கேஸ்வரி- (சிவன் வீதி, தெருமூடி மடம், பருத்தித்துறை), இ.சுபதாயினி-(2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை), செல்வி கு.நர்மதா- (2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை), தாங்கமயில்-(பிரதேச செயலகம், பருத்தித்துறை), ச.குணசேகரன்-('பவானிவாசம்', அல்வாய்), ஜெ.ஜெயந்திரன்- (சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை), செல்வி பி.புகழினி-(ஐயனார் . கலட்டி, பருத்தித்துறை), செல்வி ஆர். கல்பனா- (சிவன் கோவில் வீதி, பருத்தித்துறை), வசந்தராஜ்-(கற்கோவளம், பருத்தித்துறை), கு.கலாநிதி- (ஐயனார் வீதி, பருத்தித்துறை).

(த-23)



# மும்பைக்கு முதல் வெற்றி

ஐ.பி.எல் தொடரில் தொடர் தோல்விகளைச் சந்தித்து வந்த மும்பை இந்தியன்ஸ் அணி தனது சொந்த மண்ணில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்து கொண்டது. மறுபுறம் தொடர் வெற்றிகளைப் பெற்று வந்த கிங்ஸ் லெவன் பஞ்சாப்பிற்கு முதல் தோல்வியும் பதிவானது.

ஐ.பி.எல் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளைப் பறிகொடுத்து 168 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பஞ்சாப் அணி சார்பாக சகா 47 பந்துகளில் 59 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 27 பந்துகளில் 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மும்பை இந்தியன்ஸ் சார்பில் ஹர்பஜன் சிங் 2 இலக்குகளையும், அண்டர்சன், மலிங்கா இருவரும் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 169 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 19.1 பந்துப் பரிமாற்றத்தின் நிறைவிலேயே 5 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. மும்பை சார்பில் அணித் தலைவர் ரோஹித் 34 பந்துகளில் 39 ஓட்டங்களையும், அண்டர்சன் 25 பந்துகளில் 35 ஓட்டங்களையும், பொலார்ட் 12 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றி ஆரம்பத்தில் கேள்விக் குறியாகவே இருந்தது. இறுதிக் கட்டத்தில் பொலார்டின் அதிரடியுடன் மும்பை முதல் வெற்றியைப் பதிவு செய்தது. ஆட்ட நாயகனாக மும்பையின் அண்டர்சன் தெரிவு செய்யப்பட்டார். (5)

# வெற்றியடைந்தது ராஜஸ்தான்



ராஜஸ்தான் அணியின் கருண் நாயரின் அதிரடி கைகொடுக்க அந்த அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் டெல்லி டெயா டெவில்ஸ் அணியை வெற்றி கொண்டது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கும், டெல்லி டெயாடெவில்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டம் நேற்று டெல்லியில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டெல்லி அணியின் ஆரம்பமும், முடிவும் அதிரடியாக அமைந்த போதும் நடுவரிசை வீரர்கள் பொறுபற்றதனமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்ததால் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையை அந்த அணியால் வெற்றியிலக்கா நிர்ணயிக்க முடியாது போனது. துடுப்பாட்டத்தில் கொக் 33 பந்துகளில் 42 ஓட்டங்களையும், டுமினி 31 பந்துகளில் 39 ஓட்டங்களையும், யாதவ் 14 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 18.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. கருண் நாயர் 50 பந்துகளில் 73 ஓட்டங்களையும், சாம்சொன் 28 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். ஆட்டநாயகனாக கருண் நாயர் தெரிவு செய்யப்பட்டார். (5)

# உலகக் கிண்ணத்தின் பின்னர் தான் ஓய்வு



சங்கக்கார

2015ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்குப் பின்னரே ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதாக சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற திட்டமிட்டுள்ள சங்கக்கார இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

டெஸ்ட் போட்டியில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புகிறேன். அதனால் 2015 இல் இடம்பெறவுள்ள உலகக்கிண்ண ஒருநாள் போட்டி எனது இறுதி ஒருநாள் போட்டியாக அமையும். தேர்வுக் குழுவினருடன் பேசிய பிறகு இறுதி முடிவை அறிவிப்பேன். இலங்கை அணிக்காக விளையாடுவதையிட்டு நான் பெருமைப்படுகிறேன் என தெரிவித்துள்ளார். இதேவேளை, இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார இலங்கை அணி 20/20 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியதன் பின்னர் 20/20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

# ரொனால்டோ புதிய சாதனை



ஐக்கிய ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான பருவகாலமொன்றில் அதிக கோல்கள் போட்டவர் என்ற சாதனையை ஸ்பெய்னின் றியல் மட்றிட் கழக முன் வரிசை வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ நிலைநாட்டியுள்ளார்.

பயெர்ன் மியூனிச் கழகத்திற்கு எதிராக முன்செனில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் இரண்டாம் கட்ட அரை இறுதி ஆட்டத்தின் 34 ஆவது நிமிடத்தில் றொனால்டோ போட்ட கோல் இந்த பருகாலத்துக்கான அவரது 15ஆவது கோலாக அமைந்தது. இதன் மூலம் கடந்த பருவகாலத்தில் (2013) 14 கோல்களைப் போட்டிருந்த பார்ஸிலோனாவின் உதைபந்தாட்ட நட்சத்திரம் லயனல் மெஸ்ஸியின் சாதனையை கிறிஸ்ரியானோ றொனால்டோ முறியடித்தார்.

அத்துடன் போட்டியின் கடைசிக் கட்டத்தில் மேலும் ஒரு கோலைப் போட்டுதனது மொத்த கோல் எண்ணிக்கையை 16ஆக உயர்த்திக்கொண்டார்.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் இதுவரை 66 கோல்களை மொத்தமாகப் போட்டுள்ள கிறிஸ்ரியானோ றொனால்டோ ஒரு கோல் வித்தியாசத்தில் லயனல் மெஸ்ஸிக்கு அடுத்ததாக மூன்றாம் இடத்தில் உள்ளார்.

ஸ்பெய்னைச் சேர்ந்தவரும் றியல் மட்றிட் மற்றும் ஷோல்க் 04 கழகங்களுக்காக விளையாடியவருமான ரோல் கொன்சாலெஸ் 71 கோல்களுடன் முதலாம் இடத்தில் உள்ளார்.

பெரும்பாலும் அடுத்த பருவகாலத்தில் இந்த சாதனையை றொனால்டோவும் மெசியும் கடப்பார்கள் என நம்பப்படுகின்றது. (கு)

# பிரபல நடிகை ஒருவரின் காதல் வலையில் யுவராஜ்



பொலிவூட் நடிகை லீபக்ஷி எல்லவாடியுடன் இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ்க்கு காதல் மலர்ந்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. பொலிவூட் நடிகைகளுக்கும் கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையே அடிக்கடி இனம் புரியாத இணைப்பு இருந்து கொண்டே தான் இருக்கிறது. ஏற்கனவே இந்திய அணியின் இளம் கிரிக்கெட் வீரர் வீராட் கோஹ்லி பொலிவூட் நடிகை அனுஷ்கா சர்மாவுடன் காதல் வலையில் சிக்கி இருப்பது பற்றி பேசப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் தற்போது இந்திய அணியின் அதிரடி கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், நடிகை லீபக்ஷி எல்லவாடியின் காதல் வலையில் வீழ்ந்துள்ளதாக பொலிவூட்டில் செய்திகள் பரவி வருகின்றன.

**வாகனம் விற்பனைக்கு**

பாவனையிலுள்ள WPLK... பாரஊர்தி (Tenwheeler) half body விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 768 9321 (45526) (7.6)

**கோழிக்குஞ்சு விற்பனை** Lanka farm இன் உயர்தர கோழிக் குஞ்சுகள் தற்போது யாழ்ப் பாணத்திலும், கோழிக் குஞ்சு (கினிராஜ்)75/=, வாத்து 150/=, கினிக்கோழிக்குஞ்சு 160/= (47643) (7.6)

தொடர்பு : 077 753 1344 (திருநெல்வேலி)

**வீடு விற்பனைக்கு**

யாழ். நல்லூர் ஆலய சூழலில் 1 ½ பரப் புக் காணி யில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0778149347, 0718565672

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்

O/L DAY CLASS

புதிய பிரிவு ஆரம்பம்
05.05.2014
திங்கள் 8.00 மணி

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கொட்டடி, நாவாந்துறை கண்ணபுரம் பகுதியில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(விலை பேசித் தீர்க்கப்படும்)

தொடர்பு: (47636) (7.6)
021 221 9618,
077 304 9635

**Inter Lock Paving Stone**

நிலப்பதிப்புக்கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு உறுதியான பல வடிவங்களில் கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிற நிலப்பதிபுக்கற்களை (Inter lock) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு
077 3818799
உங்கள் இருப்பிடத்திற்கு இறக்கித்தரப்படும்.

Special Discounts for Engineers

**பிரணவன் என்ரபிறைசஸ்**
635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**UK Student visa with work Permission**

நீங்கள் ஏன் Exponet இனை தெரிவுசெய்ய வேண்டும்

- கடந்த 14 வருட காலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் UK உயர் கல்வி கனவை நனவாக்கி வெற்றி நடை போடுகின்ற ஸ்தாபனம்
- நீங்கள் தெரிவு செய்வது கல்லூரியாயின் 2-3 வருட காலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
- எம்மிடம் Student Visa அனுமதிக்காக இணைவோருக்கு IELTS வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
- சகல ஆவணங்களும் மிக திருத்தமாக சமர்பிக்கபடின் இரு மாதகாலங்களில் உங்கள் UK பயணத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்
- Student Visa தொடர்பான வழிகாட்டலில் யாழ் மாணவர்களின் அதிஉயர் நம்பிக்கையை பெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்

Exponet (Pvt) Ltd 2001 14 YEARS 2014 EXCELLENCE

May / June இற்கான அனுமதிகள் தற்போது ஏற்று கொள்ளப்படுகின்றன

Colleges
- IELTS Overall : 4.5

Universities
- IELTS overall band: Minimum 5.5 Each Band >5.0

வார நாட்களில் 9-5 மணிவரையும் வார இறுதியில் 9-2 வரையும் எமது யாழ்கிளையினூடாக முற்றிலும் இலவசமான UK Student Visa தொடர்பான ஆலோசனைகளை பெற்றுகொள்ள முடியும்

EXPONET Overseas Consultants
#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk
#197, Arasady Road, Jaffna. 021 7538395 | 021 2227230 Web: www.expogroup.lk

**CENTRAL FINANCE COMPANY PLC**

பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் மாபெரும் மலிவு விற்பனை

சென்றல் பினான்ஸ் கம்பனி பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் இருப்பினை முடிவுறுத்தும் முகமாக மாபெரும் விலைக்கழிவில் விற்பனையை மேற்கொள்கின்றது. குத்தகை (லீசிங் Leasing) அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம்.

★ வான் ★ கார் ★ லொறி ★ முச்சக்கரவண்டி ★ உழவு இயந்திரம்

அனுமதி இலவசம்

இருப்புள்ளவரை மட்டுமே

காலம் : மே 8ஆம் 9ஆம் 10ஆம் திகதிகளில்
நேரம் : காலை 8.30 முதல் மாலை 5 மணிவரை
இடம் : இல.364, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்றல் பினான்ஸ் கம்பனி

CENTRAL FINANCE COMPANY PLC, 364, Main Street, Jaffna

நிபந்தனைக்குட்பட்டது.
தொடர்பு: 021 222 1608, 077 410 9151, 077 361 8100, 077 258 8352
(47616)(10.6)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகராணி தேவராசா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி தேவராசா 02.05.2014 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - இராசபூபதி தம்பதியரின் அன்பு மகளும், தேவராசாவின் அன்பு மனைவியும், பாலமோகன், விஜயபாலன் (லண்டன்), யசோதரன், அகிலா, லோகராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிருந்தா, விஜயலட்சுமி, சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும், கோகுல்ராஜ், கேசிகன், ஞானகி, தேஜஸ்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.2.00 மணியளவில் தகனக்கிரியை களுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

215, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 320 5044 (47622)(12)(6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி விக்னேஸ்வரன் துஸ்யந்தி

(உரிமையாளர், மயூரா மருந்தகம், திருநெல்வேலி)



நீர்வேலி, மாசுவனைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, ஆடிய பாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விக்னேஸ்வரன் துஸ்யந்தி 02.05.2014 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விக்னேஸ்வரன்(RMP) மற்றும் சேதுலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், ஜெயந்தி (ஆசிரியை, நாவலர் தமிழ் மகாவித்தியாலயம், கோப்பாய்), ஜெயராஜா(ஆசிரியர், செங்குந்தா இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீஸ்கந்தராஜா (உதவி ஆசிரியர், தினக்குரல்), பத்மா (பிரதம முகாமை உதவியாளர், யாழ். மாநகரசபை கணக்குப் பகுதி) ஆகியோரின் மைத்துனியும், ஜெயவைசாலி(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜெய்மாறன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் சித்தியும், ஜெயசேது பனின் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2014) ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47/18, ஆடிய பாதம் வீதி,
திருநெல்வேலி. (47548)(5.6)


தகவல்:
வி.ஜெயராஜா
ஆசிரியர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
ஞாயிறு சிறப்பிதழ்
04.05.2014

# சூரியகாந்தி

# வடக்கு முதல்வரின் உரையால் மீண்டும் சர்ச்சை



அரசியல் சதுரங்கம்

➔24



# மீண்டும் புலி உறுமல்

**01**

தேவிகன், கோபி, அப்பன் ஆகிய மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டதுடன் அவர்கள் பற்றிய கதையாடல்கள் முற்றுப்பெறவில்லை. மழைவிட்டாலும் தூவானம் விடாது என்பதைப் போல இவர்களின் பின்னான கைதுகள் இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இவற்றின் நோக்கம் என்ன? பின்னணி என்ன?

தெளிவான விடை இல்லாத இந்தக் கேள்விகளுக்கு படைத் தரப்பிலிருந்து கசியும் தகவல்கள் சிலவற்றைச் சொல்கின்றன. இவற்றின் நம்பகத் தன்மையை வேறு எந்தச் சுயாதீனத் தரப்புகளும் உறுதிப்படுத்த முடியாது.

2009 ஆம் ஆண்டு முள்ளி வாய்க்காலில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதுடன் ஈழத்துக்கான ஆயுதப்போர் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் மூன்று தடவைகள் புலிகள் இயக்கத்தை இலங்கையில் வேரூன்ற வைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன என்கின்றது பாதுகாப்புத் தரப்பு.

தேவிகன், கோபி, அப்பன் ஆகியோரது முயற்சி அதில் மூன்றாவதும், இதுவரையில் இடம்பெற்றவற்றுள் பாரதூரமானதுமாகும் என்கிறது அந்தத் தரப்பு.

## எதிர்பாராத அதிர்ஷ்டம்

பளையில் அகப்பட்ட துண்டுப் பிரசுரங்கள்தான் இந்த மூன்றாவது முயற்சி குறித்த எதிர்பாராத தகவல்களை பாதுகாப்புத் தரப்புக்குத் தந்தன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வுகள் ஆரம்பிப்பதற்கு முன்பாக இந்த வருடத்தின் பெப்ரவரி இறுதிப் பகுதியிலும் மார்ச் மாத ஆரம்பத்திலும் சில துண்டுப்பிரசுரங்கள் வடக்கில் விநியோகிக்கப்பட்டன. 2013 டிசெம்பரில் ஜேர்மனியில் நடந்த மக்கள் தீர்ப்பாயத்தில் இலங்கை அரசுக்கு எதிராக வழங்கப்பட்டிருந்த தீர்ப்புக் குறித்து இந்தத் துண்டுப் பிரசுரம் குறிப்பிட்டது. சர்வதேச ரீதியில் தமிழ மக்களுக்கான ஒரு பாதுகாப்பு அரண் தோன்றும் நிலையில் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது இந்தத் துண்டுப்பிரசும். ஏ-4 அளவுள்ள தாளில் அது அச்சிடப்பட்டிருந்தது.

அரச புலனாய்வு அமைப்புகளுக்கு இது பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டது. ஆரம்பத்தில் இதனை "சிறுபிள்ளைத்தனமான விளையாட்டு" என்றே விசாரணை அதிகாரிகள் எடுத்துக்கொண்டார்கள். தீவிரமான விசாரணைகள் நடக்கவில்லை. இருந்தாலும் இவற்றை அச்சிட்டவர்கள் யார் என்று அவர்கள் தேடி வந்தார்கள்.

மார்ச் மாதம் 6ஆம் நாள் இரவுதான் இந்த விவகாரத்தில் திடீர் திருப்பமும் அதிர்ச்சிகரமான திருப்பமும் ஏற்பட்டன. பளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொறுப்பதிகாரி ஆனந்த ராஜபக்ஷ, கொன்ஸ்டபிள்களான காமினி, தென்னக்கோன், ஜெயகொடி மற்றும் சாரதி பண்டார ஆகியோருடன் வழமையான கண்காணிப்புச் சுற்றில் இருந்தார். தனது கைகளில் பசையுடன் சென்றுகொண்டிருந்த இளைஞன் ஒருவனை அவர்கள் கண்டார்கள். அவனது கைகளில் ஏன் பசை இருக்கிறது என்று பொலிஸார் அவனைக் கேள்வி கேட்டதும் பதில்சொல்லாமல் அவன் மழுப்பத் தொடங்கினான். சந்தேகம் எழுந்தது. உடனே அவர்கள் அவனைக் குடையத் தொடங்கினர். அவன் மற்றொரு இளைஞனை நோக்கி பொலிஸாரை வழிநடத்தினான். அங்கே இலங்கை அரசுக்கு எதிரானதும் தமிழீழத்துக்கு ஆதரவானதுமான சுவரொட்டிகள் கிடந்தன. ஒரு வாளி நிறைய பசையும் காணப்பட்டது. இருவரும் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு வைத்து 'முறையாக' விசாரிக்கப்பட்டனர். அவர்கள் பளைப் பொலிஸாருக்கு தெரிவித்த தகவல்கள் விபரீதத்தை உணர்த்தின. உடனடியாகத் தகவல் பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸார் மேலும் விசாரணை நடத்தியபோது இருவரும் மேலும் முக்கிய தகவல்களை வழங்கினர். இருவரும் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் என்றும் ஆனால் புனர்வாழ்வு முகாமுக்குச் செல்லவில்லை என்றும் அதில் தெரியவந்தது. அவர்களில் ஒருவர் 34 வயதான முகுந்தன் என அழைக்கப்படும் குமாரசிங்கம் குலசாங்கர். மற்றையவர் 28 வயதான ஞானா என அழைக்கப்படும் அகஸ்டின் ஞானசீலன். குலசங்கர் திருகோணமலை மாவட்டம் சேருநுவர பகுதியைச் சேர்ந்தவர். பளையில் திருமணம் முடித்து இத்தாவிலில் வாழ்கிறார். ஞானசீலன் மன்னார் மாவட்டம் சிலாவத்துறையைச் சேர்ந்த சவாரியாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்.

விசாரணையின்போது அவர்கள் வழங்கிய தகவல்கள் அதிகாரிகளை அதிர்ச்சியடைய வைத்தன. சுவிற்சர்லாந்தில் உள்ள விடுதலைப் புலிகள் வட்டாரத்தில் இருந்து தனக்கு மாதாமாதம் 20,000 ரூபா வழங்கப்பட்டு வந்ததாக குலசங்கர் தெரிவித்தார். சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்குமாக அந்தப் பணம் தனக்கு அனுப்பப்பட்டதாக அவர் கூறினார். இதே காரணத்துக்காக ஞானசீலனுக்கும் கொஞ்சம் பணம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக இந்த வேலைக்காக ஓட்டோ ஒன்றும் அவருக்கு பரிசளிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் தாம் யாருடன் தொடர்புகளை வைத்திருக்கிறார்கள் என்ற விவரங்களை அவர்கள் பயங்கரவாதத் தடுப்பு அதிகாரிகளுக்கு வழங்கினார்கள்.

பளையில் கைது செய்யப்பட்ட இருவருமே, விடுதலைப் புலிகளின் மீளுருவாக்க முயற்சி பற்றி அந்த அதிகாரிகளுக்குத் தகவல் தந்தவர்கள். எனினும் மீளுருவாக்க முயற்சியில் இவர்களும் பங்காளிகளா அல்லது கோபி, அப்பனால் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களா என்பதில் அதிகாரிகளுக்குக் கொஞ்சம் குழப்பம் இருக்கிறது.

இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளில் ஒருவருடன் ஒருவர் தொடர்புள்ளவர்கள் என்ற வலைப் பின்னலில் 70க்கும் மேற்பட்டவர்களைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் 20 பேர் வரையிலானோர் விடுவிக்கப்பட ஏனையவர்கள் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(தொடரும்)

(24 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கான வருடாந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை மாலை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் எல்லோரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 25 லட்சம் போதாது. அதை 40 லட்சமாக அதிகரித்து தரவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர். அந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த விடயத்திலும் மூக்கை நுழைத்த அவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு 20 லட்சம் என்று இருந்த நிதியை 25 லட்சமாக அதிகரித்து ஒதுக்கியதே தான் தான் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டார். நிதி அதிகமாக ஒதுக்கித் தருமாறு உறுப்பினர்கள் வலியுறுத்திய போது அமைச்சர்களோ அல்லது முதலமைச்சரோ அது பற்றிக் கருத்துத் தெரிவிக்க வில்லை.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் எழுந்து. நிதி ஒதுக்கீட்டை அதிக ரித்து வழங்க வேண்டியதன் அவசி யத்தை வலியுறுத்தார். அப்போதும் அவைத் தலைவர் குறுக்கிட்டு அதற்கு விளக்கம் சொல்ல முயன்றார். உடனே அஸ்மின், "இந்த நிதியை ஒதுக்கீடு செய் வது யார்? பிரதம செயலாளர்தானே?" என்றதும் அவைத் தலைவர் மெல்ல அமைதி காத்துக் கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றது. 21 போர் கலந்துகொள்ள வேண்டிய கூட்டத்துக்கு 13 பேர் மட்டுமே வருகை தந்திருந்தனர். கூட்டத்தில் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம் பந்தன் தலைமையுரை ஆற்றினார். கூட்டமைப்பை உடைக்க அரசு சதி செய்கின்றது என்று குற்றஞ்சாட்டினார். ஒவ்வொரு கூட்டத்திலும் இவ்வாறான கருத்தை அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறார்.

ஆனால் அரசின் முயற்சிக்குத் துணை போபவர்கள் யாராவது கூட்டமைப்பில் இருக்கிறார்களா என்று அவர் இன்னும் வெளிப்படுத்தவில்லை.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழு அண்மையில் தென்னாபிரிக்கா வுக்குச் சென்றிருந்தபோது, அவர்களு டன் சிங்களவர் ஒருவரும் சென்ற விட யம் இந்தக் கூட்டத்தில் சர்ச்சையாக மாறியது. சிங்களவர் ஒருவர் தமது குழுவில் இணைக்கப்பட்டுள்ளார் என்ற விடயம் அந்தக் குழுவில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கோ, செல்வம் அடைக்கலநாதனுக்கோ தெரியாதாம். விமான நிலையத்தில் அந்தச் சிங்களவரை ஏனையவர்களுக்கு அறிமுகப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர் கூட்டமைப்புக் குழுவின் ஆலோசகர் என்று சொன்னாராம்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைச் சூடாக்குவதற்கு இந்த விடயம் போது மானதாக இருந்தது. இது தொடர்பான காரசாரங்களைத் தொடர்ந்தே, இனி வரும் காலங்களில் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்க குழு நியமிக்க வேண்டும் என்று ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் முக்கியமாக கூட்டமைப்பின் பதிவு விடயமும் ஆராயப்பட் டது. இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று கட்சியாகப் பதிவு செய்வதற்கு இரண்டு தடவைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த முயற்சிகள் இரண்டு தடவையும் தோற்க டிக்கப்பட்டமை தொடர்பில் ஆராயப்பட்டது. தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் கட்சியைப் பதிவு செய்ய வேறு சிலர் முயற்சிப்பதால் கட்சிப் பதிவு விடயத்தை துரிதப்படுத்த நான்கு கட்சிகளுமே இணக்கம் எட்டி னார்கள். இதனையடுத்து இதற்கான ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட் டணியின் தலைவர் ஆனந்த சங்கரியார், அண்மையில் தேர்தல்கள் திணைக்களத் பணிப்பாளருக்கு எழுதிய கடிதம் ஒன்றே இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது.

வழக்கமாக ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதும் ஆனந்தசங்கரி ஐயா, இந்தத் தடவை ஒரு மாறுதலுக்காக தேர்தல்கள் திணைக்களப் பணிப்பாளர் மகிந்த தேசப் பிரியவுக்கு (எப்படியோ இரண்டு பேரும் மகிந்ததான்) கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தில், கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் தமிழரசுக் கட்சி என்ற ஒன்று இல்லை எனவே கூட்ட மைப்பைக் கட்சியாகப் பதிவு செய்யும் போது தமிழரசுக் கட்சியையும் இணைத் துப் பதிவு செய்யக்கூடாது என்று தெரிவித் திருக்கிறார். விடுதலைப் புலிகளின் தலை யீட்டினால் மோசடி மூலமே தமிழரசுக் கட்சி கூட்டமைப்பில் இணைக்கப்பட்டது என்று அந்தக் கடிதம் கூறுகின்றது.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பலர் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்தும் வகையில் அந்தப் பெயரைப் பயன் படுத்தும் உரிமையும் தகுதியும் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலைக் கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர் எல்எவ்) ஆகிய நான்கு கட்சிகளுக்கே உள்ளது என்பதையும் தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

எவரையேனும் இணைத் துக் கொள்வதற்கான உரிமையோ நீக்கு வதற்கான உரிமையோ மேற்குறிப்பிட்ட கட்சிகளுக்கே உள்ளது என்பதையும் மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அந்தக் கடிதத்தில் ஆனந்த சங்கரி தெரிவித்திருக்கிறார்.

இதனை அடுத்து. இவ்வளவு காலமும் இழுபறிப்பட்டு வந்த கூட்டமைப்பின் பதிவு விடயத்தைக் கையாளத் தனிக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குழு எவ்வளவு காலத்துக்குள் தனது பணியை நிறைவு செய்ய வேண்டும் என்று எந்தக் கால வரையறையும் விதிக்கப்படவில்லை.







# அத்துமீறும் அழகிய அசுரா!

■ செ.கவிதரன்

வெயில் காலம் வந்துவிட் டது. வெயில் எப்போதுமே வேண்டாத விருந்தாளி தான். மழையை விரும்பும் அளவுக்கு மக்கள் ஏனோ வெயிலை விரும்புவதில்லை. கவிஞர்கள் கூட வெயிலை அதிகமாக வரவேற்பதில்லை. ஆனால் பாரதி மட்டும் விதிவிலக்கு.

வெயிலைக் காட்டி லும் அழகான பதார்த்தம் வேறில்லை என்கிறது பாரதியின் வசன கவிதையில் வருகிற ஒரு பசுமாடு. இயற்கை நமக்குக் கொண்டுவருகிற எத்தனையோ இன்பங்களில் ஒன்று வெயில். நல்ல வெயில் வேளையான மதியப் பொழுதில் தெருக்கள் மோன நிலையில் மூழ்கி இருக்கும். மனிதர்கள் வெயிலை விரும்பா விட்டாலும் மரங்களும் செடிகொடிகளும் அதிகமாகவே அதை விரும்புகின்றன.

வெயில் காலத்தில் வேப்ப மரமும் புங்க மரமும் பச்சை இலைகள் தளிர்த்து வெயிலோடு சேர்ந்து நிழலையும் பிரசவித்திருக்கும். வெயிலின்றி ஏது நிழல்?

ஒவ்வொரு மரத்தின் நிழலும் ஒவ் வொரு விதமான சுகம். ஆலமர நிழலில் படுத்துறங்க ஆசை கொள்ளாத மனிதனும் உண்டா? வேப்ப மர நிழலின் குளிர்ச்சிக்கு இணையேது? மா மர நிழல், பூவரச மர நிழல் இவற்றுக்கெல் லாம் தனித் தனி வாசனைகூட உண்டு.

இலுப்பை மரங்களின் நிழலில் நுழையும் போதே கம்மென்று இலுப்பம் பூக்களின் வாசனை எமது மூக்கைத் துளைக்கும். பனை மர நிழல் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தாலும் அதுவும் ஒரு கருப்பு-வெள்ளை ஒளிப்படம்போல் எமது கருத்தைக் கவரும்.

புதுமைப்பித்தன் ஒரு சிறுகதையில் பனை மரத்தடியில் அதிகாலையில் காலைக்கடன் கழிக்க உட்கார்ந்திருக்கும் ஒரு மனிதனின் மன ஓட்டம் எங்கெங்கோ சஞ்சரிப்பதை அழகாக எழுதியிருப்பார்.

இரண்டு பக்கமும் மரங்கள் வைத்த சாலைகள் முழுக்க நிழல் கம்பளம் விரித்திருக்க, அதன் வழியிலே பயணிப்பது பரமானந்தமாக இருக்கும். பிரம்மாண்டமான மரங்களின் பிம்பங்கள் வெயிலுக்கேற்ப கார் கண்ணாடியில் தோன்றித் தோன்றி மறைந்தாலும் கண்ணாடி ஒன்றுமே ஆவதில்லை என்று ஏறக்குறைய கவிதை போன்ற வரிகள் மனதில் பளிச்சிடும்.

வெயில் வேளையில் சில சமயம் எங்கிருந்தோ சின்னஞ்சிறு காற்று திடீரென வரும். உடம்புக்கு உள்ளே நுழைந்து ஆன்மாவையே தொட்டு ஆசுவாசப்படுத்தும் சக்தி, அந்த திடீர்க் காற்றுக்கு உண்டு.


இப்போதெல்லாம் வெயில் காலம் வந்து விட்டால் வீடுகளில் புழுக்கத்தைப் போக்க விசிறிகள்தான் துணை. அழகான கைக்கு அடக்கமான பனை விசிறிகள். விசிறும்போது கொஞ்சமே கொஞ்சம் காற்று முகத்திலும் மார்பிலும் படும். ஆஹா… அதில் அப்படியொரு ஆனந்தம்.



உச்சி வெயிலில் கிராமத்து மாந்தோப்பு நிழலில் கட்டில் போட்டுப் படுத்துக்கொண்டு கிளைகளுக்கு இடையே விட்டுவிட்டுத் தெரியும் வானத்தை ரசிப்பதற்காகவே கோடை காலத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் நண்பர் ஒருவரை எனக்குத் தெரியும்.

ஆனால் பாவம், கோடையில் காக்கைக் குருவிகளின்பாடுதான் கஷ்டம். அவற்றுக்காக சின்ன சின்ன பிளாஸ்டிக் கிண்ணங்களில் தண்ணீரை ஊற்றி வைத்து விட்டால் போதும். காக்கைக்கும் குருவிக்கும் தாகம் தணிந்து போகும்.

கோடையில் அத்துமீறும் அழகிய அசுரனான வெயிலைத் தணிக்க, மனிதர்கள் இளைப்பாற குளிர்நிழல் தர மரங்களைப் போல வேறேதும் உண்டா இந்த உலகில்.



# பூப்புனித நீராட்டு விழா (ஆண்கள் மட்டும்)

04

■ தவராஜா

அகதியாக ஐரோப்பிய விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது சோகமாகத்தான் இருந்தேன். என்னை விசாரணை செய்த அதிகாரிக்குத் திக்கித் திணறி, தடுமாறி ஆங்கிலத்தில் பதிலளித்தேன்.

அம்மா திட்டித்திட்டி ஆங்கிலம் படிக்கச் சொன்னபோது நான் படிக்காமல் விட்ட தன் வலியை முதல் தடவையாய் உணர்ந்தேன். விமான நிலையத்தில் வைத்து அம்மாவின் பாசமும் பொத்துக்கொண்டு வந்து தொலைத்தது.

அப்போது பார்த்து என்னை விசாரித்த வெள்ளை அதிகாரி எனது சிற்றியின் பெயரைக் கேட்க, நானோ மைதிலி என்றேன். இலங்கை வரைபடத்தைத் தேடிப் பார்த்த அவர் நான் இலங்கையிலிருந்து வரவில்லை. அப்படி ஒரு சிற்றி இலங்கையில் இல்லை என்கிறார்.

அப்போதுதான் விளங்கியது அவர் சித்தியின் பெயரைக் கேட்கவில்லை எனது நகரத் தின்(City) பெயரைக் கேட்கிறார் என்று. மைதிலிச் சித்திக்கு இந்த கதை யைச் சொல்லிச் சிரிக்க வேண்டும் என்றால் 25 வருடங்களை நேரமே இல்லாமல் ஓட்டி முடித்துவிட்டேன்.

இந்தச் சம்பவத்தை எனது குழந்தைகளுக்குச் சொன்னால், அப்பாவின் மனம் நோகக்கூடாது என்பதற்காக நாடகத் தனமாகச் சிரித்துவிட்டுப் போவதை நினைத்து அழுதுகொள்கிறேன்.

கலையும் கலாசாரமும் அவரவர் வாழும் சூழலோடு சம்பந்தப்பட்டது என்று யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். 25 வருடங்களில் கஸ்புஸ் என்று ஆங்கிலம் பேசக் கற்றுக்கொண்டேன். எனக்குப் பின்னால் கனடாவுக்குப் போக விமானம் ஏறிய சுரேஸ் ஜேர்மனியில் பிடிபட்டு பிரான்ஸுக்கு வந்துவிட்டான். அவ னும் கஸ்புஸ் என்றே பிரஞ்சு மொழியில் பேசுவதாகச் சொல்லு கிறான். இருவருக்கும் மொழி விச யத்தில் கஸ்புஸ்தான் ஒற்றுமை. ஒவ்வொரு வசனத்திலும் இலக்க ணப் பிழை, சொல்லுப் பிழை, உச்ச ரிப்புப் பிழை என்று பல பிழைகள் இருந் தாலும், நாங்கள் இருவரும் சத்தியமாய் கஸ்புஸ் என்றுதான் மொழிகளைப் பேசிக் கொள்கிறோம்.

இப்போது சிற்றி என்றால் ரொரான்டோ என்று டக் என்று சொல்லும் அளவுக்கு 25 வருட வளர்ச்சி இருக்கிறது.

சுரேசின் கதையோ தனியானது. கனடாக் கனவுகளோடு கொழும்பில் விமானத்துக்குள் நுழைந்தவன் ட்ரான்சிட்டில் (விமானம் மாறி ஏறும் விமான நிலையம்) ஜேர்மனியில் இறங்கியிருக்கிறான். ஏயார்போட்டில் திருதிருவென்று முழித்துக்கொண்டிருந்த சுரேஸைப் பார்த்த குடிவரவு அதிகாரி எந்த நாடு என்று ஆங்கிலத்தில் வினவியிருக்கிறார்.

சுரேஸ் நெஞ்சை நிமிர்த்தி சிறீலங்கா என்று சொல்லியிருக்கிறான். அதிகாரியோ "அப்படியா! அரசியல் தஞ்சம் கேட்கத்தானே வந்திருக்கிறாய்?" என்றார். சுரேஸோ "இல்லை" என்றிருக்கிறான். அதிகாரியோ "நான் கம்யூனிஸ்ட். உங்கள் நாட்டுப் பிரச்சினை எனக்குத் தெரியும். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அகதியாக ஜேர்மனிக்குள் அனுமதிக்கிறேன்" என்று ஆங்கிலத்தில் கூறியிருக்கிறார்.

சுரேஸ் "இல்லை! அகதியாக எல்லாம் வரவில்லை" என்று கதறியும்கூட, அதிகாரி ஒத்துக்கொள்ளவில்லை. மிகவும் அன்பாக "நீ எனக்குத் தம்பி மாதிரி. நான் உனக்கு எல்லா அலுவல்களையும் செய்து தருகிறேன்" என்று ஒரு நீண்ட லெக்சர் அடித்திருக்கிறார்.

ஆங்கிலத்தில் எனக்கு நூறுக்கு முப்பது புள்ளிகள் என்றால் சுரேசுக்கு இருபதைத் தாண்டுவ தில்லை. அரை குறையாக விளங்கிக் கொண்ட சுரேஸ் "யா, யா" என்றிருக்கிறான். பாஸ்போர்ட்டை வாங்கிய அதிகாரி, அவனை அரசியல் அகதியாக்கி ஜேர்மனியில் ஒரு முகாமுக்கு அனுப்பிவிட்டார்.

விமான நிலையத்துக்கு வெளியால் சுரேஸ் போகும்போது மேலே கனேடிய விமானம் பறந்துகொண்டிருந்தது.

கண்ணீரும் கம்பலையுமாக ஜேர்மனிக்குள் நுழைந்த சுரேசுக்கு அதிகாரியின் மீது மட்டுமல்ல, கம்யூனிசத்தின் மீதும் வெறுப்பு ஏற்பட்டது. சுரேஸ் அங்கிருந்து பிரான்ஸுக்கு அவனது மச்சானியிடம் சென்று விட்டான்.

நானும் எனது பால்ய நண்பனும் மட்டுமல்ல, அக்கா, தங்கை என்று தொடர்ந்து வந்தவர்கள் எல்லாம் திக்குத் திக்காகச் சிதறிவிட்டோம். இப்போதுதான் எல்லாரும் கொஞ்சம் கொஞ்சமாக அவ்வப்போது இணைந்து கொள்கிறோம்.

பேஸ்புக், ஸ்கைப், வைபர் என 24 மணித்தியாலத் தொடர்பு இருந்தாலும், கலாசாரமே எம்மை இணைக்கிறது என்று சுரேஸ் சொல்வான். எனக்கு இன்னும் கலாசாரம் என்றால் என்னவென்று விளங்கவில்லை.

மொழியை 'கஸ்புஸ்' என்று கடினமில்லாமல் விளங்கப்படுத்தலாம். ஆனால் கலாசாரம் என்றால் எப்படி விளங்கப்படுத்துவது என்று தெரியாமல் முழிக்கிறேன்.

சுரேஸின் கதையோ வேறு. பிரான்ஸில் குடும்பமான சில நாள்களுக்கு உள்ளாகவே தேங்காய்ச் சம்பல் தின்ன ஆசைப்படும் அளவுக்கு அவனுக்குக் கலாசாரப் பற்று இருந்தது. அதற்காக உரலும் உலக்கையும் வாங்கி அவன் குடியிருந்த நாலாம் மாடியில் வைத்து சம்பல் இடித்து மூன்றாம் மாடி வெள்ளைக்காரனை துண்டைகாணோம் துணியைக்காணோம் என குடியெழுப்பிய பெருமைக்குரியவன்.

இப்போது இரண்டு வருடமாக கொஞ்சம் உடைந்து போயிருக்கிறான். மகளுக்கு சாமத்தியவீடு நடத்த கடன் வாங்கி வங்கிக்கும், இன்னொரு மறத் தமிழனுக்கும் வட்டி கட்டிக்கொண்டிருக்கிறான்.

நீரிழிவு வியாதியோடு கொலஸ்ரோல், மூலவருத்தம், மூட்டுவலி, ஒற்றைத் தலைவலி, என்று பல்வகை வருத்தங்களின் இருப்பிடமாகிவிட்டான். புதிதாகப் பட்ட சாமத்தியவீட்டுக் கடன் கட்ட 16 மணித்தியாலங்களுக்கு வேலை வேறு செய்ய வேண்டியிருக்கிறது.

அதற்குள் அவனுக்கு இன்னொரு கவலை. இன்னும் சில மாதங்களில் அவனுக்கு ஐம்பது வயதாகிறது. அதையும் அவன் கோலாகலமாகக் கொண்டாட நினைக்கிறான். கிட்டத்தட்ட 20 ஆயிரம் யூரோ செலவாகுமாம்.

பிரான்ஸில் வசிக்கும் தேசியச் செயற்பாட்டாளர் ஒருவரையும் அப்போது தாள் கடத்தி இப்போது தொழிலதிபராகியிருக்கும் ஒருவரையும் 'சீப் கெஸ்ட்' களாக கூப்பிடப் போகிறானாம்.

20 ஆயிரம் யூரோ திரட்ட வேண்டும் என்ற கவலையி லேயே ஐம்பது வயதுக்கு முதல் போய்விடுவானோ என்ற பயத்தில் எனது முகத்திலும் கவலை.

எங்கேயோ மண்டபம் எடுத்து இசைக் குழுவையும் கூப்பிட்டு, நாதஸ்வரம் தவில் கச்சேரி எல்லாம் போட்டு சாப்பாடும் சோம பானங்களும் பரிமாறி தனது விலாசத்தைக் காட்ட வேண்டும் என்று நினைக்கிறான். அத்தற்கிடையில் கடன் வாங்க வசதி செய்து தருமாறு பிரான்ஸ் பிள்ளையார் கோவிலில் அர்ச்சனை செய்து வருகிறான்.

நாங்கள் எல்லாரும் சும்மா வரவில்லை. போராடப் போய், அடக்கு முறைக்கு முகம்கொடுத்து அடிபட்டு வந்தவர்கள். ஐரோப்பியக் கலாசாரத்தின் முற்போக்கானவற்றை உள்வாங்கத்தெரிந்தவர்கள் என்று நான் 20 வருசத்துக்கு முந்திப் பெருமையடித்தேன். அதெல்லாம் பொய் என்று சுரேஸ் சொல்லியிருக்கிறான். எங்களுக்கும் போராட்டத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை; அதெல்லாம் ஒரு குசும்பு என்பது போல சுரேஸ் போன்ற நண்பர்களின் நடவடிக்கைகள் எண்ண வைக்கின்றன.

இயக்கத்தில் வேலைசெய்த மைதிலிச் சித்தியின் மகள் தர்சினியை ஆமிக்காரன் திரும்பப் பிடித்துக்கொண்டு போய்விட்டான். எனக்கும், சுரேஸுக்கும், தர்சினிக்கும் கிட்டத்தட்ட ஒரே வயசு. தர்சினியின் ஐம்பதாவது பிறந்த நாள் இராணுவ முகாமில் தான் நடக்குமோ என்று யோசித்துப் பார்த்தேன்.

அப்படி நடக்கத் தேவையில்லை; ஐம்பதாவது வயது பிறந்த நாள் விழாவைப் பெண்கள் கொண்டாடுவதில்லையாம். ஆண்கள் மட்டும்தான் கொண்டாடுவார்களாம் என்று கடைசியாக் கதைக்கும் போது சுரேஸ்சமாதானம் சொன்னான். சின்ன வயசில் ஆண்களுக்கு சாமத்திய வீடு கொண்டாடுவதில்லை என்பதால் முத்திப் போனதும் ஐம்பதாவது பிறந்த நாள் வைக்கிறார்கள் போலும். கிட்டத்தட்ட சாமத்திய வீடு மாதிரியே நடக்கும் இந்தக் கூத்து பெண்களுக்கு நடப்பதில்லை. ஆண் களுக்கு மட்டும்தான்.

இது முற்றிய ஆண்களுக்கான சாமத்திய வீடோ? பூப்புனித நீராட்டு விழா (ஆண்கள் மட்டும்) என்று இந்த ஐம்பதாவது கூத்துக்குப் பெயர் சூட்டிக் கலாசார மயப்படுத்திக் கொள்ளலாம்.

இப்படி இசக்குப் பிசக்காகச் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் எனது மகள் தனது பதினெட்டாவது பிறந்த நாளை எங்கு கொண்டாடுவது என்று கேட்டுக் குழப்பி விட்டாள்.

*(யாவும் கற்பனையல்ல.. பெயர்களைத் தவிர.)*






## ஒருத்தியும் இன்னொருத்தியும்

பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். ஒருத்தி ஜன்னலைத் திறக்கச் சொல்லியும்... ஒருத்தி ஜன்னலை மூடச் சொல்லியும்... சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். காற்று இருந்தால் மூச்சு திணறி செத்து விடுவேன் என்று மூடச் சொன்னவள் கத்தினாள். காற்று இல்லையென்றால் மூச்சடங்கிச் செத்து விடுவேன் என்று திறக்கச் சொன்னவள் எதிர்த்துக் கூச்சலிட்டாள்.

கூட்டத்தில் இருந்த ஒருவர் பஸ் நடத்துநரிடம் சொன்னார், "முதலில் ஜன்னலை மூடுங்கள்..ஒருத்தி செத்து விடுவாள், தொல்லை தீர்ந்துவிடும். பின்னர் ஜன்னலைத் திறந்துவிடுங்கள். இன்னொருத்தியும் செத்து விடுவாள். பிரச்சினையே தீர்ந்துவிடும்" என்று.

சண்டையை எப்படி நிறுத்துவது என்று மூச்சுத் திணற யோசித்துக் கொண்டிருந்த நடத்துநருக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. "எப்படி அய்யா இது மாதிரி ஒரு யோசனை உங்களுக்கு வந்தது?" என்று அந்த நபரிடம் கேட்டார். அவர் கூறினார்: "அந்த இரு பெண்களுடைய கணவனும் நான்தான்."



# கானல் நீராகும் இனப்பிரச்சினை தீர்வு

■ சந்திரசேகர ஆஷாத்

கானலை நீரென்றெண்ணி கடுக வழியோடும் மான் போல்" என ஆரம்பிக்கும் சங்க காலப் பாடல் ஒன்றுண்டு. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் கானலை நீர் என நினைத்து ஓடும் மானின் நிலை தான் இன்று தமிழ் மக்களுக்கு.ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் அரச தரப்பினர் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு எட்டக்கூடிய சந்தர்ப்பங்களையெல்லாம் ஏதோ சில சாட்டுக்கள் சொல்லி தட்டிக் கழிப்பதையோ அல்லது கிடப்பில் போடுவதையோ மாற்ற முடியாத ஒரு கொள்கையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அழகான வார்த்தைகளால் தாங்கள் அசிங்கமான இன ஒடுககுமுறை முகங் களை மறைத்து வருகின்றனர்.

போர் முடிநது விட்டதென இலங்கை அரசு பிரகடனம் செய்த சில நாள்களின் பின்பு, இலங்கை வந்த ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான்-கீ மூன் இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அந்தப் பேச்சுக்களின் போது இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு எட்டப்படுவது போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறுவது, போரினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்வது என்பன தொடர்பாக ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது. மேலும் இந்த மூன்று விடயங்களும் ஆறு மாத காலத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலும் இணக்கம் காணப்பட்டது.

ஆனால் தற்சமயம் 5 வருடங்கள் கழியும் நிலைமையிலும் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஓர் அங்குல முன்னேற்றம் கூட நிகழவில்லை. மாறாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வாய்ப்புகள் உருவாகும் போது கூட அவை ஏதோ ஒரு விதத்தில் அரசால் தட்டிக் கழிக்கப்படுகின்றன.

அது ம்ட்டுமன்றி ஜனாதிபதி போர் வெற்றி விழாவின் போது இனப் பிரச்சினைக்கு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துடன் மேலதிக மாகவும் வழங்கப் போவதாகப் பிரகடனம் செய்தார். அது மட்டுமன்றி இங்கு பயணம்சென்ற இந்தியராஜதந்திரிகிருஷ்ணாவிடமும் அதே வாக்குறுதியை வழங்கினார்.

ஆனால் நடைமுறையில் படிப்படியாகப் அரசியலமைப்புக்கான பதின்மூன்றாம் திருத்தத்தினால் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. அதாவது ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வடக்கு கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பின்பு 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம். மூலம் மாகாண சபையின் அதிகாரங்கள் மேலும் பறிக்கப்பட்டன. வேறு ஒரு நீதிமன்றத் தீர்ப் பின் மூலம் மாகாண சபைகளுக்கான காணி அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தத்தில் இனப் பிரச்சினைத் தீர்வைத் தொலைதூரம் தள்ளும் வகையில் அரசு தனது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. சர்வதேச அழுத்தம் காரணமாகவும், இந்தியாவின் நெருக்குதல் காரணமாகவும் இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சை ஆரம்பித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும். அப்பேச்சுக்களின் மூலம் பூர்வாங்க ஆலோசனைகளை முன்வைத்தது. அந்த ஆலோசனைகளுககு எவ்வித பதிலும் வழங்கப்படாமல் 18 மாதங்கள் இழுத்தடித்த பின்பு இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் மட்டுமே பேச முடியும் என அரசு அறிவித்துவிட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது சிங்களக் கடும் போக்காளர்கள், இடதுசாரிகள் எனப் பலவிதமான தரப்பினரையும் கொண்டிருப்பதால் அதனால் எவ்வித தீர்வையும் எட்ட முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துவிட்டது. எனினும் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேசி எட்டப்படும் ஒரு தீர்வை முன்வைப்பதன் மூலம் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்குபற்ற முடியும் என த.தே.கூட்டமைப்புத் தெரிவித்தது.

ஆனால் அரசு அதற்குத் தயாரில்லை. மாறாக நிபந்தனையற்ற முறையில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்குபற்ற வேண்டும் எனக் கூறி வருகிறது. இது நிச்சயமாக எந்த ஒரு முடிவும் எட்டப்படாத விளைவையே ஏற்படுத்தும்.

எனவே வருடங்கள் தாண்டியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது அரசின் ஒரு ஏமாற்று நாடகமாகவே தொடர்ந்து வருகிறது. கொழும்பில் பொதுநலவாய மாநாடு இடம்பெற்ற போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்கத் தலைவர் யேக்கப் சூமாவைச் சந்தித்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவி புரியுமாறு கேட்டுக் கொண்டார். அவரும் அதை ஏற்றுக் கொண்டு அந்த விவகாரத்தைப் கையாள ஒரு பிரதிநிதியையும் நியமித்தார்.

அவரும் ஜெனிவா ம்னித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்குச் சில நாள் கள் முன்பு இலங்கை அரசுப் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுகளை நடத்தினார். இலங்கைப் பிரதிநிதிகள் இனப்பிரச்சினைத் தீர்வில் ஆர்வம் அக்கறை காட்டுவதாகக் காட்டி தமக்கு ஜெனிவாவில் தென்னாபிரிக்கா ஆதரவு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். தென்னாபிரிக்காவும் ஜெனிவாவில் நடுநிலை வகித்தது.

அதன் பின்பு தென்னாபிரிக்கப் பிரதிநிதி சிறில் ராமபோஷா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துப் பேசினார். அங்கு அவர் விரிவான முறையில் இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்ததாகவும், மேலும் பல புலம்பெயர் அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டு நிலைமைகளை ஆராய்ந்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது. மேலும் அவர் இலங்கை வந்து பல தரப்பினருடனும் கலந்துரையாடி நிலைமைகளை அறியப் போவதாகவும் தெரிவித்திருந்தார். ஆன்றால் இதுவரை அவருக்கு இலங்கை அரசு அழைப்பு விடுக்கவோ அல்லது அவருடன் தொடர்பு கொள்ளவோ இல்லை. அது மட்டுமன்றி சிரேஷ்ட அமைச்சரும், இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கையின் சார்பில் தலைமை தாங்கியவருமான நிமால் சிறிபால டி சில்வா இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் மட்டுமே பேச முடியும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

அப்படியானால் அரசுக்கும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குமிடையில் தென்னாபிரிக்காவின் அனுசரணையில் ஒரு பேச்சு நடத்தி முடிவு எட்டப்படுவது சாத்தியமில்லை என்பது தானே அர்த்தம். சர்வதேச அழுத்தத்தின் பேரில் அப்படி ஒரு பேச்சு வார்த்தை நடந்து முடிவுகள் எட்டப்பட்டாலும் அவை வெறும் ஆலோசனைகளாகவே அமையும். அவை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் போட்டுக் குழப்பியடிக்கப்படும். அதை நிமால்சிறிபாலடிசில்வா இப்போதே முன்னறிவிப்பு செய்துவிட்டார். என்வே சில மாதங்களோ வருடங்களோ கடந்த பின்பும் இனப் பிரச்சினை என்பது தீர்க்கப்படாமலே நிலைத்து நிற்கும். இலங்கை அரசு இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்பவுமில்லை. தீர்க்க விடப் போவதுமில்லை. ஏனென்னில் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் இன்றைய அரசும் அதன் அதிகாரத்தின் உச்சத்தில் வீற்றிருப்பவர்களும் பெரும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என்பது பெரும் உண்மையாகும்.

> **இலங்கை அரசு இனப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவுமில்லை. தீர்க்க விடப் போவதுமில்லை. ஏனெனில் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் இன்றைய அரசும் அதன் அதிகாரத் தின் உச்சத்தில் வீற்றிருப் பவர்களும் பெரும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என்பது பெரும் உண்மையாகும.**

இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்பட்டு விட்டால் இன வெறியைக் கிளப்பி மக்களைத் தம் வசம் வைத்திருக்க முடியாது. பொதுபலசேனா, ஜாதிக ஹெல உறுமய, இராவண சேன, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற பௌத்த சிங்கள இனவாத மேலாதிக்க கொள்கை கொண்ட அமைப்புகள் மூலம் பெரும்பான்மை மக்களையும் சிறுபான்மை மக்களையும் ஒருவரை ஒருவர் வெறுக்க வைத்து முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்க முடியாது. அதாவது சிங்கள இனவாதத்தை மூலதனமாக வைத்து அரசியல் செய்ய முடியாது. அப்படிப்பட்ட நிலைமையில் வாழ்க்கைச் செலவு உயர்வு, ஊதிய அதிகரிப்பின்மை, விவசாய முயற்சிகளில் தோல்வி, வறுமை, உழைக்கும் மக்கள் மீதான ஆளும் கூட்டத்தினரது ஒடுக்குமுறை என்பன தொடர்பாக மக்களின் கவனம் திரும்பும். எனவே ஆட்சி யதிகாரத்துக்கான எதிர்ப்பு பேரலையாக எழும். தேர்தல் மூலமோ அல்லது தொடர்ச்சியான போராட்டங்கள் மூலமோ அரசு படி இறங்க வேண்டிவரும். அரசியல் அதிகாரம் பறிபோய்விட்டால் இன்றைய அரசியல் அதிகாரத்தில் இருக்கும் பலரும், இராணுவ உயர் அதிகாரிகள் பலரும் சர்வதேச நீதிமன்றின் முன் நிற்க வேண்டி வரும். குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் வாழ்நாள் முழுவதுமே சிறையில் கழிக்க வேண்டி ஏற்படலாம். எனவே இன்றைய ஆட்சியாளர்கள் எவ்வளவு தான் சர்வதேச அழுத்தங்கள் ஏற்பட்டாலும் கூட இனப் பிரச்சினைத் தீர்வை அனுமதிக்க மாட்டார்கள். அப்படி அவர்களை மீறி தீர்வுக் காண வாய்ப்புக்கள் ஏற்படுமானால், அதை வேறுஒரு பக்கமாகத் திசைதிருப்பத் தயங்க மாட்டார்கள்.

இன்று இலங்கைக்கு ஆதரவு வழங்கும் இந்தியா, சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளும் இனப் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படுவதை விரும்பப் போவதில்லை. இனப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டுவிட்டால் இந்தியா இனப் பிரச்சினையை வைத்து இலங்கையுடன் நெருக்கமான ஆதரவை வழங்குவதன் மூலம் இலங்கை முற்றாக சீனா பக்கம் சாய்வதை தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

இனப் பிரச்சினை விவகாரம் தொடர்பாக மேற்குலகம் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதித்தால் இலங்கையில் உற்பத்தியாகும் தைக்கப்பட்ட ஆடைகள் உட்பட பொருள்களை இலங்கையிடம் மலிவான விலைக்கு வாங்கித் தனது பேரில் மேற்கு நாடுகளுக்கு சீனா ஏற்றுமதி செய்து கொள்ளை இலாபம் ஈட்ட முடியும். அதே போன்று இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் ஆடை ஏற்றுமதிச் சந்தையை பங்களாதேஷால் கைப்பற்றிக் கொள்ள முடியும்.

இப்படியாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தங்கள் நலன்களின் அடிப்படையில் இனப் பிரச்சினையை எப்போதும் அணைய விடாமல் ஓர் எரியும் பிரச்சினையாகவே வைத்துக் கொள்ளும் முயற்சிகளே மேலோங்கி நிற்கின்றன.

இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொண்டு எமது போராட்டத்தை முன்னெடுப்பதே நாம் தெரிவு செய்யக்கூடிய பாதையாகும். ஆனால் இந்தியா குதிரைக்கு முன்னால் புல்லுக் கற்றை கட்டி விடுவதைப் போல இலங்கை அரசு. பிரச்சினையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் சில தமிழ் தலைமைகளை வழி நடத்துகிறது. இது பெரும் ஆபத்தாகும்.

எமது உரிமைப் போராட்டத்தில் நாம் எடுக்கும் உறுதியான நிலைப்பாடு ஒன்று மட்டுமே. நிலைமைகளை எமக்குச் சாதகமான நிலைமைகளாக மாற்றும். எனவே ராஜதந்திரம், அரசியல் சாணக்கியம் என்று சொல்லி தாமும் ஏமாந்து தமிழ் மக்களையும் ஏமாற்றுவது எமது எதிர்காலத்தையே படுகுழியில் தள்ளிவிடும். கானல் நீரை நோக்கி ஓடினால் அழிவுதான் விளைபயனாக முடியும்.

# சென்னை குண்டுவெடிப்பு அரசியல் விளையாட்டா?



■ அதிரன்

மத்திய அரசுடனான தமிழக அரசின் மோதல் போக்கு காரணமாகச் சென்னை மத்திய ரயில் நிலையத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணை பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதன் மூலம் இது ஒரு அரசியல் விளையாட்டா என்ற சந்தேகம் பலர் மத்தியிலும் எழுந்துள்ளது.

தமிழக அரசை மிரட்டிப் பணிய வைக்க காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட சதியா இது என்று பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

தமிழகத்தில் பெருகி வரும் ஜெயலலிதா ஆதரவு அலையைச் சிதறடிப்பதற்காகக் கூட இது மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு இளம் பெண்ணின் உயிரைப் பலி கொண்டதுடன், 14 பேர் படுகாயம் அடைய காரணமான குண்டுவெடிப்பின் விசாரணையிலும் மாநில அரசின் செயல்பாட்டால் சிக்கல் எழுந்துள்ளது கூடுதல் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

### பயங்கரவாத தாக்குதலா?

இந்தச் சம்பவத்தைப் பயங்கரவாத தாக்குதலாகக் கருத மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இதனையடுத்து, தேசிய புலனாய்வு அமைப்பின் உதவியுடன் கையாள மத்திய அரசு நினைக்கிறது. ஆனால் தமிழக அரசோ, வெடி மருந்துச் சட்டத்தின் கீழ் கிரிமினல் வழக்காகவும், கொலை மற்றும் ரயில்வே பொருள்களைச் சேதப்படுத்திய குற்ற வழக்குகளாகவும் பதிவு செய்து விசாரிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த சட்டப் பிரிவுகளின் கீழே தமிழக பொலிசாரும் விசாரணையை தொடங்கிய இருப்பதுடன், சந்தேகத்திற்குரிய சிலரையும் கைது செய்துள்ளனர். அதிக திறனற்ற வெடி பொருள்களைப் பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வெளியான தகவலை அடுத்து இந்த முடிவு மேற்கொள் ளப்பட்டுள்ள தாகக் கூறப்படுகிறது. தேசிய புலனாய்ப்பு அமைப்பின் விசாரணை தேவையில்லை என மறுத் துள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதா, இது பயங்கரவாதத் தாக்குதல் அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

### கருணாநிதி குற்றச்சாட்டு

இதனால் தமிழக அரசு மற்றும் ஜெயலலிதாவைக் கடுமையாகச் சாடுவதற்கு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்த தி.மு.க தலைவர் கருணாநிதியும், தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீரழிந்து விட்டதாகவும், திருவல்லிக்கேணியில் பிடிபட்டவர்களிடம் சரியான முறையில் விசாரணை நடத்தி இருந்தால் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தடுத்திருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். இதனால் ஆபத்தான நிலையில் தமிழகத்தின் பாதுகாப்பும், மக்களின் பாதுகாப்பும் உள்ள சூழலில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மத்திய அரசின் உதவியை ஜெயலலிதா மறுத்துள் ளதும், அதனைப் பயன்படுத்தி கருணாநிதி தமிழக அரசின் நடவடிக்கைகளை விமர்சித்துள்ளதும் மக்கள் மனதில் அச்சத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்துவதாக உள்ளது. இந்த அரசியல் விளையாட்டுக்கு அப்பாவி பொதுமக்களின் உயிர்கள் பணயம் வைக்கப்படுகின்றன என்று கருதப்படுகிறது.

### குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணை

குண்டுவெடிப்பு நடைபெற்ற சில மணி நேரத்திலேயே சம்பவம் தொடர்பான விசாரணை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டது. இது குறித்து தெரிவித்த குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், பொங்களூரைச் சேர்ந்த அமைப்புக்களே இதன் பின்னணியில் இருப்பதாக நாங்கள் சந்தேகிக்கிறோம்: வெடிகுண்டு பெங்களூரில் தான் வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். இதை பயங்கரவாத தாக்குதல் என கருதினாலும், கிரிமினல் வழக்காகவே பதிவு செய்து குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரித்து வருகிறது. பல்வேறு கோணங்களில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதாக தேர்தல் பிரிவு பொலிஸ் அதிகாரி அனுப் ஜெய்ஸ்வால் தெரிவித் துள்ளார்.

### மோடிக்கு குறியா?

பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் மோடிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இந்த குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. குண்டு வெடித்த வேளையில் ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் மோடி பிரசாரம் செய்தார். அங்கு நடக்கும் நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த ரயில் குண்டூரை போய்ச்சேரும் போது வெடிக்க திட்டமிட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இதற்காக, நேரக் கணிப்புக் கருவி பொருத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிசார் தரப்பில் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால், எதிர்பாராத வகையில், குறிப்பிட்ட ரயில் ஒரு மணி நேரம் தாமதமாகச் சென்னை சென்று சேர்ந்துள்ளது. இது சரியான நேரத்துக்குச் சென்றிருந்தால், காலை 7 மணியளவில் ஆந்திர மாநிலம், குண்டூரை போய்ச்சேர்ந்திருக்கும். அப்போது அங்கே குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டிருக்கும். இதுபோன்று, பல கோணங்களில் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த குண்டு பெங்களூரில் இருந்து ரயில் புறப்பட்டபோது, வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

### மோடிக்கு கூடுதல் பாதுகாப்பு

இரட்டைக் குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மோடி ஆந்திரா வருவதை அடுத்து அவருக்கு எசசரிக்கை விடுப்பதற்காகவும் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தகவல்கள் வெளியானது.

### ராமதாஸ் கோரிக்கை

சென்னை மத்திய ரயில் நிலைய குண்டு வெடிப்பு சம்பவம் தமிழக மக்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகக் கைது செய்து மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். குண்டுவெடிப்பின் பின்னணி தெரியாத நிலையில் அது குறித்து கருத்து தெரிவிப்பது முறையாக இருக்காது. ஆனால், பாகிஸ்தான் உளவு அமைப்பின் முகவராக செயல்பட்ட இலங்கையைச் சேர்ந்த பயங்கரவாதி கைது செய்யப்பட்டதாகவும், இதைத் தொடர்ந்து சென்னை உட்பட தமிழகம் முழுவதும் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் அறிவித்த 24 மணி நேரத்திலேயே இப்படி ஒரு தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதும், இந்த தாக்குதலில் சம்பந்தப்பட்ட தீவிரவாதி வெடிகுண்டுடன் ரயில் நிலை யத்துக்குள் நுழையும் அளவுக்குப் பாதுகாப்பு மிக மோசமாக இருந்திருப்பதும் தமிழ்நாட்டு மக்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக கைது செய்து மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

### சென்னையில் ஒத்திகையா?

கட்ந்த சில தினங்களாகவே, கடல் வழியாகப் பயங்கரவாதிகள் ஊடுருவி, தமிழகத்தில் தாக்குதல் நடத்தக்கூடும் என, மத்திய உளவுப் பிரிவு பொலிஸார் எச்சரித்திருந்ததனர். இதன் தொடர்ச்சியாக மத்திய ரயில் நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளதால் பயங்கரவாதிகள் சென்னையில் ஒத்திகை நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகமும் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது. தொடர் விசாரணையில் இந்தச் சந்தேகங்களுக்கு விடை கிடைக்கும் என நம்பப்படுகிறது.

### ரகசிய கமராவில் சிக்கிய 5 பேர்

சென்னை மத்திய ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த ஒன்பதாவது பிளாட்பாரத்தில் 5 கண்காணிப்புக் கமராக்கள் உள்ளன. இவற்றில் உள்ள பதிவுகளைப் பொலிசார் ஆய்வு செய்தனர். இதில் கவுகாத்தி எக்ஸ்பிரஸ் ரயில், ஒன்பதாவது பிளாட்பாரத்தில் காலை 7:05 மணிக்கு வந்து நிற்பது, அதில் இருந்து சிலர் இறங்குவது, சிலர் ஏறுவது போன்ற காட்சிகள் பதிவாகியிருந்தன. அப்போது, 35 வயது மதிக்கத்தக்க 5 பேர் தோளில் பைகளுடன் ரயிலுக்குள் செல்வது சிறிது நேரம் கழித்துப் பைகள் இல்லாமல் இறங்கிச் செல்வது தெரிந்துள்ளது. அதில் ஒருவர் ரயிலையே திரும்பி திரும்பிப் பார்த்து செல்வது போன்ற காட்சிகள். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில், ரயில் பெட்டியிலிருந்து கூச்சல், குழப்பம், புகை தெரிவது போன்ற காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. இந்தக் காட்சிகளை கண்ட பொலிசார், சம்பந்தப்பட்ட 5 பேரை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

### பயங்கரவாதிகள் சதியா?

சென்னை மண்ணடியில், மருந்து மற்றும் துணி வியாபாரி போல் பதுங்கியிருந்து, தீவிரவாதிகள் உதவியுடன், அமெரிக்கத் துணை தூதரகம் உள்ளிட்ட முக்கிய இடங்களைத் தகர்க்க உளவு பார்த்த, பாகிஸ்தான் உளவு அமைப்பான, ஐ.எஸ்.ஐ உளவாளி முகமது ஜாகீர் உசைனை இரண்டு நாள்களுக்கு முன் கியூ பிரிவு பொலிசார் கைது செய்தனர். தொடர்ந்து புதன்கிழமை இரவு தமிழக பொலிஸ் அதிகாரி அலுவலகத்தை தொடர்பு கொண்ட மர்ம நபர்கள், ஜாகீர் உசைனை நான்கு மணி நேரத்தில் விடுவிக்க வேண்டும். தவறினால், பேரிழப்பைச் சந்திக்க நேரிடும் என மிரட்டல் விடுத்துள்ளனர். இதனால் பொலிசார் உஷார்ப்படுத்தப்பட்டனர். இந்த மிரட்டலைத் தொடர்ந்து மத்திய ரயில் நிலையக் வெடிகுண்டு சம்பவம் நடந்துள்ளதால் ஐ.எஸ்.ஐ ஆதரவுப் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலாக இருக்குமோ என்ற சந்தேகம், பொலிசாருக்கு ஏற்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் இது குறித்து முன்னெடுக்கப்படும் விசாரணைகளிலேயே இதன்பின்னணிஎன்னஎன்பதுதெரியவரும்.



■ செந்தூரி



# தசை தின்னிகள்

வாரிஷ்.. வாரிஷ்" அம்மாவின் தட்டியெழுப்பும் குரல் கேட்டு திடுக்குற்று எழுந்து உட்கார்ந்து கொண்டேன். வானம் விழிந்து கொண்டிருந்த மென் புகார் பொழுதொன்றில் தூரத்துக் குன்று ஒன்றை நோக்கி என் கையைப் பிடித்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தாள் அம்மா. சரக்- சரக் என்ற முரட்டுச் செருப்புச் சத்தத்துடன் வந்த மருத்துவிச்சியை வரட்டுப் புன்னகையுடன் எதிர்கொண்ட அம்மாவின் முகத்தை ஆழ்ந்து கவனித்தேன். மறுமுனையில் சூனியக் காரியைப் போன்ற பொலிவுடன். தோற்பையொன்றை சுமந்திருந்த மருத்து விச்சியின் இருண்ட முகத்தில் எப்பதிலு மில்லை.

படுக்கை போல் நீண்டிருந்த பாறைத் துண்டொன்றைக் காட்டி அங்கே உட்காரக் கட்டளையிட்டாள். என்னைப் படுக்க வைத்து அம்மா என் தலைக்குப் பின்னால் உட்கார்ந்து என் தலையைத் தன் மடியில் இறுக்கிக் கொண்டாள். அசைய முயலாதபடி என் தோள்கள் மீது அம்மாவின் உறுதியான கால்கள் கொழுவி விழுந்து அழுத்தின. பறவை எச்சத்தின் மணமுடைய துர்நாற்றம் சகிக்கக் கூடியதான மரத்துண்டொன்று என் வாயில் துப்பி விட முடியாதபடி இறுகிச் சொருகப்பட்டது. "இறுக்கமாகக் கடித்துக் கொள் - அம்மாவைப் பார்- என்னைப் போல் தைரியமாக இருந்தால், சீக்கிரமே முடிந்துவிடும்" தீர்க்கமானதும் சற்றே கலங்கியதுமான அம்மாவின் கண்கள், நீர் வழிந்தோடும் என் கண்களை சந்திக்கச் சிரமப்பட்டதாகத் தெரிந்தது.

தனது பைக்குள் கைவிட்டுத் துளாவிய மருத்துவிச்சிக்கு அது கிடைத்து விட்டது. "ரேசர் பிளேட் ஒன்று !

ஓரங்கள் காய்ந்து . துருவின் நிறத்தில் கறை படிந்த பழுத்த இரும்புத்துண்டு "த்தூ, த்தூ.." பிளேட்டின் மீது எச்சில் துப்பினாள் மருத்துவிச்சி. அம்மா தன் கைகளால் என் கண்களைப் பொத்தி வைத்தாள். அடுத்த நொடி... சீறிப் பாயும் மரண வலியுடன் என் உலகம் இருண்டு கொண்டது.

" " k (WARIS DIRIE) - 1965 இல் சோமாலியாவில் பிறந்த பிரபல ஆபிரிக்க மொடல் அழகியின் இளமைக் காலம் கண்ணீரிலும், இரத்தத்திலும் ஊறிக் கிடந்த நாள்கள் அவை. தன் தேசத்தில், தன் சொந்த மக்களால், சொந்தப் பாரம்பரியத்தால் கொடுமைகளை அனுபவித்த பெண், உலகத்தின் தகவல் சொல்லிகளுக்கு உண்மை திறந்த போது உயிர்ப்புள்ள சகல பெண்ணுடல்களும் நடுங்கிக் கொண்டன ஒருமுறையேனும்.

சோமாலியா உள்ளிட்ட பழங்குடி ஆபிரிக்க மக்களிடையே மரபுரிமையாகக் காப்பாற்றப் படும் சடங்கு இது. "பெண் உறுப்பு சிதைப்பு' - நரம்புக் குவியமுடைய "கிளிட்டோரியஸ்" பகுதியை வெட்டியகற்றி, சிறுநீர் கழிப்பதற்காக சிறு வழியொன்றை வைத்து எஞ்சிய பாகங்களை தைத்து விடுவதன் மூலம் திருமணத்தின் முன் பெண்களின் கன்னித் தன்மை பாதுகாக்கப்படுவதாக நாட்டப்படுகின்றது. 1999 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 13 கோடி பெண்கள், ஆபிரிக்க தேசங்கள் உட்பட உலகெங்கும் இந்தக் கொடுமைக்கு ஆளாகியிருக்கின்றனர். இன்றும் 28 ஆபிரிக்க நாடுகள் இந்த வழக்கத்தை, சட்ட விரோதமாக கைக் கொண்டு வருகின்றன.

வாரிஷின் நெருக்கமான நண்பிகள் கூட தெரிந்திராத உண்மையை அன்று தான் உலகம் இருள் விலக்கிக் கொண்டது. உலகின் முன்னணி பெஷன் பத்திரிகையான மேரி க்ளேய்ரின் நிருபர் "லாரா ஸிவ்", பேட்டியின் முழுமையும் கண்ணீர் விட்டுக் கதறாத இடங்கள் வெகு குறைவு. ஐ.நாடுகளின், பெண் உறுப்பு சிதைத்தலுக்கு எதிரான இயக்கத்தின் சிறப்புத் தூதுவரான வாரிஷ் டிரீ (WARIS DIRIE) , இந்தப் பூமியின் ஆண் மகன்கள் யாவரையும் தலைகுனிய வைக்கும் செய்தியை விட்டுச் சென்றார்.

"இச்சையின் மீதான கட்டுப்பாடென்பது. ஆண் மனத்தின் தன்னடக்கத்தினால் மட்டுமே உருவாக்கப் படக் கூடியது. பெண்ணின் பிறப்புறுப்பு தைக்கப் படுவதனால் அவள் கன்னித்தன்மையுடையவள் என்று நிரூபிப்பதாயின் , கோழைகளே உங்கள் வம்சம் இன்றே காலடியில் அடுத்த வாரிசில்லாமல் கருகிப் போகட்டும். " ஒரு வழியாக அம்மாவின் விரல்களிலிருந்து என் கண்களை விடுவித்துக் கொண்டு பார்க்கின்றேன். வெளிச்சத்துக்கு கூசிப். பின் திறந்த இமைகளின் வழியே மருத்து விச்சியின் அருகே குவியலாகக் கிடக்கின்றன. ஆக்கேஷியா மரத்தின் வறள் முள்கள். கிழவி யின் கைகள் முழுக்க சூடான என் இரத்தம். ஆக்கேஷியா முள்களை ஒவ்வொன்றாகக் குத்திய தொடராக கடினமான வெள்ளைப் பழுப்பு நூல் கொண்டு தைத்திருக்கிறாள். என் கன்னித் தன்மையும், இனத்தின் கௌரவமும் காப்பாற்றப்பட்ட பாறையின் மீது பலி மிருகமொன்றை வெட்டிய அடையாளமாக சகதியாக நிறைந்திருந்தது குருதி. இதை விட நான் செத்துப் போயிருக்கலாம்."

ஓரங்கள் காய்ந்து . துருவின் நிறத்தில் கறை படிந்த பழுத்த இரும்புத்துண்டு "த்தூ, த்தூ.." பிளேட்டின் மீது எச்சில் துப்பினாள் மருத்துவிச்சி. அம்மா தன் கைகளால் என் கண்களைப் பொத்தி வைத்தாள். அடுத்த நொடி... சீறிப் பாயும் மரண வலியுடன் என் உலகம் இருண்டு கொண்டது.

வாரிஷ் தன் வார்த்தைகளைத் தொடர்கிறார். நிருபரின் கைக்குட்டைக்கும் வேலை தொடர்கிறது. வாசித்துக் கொண்டிருக்கும் நான் உள்ளிட்ட எம் அனைவருக்கும் மறுமுறையும் குலுங்கியபடி உடல் நடுங்கிக் கொள்கின்றது. பெண்ணுடலின் மீது விதிக்கப்பட்ட வன் கொடுமைக்கு எதிராக எதையுமே முன்னெடுக்கத் திராணியற்றவளாய் வீட்டை விட்டு, ஊரை விட்டு, நாட்டை விட்டு ஐரோப்பாவுக்கு தப்பியோடிய வாரிஷ், இனிமை மட்டுமே நிறைந்த தன் பால்யத்தை ஒரேயொரு வார்த்தை கொண்டு விவரிக்கின்றார்.

"பகலில் ஆடு மேய்ப்பவர்களான நாங்கள் வீடு வந்ததும், இரவில் நட்சத்திரங்களின் கீழ் குழந்தைகளெல்லாம் ஒன்றாகப் படுப்போம். எங்களுக்குப் பாதுகாப்பாக அப்பா இருப்பார்."

பேட்டி வெளி வந்ததும், கிடைத்த பல்வேறு அழைப்புகளில் மேலானதாக ஐ.நாடுகளின் சிறப்பு அரங்கில், கண்ணீர் மல்கியிருந்த பார்வையாளர்கள் மத்தியில் மென்மையும் உறுதியானதுமான குரல் கொண்டு பேசினார் வாரிஷ் டிரீ. "... நான் பிழைத்து விட்டேன். ஆனால் லட்சக் கணக்கான என் சகோதரிகள்? அறுவையின் போது சிலர்- அறுவைக்குப் பின் தொற்று ஏற்பட்டு சிலர் - அப்படியே பிழைத் தாலும் குழந்தைப் பேற்றின் போது சிலர் என அடுக்கடுக்காய் செத்துப்போகிறார்களே ! அவர்களை யார் காப்பாற்றுவது? மதவாதிகளால், அடிப்படை இனவாதிகளால் என் உயிருக்கு ஆபத்து என்று நண்பர்கள் அஞ்சுகிறார்கள். இருக்கட்டும். அதைப் பற்றி கவலைப் படநேரமில்லை இப்போது. பெண்மையைப் பாதுகாக்க இப்படியொரு அறுவையைப் பற்றி குர்- ஆனில் எங்காவது கூறப்பட்டி ருக்கிறதா சொல்லுங்கள்.?"

பதிலளிக்கும் சுதந்திரம் பறிக்கப் பட்ட கேள்விகளை ஆண் மக்களின் மேல் உதட்டு உரோமத்தை நோக்கி வீசியெறிந்த "வாரிஷ்" தன்னினத்தின் ஆகச் சிறு பெண்ணின் மீதான உலகின் கவனத்தை திருப்புவதற்காக பயன் படுத்திக் கொண்டாள். சோமாலியாவின் சிறுமிகளில் ஆகக் குறைந்தது ஒருத்தியாவது அந்தப் "பலிப்பாறை"யிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கு இந்த எத்தனம் நிச்சயம் உதவியிருக்கும்.

ஐக்கிய நாடுகளின் மனித அபிவிருத்தி மையத்தின் சார்பில் பாலியல் வன்முறைகள் தொடர்பிலான ஐ.நா.சிறப்புத் தூதுவர் "சாய்னா ஹாவா பங்கூரா" வெளியிட்டுள்ள கறுப்புப் பட்டியல் இந்த வாரத்தின் முதன்மையான பேசு பொருள். போர்ச் சூழலிலும், சமூக அடக்குமுறைத் தேவைகளிலும் வன்புணர்வு மற்றும் பெண்ணுடல்கள் மீதான வன்கொடுமைகளை ஆயுதமாகப் பயன்படுத்திய மற்றும் பயன்படுத்தி வருகின்ற கோரத் தேசங்களின் வரிசையில் இலங்கையும் உள்ளடக்கம். அதே பட்டியலில் இலங்கையுடன் சேர்ந்து "வாரிஷி"ன் சோமாலியா உள்ளிட்ட 6 ஆபிரிக்க நாடுகளும் ! கற்கால மனிதர்களை விடத் தரமிறங்கி, சிறுபான்மையினப் பெண்களின் உயிருடனும், உயிரற்றதுமான உடல்கள் மீது சொற்களில் அடங்காத கொடுமைகளை ஏவிய பேரினவாதமும், ஆட்சியாளர்களின் கைக் கருவியான இராணுவமும் இன்று வரையிலும், பொறுப்புக் கூற வேண்டிய பொறிமுறையொன்றுக்குள் தள்ளப்படவோ, கேள்விக் குள்ளாக்கப்படவோ இல்லை. போர்க் கால வன்புணர்வுகள், வன்கொடுமைகள், உடல்களின் மீதான இழிபாவனைகள், அநாகரிகப் பதிவுகளிலும் மேம்பட்டதாக, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு காலப் பகுதியிலும் இலங்கையில் பெண்ணுடல்கள் மீதான மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்வதாக ஜெனீவாவைத் தலைமைப் பீடமாகக் கொண்ட ஐ.நாடுகள் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. ஆனால், பாதிக்கப்பட்ட தரப்புகளின் "சுட்டு விரல்களுக்கு" தட்டிக் கேட்கும் தைரியம்? ஹூம்ம் !!

இந்தப் பந்தியின் வாசிப்புச் சாலையில் என்னோடு கூட நடந்தவர்களே ! நீங்கள் என்னை மன்னித்தாக வேண்டும். தணிக்கைக் குழுவுக்குக் கூட தப்பிப் பிழைக்க இயலாத சில காட்சிகளை சொற்களாக்கி உங்கள் முன் படையலிட்டதுக்காக ! கருத்தடை மாத்திரை விளம்பரங்கள் தொலைக்காட்சியில் வந்தாலே கண்ணிமைக்கும் வேகத்தில் "ரிமோட்" கைமாறி அலைவரிசையை மாற்றி வைக்கும் பக்குவமான கலாசாரக் கோப்புடைய நாம் தமிழர்கள். பேசக் கூச்சப்படுகின்றதாகவுள்ள விடயமொன்றில் எம்மை நோக்கி வீசப்பட்டுள்ள கூரம்பை எங்ஙனம் சமாளிக்கப் போகின்றோம்? உதாரணங்களை வரவேற்பறையில் கண்டு நெஞ்சம் புழுங்கும் சந்தர்ப்பங்கள் உங்களுக்கும் வாய்க்கக்கூடும். பாரம்பரியமிக்க பாரதத்தின் இளவரசியொருத்தி ஐந்து ஆண்களை - ஐந்து அரசர்களை திருமணம் செய்து கொள்வதை பெருமையுடன் சொல்லும் விஜய் ரீ.வியின் மகாபாரதத்தை இடைவேளையிலும் கண் கொட்டாது ரசிக்கும் தங்கையும், அடுத்தவன்

மனைவி மேல் கொண்ட காரணமற்ற காமத்தை காதல் என்று நியாயப்படுத்துகின்ற சன் ரீ.வி சின்னத்திரைத் தொடர்களை வியங்கோள் கண்ணீருடன் சுகிக்கின்ற அம்மாவும் உங்களுக்கும் இருக்கின்றனர். சத்தமின்றி எமக்கிடையில் விநியோகிக்கப்படுகின்ற பெண்களுக்கெதிரான வன்முறைகளையும், அவற்றின் ஏதுக்களையும் சந்தேகிக்க வேணும் நேரம் ஒதுக்கிட முடியாதளவு வேலைப்பளுவுடைய எமது சமகாலக் கலாசாரமும், பண்பாடும் இன்று தொடங்கி வருகின்ற எதிர்காலம் முழுமையும் பெண் வன்கொடுமைகளுக்கு எதிராக குரலெழுப்பத் தகுதியானவர்களாக நாளைய பெண்களை வளர்க்க எத்தனிக்கின்றோமா?

கோணேஸ்வரி, ரஜனி வரிசையில் எம்மால் நன்கு தெரியப்பட்டவளான கிருஷாந்தி குமாரசுவாமி, நாவற்குழி இராணுவக் காவலரணில் தினமும் முகம் காணுகின்ற சிப்பாயொருவனிடம்- தன் பள்ளித் தோழியின் அநியாய மரணத்துக்கு நியாயம் கேட்டு கோபக்குரல் காட்டிச் சினந்து ஏசியிருந்தாள் என்பது எமக்குத் தெரியுமா? இராணுவக் கவச வாகனத்தினால் மோதிக் கொல்லப்பட்ட, சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் உயர்தரவகுப்பு மாணவி ஞானந்தி கணநாதனின் மரண வீட்டுக்குச் சென்று திரும்பிய வழியில், கிளம்பிய கிருஷாந்தியின் நீதிக்குரல் தான், அவளை நிரந்தரமாக செம்மணிக்குள் ஆழ்த்தியிருந்தது. தமிழ்ப் பெண்கள் மீதான சிங்களத்தின் பாலியல் வன்கொடுமைகளுக்கான சுட்டத் தக்க காலப் புள்ளியாக, பள்ளிச் சீருடையுடன் குருதியும் வலியும் கலந்து பிரபஞ்சத்தினுள் கரைந்து போனாள் அந்தத் தங்கை!


சதுப்பு நிலமொன்றில், எழுந்து நடக்கச் சக்தியில்லாதவளாக உட்கார்ந்து விட்டவளின் இடுப்புக்கு மேல் ஆடைகள் எவையுமே இல்லை. சுற்றியும் வக்கிரம் துப்பும் ஆயுததாரிகளான ஆண்கள் முன்னிலையில் வர மறுக்கும் அவளுக்கு தூய வெண் ஆடை போலும் மறைப்புத் துணி போர்க்கப்பட்டு இழுத்து வரப்படுகையில் பரிமாறப்படும் குரல்களுக்கு முன்பாக நடந்தவையும், பின்பாக நடந்தவையும் ஊகிக்க இலகுவானதாகவும், ஜீரணிக்கக் கடினமானவையாகவும்? "பிரபாகே துவ?" (பிரபாவின் மகள்) அகன்ற துடிப்பான விழிகளையுடைய தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் சிறப்பான தமிழ் உச்சரிப்புடையவளும், அழகான நடிப்பாற்றல் படைப்புடையவளுமான இசைப்பிரியாவின் சுரத்தில்லாத குரலில் இறைஞ்சுகின்ற தொனியில் வருகின்ற பதில் நெஞ்சைப் பிழிகின்றது. "ஐயோ! அது நானில்லை.."

அதே வெள்ளைத் துணி அலங்கோலமாக பாதி போர்க்கப்பட்ட மூக்குத் துவாரங்களூடாக இரத்தக் கோடுகள் வழிந்த படி இசைப்பிரியாவின் வெற்றுடல் உலகத்தின் நீதிக் கதவுகளையும் பலமாகத் தட்டியது. திறக்கப்படாதவைகளில் சர்வதேசத்தின் சட்டத் திரைகளும் இசைப்பிரியாவின் இனத்தின் விழிப்புணர்வும் அடக்கம்! இன்னமும் பெயர் தெரியாத ஆயிரக் கணக்கான பெண்கள் சீருடைகளுடனும், சாதாரண ஆடைகளுடனும் வன்கொடுமையின் பசித்த வாயில் வீழ்த்தப்பட்டு சக்கையாக உமிழப்பட்டனர். புனர்வாழ்வின் பின்னர் சமூகத்தினுள் இணைப்புச் செய்யப்பட்ட போராளிகள், முன்னாள் போராளிகளின் துணைவியர், போராளிக் குடும்பங்களின் சிறு பெண் குழந்தைகள் என வயது பேதமின்றி ஆளுமினத்தின் பால் நிலை சார் வன்முறைகளுக்கு பலியாகுகின்ற சோகம் தொடர்கின்றது.

"உடலமைப்பில் ஆணொருவன் பெண்ணை விட பலமானவனாக படைக்கப்பட்டமையானது, பெண்ணின் பாதுகாப்புக்கான உருவாக்கியல் ஏற்பாடேயொழிய, பலாத்காரத்துக்கான முனைப்பல்ல". இந்தியத் தலைநகர் டில்லியில் வன்புணர்வின் பின், ஓடும் பஸ்ஸிலிருந்து வீசப்பட்டு மரணித்த மருத்துவ மாணவியும், அயல் வளவுக் காணியின் கிணற்றில் அடுத்த நாள் பிணமாகக் கண்டெடுக்கப்பட்ட குருநகர் யுவதியும் தங்களது இறுதித் தருணங்களில் சொல்ல முயற்சித்த வார்த்தைகளுக்கு மொழி வேறாயினும், பொருள் ஒன்றே! "ஆண்கள் அற்ற உலகம் கொடு இறைவா". பெண்மையின் நாற்குணங்களில் ஒன்றையேனும் எஞ்சவிடாமல் 'வினாத் தொடுக்கின்ற நீதிமன்றங்கள், சாவுகளைக் கேள்வி கேட்பதாக எண்ணி, பலரை உயிருடன் கொன்றிருக்கின்றன.

மூட நம்பிக்கைகளுக்காக, அடக்குமுறை அடையாளமாக, குடும்ப மேலாண்மை நிலை நாட்டலுக்காக, சமூகப் பழிவாங்கலுக்காக, இனவொடுக்கலுக்காக, பண்பாட்டுச் சிதைப்புக்காக பெண்ணுடல் மீதான வன்கொடுமைகளை ஆயுதமாகப் பாவிக்கும் உலகியலின் இழிவெண்ணத்தை பழித்துரைக்கவும், அதியுச்ச தண்டனைக்குள்ளாக்கும்படி கேள்வி கேட்கவும் கனிந்துள்ளது காலம். வேகமாக வளர்ந்த தொழில்நுட்பத் தொடர்பாடல் வசதிகளோடு சேர்ந்து வளர்ந்த பாலியல் வன்கொடுமைகளின் பல்வேறு முகங்களுக்கு எதிராகவும், உலகின் சர்வ கோணங்களிலிருந்தும் எதிர்ப்பலைகள் வீரியம் கொண்டுள்ளன. அடக்கியாளத் துடிக்கின்ற பேரினத்தின் தாக்குதல் உபாயங்களில் முதன்மையானதாக, சிறுபான்மையினப் பெண்களின் மீதான வன்கொடுமைகள் இன்றும் பாவிக்கப்படுவதை வேறு யாருமே சொல்லித் தெரிவதற்கு முன்பாக நன்கறிந்தவர்கள், ஈழத் தமிழர்களாகிய நாம் மட்டுமே!

புரட்சியென்கின்ற மாற்றத்தின் தேவைக்காக சேகுவேராவை படித்தும், பிரபாகரனை பார்த்தும் வளர்ந்தவர்கள். பெண்-வன் கொடுமைகளுக்காக கரம் ஓங்கிய "வாரிஷ் டிரி' உள்ளிட்ட பலரைப் படித்தவர்கள், வெகு விரைவாக உள்ளூர் கண்ணிரேந்திகளின் தேவதையொருத்தியைப் பார்த்தேயாக வேண்டாமா? ஆளரவமற்ற இருட்டுக் கூடத்தின் சகல சுவர்களிலும் எதிரொலித்துக் கூட வரும் அசரீரியாக தொக்கி நிற்கும் அந்தக் குரல், "... ஆனால், லட்சக் கணக்கான என் சகோதரிகள்?"



**"உடலமைப்பில் ஆணொருவன் பெண்ணைவிட பலமானவனாக படைக்கப்பட்டமையானது, பெண்ணின் பாதுகாப்புக்கான உருவாக்கியல் ஏற்பாடே யொழிய, பலாத்காரத்துக்கான முனைப்பல்ல".**

# விண்ணில் இருந்து ஒரு படம்

■ கனிமொழி

தன்னைத்தானே புகைப்படம் எடுத்து வெளியிட்டுக் கொள்ளும் சுயபட (செல்ஃபீ) கலாசாரத்தை நீங்கள் விரும்பினாலும் சரி வெறுத்தாலும் சரி, ஸ்டீவ் ஸ்வான்சனின் சுயபடத்தை நிச்சயம் வியந்து பாராட்டுவீர்கள். ஏனெனில், இது வழக்கமான சுயபடம் அல்ல; சாதனை சுயபடம்! ஆம்! விண்வெளியில் இருந்து இன்ஸ்டா கிராம் செய்யப்பட்டுள்ள முதல் ஒளிப்படம் இது. அமெரிக்க விண்வெளி வீரரான ஸ்டீன் ஸ்வான்சன் விண்வெளியில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் (ஐ.எஸ்.எஸ்) தங்கியிருக்கிறார். விண்வெளி ஆய்வு மைத்தில் இருந்துதான் அவர் தன்னை புகைப்படம் எடுத்து அதை இன்ஸ்டகிராம் புகைப்பட பகிர்வு சேவை மூலம் வெளியிட்டுள்ளார்.

ஏப்ரல் 7ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்தப் புகைப்படம் விண்வெளியில் இருந்து இன்ஸ்டாகிராமில் வெளியிடப்பட்ட முதல் புகைப்படம் எனும் சிறப்பை பெற்றிருக்கிறது. ஸ்டீவன்சன், விண்வெளி மையத்தில் மிதந்தபடி காட்சித் தரும் இந்தப் புகைப்படத்தை அவரே எடுத்து வெளியிட்டிருக்கிறார். அதாவது சுயபடமாக வெளியிட்டிருக்கிறார். ஐ.எஸ்.எஸ்ஸுக்கு (சர்வதேச விண்வெளிக் கப்பல்) திரும்பிவந்திருக்கிறேன். இங்குவாழ்க்கை நன்றாகஇருக்கிறதுஎனும்புகைப்படகுறிப்பையும் அதனுடன் இணைத்திருக்கிறார். ஸ்வான்சன் புன்னகைத்துக்கொண்டிருக்கும் இந்தப் புகைப்படம் விண்வெளி மையத்தில் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் வகையில் இருக்கிறது. அதனால் உற்சாகம் அளிக்கிறது. இன்ஸ்டாகிராம் ஒளிப்படப் பகிர்வு சேவை மிகவும் பிரபலமாக இருக்கிறது. இன்ஸ்டாகிராமில் நட்சத்திரங்கள் முதல் சாமானியர்கள் வரை பல தரப்பினரும் இருக்கின்றனர். இன்ஸ்டாகிராமில் லட்சக்கணக்கில் புகைப்படங்கள் பகிரப்பட்டு பார்த்து ரசிக்கப்படுகின்றன. இருந்தாலும்கூட விண்வெளியில் இருந்து இன்ஸ்டாகிராமில் புகைப்படம் வெளியிடப்பட்டிருப்பது இதுவே முதல்முறை.

ஏற்கெனவே விண்வெளியில் இருந்து ட்விட்டர் செய்தி பகிரப்பட்டது உங்களில் பலருக்கு நினைவிருக்கலாம். நாசாவின் மைக் மாசிமொனோ (Mike Massimino) எனும் விண்வெளி வீரர் கடந்த 2009 ஆம் ஆண்டு விண்வெளியில் இருந்து முதல் ட்விட்டர் செய்தியை வெளியிட்டார்.

இப்போது ஸ்வான்சன் விண்வெளியில் இருந்து சமூக ஊடக உலகிற்கு அடுத்த பாய்ச்சலை இன்ஸ்டாகிராம் படம் மூலம் செய்திருக்கிறார். இன்ஸ்டாகிராமில் சர்வதேச விண்வெளி மையத்திற்காக அமைக்கப்பட்டுள்ள கணக்கு மூலம் இந்த புகைப்படத்தை வெளியிட்டுள்ளார். அவரும் ரஷ்யாவைச் சேர்ந்த சக விண்வெளி வீரர்கள் இருவருமாகச் சேர்ந்து கடந்த ஜனவரியில் இன்ஸ்டாகிராம் கணக்கை ஆரம்பித்தனர். விண்வெளிப் பயணத்திற்கு தயாராகும் புகைப்படங்களை அதில் பகிர்ந்து வந்தனர். இப்போது விண்வெளியில் இருந்தே படம் வந்து விழுந்துள்ளது.



ஸ்வான்சன் மேலும் சில புகைப்படங்களையும் விண்ணில் இருந்து வெளியிட்டிருக்கிறார். தொடர்ந்து அவரிடம் இருந்து விண்வெளி புகைப்படங்களை எதிர்பார்க்கலாம். விண்வெளி வீரர்களின் புகைப்படத்தை பார்த்து ரசிப்பது விஞ்ஞான ஆர்வலர்களுக்கு நிச்சயம் மகிழ்ச்சியானது. அப்படி இருக்க வீரர்கள் விண்வெளியில் இருக்கும் காட்சியை அங்கிருந்தே பார்க்க முடிவது நிச்சயம் வியப்பானதுதான்.

விண்வெளி வீரர்களுக்கு இந்த இன்ஸ்டாகிராம் பழக்கம் தேவையா என்று கேட்க நினைக்கலாம். ஆனால், விண்வெளி ஆய்வு தொடர்பான தகவல்களை பொதுமக்களுடன் பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு விண்வெளி ஆய்வில் விருப்பத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகத்தை பயன்படுத்தும் பரவலான முயற்சியின் ஓர் அங்கமாகவே இது அமைந்துள்ளது.

சமூக ஊடகம் வாயிலாக மக்களுடன் விண்வெளி ஆய்வு பற்றிய விவரங்களைப் பகிர்ந்து கொள்வதில் அமெரிக்க விண்வெளி ஆய்வுக் கழகமான 'நாசா' தீவிரமாக உள்ளது.

ஸ்வான்சன் இன்ஸ்டாகிராம் மூலம் வெளியிட்டுள்ள புகைப்படம் இணைய வாசிகள் மத்தியிலும் பரவலான வரவேற்பை பெற்றுள்ளது. 8000 பேருக்கு மேல் அந்தப் புகைப்படத்தை லைக் செய்துள்ளனர். பலர் பின்னூட்டம் வாயிலாக கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

அதில், சிலர் தாங்களும் விண்வெளி வீரராக வேண்டும் எனும் விருப்பத்தை தெரிவித்துள்ளனர். இத்தகைய ஆர்வத்தை ஏற்படுத்துவதுதானே இந்த முயற்சியின் நோக்கம்.

# அண்ணனை காப்பாற்ற எலும்பு மச்சை வழங்கும் 3 வயது தம்பி

■ ரம்யன்

அந்தச் சின்னப் பையனுக்கு வயது 7 ஆகின்றது. இந்த வயதிலேயே கடுமையான புற்று நோயால் பாதிக்கப்பட்டு விட்ட அவனுக்கு ஒரு தடவை அறுவை சிகிச்சையளிக்கப்பட்டு தப்பி விட்டான். இது 4 வயதாய் இருந்தபோது. அதற்கு முன் மூளை மற்றும் தண்டுவளத்தை பாதிக்கும் மெனிங்கிட்டிஸ் (Meningitis) என்ற கடும் வியாதி பாதிப்பிலிருந்தும் தப்பியிருந்தான்.

ஆனால் தற்பொழுது சமீப காலத்தில் ஒரு வழமையான உடல் நிலை ஆய்வின்போது லியுக்கோமியா (Leukaemia) எனும் புற்றுநோய் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் இந்த நோய்க்கு பிரித்தானியாவில் எலும்பு மச்சை மீள் ஊட்டல் செய்யும் சிகிச்சையைத் தவிர வேறு வைத்தியம் கிடையாது. எலும்பு மச்சையும் பொருந்தும் வகையாக இருக்க வேண்டும். கென்ஸி அட்கின்சன் என்ற அந்தப் பையனின் மூன்று வயது தம்பி சேஸ் தனது உடம்பிலிருந்து தமையனைக் காப்பாற்றுவதற்கு எலும்பு மச்சையை வழங்க ஒப்புக் கொண்டிருக்கிறான்.

சேஸின் உடம்பிலிருந்து எலும்பு மச்சையை எடுத்து கென்ஸிக்கு செலுத்தப்படவிருக்கிறது. அதன்பிறகு கென்ஸியின் உடம்பில் வெள்ளை அணுக்கள் உருவாகும். அதன் மூலம் அவன் உயிர் தப்ப முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதுவும் வெற்றியளிக்காவிடில் வேறு மருத்துவத்தைப் பெற்றோர் வெளிநாடுகளில்தான் தேடவேண்டியிருக்கும்.

அது இப்போது பிரிட்டனில் கிடையாது.

கென்ஸியின் தாயார் பிரிட்ஸ்டல் என்ற இடத்தை சேர்ந்த கொம்மா அட்கின்சன் (31) கூறுகையில் கென்ஸி மிகவும் தைரியசாலியாக இருந்துள்ளான். அவனுக்கு நான் எல்லாவற்றையும் விளங்கப்படுத்தியுள்ளேன் ஏனென்றால் அதை அறிந்துகொள்ள அவனுக்கு உரிமை உண்டு.

தனக்கு ஓர் அறுவைச் சிகிச்சை நடைபெறவிருப்பதாகவும் அது சரி வராவிட்டால் தான் தேவலோகத்துக்குப் போய் விடுவான் என்றும் அவன் தனது நண்பர்களிடம் கூறிக்கொண்டிருப்பதையும் கேட்டிருக்கின்றேன். ஏழு வயதுதான் ஆகிறது. இப்படியெல்லாம் அவன் பேசிக்கொண்டிருக்கக் கூடாது என்றார் தாயார்.

நான்கு வயதாய் இருக்கும்போது இந்த நோய் காணப்பட்டது. ஆனால் சிக்கலான மருத்துவ சிகிச்சைகளை அவன் துணிச்சலோடு தாங்கிக் கொண் டான். அதேவேளை மூளை மற்றும் தண்டுவளநோய் ஏற்பட்டு குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் ஒரு மாதம் இருந்தான்.



கென்ஸி அட்கின்சன் என்ற பையனின் மூன்று வயது தம்பி சேஸ்

> சேஸின் உடம்பிலிருந்து எலும்பு மச்சையை எடுத்து கென்ஸிக்கு செலுத்த இருக்கிறார்கள். அதன்பிறகு கென்ஸியின் உடம்பில் வெள்ளை அணுக்கள் உருவாகும். அதன் மூலம் அவன் உயிர் தப்ப முடியும்.

அவனுக்கு முதலில் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட போது நான் 5 வாரம் வயதான கைக் குழந்தையையும் பராமரிக்கும் நிலையில் இருந்தேன் என்றார் அட்கின்சன்.

இப்பொழுது நடைபெறவிருக்கும் எலும்பு மச்சை சிகிச்சை பயனளிக்காது போனால் பிரிட்டனில் வேறு எந்த சிகிச்சையும் கிடையாது என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். ஆனால் பீம் சிகிச்சை என்று ஒன்று இருப்பது பற்றி தாம் கேள்விப்பட்டிருப்பதாகவும் அது கென்ஸி போன்ற சிறுவர்களை குணமாக்கியிருப்பதாகக் கேள்விப்பட்டிருப்பதாகவும் அட்கிட்சன் கூறினார். அது பிரிட்டனில் இல்லை. அமெரிக்காவில். இந்த மருத்துவத்தின் பிரகாரம் நோயாளியின் உடலில் உயர் விளைவுகளை ஏற்படுத்தும் ஒட்சிசன் தோற்றுவிக்கப்படும். அது உடலில் ஏற்படும். புற்று நோய்க் கட்டிகளை அழித்துவிடுமாம். ஆனால் அதற்கு 10,000 பவுண் செலவாகும். கென்ஸிக்கு தம்பியின் எலும்பு மச்சை செலுத்தப்பட்டு சிகிச்சையளிப்பது வெற்றியளிக்காவிடில் அமெரிக்காவுக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டும். அதற்காக திருமதி அட்சிகிட்சனின் நண்பர்கள் இப்போதே நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

இன்னும் ஒரு மாதத்தில் கென்ஸிக்கு எலும்பு மச்சை செலுத்தும் சிகிச்சை நடைபெறவிருக்கிறது.



ஆசைபோட ஒருவிடயம்

123

## ஏன் ஓடுகிறார்கள்....?

மாலை மயங்கிடும் நேரத்திலே - ஊரில்
மாந்தர் ஓய்வு கொள் வேளையிலே
ஊரை விடுத்திவர் ஓடுகின்றார் - பெரும்
ஓசை கிளம்புதே. கேட்கலையோ?
வண்டி நிறையவே சாமான்கள் - மற்றும்
பெண்டிர் பிள்ளைகள் தாய்மார்கள்
முண்டியடித்துக் கொண்டோடுகிறார் - உயிர்
மூச்சு நிலைத்திட வேண்டுமென்றே
சூரியன் சென்று மறைந்து விட்டான் -வானில்
சோகத்திரை தோன்றும் காண்கிலையோ
காரிருள் மெல்ல இறங்கிவரும் - கூட
காற்றினில் வெடிச் சத்தம் கேட்டு வரும்
ஓட்டம் பிடித்திவர் ஓடுகிறார் - எங்கோ
ஒதுங்கி சில வேளை தங்கிடுவார்
ஆட்டம் பாட்டம் யாவும் ஓய்ந்த பின்னே - மீண்டும்
ஆரவாரமின்றி புறப்படுவார்.

சண்டை சச்சரவு வேண்டாமென்பார் - இங்கு
சாந்தி நிலைத்திட வேண்டுமென்பார்
குண்டை எறிந்து விளையாடுபவர் - அதை
கொண்டு தொலைந்தெங்கோ போகட்டுமே

நாடு நலம் பெற வேண்டுமெனில் - இங்கே
நல்லிணக்கம் அன்றோ வேண்டுவது
நல்லிணக்கம் தோன்ற வேண்டுமெனில் - அதை
நாடி உழைப்பவர் யார் உளரோ?

■ ரம்யன்



உங்களுடைய பொதுவான நடை, உடை, பாவனையின் பல்வேறு கோணங்களை வளர்க்க நேரத்தையும் இருப்பிலுள்ள வள ஆதாரங்களையும் செலவழிப்பது என்று பொருளாகும். உங்களிடம் உள்ள ஆடைகளின் எண்ணிக்கை. அங்க அசைவு, தோற்றப் பொலிவு, கை குலுக்கல், நடத்தை, உருவம் போன் றவை இவற்றுள் அடங்கும்.



# வசீகரிக்க அனைவரையும்



நடை, உடை, பாவனை என்பது ஒரு துறை சார்ந்த சொல் போலத் தோன்றும். துல்லியமாக அது என்ன என்பதைக் குறிப்பிட முடியாது. ஆனால் அது முதல் அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் தொடங்குகிறது. அவற்றின் அடிப்படையில் உங்களைப் பற்றி மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் கருத்துக்கள்.

1. பொருளாதார நிலைமை- பணக்காரர், ஏழை, வெற்றியாளர், சுமாரானவர்.
2. கல்வி ரீதியான நிலை- பட்டப்படிப்புப் படித்தவர், அடிப்படைக் கல்வி உடையவர், பாதியில் படிப்பை நிறுத்தியவர்.
3. நம்பகத்தன்மை- நேர்மையானவர், நம்பக் கூடியவர், ஓரளவுக்கு நம்பலாம்.
4. சமூக அந்தஸ்து- தரமானவர், பகட்டானவர், எல்லோருடனும் இனிமையாகப் பழகுபவர், வித்தியாசமானவர், தனிமை விரும்பி, உயர் நிலை அல்லது கீழ் நோக்கிச் செல்பவர்.
5. பண்பாடு, நாகரிக நிலை- அமைதியானவர், நம்பிக்கை உடையவர், கவலைப்படுபவர், எல்லோருடனும் பழகுபவர்.
6. மனப்பாங்கு- தாக்குபவர், நட்புறவோடு இருப்பவர், அலட்டிக் கொள்ளாமல் எளிதாகக் கருதுபவர், அவரை அறிவது கடினம்.

இத்தகைய தீர்ப்புக்கள் நொடிகளில் நடக்கக் கூடியவை. அதனால்தான் நடை, உடை, பாவனை என்பது மிகவும் முக்கியமானதாகிறது.

வேலைக்குத் தேர்வு செய்யும் முறை பற்றி ஒரு ஆய்வு கண்டுபிடித்திருப்பது உண்மையில் அந்தப் பணிக்குத் தேவையான தகுதிகள் என்பதைவிட நல்ல தோற்றப் பொலிவோடு இருப்பது என்பது சாதகமான முடிவுகளை உருவாக்குகிறது.

நடை, உடை, பாவனை என்ற இந்த முழுப் பிரச்சினையையும் பிசினஸ் அடிப்படையில் வைத்துப் பார்ப்போம். உங்களுடைய தோற்றம் மற்றும் நடத்தைக்காக எந்த அளவு முதலீடு செய்யத் தயாராக இருக்கிறீர்கள்? ஒரு சோப்புக் கட்டி அல்லது கார் போல் உங்களைத் தனிப்பட்ட முறையில் விளம்பரப்படுத்துவது ஒரு பழைய நடைமுறையாக இருக்கலாம். இருப்பினும் உங்களையே முதலீடு செய்வதற்கான உங்கள் விருப்பத்தையும் அதை நீங்கள் எப்படி வெளிப்படுத்துகிறீர்கள் என்பதையும் அறிவதற்கு இது ஒரு பயனுள்ள அளவாக இருக்கும்.

1. உங்களுடைய பிராண்டு (உங்கள் உருவம்- இமேஜ்) எவ்வளவு வலுவாக இருக்கிறது?
2. புதுப்பித்துக் கொள்ளவும் மேம்படுத்திக் கொள்ளவும் அதற்கு என்ன தேவைப்படுகிறது?
3. உங்கள் பிராண்டு தரத்தைப் பற்றி பேசுகிறதா?
4. அதன் மீது முதலீடு செய்யாமல் இருக்க உங்களால் முடியுமா?

நீங்கள் எதிர்பார்க்கின்ற பிராண்டு உருவத்தோடு உங்கள் தோற்றம் பொருந்திப் போகவில்லை என்றால் மாற்றம் என்பதில் முதலீடு செய்வதற்கான நேரம் வந்துவிட்டது என்று அர்த்தம். ஆனால் உங்களுடைய தோற்றத்தையும், தன்மையையும் முழுவதுமாக மாற்றிக் கொள்வது என்பது இதற்குப் பொருளல்ல. உங்களுடைய தனிப்பட்ட தாக்கத்தை மேம்படுத்துவது என்றால் உங்களுடைய பொதுவான நடை, உடை, பாவனையின் பல்வேறு கோணங்களை வளர்க்க நேரத்தையும் இருப்பிலுள்ள வள ஆதாரங்களையும் செலவழிப்பது என்று பொருளாகும். உங்களிடம் உள்ள ஆடைகளின் எண்ணிக்கை, அங்க அசைவு, தோற்றப் பொலிவு, கைகுலுக்கல், நடத்தை, உருவம் போன்றவை இவற்றுள் அடங்கும்.

### தங்கள் உடைகளைப் பற்றி சாதாரணமாக மக்கள் செய்யும் தவறுகள்

#### தவறு- 1

**குறைந்த விலையும் மகிழ்ச்சியும்**

உங்கள் தாக்கத்தின் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்று நீங்கள் தீர்மானித்தால், முக்கியமாக வணிக உலகில் தரமானவற்றை வாங்குவது நிச்சயமாக ஊதாரித்தனம் அல்ல. மாறாக அது ஒரு முதலீடு. குறைந்த விலை என்பது இறுதியில் அதிக விலை என்பதில் முடியும். அது உங்களைப் பற்றிய கருத்தைக் கெடுக்கிறது. தவிர எத்தனை முறை அந்த ஆடையை அணிகிறீர்கள் என்பதோடு அதனுடைய விலையை ஒப்பிடுதலையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

#### தவறு- 2

**புதிய பணியைஅலட்சியப்படுத்தல்**

சில புதிய பாணிகள், அதாவது ஸ்டைல்கள் அந்தக் காலக்கட்டத்துக்கு உங்களைப் பொருத்துகின்றன. ஆனால் உங்களுக்கு ஆபத்தை உண்டாக்கும் வகையில் அவற்றைப் புறக்கணிக்கிறீர்கள். எனக்கு நவநாகரிகமாக உடை அணிவதில் ஆர்வம் இல்லை என்பதை நீங்கள் சொல்லக் கூடாது. ஏனெனில் அதைப் பற்றி நீங்கள் அக்கறை கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் உங்களைப் பார்ப்பவர்களுக்கு அந்த அக்கறை உண்டு.

நவநாகரிகம் குழப்புகிறது. மாறுதலுக்குரியது. ஆனால் நீங்கள் நினைப்பதைவிட குறைவான அளவில் நியாயமற்றதாக இக்காலத்தில் எல்லா நவநாகரிக பாணிகளும் இருக்கின்றன. இவை மிக விரைவில் மாறுகின்றன. அதனால் முரண்பாடாக இருந்தாலும், நாகரிக மாறுதல்களுக்கு இடம் கொடாத மரபுவழி தோற்றம் அளிக்கும் உடைகளில் முதலீடு செய்வது மிகச் சரியான தீர்வு. இவ்வகை பாணி முதுமை அடைவதில்லை. குறுகிய காலக் கண்ணோட்டத்தில் மரபுவழி உடைகள், விலை உயர்ந்ததாகத் தோன்றினாலும் நீண்டகால அடிப்படையில் பார்க்கும்போது கணிசமான அளவு அவை உங்களுக்குத் திரும்பக் கொடுக்கின்றன.

(தொடரும்)

## அந்தக் கிளிகள்

அதோ..! அந்தக் கிளிகள்..
இச்சையின்னைத் தூண்டிவிடும்
பச்சை நிறக் கிளிகள்..
கழுத்து ஆரமதன் கண்கவர்
அழகதனை, எழுத்தினில் இயம்பிட
எம்மால் இயலாது..
செம்பவளச் சொண்டினால்
செம்பழங்களையும் கோதுகின்றன..
தத்தி உலவி, ஏதேதோ
தம்பாட்டில் மிழற்றுகின்றன...
"சொன்னால் அதனைத் திருப்பியே
சொல்லுமிது" என்பதற்காக,
பொன்னால் ஆன கூண்டு எனினும்
பிடித்து அதிலடைப்பது வன்முறை..
முன்னால் நின்று முகமன் செய்யினும்
மொத்தத்தில் அவற்றிற்கது முழுச் சிறை..
ஆதலால் பிள்ளைகளே..! அவற்றின்
கொள்ளை அழகினில் குதூகலியுங்கள்..
கிள்ளை மொழி கேட்டுக் கிளர்வுறுங்கள்..
அவ்வளவே..! அந்தக் கிளிகளாவது,
சுதந்திரப் பறவைகளாக,
சுற்றித் திரிந்திடட்டும் !



செல்வி ஏழுமலை மதுரா,
தரம் 8/2014
யா/இடைக்காடு மகா வித்தி.

# என்னமோ நடக்குது : தேறாது



தனியார் வங்கியிலிருந்து கோடிக் கணக்கில் பணத்தைக் கடத்தி சூரியன் மறைவதற்குள் திரும்ப வைத்துவிடுவது. இதில் கிடைக்கும் வட்டியைப் பங்குபோட்டுக் கொள்வது. நூதனமான இந்த மோசடிக்குப் பின்னணியில் பெரும் கும்பலே இயங்குகிறது. ஒரு நாள் இந்தப் பணம் அவர்கள் வசமிருந்து கடத்தப்பட்டால் என்ன ஆகும்? இதை வைத்துக்கொண்டு பின்னப்பட்ட கதைதான் *என்னமோ நடக்குது.*

பொருள் (பணம்) எப்படிக் காணாமற் போனது என்கிற கேள்வியின் பின்னணியில் கதை தொடங்குகிறது. நிழல் உலக தாதாக்களும், அரசியல்வாதி பர்மாவும் (ரகுமான்) வங்கி அதிகாரியான காயத்ரியுடன் (சுகன்யா) சேர்ந்து வங்கிப் பணத்தை வட்டிக்கு விட்டு, லாபம் தேடுகிறார்கள்.

காதலி மதுவின் (மஹிமா) படிப்புச் செலவுக்காக வாங்கிய கந்து வட்டிக் கடனைத் திரும்ப அடைப்பதற்காக சட்டத்தரணியிடம் (தம்பி ராமய்யா) பணம் கேட்டுப் போகும் நாயகன் விஜி (வசந்த் விஜய்), வங்கியிலிருந்து பணத்தைக் கொண்டு போய் வெளியே விநியோகிக்கும் வேலையில் மாட்டிக் கொள்கிறான். பர்மாவை நிழலாகத் தொடரும் மர்ம மனிதர் அந்தப் பணத்தை இடம்மாற்றிவிட, விஜி சிக்கலில் மாட்டிக்கொள்கிறான்.

அந்த நிழல் யார், விஜி எப்படிச் சிக்கலிலிருந்து மீண்டு தன் காதலியின் கடனை அடைக்கிறான் என்பதை விறுவிறுப்பாகச் சொல்ல முயன்றிருக்கிறார் புது இயக்குநர் பி. ராஜபாண்டி.

பணத்தை விஜிதான் எடுத்து விட்டான் என்று நினைத்து அவனை பர்மாவின் ஆள்கள் அடித்துத் துவைப்பதிலிருந்து தொடங்கும் படம், விஜி அங்கே வந்து சேர்ந்த கதையைச் சொல்கிறது. குப்பத்து இளைஞன் விஜிக்கும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மதுவுக்கும் இடையே முளைக்கும் காதலைச் சொல்ல அதிக நேரம் எடுத்துக்கொள்கிறார் இயக்குநர். அதுவே படத்தின் வேகத்துக்குத் தடை போட்டு விடுகிறது. இது போன்ற காதல்கள் தமிழ்த் திரையில் பல்லாயிரம் முறை சொல்லப்பட்டவை என்பதையும் அவர் மறந்து விட்டார்.

விஜிக்கும் அவன் அம்மாவுக்குமான (சரண்யா பொன்வண்ணன்) பிணைப்பைச் சொல்வதில் யதார்த்தம் காட்ட முயன்றிருக்கிறார் இயக்குநர். குடித்துவிட்டு வந்து அம்மாவை உதைத்து எழுப்பிக் கொஞ்சும் முரட்டுப் பிள்ளை புதுசு. குப்பத்து மனிதர்கள் குறித்த சித்தரிப்பிலும் கவனம் செலுத்தியிருக்கிறார். ஆனால் படத்தின் ஆதாரமான அம்சத்திற்கு இவை எந்த விதத்திலும் பங்களிக்கவில்லை என்பதால் திரைக் கதையின் நேரத்தைக் கடத்தவே இவை பயன்பட்டிருக்கின்றன.

ரகுமான், பிரபு ஆகியோர் வழக்கமான வேடங்களில் தோன்றுகிறார்கள்.


வித்தியாசமான வேடத்தில் தோன்றும் தம்பி ராமையா நன்றாகச் செய்திருக்கிறார்.

இசை பிரேம்ஜி அமரன். மீச கொக்குதான், ஆகாயம் பாடல்கள் ரசிக்கும்படியாக இருக்கின்றன.

ஒளிப்பதிவாளர் ஏ.வெங்கடேஷின் கேமரா, காட்சிகளின் நம்பகத்தன்மையைக் கூட்ட உதவுகிறது.

புதிதாக ஒரு முடிச்சுக் கிடைக்கிறது. அதற்குக் கொடுக்கப்படும் பெருமெடுப்பிலான விவரணைகள் நிமிர்ந்து அமர வைக்கின்றன. ஆனால், அதோடு அதை அம்போவென விட்டுவிட்டு மீண்டும் பழைய குருடியாகத் திரும்பி நோகடிக்கிறார்கள் படக் குழுவினர்.

ஏகப்பட்ட பின்கதைகளைக் காட்டிப் பொறுமையைச் சோதிக்கிறார்கள். வங்கிப் பணத்தைச் சுற்றுக்கு விட்டு சம்பாதிப்பது என்னும் முடிச்சுப் புதிதுதான். அதை விரிவுபடுத்தும் விதமாகத் திரைக் கதையைச் செதுக்கியிருந்தால் என் னமோ நடக்குது கொஞ்சம் தேறுகிறமாதிரி இருந்திருக்கும்.



# வாயை மூடி பேசவும்

## பொழுதுபோக்காக ஒரு தரம் பார்க்கலாம்

பேச்சுதான் படத்தின் மையம். மனது விட்டுப் பேசுங்கள். மனதில் உள்ளதை மறைக்காமல் பேசுங்கள். எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்பதுதான் படத்தின் ஆதாரமான செய்தி. இந்தச் செய்தியைத் துளிக்கூட சீரியஸ் தன்மையோ வன்முறையோ இல்லாமல் அழகான மலைப் பிரதேசத்தின் பின்னணியில் மெல்லிய சாரலாய்த் தெளித்திருக்கிறார் இயக்குநர் பாலாஜி மோகன்.

பேச வேண்டியதைப் பேசாமல் போனால் என்ன ஆகும்? தேவையே இல்லாமல் பேசினால் என்ன ஆகும்? சுத்தமாகப் பேசாமல் இருந்தால் என்ன நடக்கும்? - சில துணைக் கதைகளின் உதவியோடு இதையெல்லாம் பேசுகிறார் இயக்குநர். பனிமலை கிராமத்தில் ஊமைக் காய்ச்சல் என்ற வித்தியாசமான நோய் பரவுகிறது. நோய்க்கு ஆளானவர்கள் பேசும் திறனை இழக்கின்றனர். பேசுவதாலேயே நோய்க் கிருமிகள் பரவுவதாகக் கூறி, ஊர் மக்கள் பேச அரசு தடை விதிக்கிறது. நோய்க்கு மருந்து கண்டுபிடித்தவுடன் பேச விதித்த தடையை அரசு விலக்கிக்கொள்கிறது. இப்படிப் பேச்சுக்கும் மௌனத்துக்கும் இடையே நடக்கும் சலனங்கள்தான் திரைக்கதை.

படத்தில் ஏகப்பட்ட பாத்திரங்கள். மனதில் பட்டதைப் பளிச்சென்றும் நயமாகவும் பேசும் அர்விந்த் (துல்கர் சல்மான்), தனக்குப் பிடிக்காததை வெளிப்படையாகச் சொல்லும் துணிவில்லாத அஞ்சனா (நஸ்ரியா நசீம்), கட்டுப்பாடுகள் விதிக்கும் காதலன், எதையாவது உளறிப் பிரச்சினையில் மாட்டிக்கொள்ளும் அரசியல்வாதி, அடையாளம் பெறுவதற்கான அவஸ்தையில் இருக்கும் வித்யா (மதுபாலா), தனக்கு ஓவியத்தில் நாட்டம் என்பதைச் சொல்லமுடியாதசிறுவன், மகனை வெறுப்பதோடு அனாதை இல்லத்திலிருந்து வெளியேறுவதில் குறியாக இருக்கும் பெரியவர் (வினுசக்கரவர்த்தி), நடிகர் உமேஷ் (ஜான் விஜய்), குடிகாரர்களின் சுயமரியாதையைக் காக்கப் போராடும் குடிகாரர் சங்கத் தலைவர், நடிகரின் உரிமை காக்கப் போராடும் ரசிகர் மன்றத் தலைவர் எனப் பலரும் வருகிறார்கள்.



பேச்சைப் பறிக்கும் நோய் இவர்கள் ஒவ்வொருவரையும் எப்படிப் பாதிக்கிறது என்பதை வேடிக்கையாகச் சொல்ல முயன்றிருக்கிறார் பாலாஜி. முதல் பாதி முழுவதும் பேசிப் பேசிக் கலகலப்பூட்ட முயல்கிறார். அரசியல்வாதியைக் கிண்டலடிப்பது, ரசிகர் மன்றத்தைக் கேலி செய்வது, செய்தி அலைவரிசைகளைக் கிண்டலடிப்பது என எல்லாவற்றிலும் நகைச் சுவை. ஆனால், சில இடங்களில்தான் சிரிக்க முடிகிறது. துல்கர் சல்மானின் துறு துறுப்பும் நஸ்ரியாவின் அமைதியும் படத்தின் பலம். சல்மான் பாத்திரத்தை உணர்ந்துசிறப்பாகச் செய்திருக்கிறார். மெல்லிய சோகத்துடன் நடமாடும் பாத்திரத்தில் நஸ்ரியா கவர்கிறார். நீண்ட நாள் கழித்துத் திரையில் தலை காட்டியிருக்கும் மதுபாலா 1990களில் பார்த்தது போலவே இருக்கிறார். மௌனமாகப் பேசும் காட்சிகளில் நஸ்ரியாவும் மதுபாலாவும் தங்கள் விழி மொழி மூலம் தனித்து நிற்கிறார்கள். செய்தி வாசிப்பாளராக தொலைக்காட்சியில் தோன்றிச் சிரிக்க வைக்கும் பாலாஜி, ஒரு கட்டத்தில் சலிப்படையவும் வைக்கிறார். ரோபோ சங்கரும், ஜான் விஜய்யும் திரைக்கதையில் திணிக்கப்பட் டிருந்தாலும் அவ்வப்போது சிரிக்க வைக்கிறார்கள். உளறி மாட்டிக்கொள்ளும் அரசியல்வாதி கதாபாத்திரத்தில் பாண்டியராஜன் கச்சிதம்.




இரண்டாம் பாதியில் வசனங்கள் இல்லாமல் கதையை நகர்த்த வேண்டியிருக்கும் சவாலில் வெல்கிறார் இயக்குநர். இந்த மௌனத்தைத் தன் இசையால் மொழியாக்கம் செய்திருக்கிறார் சியன் ரால்டன். மலைப் பிரதேசத்தை அழகாகக் காட்டி கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறார் ஒளிப்பதிவாளர் சௌந்தர்ராஜன். படத்தின் ஆதாரமான் கேள்விகள் அனைத்துக்குமான பதில்கள் உடனடியாகத் தெரிந்துவிடுவதால் படத்துடன் ஒன்ற முடியவில்லை. அடுத்து என்ன என்ற கேள்வியே எழ வாய்ப்பில்லை. கிண்டலையும் சில நெகிழ்ச்சியான தருணங்களையும் மட்டுமே நம்பிப் படத்தை நகர்த்தியிருக்கிறார் பாலாஜி. படத்தின் பலமும் பலவீனமும் இதுதான்.

# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்....

மிருசுவில் தமிழ்தாசன்

என்ன இருந்தாலும்குமாரவேலு வாத்தியாரின் போக்குகள் கொஞ்சம் 'ஓவர்தான்'. சுத்தம் சுகாதாரம் பார்க்க வேண்டியதுதான்... "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். சுத்தம் சுகம் தரும்" இவைகளெல்லாம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்தான். ஆனால் குமாரவேலு சேர் இத்தனை தூரம் சுகாதாரத்தைப் பேணுவதென்பது உண்மையிலேயே ஒரு நகைப்புக்குரிய தென்பதே பொது வான கருத்தாகிவிட்டது.

உயரம் ஐந்தரை அடிக்குக் குறையாது. எனினும் ஆறடிக்குத் தேறாது. மாநிற மேனி. முத்து முத்தாய் வெள்ளை வெளேர் பல்வரிசை. தலையில் ஆசைக்குக்கூட ஒரு நரை முடியைப் பார்க்க முடியாது. சுத்தமாகச் சவரம் செய்யப்பட்ட முகத்தில் எப்போதுமே பளிச் சென்ற பொலிவு களைகட்டியிருக்கும்.

வயது என்னவோ ஐம்பதுக்குக் குறையாது. அத்தனை தூரம் சுகாதாரத்தைப் பேணிய மனிதரல்லவா! அதுதான் போலும் இத்தனை ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் குமார வேலு வாத்தியார். அவருடைய வீட்டிலிருந்து கூப்பிடக் கேட்கும் தூரத்திலேயே அவர் கற்பிக்கும் பாடசாலையும் அமைந்து விட்டது. அவரைப் பொறுத்த வரைக்கும் ஒரு வரப்பிரசாதமாகவே பட்டது. எப்படியும் ஆயிரம் மாணவர்களையும் முப்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் உள்ளடக்கியிருந்தது அந்தக் கிராமத்துப் பாடசாலை.

அன்றொரு நாள் வண்ண வண்ணக் காகிதங்களால் பாடசாலை வளாகம் முழுவதுமே அலங்கரிக்கப்பட்டிருந்தது. முகப்பில் அலங்கார வளைவுகள். வாழை தோரணங்களென அந்தப் பாடசாலை ஒரே அமர்க்களமாகக் காட்சி கொடுத்தது. மாணவப் பட்டாளங்கள் ஓடியாடிச் சுறுசுறுப்பாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்பட்டனர்.

"ரீச்சர்! இதுதான் நான் சொன்ன சாறி! பிரணவன் லண்டனிலையிருந்து அனுப்பினவர். எப்படியிருக்கு! பெருமை யோடு தனது சேலையைக் காட்டி மகிழ்ந்தாள் கல்பனா ரீச்சர். தலைநிறையப் பூவும் வைத்துப் புத்தம் புதிய சாறி சட்டையில் தங்க நகைகள் மினுமினுக்க உற்சாகமா கக் காணப்பட்ட கல்பனாவைப் பார்க்க உம்மணாம்மூஞ்சி உமாரீச்சருக்குச் சற்றுப் பொறாமையாகத் தானிருந்தது.

"கொஞ்சம் டாக் கலராயிருந்தெண்டால் உம்மடை நிறத்துக்கு எடுப்பாயிருந்திருக்கும். கொஞ்சம் கலர் காணாது. சரி! பரவாயில்லை. உம்மடை 'ஆளுக்கு' இனிமேல் சொல்லி நல்ல கலராய் எடுக்கச் சொல்லுமன்".

ஏதாவது சொல்லித் தன்பங்கையும் நிறைவேற்ற வேண்டுமென்ற கடமையை நிறைவேற்றிக் கொண்டாள் உமா.

ஒலிபெருக்கி பக்திப் பாடல்களில் ஆரம்பமாகி இப்போது புத்தம் புதிய திரைப்பட 'பாடல்களைக் கக்கித் துப்பிக் கொண்டிருந்தது. இன்னும் சொற்ப நேரத்தில் சேவை நலன் பாராட்டு விழா ஆரம்பமாகப் போகின்றது. சிவதீபா ரீச்சர் இடமாற்றலாகி அயலூர்ப் பாடசாலைக்குப் போக இருக்கின்றாள். மகாதேவன் சேர் தனது சேவையை முடித்து ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறார். இவர்களிருவருக்கும் தான் இன்று பிரியா விடையும் பாராட்டு விழா வும் நடைபெற இருக்கின்றது.

வழக்கமாக வெள்ளை வேட்டி நஷனல் சட்டையில் வரும் சோம சுந்தரம் சேருக்கு இன்றைக்கு அப்படி என்னதான் நடந்து விட்டதோ! கறுப்பு நிற ரவுசரில் கட்டம் போட்ட நீல நிற சேட்டில் வந்து நின்று எல்லோரையும் அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தார்.

மாணவர்களும், ஆசிரியர்களும் சோமசுந்தரம் சேரை விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தப் பார்வையில் ஒருவித கேலி இழையோடியிருப்பதை அவரும் உணராமலில்லை. பாவம் மனிதர் வெட்கத்தால்வெடவெடத்துப்போனார்.

"வேண்டாம் வேண்டாம் எண்ண இந்த மனிசியும் என்ரை கடைக்குட்டியும் எடுத்த எடுப்பாலை இப்ப அவமானப்பட வேண்டியிருக்கே! சே!பேய்வேலை செய்து போட்டன்". மனதுக்குள் பொருமினார் சோம சுந்தரம்.

இதோ! விழா ஆரம்பிக்கப் போகின்றது. பாடசாலை மாணவிகளின் கீச்சுக்குரல்களில் தேவாரமிசைக்கப்பட்டது. ஒலிவாங்கி மூலமாகப் பாடியும் கூட யாருக்குமே கேட்காத அளவு சத்தத்திலேயே ஷர்மிலா அடியெடுத்தாள். கூடவே தர்மியும், பானுவும் கோரஸ் பாடி எப்படியோ தேவாரம் பாடித்தான் விட்டார்கள். ஆனால் அவர்கள் பாடியது அவர்களுக்கே கேட்டி ருக்குமோ என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றுதான்.

அதிபர் அற்புதராசா எழுந்து கொண்டார். ஒலி வாங்கியை ஊதோ ஊதோ என்று ஊதி அதனைப் பிடித்துத் தட்டோ தட்டென்று தட்டி அந்த ஒலி வாங்கிக்கு ஒரு சேதாரம் வைக்காமல் இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன் என்பது போலச் செயற்பட்டார் மனிதர். எங்கேயோ இருந்து ஓடோடி வந்த ஒலிபெருக்கிச் சொந்தக்காரன் ஒலிவாங்கியைப் பறித்து அதன் ஸ்விச்சைத் தட்டி விட்டான். இப்போது ஒலிவாங்கி மிகச் சத்தமாக இயங்கியது. இதுவரை நடந்த தேவார பாராயணம் எல்லாம் மைக் இல்லாத வெறும் வேஸ்ற் நிகழ்வுதான்.

அதிபர் அற்புதராசாவின் தலைமையுரையை அடுத்து நிர்மலன் சேர், மணிவண்ணன் சேர், சசிகலா ரீச்சர், என்று ஆசிரியர் குழாமின் பாராட்டுரைகள் அன்றைய சேவை நலன் பாராட்டுவிழாவைக்களைகட்டச் செய்தன.

குமாரவேலு சேருக்கு ஒருவித பயம். அவரையும் யாராவது பேசுவதற்கு அழைத்து விடுவார்களோ என்று. எங்கேயோஒருமூலைக்குள் தனிமையிலிருந்து இனிமை கண்டு கொண்டிருந்தார். பொதுவாகவே அவருக்குச் சனக்கூட்டமென்றால் பிடிக்காது. எல்லாமே சுகாதாரம்தான் காரணம்.

பாராட்டு விழா முடிவடைந்ததும் அன்றைய விழா நாயக நாயகிகளுக்குத் தேநீர் விருந்துபசாரம் நடைபெற்றது. மாணவ தலைவர்களின் ஒழுங்கமைப்பில் சக ஆசிரியர்களும் கலகலப்பாகப் பங்குபற்றினர். ஆசிரியர் களுக்குள் ஒரே ஒருவர் மட்டும் 'மிஸ்சிங்'.

"என்னப்பா! பிரியாவிடை வேளைக்கே முடிஞ்சுதே! நேரத்துக்கு வந்திட்டியள்!" வியப்புடன் கேட்டாள் கருணாவதி. இவள்தான் ஆசிரியர் குமாரவேலுவின் வாழ்க்கைத் துணைவி. கிணற்றடியில் துணிகளைத் துவைத்துக் கொண்ட கணவனுடன் சம்பாஷணையில் ஈடுபட்டாள்.

"அதையேனப்பா பேசுவான்! அங்கை கூட்டம் முடிஞ்சதுக்குப் பிறகு ஏதோ ரீப் பாட்டியோ பூட்டியோ எண்டினம். நான் மூச்சுப் பேச்சில்லாமல் ஓடி வந்திட்டன். உங்கை கண்டவை கடியவை செய்த பலகாரங்களும் அதுகும் இதுகுமெண்டு தருவினம். சாப்பிட்டிட்டு வந்து நாளைக்கு வருத்தத்தை உழைக்கச் சொல்லுறீரோ!" சொல்லியபடி நேரே கிணற்றடிக்குச் சென்ற குமாரவேலுசேர், தனது வேட்டி சட்டையை மிகுந்த அருவருப்புடன் கழற்றி வாளிக்குள் இட்டுத் துவைக்கத் தொடங்கினார்.

"ச்சீ! உங்கைஎத்தினை விதமான மனிசர் வந்ததுகள். என்னென்ன நோயளைக் காவிக் கொண்டு வந்திருக்குங்கள். இஞ்சை விடும். ஒருக்கால் குளிக்காட்டில் சரிவராது". சொல்லியபடி குளிக்கத் தொடங்கினார்.

"ஏனப்பா! போகயுக்கை குளிச்சிட்டுத் தானே போனனீங்கள். பிற கென்ன அதுக்கிடையிலை கண்டறியாத குளிப்பு!"

இப்படிக் கேட்கத்தான் நினைத் தாள். ஆனால் கேட்கவில்லை. திருமணம் முடிந்து இத்தனை காலமாகக் கிடந்து மனிதனுடன் படும் இடறுப்பாடுகளை என்ன மறந்தா போய்விட்டாள்! தான் செய்த பூர்வ ஜென்மப் பாவமாகவே நினைத்துக் கொள்வாள். இப்படி ஒரு கணவரிடம் அகப்பட்டதற்காக.

"அந்த அஞ்சாம் வகுப்புப் பெடியளுக்கு இண்டைக்கு வகுப்பெடுத்து.. சே! ஒரே ஊத்தைப் பெடியள். எனக்கு அதுகளுக்குக் கிட்ட நிண்டு படிப்பிக்கவே ஏலாமற் போச்சுது"

சொன்னபடி கிணற்றடியை நோக்கிச் செல்வார். சுத்தமென்றால் அப்படியொரு விசித்திரமான சுத்தம்! ஒருவருடன் நின்று நேருக்கு நேர் பேச வேண்டியேற்பட்டால் கைக்குட்டையைமுகத்தில்பிடித்தபடிபின்னுக்கு இரண்டடி எட்டி வைத்து நின்று மிகவும் சங்கடப்பட்டுத்தான் பேசுவார். இதன் காரணமாகப் பலரின் கோபத்துக்கும் ஆளாகியிருக்கின்றார்.

எங்கே போனாலும் தனது சைக்கிளிலேதான் போவார், வருவார். பஸ்ஸுக்குள் ஏறினால் எத்தனை பேரின் வியர்வை நாற்றங்கள்! விரும்பத் தகாத துர்நாற்றங்கள், நெரிசல்கள். இவைகள் மூலமாகவிதம் விதமான தொற்று நோய்களுக்கு எல்லாம் ஆளாக வேண்டிவரும். எனவே அதனைத் தவிர்த்துக் கொண்டால் நோய்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம். ஆரோக்கியமாக நூற்றாண்டுகள் வாழலாம் என்பது அவரின் இரத்தத்தில் ஊறிய முழுமையான நம்பிக்கை.

பாடசாலைக்குப் போகும்போது கட்டுச் சாதம்! அத்துடன் கொதித்தாறிய நீர்! கைகளைத் துடைப்பதற்குத் துப்புரவான துணி! இவைகளெல்லாம் கொண்டு தான் போவார். கடையிலோ, உணவகங்களிலோ ஒரு வாய் பச்சைத் தண்ணீர் கூட அருந்த மாட்டார்.

குமாரவேலு வாத்தியார் யாருக்கும் கெட்டவனுமல்ல - எதிரியுமல்ல. அடுத்தவனின் தனிப்பட்ட விவகாரங்களில் மூக்கை நுழைத்துக் கொள்ள மாட்டார். தானுண்டு தன் வேலையுண்டு. ஒதுங்கித் தனிமையிலே வாழவிரும்பும் ஓர் அப்பாவி ஆசிரியர். இருந்தும் இவருடைய விசித்திரமான போக்குகளால் ஏராளமானவர்களின் பழியைச் சம்பாதித்திருக்கின்றார் என்றால் அதுவும் பொய்யல்ல.



உண்மையே!

சுகாதாரத்தைப் பேணாது விட்டால் நோய்களுக்கு ஆளாக வேண்டிவரும். நோய்க்கு ஆளானால் சாக வேண்டிவரும். எனவேதான் இவையிரண்டுமேஇவருக்குப்பிடிக்காத விடயங்களாகிவிட்டன. இதன் காரணமாகவே இவர் இப்படியொரு வித்திரமான சுகா தாரம்பேணலுக்குத் தன்னை ஆளாக்கி விட்டார். வேறொன்றுமில்லை.

"நீங்களிலிருந்து பார்க்கத்தான் போறியள்! நான் எந்த விதமான நோய்களுமில்லாமல் நூறுவயது வரைக்கும் வாழ்ந்து காட்டுறன் - என்னைப் போல எல்லாரும் சுத்தம் பேணி நடந்தால் நூறில்லை, நூற்றுப் பத்து வரையும் கூட நோய் நொடியில்லாமல் வாழலாம். ஏன் வீணாய் நோய் வாய்ப்பட்டு அருமந்த வாழ்க்கையை அழிக்க வேணும்!"

மனைவி உட்படத் தன்னைச் சார்ந்த அனைவருக்கும் குமாரவேலு வாத்தியார் இப்படித்தான் சொல்வது வழக்கம். நூறு வயதுவரைக்கும் தன்னால் வாழ்ந்து காட்ட முடியுமென்பதை அவர் ஒரு சவாலாகவே எடுத்திருந்தார் என்று துணிந்து கூறலாம்.

இதோ! காலை எட்டு மணியாகிவிட்டது. குமாரவேலு வாத்தியார் பாடசாலைக்குச் சமுகம் கொடுக்கும் சரியான நேரமிதுதான். இவர் பாடசாலைக்குச் செல்லும் நேரத்தை வைத்துக் கடிகாரங்களில் நேரத்தைச் சரி செய்து கொள்ளலாம். அப்படியொரு நேரம் தவறாமையினை எந்த வெள்ளைக் காரனிடத்தில் கற்றிருப்பாரோ என்று மூக்கில் விரல் வைப்பவர்கள் ஏராளம் பேர். அந்தரப்பட்டு அவதிப்பட்டு ஓடி வந்து ஒன்பது மணிக்குக் கையொப்பம் வைக்கும் ஆசிரியர்களும் அங்கே இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் இவரோ! நேரம் என்றால் நேரம்தான். ஒரு விநாடி கூடத் தவறாது பார்த்துக் கொள்வார். அநாவசியமாக விடுப்பேதும் எடுக்க மாட்டார் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் லீவு தேவைப்படும்பட்சத்தில் அதிபரிடம் முன் அனுமதி பெற்றுவிடுவார். அப்படிப்பட்டவரை இன்னுமா காணோம்! அதிபர், ஆசிரியர்கள் உட்பட மாணவர்களும்சேர்ந்து அதிசயப்பட்டனர்.

நேரம் எட்டரையையும் தொட்டு விட்டது. "நீங்கள் பொய்யெண்டாற் பாருங்கோ! திடீரெண்டு ஏதேன் பிரச்சினையெண்டு குமாரவேலு சேர் வரமுடியாமற் போனாலும், ஆரிட்டையேன் சொல்லி அறிவிச்சு எண்டாலும் விடுவர். அப்பிடியொரு தொழிலிலை விசுவாசமான மனிசன். இஞ்சையுமிருக்கிறயள்! சிலர் இருக்கினம். நினைச்ச நேரம் வந்து நினைச்ச நேரம் போவினம்" நக்கலாகச் சொல்லியபடி தவமணி ரீச்சரைப் பார்த்தார் அதிபர். அர்த்தத்தைப் புரிந்து கொண்ட தவமணி ரீச்சர் வெட்கத்தினாலும் அவமானத்தினாலும் கூனிக் குறுகிப் பார்வையை எங்கேயோ மேய விட்டாள்.

"ஏன் சேர்! இவர் வர ஏலாட்டில் உங்களுக்கு ரெலிபோனிலை எண்டாலும் சொல்லியிருக்கலாம்தானே!" இது சிற்சபேசன் சேரின் சந்தேகம்.

"குமாரவேலு சேர் ரெலிபோனே பாவிக்கிறதில்லையே! அண்டைக்கு ஏதோ பேப்பரிலை பாத்தவராம். ரெலிபோன் பாவிக்கிற ஆக்களுக்கு ஏதோ நோயள் வருமெண்டு அதுக்குப் பிறகு பயந்து அவர் அதையும் விட்டிட்டார். மனிசனுக்குச் சாகப் பயம்!"

நந்தகுமார் சேர் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்க அதிபரின் முகத்தில் ஈயுமாடவில்லை. மொத்தத்தில் அனைவருமே பரபரப்பாகக் காணப்பட்டனர். "சேர்! இண்டைக்குக் குமாரவேலு சேர் வரமாட்டார்".

குரல் வந்த திசையை நோக்க அங்கே அழுக்கடைந்த களிசான் சட்டையுடன் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

"பாத்தியளே! நான் சொன்னன். குமாரவேலு சேர் எப்பிடியும் அறிவித்தலாவது தராமல் விடார். உண்மையிலை மனிசன் ஒரு 'ஜென்டில்மன்' தான்" அதிபர் தன்னுடைய ஊகத்தைப் பெருமைப்படுத்திக் கொண்டிருந்தார்.

"இல்லை சேர்! குமாரவேலு சேர் வீட்டுக்கிணத்துக்கைதண்ணிஅள்ளயுக்கை கால் தவறிக் கிணத்துக்கை விழுந்து செத்துப் போனார். பிரேதமும் கிணத்துக்கைதான் கிடக்குது". சொல்லிவிட்டுச் சிறுவன் அந்த இடத்தை விட்டு விரைந்தான். ஆயிரம் குண்டுகள் ஒரே நேரத்தில் அவர்களின் காலடிக்குள் வீழ்ந்த உணர்வில் அதிர்ந்து போய் நின்றார்கள் அனைவரும். பாடசாலைக்கு முன் வீதியால் ஐஸ்கிறீம் வானொன்றிலிருந்து பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது. "நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்".....





# நீ எதுவாக விரும்புகிறாய்?

இளைஞனே நீ எதுவாக விரும்புகிறாய்? கடவுளாகவா இல்லை மாயையின் பிறப்பிடமான சாத்தானாகவா? நீ எதுவாக விரும்பினாலும், இந்தப் பரந்த உலகில் உனக்கு முழுச் சுதந்திரமும் உண்டு. அப்படித்தான் இந்த உலகம் கடவுளால் படைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இறைவன் மாபெரும் கருணையாளன். அவன் யாருடைய சுயத்திலும் தலையிடுவதில்லை. நீயே உன்னை தலையிட்டுக் காத்துக்கொள். நீ சுய ஆராய்ச்சி செய்ய வேண்டும். மகாபாரத அர்ஜுனன் போல் கேள்விகள் கேட்க வேண்டும். உன்னை நீயே எடை போட்டு பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் உன்னில் சரியான தெளிவு ஏற்படும். அந்தத் தெளிவே நீ எடுக்கும் முடிவுக்குச் சரியான பலமாகவும் அமையும். சாத்தான் நிலையற்றவன். பல வடிவங்களாக மாறி உன் மனதை ஒவ்வொரு விடய சுகங்களிலும் அடைவு வைத்து விட்டு இறுதியில் துன்பத்தைத் தரக்கூடியவன்.

இன்று அநேக இளைஞர்கள், யுவதிகள் கடவுளைப் பற்றிய முழுத் தேடலில் இறங்கியிருக்கிறார்கள். இது பாராட்டத்தக்க விடயம்தான். இருந்தும் புறத்தே கடவுளைத் தேடுபவர்களாக தங்களை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரமாயிரம் ஆண்டு காலமாக இருந்த, இனியும் இருக்கப் போகிற சத்தியத்தை புறத்தே தேடுவது மாயையின் நவீன வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்துவிடும். யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை பாடலான "அவனே நானென்று சொல்லி தியானம் செய்வாய் தினமும் , ஆசையெல்லாம் ஒழியும். ஈசனருள் பொழியும்" என்ற உண்மையை நாம் அகத்திலே உணர்ந்தால் ஒழிய ஈசனை ஒரு போதும் காண முடியாது. இன்றைய போதனையாளர்களும், சொற்பொழிவாளர்களும் கடவுளைக் காணலாம் என்று முழக்கமிடுகிறார்கள். தெருவுக்குத் தெரு ஆச்சிரமங்களையும், ஆன்மிக மையங்களையும் உருவாக்கி தங்கள் பெயரையும், புகழையும், பணத்தையும் சம்பாதிக்கிறார்கள். கடவுளை அவர்கள் ஒரு போதும் கண்டதில்லை. பிறருக்கும் கடவுளை உணர்வதற்கான வழியை அவர்களால் சொல்ல முடிவதில்லை. காவிக்குள் ஒழிந்திருக்கும் கர்மவினையின் மைந்தர்களாக வலம் வருகிறார்கள்.

திரைப்படங்களில் வரும் கதாநாயகன் போல் கடவுளை நேருக்கு நேர் பனிச்சென்று ஒரு போதும் தரிசிக்க முடியாது. கடவுளை உன்னில் இருந்து புறம்பாக பார்ப்பது துவைதம் என்று அழைக்கப்படுகிறது. அது கடவுளுக்கும் உனக்கும் உள்ள தூரத்தை அதி கரித்துவிடும். நீ வேறு கடவுள் வேறு என்ற பிரிவினையை உண்டாக்கிவிடும். நீயும் கடவுளும் ஒன்று என்பது அத்வைத பாவனை. இங்கே தூரமோ இடைவெளிகளோ கிடையாது. கடல் நீரும், கடல் நீரில் இருக்கும் உப்பும் போல் இந்த உறவு ஒன்றாகிவிடும். கடவுளை எப்படி எமக்குள் உணர்ந்து கொள்ளலாம் என்று கேட்கும். இளைஞர் சமுதாயத்துக்கு ரவீந்திரநாத் தாகூர் என்ற கவிஞர் எப்படிக் கடவுளை தரிசித்தார் என்பது பற்றி ஓஷோ கூறுவதை நாம் கேட்போம்.



"ரவீந்திரநாத் பாரத நாட்டின் மிகப் பெரிய கவிஞர்களில் ஒருவர். அவரிடம் ஒரு படகு வீடு இருந்தது. மாதக் கணக்கில் அந்தப் படகு வீட்டில் இருப்பது அவருக்குப் பிடித்திருந்தது. ஒரு பௌர்ணமி அன்று அந்தப் படகு வீட்டின் ஓர் அறையில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். மிகச் சிறிய அறை. மெழுகுவர்த்தி வெளிச்சம். அழகு என்றால் என்ன என்பதைப் பற்றிய புத்தகம் அது. வெளியே முழுப் பௌர்ணமியின் ஒளி வெள்ளம். குயில் தூரத்துக் கரையில் இருந்து பாடுகிறது. நிலவொளியின் பிரதி பலிப்பால் ஏரி முழுவதும் ஒரு வெள்ளித் தாம்பாளம் போல் ஆகி விட்டிருந்தது. மிக அமைதியான இரவு. யாரும் அருகில் இல்லை. பாடும் குயிலைத் தவிர. அப்போதைக்கு அப்போது ஒரு பறவை சிறகடிக்கும் ஓசை அல்லது ஒரு மீன் நீருக்குள் துள்ளி விளையாடும் ஓசை. அந்த ஓசைகள் இரவின் அமைதியை ஆழமாக்கின. பெரிய பெரிய புத்தகங்களைப் புரட்டி, அழகு என்றால் என்ன? என்ற கேள்விக்கு விடை தேடிக் கொண்டிருந்தார் ரவீந்திரநாத்.

களைத்துப் போனவராக நடு இரவில் மெழுகுவர்த்தியை ஊதி அணைத்தார். உடனே அவருக்கு ஓர் அதிர்ச்சி, ஆச்சரியம். மெழுகுவர்த்தி அணைய ஜன்னல் வழியாக நிலவொளி அறைக்குள் பாய்ந்தது. இப்போது தூரத்துக் கரையில் இருந்து குயில் மீண்டும் கூவியது. திடீரென அந்தப் பிரமாண்டமான அமைதி அவருக்கு உறைத்தது. படகைச் சுற்றிக் கவிந்திருந்த அமைதியின் ஆழம். ஒரு மீன் குதித்தது. அவர் வெளியே வந்தார். அவ்வளவு அழகான காட்சியை அவர் கண்டதே இல்லை. சில வெள்ளை மேகங்கள் வானத்தில் மிதந்தன. அந்த நிலவும் நீரும் குயிலின் பாடலாலும் அவர் வேறு ஓர் உலகத்துக்குப் போய் விட்டார்.

இதைப் பற்றித் தன் குறிப்பேட்டில் அவர் எழுதியிருக்கிறார். நானொரு முட்டாள். அழகு என்றால் என்ன என்று நான் புத்தகங்களில் தேடிக் கொண்டிருந் தேன். அதே நேரத்தில் என் கதவை தட்டிக்கொண்டு அழகு நின்றிருந்தது. ஒரு சிறு மெழுகுவர்த்தியை வைத்துக்கொண்டு அழகு என்ன என்று தேடிக் கொண்டிருந்தேன். அந்தச் சின்ன மெழுகுவர்த்தி அழகை அறைக்குள் வராமல் தடுத்து நிறுத்தியது. எனது அகங்காரம் கடவுளை வெளியே நிறுத்தி வைத்தது. சின்னஞ்சிறு மெழுகுவர்த்தி நிலவொளியை நிறுத்தியதைப் போல கடவுளின் ஒளி என்னை வந்து சேராமல் என் அகங்காரம் தடுத்து நிறுத்தி வைத்தது. அவரோ வெளியே காத்திருக்கிறார். நான் செய்திருக்க வேண்டியதெல்லாம் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு மெழுகுவர்த்தியை அணைத்து விட்டு வெளியே வந்திருக்க வேண்டியதுதான். வந்து பார்த்திருக்க வேண்டியதுதான்". கடவுளைத் தரிசித்தல் என்றால் என்ன? என்பது இப்போ உங்களுக்கு ஓஷோவின் மொழியில் புரிந்திருக்கும்.

சாத்தானை உருவாக்கி கடவுளை உனக்குள் தரிசிக்க விடாமல் தடுப்பது அகங்காரம். இது உனது மனதுக்குள் திருடன் போல ஒழிந்திருக்கும். தேவைப்படும் போதெல்லாம் தனது முகத்தைக் காட்டி மறையும். இந்த அகங்காரம் தான் உன் கர்ம வினையைச் சேகரித்து, சேமித்து உன்னை கடவுளிடம் இருந்து புறந் தள்ளுகிறது. இளைஞனே மேலான சத்தியத்தை நீ அடைந்து விட்டால் உன்னை வெல்ல இவ்வுலகில் யாரும் இல்லை. நீ ஆன்மா என்பதிலும் என்றுமே நிலைத்திருக்கும் பேரானந்தத் தின் பங்குதாரர் என்பதிலும் திடமான, உறுதியான நம்பிக்கை கொள். இந்தப் பிரபஞ்சத்தில் கண்ணுக்குத் தெரியும் அனைத்துமே நிலையற்றவை, மாறக்கூடியவை. என்றுமே மாறாத ஒன்று இந்தப் பிரபஞ்சத்தில் உண்டென்றால் அது உனக் குள் இருக்கும் பண்டைய கால சத்தியமே. அது என்றுமே மாறியதே இல்லை. ஒருபோதும் மாறவும் மாட்டாது. அதுதான் கடவுள். உன் கலாசாரத்தையும், பண்பாட்டையும், ஆன்மிக விழுமியங்களையும் நீ காப்பாற்ற வேண்டுமானால், நீ எதிர்காலத்தில் எதுவாக விரும்புகிறாய் என்பதை நீயே தீர்மானித்துக்கொள். நீ சிந்தித்து எடுக்கும் ஒவ்வொரு முடிவும் உன்னை பரிபூரண தன்மையில் நிச்சயம் நிலைநிறுத்திக் கொள்ளும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.




## காதல் மடல்....

அன்புக்காக ஏங்கி என் இதயத்தை
திறந்து வைத்தேன் நான்
எத்தனையோ பேர் எழுதினர் என் இதயமடலில்
அன்பு என்பு - ஆனாலும்
அம்மடல்கள் காலத்தால் கசங்கிவிட்டன
ஆனாலும் அவள் எழுதிய
மடல் ஆண்டாண்டு கழிந்தும் கசங்கவில்லை
ஏனென்றால் அவள் எழுதியது "காதல்" என்று
அவள் இன்று எனக்குரியவள் இல்லாவிட்டாலும் கூட
அவள் விழிகளால் எழுதிய மடல்கள்
அவளுக்காகவே எனக்குள் வாழும் காதல் பரிசுகள்

*பி.நீரஜா*





கண் திறந்து ஆடும்
கண்ணாம்பூச்சி!
கண்ணாடி யறைச்
சதுரங்கம்
இங்கு,
வால் பிடித்தவன்
வாழ்வான்
வாய் திறந்தவன்
தாழ்வான்!

கண்திறந்து ஆடும்
கண்ணாம் பூச்சி
கண்ணாடி யறைச்
சதுரங்கம்!
வகைப்படுத்தி
வரையறுத்து
தொகைப்படுத்தி
நிலைப்படுத்தும்
சாமர்த்தியம்
இல்லையாயின்
இயங்காது
பணிமனை!

நான்கு தூண்களின்
சொந்தக்காரரை
மோர்ந்து பிடித்து
நகர்த்துவதிலுள்ள
நயம்
பரம இன்பம்!
இதில் இவர்கள்
தேசியத்தில்
முதலிடம்
சித்தி வீதமோ 100 +

வனவாசம் கடந்தவர்
மனவாதம் கேட்டிட
விலாசங்கள்
எதற்காக?
மணந்து பிடித்துப்
பட்டயக்
குதிரைகளைப்
பரிசளித்திடவா?

சமத்துவம்
சகோதரத்துவம்
உதடுகளின் உரிமம்!
உள்ளத்து உரிமங்கள்
நியமனங்களின்
நிதர்சனம்!
அன்று கிளர்ந்தனர்,
இன்று நிமிர்ந்தோம்!
நாசூக்காய்
அமர்த்துகிறார்,
சும்மாவா
இருப்போம்?

நிலம் நோக்கி
எறிந்தாலென்ன?
நீர் நிலைகளில்
எறிந்தாலென்ன?
சகதிக்குள்
வீசினாலென்ன?
காற்றுள்ள பந்துகள்;
கலங்குவதில்லையே....!

*கவிஞர் அகிபோரி*




## சொற்சிலம்பம் - போட்டி இல: 315

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| | ■ | 9 | 10 | | ■ | 11 | |
| 12 | 13 | | | ■ | 14 | | ■ |
| 15 | | ■ | 16 | 17 | | ■ | 18 |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| ■ | 21 | | ■ | 22 | | | |
| 23 | | | | | ■ | 24 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்: ..........................................................

..........................................................

கையொப்பம்:..........................................................

### இடமிருந்து வலம்

1. வழமை
4. தேதி
7. சத்திரம்
8. தாழை வகைத் தாவரம்
9. ஒரு பலகார வகை
11. இது அறுபத்தி நான்காமே
12. சீட்டு விளையாட்டில் இதற்கு மதிப்பு
14. அவர்கள்
15. வாழ்
16. ரசிக்கும் பண்பு
19. பண்டைக்கால அரைக்கும் கருவி
20. பரந்து செழித்து நிழல் தரும் மரம்
21. அரைவாசி
22. பாண்டவர் மனைவி
23. இனிக்கும்; கரும்பிலிருந்து செய்யப்படுவது
24. அதிகம்.

### மேலிருந்து கீழ்

1. சமநிலை
2. தாண்டு
3. தற்பெருமை அடித்தல்
4. வலிமை
5. கற்கடக ராசி
6. சிவபெருமானின் நடனத்தோற்றம் இங்கு பிரபல்யம்.
8. ஆண் ஆடு
10. உயர்ந்து நிற்பது; கோயிலுக்கு அழகு தருவது
13. சுவை
14. படை
17. உணவுக்குழாயில் நடப்பது
18. மணம் பரப்பும் மலர்
19. கூட
20. விவகாரமான ஆள்
21. தாய், சேய்க்கு ஊட்டுவது

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 313 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சபதம் (4) எமது (7) குலம் (8) யாத்திரை (9) புகழ்தல் (11) தகராறு (14) லைலா (15) வலி. (16) சரி (17) சாதல் (19) புதிய (20) காரம் (21) நண்பன் (22) தும்பிக்கை (23) தினை

**மேலிருந்து கீழ்**

(1) சகுந்தலை (2) பல (3) தம்புரா (4) எத்தன் (5) மதில் (6) துரை (8) யாழ் (10) கறுவல் (12) கலாசாரம் (13) பெரியன்னை (16)சதிபதி (18) தம்பி (19) புண் (20) காது (21) நகை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

### போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற் சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன் களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல. 315
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்.
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர். (14.05.2014) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.315 இல் வெற்றி பெறுவோர்களது விபரம் 18.05.2014 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 313 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
சிவ.பத்மயோகன்,
இல.22/18, விதானை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
சா.இசைச்செல்வி,
அண்ணமார் கோவிலடி, இணுவில்.

**3 ஆம் பரிசு**
வி.அபிசன்,
6 ஆம் வட்டாரம், குமுளமுனை,
முள்ளியவளை.

**4 ஆம் பரிசு**
மைக்கல் ஆஞ்சலி,
மணல் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை

**5 ஆம் பரிசு**
பா.ஜனகன்,
இல.7/2, அம்மன் நகர், தோணிக்கல்,
வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

சி.தயாளசீலன்,
அம்பன், குடத்தனை.

அ.திலகவதி,
சன்னதி வீதி, இடைக்காடு, அச்சுவேலி.

இ.இராஜேஸ்வரி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரி யோராகத் தேர்ந் தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக் கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

# பெண்களுக்கான ஆடை அலங்காரம்

இன்றைய பெண்கள் தங்களுக்கு ஏற்ற உடை, ஆபரணம் போன்றவற்றை அழகாக அணிந்து கொள்வதில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

**உயரமான பெண்கள்:**
உயரமாகவும், ஒல்லியாகவும் உள்ள பெண் கள் குறுக்கே கோடுகள் போட்ட உடைகளையோ அல்லது டிசைன்கள் உள்ள உடைகளையோ அணிந்ததால் பார்க்க அழகாக இருக்கும்.

**குண்டான பெண்கள்:**
குண்டாக உள்ள பெண்கள் சிறிய டிசைன்கள் உள்ள உடைகளையும், சிறிய கோடுகள் போட்ட உடைகளையும் அணிந்தால் அழகாகவும், ஒல்லியாகவும் தெரியும்.

**கறுப்பு நிறம் உடைய பெண்கள்:**
கறுப்பாக இருக்கும் பெண்களுக்கு இலேசான கலர் பொருத்தமாக இருக்கும் என்றொரு பொதுவான கருத்து உள்ளது. ஆனால் அது மிகவும் தவறு. கறுப்பாக இருக்கும் பெண்கள் லேசான கலர் உடை அணிந்தால், அவர்கள் மேலும் கறுப்பாகத் தெரிவார்கள்.

**சிவப்பு நிறம் உடைய பெண்கள்:**
சிவப்பாக இருக்கும் பெண்கள் இலேசான கலர் அணிந்தால் மேலும் அழகாகத் தெரிவார்கள். கறுப்பான பெண்களுக்கு கடும் லேசான கலர் இல்லாமல், கடும் கலர் இல்லாமல் இருக்கும், சுமாராக இருக்கும் கலர்கள் தான் மிகவும் சிறந்தது. உதாரணமாக கருப்பான பெண்கள் நீல கலர் உடைகளை அணிந்தால் மிகவும் அழகாகவும், கலராகவும் தெரிவார்கள்.



# தடாசனம்



தாடாசனத்தைத் தொடர்ந்து செய்வதன் மூலம் உடல் வலிமை பெறும்.

**செய்முறை :**
விரிப்பில் இரு கால்களையும் ஒன்றாக வைத்து நிற்க வேண்டும். கைகள் தளர்வாக பக்கவாட்டில் இருக்க வேண்டும். மூச்சை உள்ளிழுத்தபடியே இரு கைகளையும் மேலே உயர்த்தியபடியே, குதிகாலை உயர்த்த வேண்டும். தலைக்கு மேல் கைகள் சென்றதும், கைகளைப் பிணைத்து முடிந்த வரை முதுகை வளைக்க வேண்டும்.
ஓரிரு விநாடிகளுக்குப் பின்னர் மூச்சை வெளியே விட்ட படி கைகளையும் குதிகால்களையும் ஒன்றாகப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும். இவ்வாறு ஆறு முதல் எட்டு முறை செய்யலாம்.

**பலன்கள்:**
உடலின் அனைத்து தசைகளும் இழுக்கப்பட்டு, நல்ல இரத்த ஓட்டத்துக்கும், வளர்ச்சிக்கும் காரணமாகிறது. முதுகெலும்பு பலம் அடைவதால், ஆரோக்கியம் கூடுகிறது.
கணுக்கால்கள், கெண்டைக்கால், கைகள், தோள்பட்டை தசைகள் கூடுதலாக இழுக்கப்படுவதால் வளரும் பருவத்தினருக்கு ஏற்றதாக அமையும். இரத்த ஓட்டம் சீராகி, நச்சுப் பொருள்கள் வெளியேற்றப்பட்டு உடல் புத்துணர்ச்சி அடையும்.

# பெண்கள் விரும்பும் கொலுசு



அணிகலன்கள் அணிவதில் பெண்களுக்கு அதிகளவு ஆசை உண்டு. கொலுசு அணிவதில் அவர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சியே தனி. கொலுசுக்கு இந்தியாவில் வரலாற்று பாரம்பரியமும், பின்னணியும் உண்டு. வெள்ளி குளிர்ச்சி தரும் உலோகம். வெள்ளி நகை அணிவதால் ஆயுள் விருத்தியாகும் என்று ஆயுர்வேதம் சொல்கிறது. வெள்ளியால் நகை ஒவ்வாமை பிரச்சினை ஏற்படாது. முன்னைய காலத்தில் பெண் கள் காப்பு, சிலம்பு போன்ற தடிமனான காப்பு போன்ற கொலுசுக்களை அணிந்து வந்தனர். இந்தியாவில் குழந்தைகளுக்கு கொலுசு அணிவிக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. குழந்தையின் அசைவுகளை உறங்கும் போதும், விழித்து இருக்கும் போதும் கொலுசு ஒலி, தாய்க்கு அறிவிக்கும். அந்தக் காலத்தில் இளவயது பெண்கள் கொலுசு அணிய மாட்டார்கள். திருமணமான பெண்கள் மட்டுமே அணிந்து வந்துள்ளனர்.

தங்களுக்கு திருமணமான செய்தியை, கால் கொலுசு சத்தம் மூலம் பிறருக்கு தெரிவிப்பதாக கருதப்பட்டு வந்தது. திருமணச்சடங்குகளில் மணப்பெண் கொலுசு அணிவது ஒரு முக்கிய மரபு. சின்னச் சின்ன முத்துக்கள், சிறிய சலங் கைகள், பின்னல் வேலைப்பாடுகள் கொண்ட கொலுசுகள் பழைய மாடலாகிவிட்டன.

தற்போது கொலுசுகள் எளிமையான வேலைப்பாடுகளுடன் மெல்லிய சங்கிலி போல வடிவமைக்கப்படுகின்றன. மெட்டியையும், கொலுசையும் இணைத்து ஒரு வடிவம் கொடுத்துள்ளார்கள். முன்பு கொலுசுகள் புடைவையுடன் அணியப்பட்டு வந்தன. தற்போது நவீன உடைகளுக்கு ஏற்ப நவீன பாணி கொலுசுகளை அணிகிறார்கள்.
ஒரே காலில் சில பெண்கள் 2 விதமான கொலுசுகளை அணிகிறார்கள். தங்கள், வெள்ளி கொலுசுகள் மட்டுமல்லாமல் தோல், பிளாஸ்டிக், நைலான், சாதாரண நூல் எனப் பலவகை பொருள்களைக்கொண்டுதயாரிக்கப்பட்ட கொலுசுகளையும் பெண்கள் அணிகிறார்கள்.
தங்கம், வெள்ளியில் செய்யப்படும் கொலுசுகள், சின்னச் சின்ன முத்துக்கள் சேர்க்கப்பட்டு மெல்லிய சங்கிலியால் இணைக்கப்பட்டு இருக்கும். செயற்கைக் கற்கள், குந்தன் கற்கள், சூறை மணிக்கற்கள் பதித்து செய்யப்படும் தண்டைகள், பெண்களால் பெரிதும் விரும்பி அணியப்படுகின்றன.

# மீன் குழம்பு

மீன் - அரை கிலோ (ஏதேனும் ஒரு வகை)
வெங்காயம் - ஒன்று
பச்சை மிளகாய் - 2
தக்காளி - 2
பூண்டு - 6 பல்
மஞ்சள் தூள் - கால் தேக்கரண்டி
மிளகாய்த் தூள் - அரை தேக்கரண்டி
சாம்பார் பொடி - 2 தேக்கரண்டி
மிளகு, சீரகத் தூள் - ஒரு தேக்கரண்டி
தயிர் - அரை குவளை
புளிக்கரைசல் - ஒரு குவளை
தேங்காய் - 3
கடுகு - கால் தேக்கரண்டி
வெந்தயம் - அரை தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு
கொத்தமல்லித் தழை - சிறிதளவு
எண்ணெய் - ஒரு தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு



1 மீனைச் சுத்தம் செய்து உப்புத் தண்ணீரில் அலசி எடுத்துக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கி வைக்கவும். பூண்டை தோலுரித்து நசுக்கி வைக்கவும்.



2 தக்காளியுடன் ஒரு பச்சை மிளகாய் மற்றும் தேங்காயைச் சேர்த்து விழுதாக அரைத்து எடுத்துக் கொள்ளவும்.



3 பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் நசுக்கிய பூண்டு, கடுகு, வெந்தயம், வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து நன்கு வதக்கி, பச்சை மிளகாய், கறிவேப்பிலை, மிளகாய் தூள் மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து வதக்கவும்.



3 வதக்கியதும் தக்காளி, தேங்காய் விழுதைச் சேர்த்து வதக்கவும்.




4 பின்னர் தூள் வகைகள் மற்றும் தயிர் சேர்த்து பிரட்டவும்.



5 அதனுடன் மீனைச் சேர்த்து புளிக்கரைசலை ஊற்றி, கொத்தமல்லித் தழை, தேவையான அளவு தண்ணீர் மற்றும் உப்புச் சேர்த்து சிறு நெருப்பு சுவாலையில் வைத்து குழம்பு தடிக்கும் வரை கொதிக்கவிட்டு இறக்கவும்.



சுவையான மீன் குழம்பு தயார்



# பணம்

சரவணனுக்கு பணம்தான் குறி. கஷ்டப்படுபவர்களுக்குப் பணம் தேவை என்றால் சரவணனிடம்தான் ஓடி வரவேண்டும். அதுவும் சும்மா ஓடி வந்தால், அவன் பணம் கொடுக்கமாட்டான். பண்ட பாத்திரமோ, நகையோ கொண்டு வந்தால்தான் பணம் கொடுப்பான். அதுவும், பாதி விலைக்குத்தான் வாங்குவான்.

கடவுள் அவன் பக்கம் இருந்து, சகல மக்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்து, அவனுக்கு இலாபத்தை வாரிக் கொடுத்தார்.

இதெல்லாம் பாவம். நம் மகனுக்குப் பாவத்தைச் சேர்த்து வைக்காதீர்கள், என்று அவன் மனைவி கமலா கண்டிப்பாள்.

போடி, போடி பிழைக்கத் தெரியாதவளே. பணம்தான் உலகம். பணம் இல்லை என்றால் ஒருவனும் நம்மை மதிக்க மாட்டான், என்று அவளைக் கிண்டல் செய்வான் சரவணன். ஒருநாள் புதிய ஆள் ஒருவன் சரவணனிடம் வந்தான்.

எனது மனைவிக்கு ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். அதற்குப் பணம் தேவைப்படுகிறது என்னிடம் உள்ள நகைகளை வாங்கிக் கொள்கிறீர்களா? என்று கேட்டான்.

அவனைப் பார்த்தால், திருட்டுப் பயல் போல இருந்தது. ஒரு மூடை நகை கொண்டு வந்து இருந்தான். நிச்சயமாக எங்காவது திருடிக் கொண்டு வந்திருப்பான். அவனைப் போகச் சொல்லுங்கள் வீண் வம்பு வேண்டாம், என்றாள் மனைவி.

ஆனால், நகையைக் கண்டதும் பேராசை பொங்கியது சரவணனுக்கு. இவ்வளவு நகை எங்கே கிடைக்கும்? என்று நினைத்து யோசிக்க மறந்தான்.

கமலா! நீ இந்த விடயத்தில் தலையிடாதே... உனக்கு என்ன தெரியும்! என்று அவளைத் திட்டி அனுப்பி விட்டு, மூடையுடன் வந்த ஆளை உள்ளே அழைத்தான். அந்த ஆள் மூடையைப் பிரித்தான். ஏராளமான தங்க நகைகள் மின்னின. மாற்று உரைத்துப் பார்த்தான் சரவணன். எல்லாமே சுத்தத் தங்கம். லட்ச ரூபாய்க்கு மேல் பெறும்.

பத்தாயிரம் ரூபாய்தான் கொடுப்பேன். இஷ்டம் இருந்தால் கொடு. இல்லாவிட்டால் போ, என்று கண்டிப்பாகப் பேசினான்.

சரி ஐயா! பணத்தைக் கொடுங்கள், என்று அழுது வடிந்தான் அந்த ஆள்.

உடனே, பணத்தைக் கொடுத்து, நகைகளை வாங்கி அலுமாரியில் வைத்துப் பூட்டினான் சரவணன்.

மனம் முழுவதும் சந்தோஷம். இப்படி ஓர் அதிர்ஷ்டம் யாருக்கு அடிக்கும்! லட்சரூபாய் பெறுமானமுள்ள நகையை பத்தாயிரத்துக்குச் சுருட்டிய தன்னுடைய திறமையை எண்ணி மகிழ்ந்தான். ஒருமாதம் சென்றது-

சரவணன் வீட்டு வாசலில் பொலிஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து இன்ஸ்பெக்டரும், காவலர்களும் கையில் விலங்கு பூட்டிய ஒருவனோடு கீழே இறங்கினார்கள். கையில் விலங்குடன் காணப்பட்டவன் ஒரு மாதத்துக்கு முன்னால் சரவணனிடம் நகைகளை விற்ற ஆசாமி. சரவணன் பயத்துடன் வாசலுக்கு வந்தான்.

இவர்தான் என் திருட்டு நகைகளை வாங்கியவர், என்று சரவணனை அடையாளம் காட்டினான் திருடன்.

அவ்வளவுதான்! இன்ஸ்பெக்டரும், காவலர்களும் சரவணனின் வீட்டுக்குள் புகுந்து, அலுமாரியைத் திறந்து திருட்டு நகைகளோடு மற்ற நகைகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டு, சரவணனை ஜீப்பில் அள்ளிப் போட்டுக் கொண்டு போனார்கள். கடவுள் சரவணனுக்கு உதவி செய்வது போல அவனை செழிக்க வைத்து, கடைசியில் பழி வாங்கி விட்டார். ஏழைகளின் வயிற்றெரிச்சல் சும்மா விடுமா?



# வெண்ணிலவே

*விண்ணில் வந்தது வெண்ணிலா*
*வெளிச்சம் தந்தது பொன்னிலா*
*கண்ணில் நின்றது அந்நிலா*
*குளிர்ச்சி தந்தது தண்ணிலா!*

*நிலவை மேகம் மூடுது*
*மௌனராகம் பாடுது*
*விலகி நிலவும் ஓடுது*
*வேறிடத்தைத் தேடுது!*

*வட்டமான வெண்ணிலா*
*வையகமெங்கும் ஓர் நிலா*
*இட்டமாக யாவரும்*
*இனிதே நாடும் வெண்ணிலா!*

*தங்கம் போல மின்னுது*
*தவழ்ந்து எங்கோ செல்லுது*
*எங்கு சென்ற போதிலும்*
*எம்மை விட்டுச் செல்லுமோ?*

கல்லொளுவை பாரிஸ்
மல்வானை

# கடல் சாமந்தி

கடலில் வாழும் விந்தையான உயிரினங்களில் ஒன்று கடல் சாமந்தி ஆகும். பார்ப்பதற்கு ஒரு பூவைப் போலிருக்கும். வெள்ளை, பச்சை, நீலம், சிவப்பு ஆகிய பல வர்ணங்களில் கடற் சாமந்திகள் உண்டு. தடித்த மயிர் போன்ற பற்றுக் கொம்புகள் உள்ளன. கடல் சாமந்தியின் வாயில் ஒரு மீன் அகப்பட்டால் இப்பற்றுக் கொம்புகளிலுள்ள நஞ்சு ஏறி அது மயங்கி விடும். கடல் சாமந்தியின் கருவிலிருந்து புழுப்போன்ற லாவாக்கள் வெளிவந்து தனித்தனி கடல் சாமந்திகளாக வளர்கின்றன.

*கு.தர்சன், தரம்-10டி,*
*கிளிநொச்சி இந்துக் கல்லூரி.*





# உங்களுக்குத் தெரியுமா?

♈ அமெரிக்கப் பெண் திருமதி ஃப்ரட்ரிக் எழுதிய உயில்தான் உலகத்தின் மிக நீளமான உயில். 4 பாகங்கள் அடங்கிய அந்த உயிலில் 95,910 வார்த்தைகள் உள்ளன.

♈ பொலிவியா அண்டை நாடான சிலியிடம் போரில் தோற்றுபோனதால் கடற்கரைப் பகுதிகளை பொலியா இழந்து விட்டது. இதனால் கடற்கரை இல்லாமல் கடற்படையைப் பராமரித்து வருகிறது.

♈ உலகில் மிகக் குறுகிய காலம் நடந்த போர் இங்கிலாந்துக்கும் ஜான்லிபாருக்கும் இடையே 1896 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்தப் போரில் ஜான்ஜிபர் 38 நிமிடங்களில் இங்கிலாந்திடம் சரணடைந்தது.

*சி.சிந்து, ஐங்கரன் வீதி, சுதுமலை.*

## விடை தெரியுமா ? 261

### உங்களுக்கும் பரிசுகள்

1. உயர்ந்த ஒலி கவரும் பொருள் எது?
2. நைட்ரஜன் உரங்கள் அளிக்கும் சத்து என்ன?
3. ஹலஜன்கள் என்பவை யாவை?
4. சூடாக்கும் போது உலோகங்களை விட கண்ணாடி எளிதில் விரிசல் அடைவது ஏன்?
5. இரத்தம் உறைவதற்கு உதவும் விற்றமின் எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 10.05.2014 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல் களாக வழங்கப்படும்.

### விடைகள் 259


1. ஜோர்ச் வோஷிங்டன்
2. தோமஸ் அல்வா எடிசன்
3. உருண்டை வடிவில்
4. கியூபா
5. லசித் மலிங்க

சிறுவர் கதிருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.


### வெற்றி பெற்றவர் விவரம் (259)

♥ ஸ்ரீ.வைஷ்ணவி, தரம்-8ஏ, மானிப்பாய் மகளிர் கல்லூரி

♥ சி.பிரதீபா, தரம்-13, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை



**சு.அனிருத்தன்**, தரம்-2
மானிப்பாய் மகளிர் கல்லூரி



**சே.கஸ்தூரி**, தரம்-2ஏ



**பா.ஹரிஸ்**, தரம்-6பி
விக்னேஸ்வராக் கல்லூரி



**செ.ஆன்தர்சனா**, தரம்-5பி
J/H/F/C



**கோ.அன்ரனிராஜ்**, தரம்-1
யாழ்.மத்திய கல்லூரி




# ராபுன்சல், ராபுன்சல் ! உன் தங்க நிற முடியைத் தரையில் அவிழ்த்து விடு...

ஆசை வெட்கம் அறியாது என்று கூறுவார்கள். ஆனால் ஆசை அந்த இளவரசனின் கண்ணையும் பறித்தது. கண் போனாலும் அவர்கள் காதல் போனதா? இந்தக் கதையில் காண்போம்.

அழகான நந்தவனம் ; பூத்துக் குலுங்கும் மலர்கள்; வசந்தத்தைக் கூவி அழைக்கும் செடி கொடிகள்; மரங்களில் மகிழ்வுடன் பாடித் திரியும் வண்ணப் பறவைகள்; சலசலக்கும் நீரோடை; கனிகளும், காய்களும், கிழங்குகளும் கூட அங்கு விளைந்தன. ஆனால், அவை யாருக்குமே பயன்படவில்லை. காரணம்? அந்த அழகிய நந்தவனமே ஒரு கெட்ட தேவதைக்குச் சொந்தமானது. நந்தவனத்துக்குள் அந்தத் தேவதை யாரையும் நுழைய விடுவதில்லை அதிலிருந்து ஒரு துரும்பைக் கூட யாரும் எடுத்துச் சென்றுவிட முடியாது.

அந்த அழகிய நந்தவனத்தில் அருகில் ஓர் ஏழையின் குடிசை. அதில் கணவனும் மனைவியும் வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள் சிவப்பு முள்ளங்கிக்ளைக் குவியல் குவியலாய்ப் பிடுங்கிப் போட்டு வைத்திருந்தது அந்தக் கெட்ட தேவதை. அந்த முள்ளங்கிகளைப் பார்த்த அந்த ஏழையின் இளம் மனைவிக்கு, அதைச் சமைத்து ருசிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அவற்றைப் போன்ற அருமையான முள்ளங்கிகள் சந்தைகளிலும் கூடக் கிடைப்பதில்லை. நீண்ட நாள்களாக அந்த முள்ளங் கிகளில் ஆசை வைத்திருந்த அவனது மனைவி அந்த முள்ளங்கிகளில் சிறிது



வேண்டுமென்று நச்சரித்தாள். "அந்தத் தீய தேவதையால் கெட்ட விளைவுகள் ஏற்படும்" என்று அவன் எவ்வளவோ எச்சரித்தும் அவள் கேட்கவில்லை.

"முள்ளங்கிகள் கொண்டு வராவிட்டால் இறந்துவிடுவேன்" என்று அடம்பிடித்தாள். எனவே அந்தக் கெட்ட தேவதைக்குத் தெரியாமல், எப்படியும் திருடிக் கொண்டு வருவதென்று முடிவுகட்டினான்.

நள்ளிரவில் தேவதை தூங்கும் என்று நினைத்து மனைவிக்காக மதில் ஏறிக் குதித்தான். அவன் செயல் தவறு என்று அவனுக்குத் தெரியும். இருப்பினும் மனைவியின் மேல் அவன் கொண்ட மட்டற்ற பாசம் இவ்வாறு செய்யும்படி தூண்டி விட்டது.

அவன் பயந்துகொண்டே பல முள்ளங்கிகளை வெடுக்வெடுக்கென்று பிடுங்கினான்.

'அப்பாடா தப்பித்தோம்' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு முள்ளங்கி மூட்டையுடன் அவன்மதில்மேல்ஏறமுயன்றபோதுதேவதை அவன் ஆடையைப் பற்றி இழுத்தது.

"அயோக்கியப் பயலே, உனக்கு என்ன தைரியம் இருந்தால் என் தோட்டத்திலேயே புகுந்து திருடுவாய்?" என கர்ஜித்தது.

"கர்ப்பவதியான எனது மனைவியின் ஆசையை நிறைவேற்ற இவ்வாறு செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு" - அதன் கால்களில் விழுந்தான்.

"மன்னிக்கிறேன், ஒரு நிபந்தனையுடன்."

"என்ன நிபந்தனை."

"பிறக்கப்போகும் உன் முதல் குழந்தையை என்னிடம் நீங்கள் ஒப்படைத்து விட வேண்டும். இல்லாவிட்டால் உங்களைச் சபித்துவிடுவேன்."

தேவதை மிரட்டியது. வேறு வழியின்றி அதை ஏற்றுக்கொண்டு முள்ளங்கி மூடையுடன் அவன் வீடு வந்தான். நடந்தவற்றை தன் மனைவியிடம்கூறினான். அவளும்வேதனையடைந்தாள். சில நாள்கள் சென்றன. அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அழகான குழந்தை. அன்றே தேவதை வந்து குழந்தையை வாங்கிச் சென்றுவிட்டது.

மிகவும் பிரியமாக அது குழந்தையை வளர்த்தது. குழந்தையை தேவதை வெளியே விடுவதில்லை. அந்தக் குழந்தைக்கு 'ராபுன்சல்' என்று பெயர் சூட்டி இருந்தது. 'ராபுன்சல்' என்ற பெயருக்கு என்ன பொருள் தெரியுமா? 'முள்ளங்கி' என்பதுதான்.

ராபுன்சலுக்கு பன்னிரண்டு வயதான போது அவளை ஓர் உயர்ந்த கோபுரத்தில் அடைத்தது. அந்தக் கோபுரத்துக்குச் செல்ல படிக்கட்டுகள் இல்லை. வேறு எந்தப் பாதையும் கிடையாது. தேவதை அவளைப் பார்க்க வேண்டுமானால், "ராபுன்சல், ராபுன்சல், உன் தங்கநிறத் தலைமுடியைத் தரையில் அவிழ்த்துவிடு" என்று கூறும். அவளும் மிக நீண்ட, பொன் நிறமான தன் தலைமுடியை அவிழ்த்துவிடுவாள். அந்தத் தலைமுடி கீழே தரையைத் தொடும். அந்தத் தேவதை அதுவழியாக ஏறி கோபுரத்துக்குள் போய்விடும்.

வயது ஆகஆக ராபுன்சலின் அழகும் கூடிக்கொண்டே போனது. ஆடவர்களை ஒரேபார்வையில் மயக்கிவிடும் உடல் அழகு. ஓவியர்கள் அவள்ளக் கண்டால் வண்ணக் குழம்பு கொண்டு வரைந்திடுவர் அவள் மேனியை. கவிஞர்கள் பார்த்துவிட்டால் கற்பனைத் தேரேறி அவளுக்காக ஒரு காவியமே படைத்து நிற்பர். அந்த வழியாக அடிக்கடி வரும் ஓர் இளவரசன் ராபுன்சலின் இனிய கீதத்தை ரசிப்பான். ஆனால் , அவளைப் பார்த்ததில்லை.

ஒரு நாள் அந்தத் தேவதை கோபுரத்துக்குள் எவ்வாறு ஏறிச் செல்கிறது என்று பார்த்துவிட்டான்.

மறுநாள் தேவதை இல்லாத நேரத்தில் கோபுரம் அருகில் வந்து நின்று.

"ராபுன்சல், ராபுன்சல், உன் தங்கநிற முடியைத் தரையில் அவிழ்த்துவிடு" என்றான். அந்தப் பூமேனியாளின் பொன்னிற முடி பூமியைத் தொட்டது. இளவரசன் அதன் வழியாக ஏறி அவள் இருந்த கோபுரத்துக்குச் சென்றுவிட்டான்.

இருவருக்கும் காதல் ஏற்பட்டது. ராபுன்சலை அவன் திருமணம் செய்துகொள்வதாக வாக்களித்தான். சில தினங்களுக்குப் பின் இளவரசன் அவளைச் சந்திப்பது அந்தத் தேவதைக்குத் தெரிந்துவிட்டது. அது கத்தரிக்கோலை எடுத்து அவளுடைய பொன் நிற நீண்ட தலைமுடியை வெட்டிவிட்டது. ராபுன்சல் மிகவும் வேதனைப்பட்டாள். அவளது தலைமுடி வெட்டப்பட்டதை அறிந்த இளவரசன் கயிற்றின் மூலம் கோபுரத்தில் ஏறி அவளைச் சந்தித்தான். அவள் அவனுடன் ஓடிவிடத் திட்டமிட்டாள். தேவதைக்கு இதுவும் தெரிந்துவிட்டது.

ஒருநாள் கோபுரத்தின் உச்சியில் பொறியை வைத்துக்கொண்டு அவனைப் பிடிப்பதற்காகக் காத்திருந்தது. அவளைப் பார்க்க கயிற்றின் வழியாக ஏறிய இளவரசன் , தேவதையிடம்வசமாக மாட்டிக்கொண்டான்.

"இளைஞனே ! என் ராபுன்சலை என்னிடமிருந்து பிரித்துவிடாதே. என்னால் அவளின்றி உயிர்வாழ முடியாது."

"அவள் என்னுடையவள்."

"இல்லை, அவள் எனக்கே சொந்தம்." "அவளை அடைய நான் எதையும் இழக்கத் தயார்."

"உன்னைஎன்னசெய்கிறேன்பார்."அவன்அருகில் சென்றது. அவன் ஜன்னல் வழியாகக் கீழே குதித்தான். முட்புதர்களில் மாட்டிக் கொண்டான்.

"உன் கண்கள் குருடாகட்டும்" என்று கெட்ட தேவதை சாபமிட்டது. அவனுக்குக் கண் தெரியவில்லை. மூன்று ஆண்டுகள் வரை காட்டில் அலைந்து திரிந்தான்.

ஒரு நாள் ராபுன்சலின் இனிய பாடல் அவனுக்குக் கேட்டது. பாடல் வந்த திசையை நோக்கி ஓடினான். ராபுன்சல் அவனைப் பார்த்துவிட்டாள். அவனைக் கட்டித் தழுவி கண்ணீர்விட்டாள். அவளது இரண்டு சொட்டு கண்ணீர் அவனது கண்களில் விழ, அவனுக்கு அற்புதமாய் பார்வை வந்துவிட்டது.

இளவரசன் அவளைத் தன் நாட்டுக்குக் கூட்டிச் சென்று திருமணம் செய்து கொண் டான்.

**நீதி : உண்மையான அன்பு தெய்வீகமானது**

கலாபூஷணம்
மு. மாசிலாமணி




கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் எண்டு ஒரு பழமொழி இருக்குதெல்லே. அதாவது சூரியனுக்கு எவ்வளவு பவர் இருக்குது எண்டதை விளக்கத்தான் உந்தப் பழமொழி வழக்கத்துக்கு வந்ததோ தெரியேல்லை. இருந்தாலும் சூரியன் இல்லாட்டி எங்கடை உலகமே இல்லை. அதாவது எமது பூமியிலை உயிரினமே இல்லை. பூமி குளிரிலை உறைஞ்சு போன ஒரு சூனியப் பிரதேசமாய் இருக்கும். பூமியிலை உள்ள உயிரினங்களை அதுதான் மனிசர், மிருகம், செடி, கொடி எல்லாத்தையும் சூரியன்தான் காத்து வருகுது. சூரிய குடும் பத்திலை 9 கோள்கள் இருந்தும் பூமிக்குத்தான் சூரியனின் அருள் கிடைக்குது பாருங்கோ. பூமியிலை உயிரினம் வாழ ஏற்ற சூழல் அதுதான். காற்று, நீர், ஒளி சாதகமாய் இருக்குது.

அது சரி இருந்தாப்போல என்ன சங்கதி சூரியனைப் பற்றி கதைக்க வெளிக்கிட்டீட்டன் எண்டு கேக்கிறியளோ. அதுதான் சூரிய கிரகணம் வரேக்கை சாப்பிடக்கூடாது சூரியனைப் பாம்பு விழுங்குது. அந்த நேரத்திலை சாப்பிட்டால் சாப்பாடு நஞ்சாய்ப் போகும் எண்டெல்லாம் பலவிதமான மூட நம்பிக்கையளும் இப்பவும் எங்கட மக்களிடையே இருக்குது. அந்த மூட நம்பிக்கையிலை இருந்து ஐயாத்துரையரோ அல்லது தங்கம்மாவோ விதிவிலக்கான ஆக்களில்லை பாருங்கோ. போன கிழமை சூரிய கிரகணம் வந்த போது தங்கம்மா ஐயாத்துரையருக்கு சாப்பாடு குடுக்கேல்லை. காரணம் சாப்பாடு நஞ்சாய்ப் போகும் எண்டுதான். அதை விட எங்கட பஞ்சாங்கத்திலையும் சூரிய கிரகணக்காலங்களில சில காரியங்களைச் செய்யக் கூடாது எண்டு போட்டிருக்கு. அது சரி சூரிய கிரகணம் எண்டா என்ன எண்டு தெரியும்தானே. பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் வரும்போது சந்திரனின் நிழல் பூமியில் விழும். நிழல் விழுந்த இடங்களிலிருந்து சூரியனைப் பார்க்க முடியாது. இந்தச் சூரிய கிரகணம் 7 நிமிடம் 31 விநாடிகள் நிலைக்கும். என்ன இருந் தாலும் சூரியன் எமது பிரபஞ்சத்துக்கு நாயகன் தானே. அந்த நாயகனைப் பற்றி விஞ்ஞானிகள் சொன்ன பல தகவல்களிலை சிலதை உங்களுக்குச் சொல்லலாம் எண்டு யோசிக்கிறன். முதலிலை சூரியன் பூமியை விட 109 மடங்கு விட்டத்தில் கூடியது.

எடை பூமியை விட 33 லட்சம் மடங்கு அதிகம்.

இதனது ஈர்ப்புச் சக்தி பூமியை விட 28 மடங்கு அதிகம்.

பூமியிலை கடும் வெயில் அடிக்கேக்க ஆக 30-35 டிகிறி செல்சியஸ்தான். ஆனால் சூரியனின்ரை மேற்பரப்பிலை அதைவிட பல ஆயிரம் மடங்கு அதிகம். அதைவிட சூரியன்ரை மையப் பகுதியில் இன்னும் வெப்பம் கூட. பூமியைப் போல சூரியன் திடமான கோள் இல்லை. இது ஒரு எரியும் வாயுக்களாலான பந்தம். சிலநேரம் சூரியனிலை இருந்து எரியும் தீச்சுவாலை 2 1/2 லட்சம் மைல் உயரத்துக்கும் எழும்பும் எண்டு விஞ்ஞானிகள் கூறியிருக்கினம்.

அது சரி சூரியன் பூமியிலிருந்து எவ்வளவு தூரத்திலை இருக்குது எண்டு தெரியுமோ? என்ன தலையைச் சொறியிறியள்? கணக்கு வாத்தியார் மாதிரி கேட்கிறான் எண்டு நினைக்கிறியளோ? நான் அப்படி ஒண்டும் பெரிய வாத்தியார் இல்லை. பத்திரிகையள், சஞ்சிகைகளிலை வாற நல்ல தகவல்களைக் கொஞ்சம் குறிச்சு வைச்சிருக்கிறன். அவ்வளவுதான். சரி நானே சொல்லுறன். மைல் கணக்கு அல்லது கிலோமீற்றர் கணக்கில சொன்னால் தலை சுத்தும். ஆனால் அதுக்கும் வான்வெளி விஞ்ஞானிகள் வேற ஒரு முறையையும் கையாளுகினம். அதுதான் ஒளி ஆண்டுக் கணக்கு Light years எண்டு சொல்லுவினம். ஒரு ஒளி ஆண்டு எண்டால் ஒரு வருசத்திலை ஒளி செல்லக்கூடிய தூரம். அதுசரி ஒரு செக்கனுக்கு ஒளி செல்லக்கூடிய தூரம் எவ்வளவு தெரியுமோ? 1,86,282 மைல். அப்ப ஒரு ஆண்டுக்கு கணக்குப் பார்க்கத் தெரியுமோ. 60 செக்கன்கள் ஒருநிமிடம். 60நிமிடம்ஒருமணி. 24மணிஒருநாள் எண்டு பெருக்கிக் கொண்டே போங்கோ. நான் சொன்னமாதிரி ஒன்பது கோள்களின் தூரங்களையும் சூரியனிலை இருந்து தான் கணக்குப் பார்த்திருக்கினம். சூரியனிலை இருந்து ஒளி பூமிக்கு வந்து சேர 8 நிமிடம் 20 செக்கன் பிடிக்கும். சூரியன்தான் சூரியக் குடும்பத்திலை உள்ள பெரிய நட்சத்திரம் எண்டு நினைக்க வேண்டாம். சூரியனை விட மிகப்பெரிய நட்சத்திரங்களும் இருக்குதாம். அந்தப் பிரபஞ்சத்தை ஆராய்ந்து கொண்டே இருக்கினமாம் விஞ்ஞானிகள். பூமி தன்னைத் தானே ஒருமுறை சுற்ற 24 மணி நேரம் எடுக்கிற மாதிரி, சூரியனும் தன்னைத் தானே சுத்தும். ஆனால் அது ஒரு முறை சுத்த 25.4 நாள் எடுக்குமாம். சூரியனிலை பல சூரியப் புள்ளிகள் தோன்றுமாம். இவைகளை கரும்புள்ளிகள் எண்டும் சொல்லுவினம்.

றேடியோ அலைகளும் சூரியனிலை இருந்து வீசப்படுகுதாம். இது பூமிக்கு வரும் போது எமது றேடியோ ஒலிபரப்பில் குறும் அலைகள் அதாவது short waves ஒலிபரப்புகளைப் பாதிக்குதாம். அதுதான் பாருங்கோ பகலிலை கொழும்பு றேடியோவை யாழ்ப்பாணத்திலை இருந்து கேட்க ஏதோ இரைச்சலாய் இருக்கும். இரவிலை இது கிளியறாய்விடும். இதைவிட மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய அல்ற்றா வைலற் கதிர்களும் பூமிக்கு வருகுதாம். அதை ஓசோன் படலம் வடிகட்டி எடுக்குதாம்.

இப்படியான சக்திமிக்க சூரியனை நாங்கள் எந்த நாளும் கண்கூடாகப் பாக்கிற பாக்கியம் எங்கள் கண்ணுக்கு இருக்குது. ஆதியிலையிருந்து மனிதன் சூரியனை ஒரு கடவுளாய் நினைச்சுக் கும்பிட்டு வந்திருக்கிறான். பண்டைய கால கிரேக்கர் முதல் கொண்டு இந்துக்கள்வரை சூரியனையும் கடவுளாய் தான் நமஸ்காரம் பண்ணிவாறம். எங்கடை தைப்பொங்கலும் அவருக்கு thanks சொல்லத்தானே. 9 நவக்கிரகங்களுக்கு சூரியன் தான் தலைவன். இந்துக் கோயில்களிலை நவக்கிரகப்பூசை மிகவும் முக்கியம் பாருங்கோ. சரி நான் உங்களோடை கதைச்சுக்கொண்டு இருந்ததிலை சாப்பாட்டு நேரமும் வந்திட்டுது. போட்டுவாறன். அடுத்த கிழமை சந்திப்பம்.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி...?

04.05.2014 முதல் 10.05.2014 வரை

### மேடம்

எதிர்ப்புகளைச் சமாளித்து புதிய உத்வேகத்துடன் பணிபுரிவீர்கள். பேசும் வார்த்தை இனிதாக அமைந்து நற்பெயர் பெற்றுத்தரும். இல்லறத் துணை குடும்பத் தேவையை, பொறுப்புணர்வுடன் மேற்கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை மிதமான அளவில் இருக்கும். பணியாளர் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை கவனத்துடன் பின்பற்ற வேண்டும். மாணவர்கள், நண்பர்களுடன் எதார்த்த மனதுடன் பழகுவர்.

### இடபம்

எண்ணமும் செயலும் பிறர் நலம் கருதுவதாக அமைந்து சமூகத்தில் நன்மதிப்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நண்பரின் உதவியால் வளர்ச்சிகர மாற்றம் உருவாகும். பணியாளர்களின் ஆர்வமிகு செயலால் பணி இலக்கு குறிப்பிட்ட அளவில் நிறைவேற்றுவர். மாணவர்கள் மன அமைதியைப் பாதுகாப்பதால் படிப்பில் எதிர்பார்த்த முன்னேற்றம் பெறலாம்.

### மிதுனம்

மனதில் பொறுமை, செயலில் சுறுசுறுப்பைப் பின்பற்றி பணிகளில் ஈடுபடுவீர்கள். அக்கம் பக்கத்தவர் சச்சரவு மறந்து, அன்பு பாராட்டுவர். இல்லறத்துணையின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் கொடுப்பதால் குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், எதிர்பார்த்த அரசு உதவியும் கிடைக்க அனுகூலம் உண்டு. பணியாளர் ஓரளவு சலுகை பெறுவர். மாணவர்கள் புதிய பயிற்சி முறையால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

### கடகம்

மகிழ்ச்சி நிறைந்த மனதுடன் பணிகளை மேற்கொள்வீர்கள். சிலர், புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. எதிர் மனப்பாங்குடன் உங்களிடம் பழகிய சிலர் தமது நிலையில் நல்மாற்றம் பின்பற்றுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து உபரிபணவரவு கிடைக்கும். பணியாளர் பணிபுரியும் இடத்தில் சுமுக சூழ்நிலை அமைந்து திறம்படப் பணிபுரிவர். மாணவர்கள், பொதுஅறிவு சார்ந்த விடயங்களை அறிந்து கொள்வர்.

### சிங்கம்

பேசுவதில் நிதானம் பின்பற்றுவதால் சமூகத்தில் பெற்ற நற்பெயரைப் பாதுகாக்கலாம். கடந்த நாள்களில் எதிர்மறை எண்ணங்களுடன் உங்களிடம் பழகியவரும் நல் அபிப்பிராயத்துடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில் தன்மதிப்பை உயர்த்த, அபிவிருத்திப் பணி புரிவீர்கள். பணியாளர் நிர்வாகத்தின் நம்பிக்கையை பெரிதெனக் கொண்டு ஆர்வத்துடன் சிறப்பாக பணிபுரிவர். மாணவர்கள், விலை உயர்ந்த உபகரணங்களை கவனத்துடன் பயன்படுத்தவும்.

### கன்னி

கடந்த தினங்களில் சிலரது நடவடிக்கையால் உருவான விரக்தி மனதில் ...றுபூத்த நெருப்பாக இருக்கும். ...தியம், தர்மம் ஆகிய குணங்களைப் பின் பற்றுவதால் வாழ்வில் ...னைய சிர மங்கள் வராமல் ...ர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் ...திக உழைப்புக்கு உரிய பலனை ...ற்றுத்தர உதவும். மாணவர்கள் ...ருமுகத்தன்மையுடன் படிப்பதால், ...ர்ச்சி சீராகும்.

### துலாம்

எதிர்மறைச் சிந்தனையைத் தவிர்த்து பணிபுரிவதால் பெற வேண்டிய நன்மை உரிய அளவில் கிடைக்கும். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர் ஓரளவு உதவுவர். தொழில், வியாபாரத்தில் சிலமாற்றம் பின்பற்றுவது தவிர்க்க முடியாததாக இருக்கும். பணியாளர், சலுகைப்பயன் பெறுவதில் தாமதம் ஏற்படலாம். மாணவர்கள், நண்பரின் உதவியால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

### விருச்சிகம்

புதிதாக ஆரம்பிக்கும் செயல்கள் எதிர்பார்த்த அளவில் நன்மை தரும். சமூகத்தில் உங்கள் மீதான அந்தஸ்து அதிகரிக்கும். தெய்வ வழிபாட்டை, திருப்திகரமாக நிறைவேற்றுவீர்கள். தொழில் வளர்ச்சியில் திருப்திகர முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை வந்து சேரும். மாணவர்களின் ஞாபகத்திறன் அதிகரித்து படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

### தனுசு

வாழ்வில் நீண்டநாள் எதிர்பார்த்த நன்மை, வியத்தகு அளவில் கிடைக்கும். இடம், சூழ்நிலை உணர்ந்து நண்பர்களிடம் பேசுவது நல்லது. இல்லறத்துணை உங்களின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையின் அளவை சராசரிக்குக் கொண்டு வருவீர்கள். பணியாளர் பாதுகாப்பு முறையைத் தவறாமல் பின்பற்றவும்.

### மகரம்

கடந்த நாள்களில், அறிமுகமான சொந்தமும் நட்பும் கூடுதல் அன்பும் பாராட்டுவர். எதிர்மறையாக உங்களிடம் நடந்தவர் நல்ல அபிப்பிராயம் கொள்கிற சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் நிலவும் அனுகூலத்தன்மையைப் பாதுகாப்பது அவசியம். பணியாளர் பணியிடத்தில் பொது விடயம் பேசவேண்டாம். மாணவர்கள், நண்பரின் பேச்சு, செயலில் குறைகாண வேண்டாம்.

### கும்பம்

...சும் வார்த்தை வசீகரமாக ...மைந்து புதியவர்களின் அன்பைப் ...ற்றுத்தரும். உத்வேகத்துடன் ...ணிகளில் ஈடுபடுவீர்கள். எதிரியால் வருகின்ற சிரமம் பலமிழக்கும். தொழில், வியாபாரம் செழித்து வளர புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவீர்கள். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி திட்டமிட்ட அளவில் பணி இலக்கை அடைவர். மாணவர்கள் படிப்புத் தொடர்பான புதிய விடயங்களை நண்பரின் உதவியால் பெறுவர்.

### மீனம்

உதவிகரமாகச் செயற்பட்டவர்களுக்கு நன்றியை உரிய தருணத்தில் சொல்வீர்கள். பணியில் பணவரவு கூடுதல் அளவில் கிடைக்க உதவும் வழிவகை குறித்து சிந்திப்பீர்கள். கண் தொடர்பான பிணி வராமல் கவனத்துடன் பேணுவது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர் சலுகை பெறுவதில் தாமதம் ஏற்படலாம். மாணவர்கள், ஆசிரியரின் கருத்தை மறுத்துப் பேச வேண்டாம்.



20ஆம் நூற்றாண்டின் மகத்தான கதை சொல்லியாகப் போற்றப்படும் லத்தீன் அமெரிக்க படைப்பாளி காப்ரியல் கார்சியா மார்க்வெஸ். கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் தனது 87ஆவது வயதில் காலமானார்.
பல நூற்றாண்டுகளாக மூடுண்ட நிலமாக இருந்த லத்தீன் அமெரிக்கவின் பொதுமக்களது வாழ்வையும், கலாசாரத்தையும், நம்பிக்கைகளையும் இரத்தமும் சதையுமாக பரிமாறிய கதாசிரியர் அவர். 1967இல் அவர் எழுதிய 'தனிமையின் நூறு ஆண்டுகள்' நாவல் நோபல் பரிசு பெற்றது. அந்த நாவலின் மூலம் லத்தீன் அமெரிக்கா மீது உலகத்தினரின் கவனம் குவிந்தது. பத்திரிகையாளராக வாழ்வைத் துவக்கிய மார்க்வெஸின் படைப்புகளில் அவரது இதழியல் அனுபவங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.
புனைவில் ஓர் உண்மை இருந்தால்கூட போதும், புனைவு காப்பாற்றப்பட்டு விடும். ஆனால் செய்திக் கட்டுரையைப் பொறுத்தவரை ஒரு பொய் மொத்தச் செய்தியையும் கொன்றுவிடும் என்று அவர் கூறியுள்ளார். பத்திரிகையாளர்களால் இன்றும் போற்றப்படும் வாசகம் இது.
ஸ்பானிய மொழியில் எழுதிய நாவலாசிரியர்களில் புகழ்பெற்ற மிகப்பெரும் எழுத்தாளர்களில் ஒருவர் என்று கருதப்படும் கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ், நூறாண்டு காலத் தனிமை (வன் ஹண்ட்ரட் இயர்ஸ் ஒப் சாலிட்டியூட்) என்ற மாஜிக்கல் ரியலிச பாணி புதினத்தால் உலகப் புகழ் பெற்றவர். 1967இல் எழுதப்பட்ட இந்தப் புதினம் உலகெங்கும் 3 கோடி பிரதிகளுக்கு மேல் விற்றது. 1982இல் அவர் நோபல் பரிசைப் பெற்றார்.
சமீபத்தில் அவர் நுரையீரல் மற்றும் சிறுநீரகப் பாதையில் ஏற்பட்ட தொற்றுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.
அவர் மெக்சிகோவில் 30 ஆண்டுகளுக்கும் மேலான காலம் வாழ்ந்தார். ஆனால் சமீப ஆண்டுகளாக அவர் பொது மேடைகளிலும் நிகழ்ச்சிகளிலும் தோன்றுவதைப் பொதுவாகத் தவிர்த்து வந்தார். கொலரா காலத்தில் காதல் ( லவ் இன் டைம்ஸ் ஒப் கொலரா) ஒரு சாவைப் பற்றி முன்கூட்டியே சொல்லப்பட்ட கதை (க்ரோனிக்கில் ஒப் எ டெத் போர்டோல்ட்) மற்றும் சந்து பொந்துகளில் சிக்கிய ஜெனரல் (த ஜெனெரல் இன் ஹிஸ் லேபிரிந்த்) ஆகியவை அவர் எழுதிய நூல்களில் மற்றவையாகும்.

# நூற்றாண்டின் தனிமை

வட அமெரிக்காவின் பூர்வகுடிகளான செவ்விந்தியர்களை ஆங்கிலேயர்கள் அழித்தொழித்து அமெரிக்கா ஆக்கிய வரலாறு அனேகருக்குத் தெரியும். ஆனால் லத்தீன் அமெரிக்கா எனப்படும் தென் அமெரிக்கக் கண்டத்தில் நடந்துள்ள அதைவிட மோசமான சோகக் கதைகளை அறிந்தவர்கள் சிலர் மட்டுமே.
"லத்தீன் அமெரிக்காவின் யதார்த்தம் நீங்கள் கற்பனையில்கூடத் தரிசிக்க முடியாத குரூரங்களையும் விநோதங்களையும் கொண்டது. அந்த யதார்த்தங்களை விவரிக்க மரபுரீதியான உத்திகள்கூட இல்லை என்பதுதான் எங்கள் தனிமையின் சாரம்" காப்ரியல் கார்சியா மார்க்வெஸின் நோபல் பரிசு ஏற்புரைக்குப் பின் வரும் இந்த வரிகளுக்குள் பொதிந்து கிடப்பது ஐந்து நூற்றாண்டுகளின் சோகமும் கோபமும். தனிமையின் நூறு ஆண்டுகள்' என்ற நூல் அந்த வரலாற்றின் ஒரு செதுக்கல்தான். அந்த வரலாற்றுச் சோகம் 1492ஆம் ஆண்டில் கொலம்பஸ் என்ற ஸ்பானிய மாலுமியின் வருகையில் துவங்கியது.

**பூர்வகுடிகளை அழித்த வரலாறு**

ஸ்பானிய மன்னரின் ஆசி பெற்று, தங்கம் இருக்கும் இந்தியாவைத் தேடிப் புறப்பட்ட கொலம்பஸ், இந்தியா என்று நம்பி இறங்கியது, இப்போது கரீபியத் தீவுகள் என்று அறியப்படும் நிலப் பகுதியில்தான். அங்கு வாழ்ந்த அரவாக் பூர்வ குடியினர் கொலம்பஸை எப்படி வரவேற்றனர்?
"அரவாக்குகள் எங்களை நோக்கி உணவு, தண்ணீர் ஏந்தி ஓடிவந்தனர். கிளிகளையும் பஞ்சுப் பந்துகளையும் ஈட்டிகளையும் பரிசாகக் கொடுத்தார்கள். அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இல்லை. ஆயுதங்கள் என்றால் என்னவென்றே அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களிடம் ஒரு வாளியைக் கொடுத்தேன். விவரமறியாத அவர்கள் அதன் கூரான ஒரு பகுதியைப் பிடித்ததால் காயமடைந்தனர். கட்டுமஸ்தான உடலமைப்பைக் கொண்ட அவர்கள் நல்ல வேலைக்காரர்களாக இருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டேன்."
இப்படிக் குறிப்பெழுதிய கொலம்பஸ் அவர்களுக்கு ஓர் ஆணையிட்டார். 14 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு அரவாக்கும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குறிப்பிட்ட அளவு தங்கம் கொண்டுவர வேண்டும். கொண்டுவருபவர்கள் கழுத்தில் தாமிரச் செப்புகள் மாட்டப்பட்டன. தாமிரச் செப்பு இல்லாதவர்களின் கைகள் வெட்டப்பட்டன. ஆயுதம் என்றால் என்னவென்று அறியாத அப்பாவிகளால் ஸ்பானியக் கொள்ளையரின் குதிரைகளையும் வாள்களையும் எதிர்த்து நிற்க முடியவில்லை. கசாவா எனும் விஷக் கிழங்குகளைத் தின்று கூட்டம் கூட்டமாகத் தற்கொலை செய்துகொண்டனர்.
பச்சிளங் குழந்தைகள் ஸ்பானியர் கைகளில் சிக்கிவிடக் கூடாது என்று பயந்து, அந்தக் குழந்தைகளை அவர்களே கொன்றுவிட்டனர். இரண்டே ஆண்டுகளில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான அரவாக்குகள் கொல்லப்பட்டனர். அல்லது தற்கொலை செய்துகொண்டனர். 1650 ஆம் ஆண்டு வெளிவந்த ஓர் அறிக்கை இப்போது ஹைட்டி என்றழைக்கப்படும் தீவில் அரவாக் இனமே அழிந்துவிட்டது என்று கூறுகிறது.
கொலம்பஸுக்குப் பின் தென் அமெரிக்காவில் வந்திறங்கிய ஐரோப்பியர்கள் ஆஸ்டெக், இன்கா, ஹாட்டரர்ஸ், பெக்வெட் பூர்வகுடி இனங்களைக் கொன்றழித்தனர். இங்கிலாந்திலிருந்து சென்றவர்கள் ஆக்கிரமித்த வட அமெரிக்கா ஆங்கில அமெரிக்கா என்றும், லத்தீன் மொழியை வேராகக் கொண்ட ஸ்பானிய, போர்த்துக்கீசிய மொழி பேசுபவர்கள் ஆக்கிரமித்த தென்பகுதி லத்தீன் அமெரிக்கா என்றும் பெயர்பெற்றது இப்படித்தான்.

**ஸ்பெயின்: உலகின் முதல் வல்லரசு**

ஐரோப்பிய முதலாளித்துவத்தின் மூலதனப் பசிக்கு அமெரிக்க பூர்வகுடியினரின் குருதிதான் முதல் படையல்! 1,000க்கும் மேற்பட்ட தானிய வகைகளைப் பயிர் செய்யவும், மச்சு பிச்சு என்ற அற்புதக் கட்டடக் கலையின் சின்னத்தை உருவாக்கவும் திறன்பெற்ற பூர்வகுடிகளின் கலாசாரத்தின் கல்லறையின் மீதுதான் ஐரோப்பிய நாகரிகம் எழுப்பப்பட்டது.
தென் அமெரிக்காவில் கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தவுடன் அதன் மீது ஸ்பெயினும் போர்ச்சுகலும் உரிமை கொண்டாடின: அன்றைய பாப்பரசர் ஸ்பெயின் தேசத்தைச் சேர்ந்தவர். போர்த்துகீசிய நாட்டுக்கு ஆதரவாக வழங்கப்பட்டிருந்த பாப்பரசரின் ஆணைகள் நீக்கப்பட்டு, தென் அமெரிக்காவைச் சூறையாடும் முழு உரிமை ஸ்பெயினுக்கு வழங்கப்பட்டது.
"கிறிஸ்டோபர் கொலம்பஸ் தெய்வீக அருளுடன் மிகவும் சிரமப்பட்டு ஒரு பெருங்கடலைக் கடந்து சில தீவுகளையும் சில பிரதான நிலப் பகுதிகளையும் கண்டுபிடித்துள்ளார். அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் உடை அணிவதில்லை என்றும், மாமிசம் சாப்பிடுவதில்லை என்றும் கூறப்படுகிறது. அந்த மக்கள் சொர்க்கத்தில் இருக்கும் ஒரு கடவுளின் மேல் நம்பிக்கை கொண்டவர்கள்.
"கத்தோலிக்க மதத்தைத் தழுவி, நல்லொழுக்க நெறிகளில் பயிற்சி பெறத் தயாராக உள்ளனர். இந்தத் தீவுகளில் தங்கம், நறுமணப் பொருள்கள் மற்றும் பல அரிய பொக்கிஷங்கள் நிறைந்துள்ளன. ஸ்பெயின் நாட்டு அரசக் குடிகளான நீங்கள் உங்கள் மூதாதையரைப் போலவே அப்பிரதேசங்களையும் அங்கு வாழும் மக்களையும் உங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து அவர்களுக்கு கத்தோலிக்க நம்பிக்கை ஏற்படுத்த வேண்டுமென விரும்புகிறீர்கள்."
இப்படிக் கூறிய பாப்பரசரின் ஆணை ஆர்டிக் கடலில் இருந்து அண்டார்டிக் கடல் வரை ஓர் எல்லைக் கோட்டை வரைந்து, அதற்கு உட்பட்ட பகுதிகள் ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தம் என்று வரையறுத்தது.
கடவுளின் ஆசியுடன் பூர்வகுடி அமெரிக்கர்களிடமிருந்து திருடிய நிலப் பரப்புகளிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்கமும் வெள்ளியும்தான் ஸ்பெயினை 15, 16ஆம் நூற்றாண்டுகளில் உலகின் முதல் வல்லரசாக மாற்றின. ஸ்பெயினுக்கு எதிராக லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட பல புரட்சிகளுக்கு எதிராக நடந்த பல மக்கள் எழுச்சிகளுக்குத் தலைமை தாங்கியவர்தான் சிமோன் பொலிவர்.

**அமெரிக்க வல்லரசு**

இதே காலகட்டத்தில் வட அமெரிக்கப் பகுதியில் பூர்வகுடி செவ்விந்தியரின் அழிவின் மீது உருவாக்கப்பட்ட புகையிலைத் தோட்டங்களில் பணிபுரிய லட்சக்கணக்கான ஆபிரிக்கர்களை அடிமைகளாக இறக்குமதி செய்து, பொருளாதார வளர்ச்சியடைந்தது அமெரிக்கா.
லத்தீன் அமெரிக்காவில் ஐரோப்பிய சக்திகளின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக 1830களில் மன்ரோ கொள்கையை அமெரிக்கா வெளியிட்டது. இந்த வல்லரசுப் போட்டியில் இறுதியாக 1898இல் நடந்த போரில் அமெரிக்கா ஸ்பெயினை வெற்றிகொண்டது.
லத்தீன் அமெரிக்காவைத் தன் ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்த அமெரிக்கா, பாடிஸ்டா என்ற சர்வாதிகாரியின் ஆட்சியிலிருந்த கியூபாவில் தலையிடும் உரிமையை சட்டமாக்கியது; தன்னிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், டொமினிகன் குடியரசின் வங்கிகள், நிதி நிறுவனங்களைக் கந்துவட்டிக்காரர்கள் போலக் கைப்பற்றியது; மெக்சிகோ நாட்டில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை அடக்க, தன் இராணுவத்தை அனுப்பி, அந்த நாட்டுச் சர்வாதிகாரி போர்ஃபிரியோ டையஸுக்கு ஆதரவாக நின்றது; ஹோண்டுரோஸ் நாட்டுக்குள் நான்கு முறை இராணுவத்தை அனுப்பியது; பனாமா நாட்டிலிருந்து நிலப் பகுதியை அபகரித்து பனாமா கால்வாயை வெட்டி, கப்பல் போக்குவரத்தை அதிகரித்துத் தன் வர்த்தகத்தை வளப்படுத்தியது. அமெரிக்கத் தொழிலதிபர்களின் நலன்களைப் பாதுகாக்க அமெரிக்கா செய்த அட்டூழியங்களின் இந்தப் பட்டியல் அட்லாண்டிக் பெருங்கடலின் கரையை விட நீளமானது. சர்வாதிகாரிகளின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், அமெரிக்கத் தொழிலதிபர்களின் சுரங்கங்கள், பழத் தோட்டங்களை நாட்டுடைமையாக்கவும் நினைத்த சோஷலிஸ அரசுகளின் கொடுங்கோன்மையை ஒடுக்கவும் அமெரிக்கா எடுத்த முயற்சிகள், ஐரோப்பிய காலனியாதிக்கங்கள் முன்பு செய்த அட்டூழியங்கள் ஏற்படுத்திய வடுக்களை மீண்டும் காயங்களாக்கின.
போரில் இழந்த வலது காலுக்கு ஒரு பிரம்மாண்டமான இறுதி நிகழ்ச்சி நடத்திய மெக்சிகோவின் சர்வாதிகாரி, ஈக்குவடோர் நாட்டின் சர்வாதிகாரி இறந்த பிறகு ஜனாதிபதியின் இருக்கையில் இராணுவ உடையுடனும் பதக்கங்களுடனும் அமர்த்தப்பட்ட அவருடைய பிணம், முப்பதாயிரம் விவசாயிகளைப் படுகொலை செய்த பக்தி நிறைந்த எல் சால்வடோர் நாட்டு அதிபர், சிலி நாட்டின் சோஷலிச அதிபரைக் கொன்று பினோசெ என்ற சர்வாதிகார பொம்மையை அமெரிக்கா ஆட்சியில் அமர்த்திய பிறகு, சிலி நாட்டிலிருந்து ஓடிப்போன, காணாமல் போன பத்து லட்சம் மக்கள் - இப்படி தன் நோபல் ஏற்புரையில் மார்க்வெஸ் பட்டியலிடும் விநோதங்களும் குரூரங்களும் எந்தக் கற்பனைப் படைப்பையும் விஞ்சும் யதார்த்தங்கள்.
இவை அவரின் மாய யதார்த்த எழுத்துக்களில் கனவுகளாகவும், நம்புதற்கரிய புனைவுகளாகவும் வெளிப்படுகின்றன. லத்தீன் அமெரிக்காவின் தனிமை நூறு ஆண்டுகளில் அல்ல, ஐநூறு ஆண்டுகளில் உருவானது.



■ தேரடியான்



# மனமே
## நன்மை நினைப்பாய் தினமே!

'ஆண்டுக்கு ஆண்டு திகதிக்குத் திகதி ஆயிரமிருக்குது சுப தினம். அடுத்தவர் நலனை நினைப்பவர் தமக்கு ஆயுள் முழுவதும் சுபதினம்.' இது இப்போதும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கும் சீர்காழி கோவிந்தராஜனின் ஒருபாடல். பாடலிலுள்ள சொற்களால் அது சிறப்புப் பெறுகின்றதா? அல்லது சீர்காழியின் குரலால் சிறப்புப் பெறுகிறதா? தெரியவில்லை; புரியவில்லை. போகட்டும்.

ஐ.நாவினால் சர்வதேச தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றன. ஜனவரியில் ஒரே ஒரு சர்வதேச தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அது ஜனவரி 27 ஆம் திகதி பேரழிவுகளில் உயிர் நீத்த பொது மக்களை நினைவு கூரும் தினம் ஆகும். டிசெம்பர் 20 ஆம் திகதி சர்வதேச மனித ஒருமைப்பாட்டுத் தினம் அடங்கலாக, 114 சர்வதேச தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஆகக் கூடுதலாக மார்ச் மாதத்தில் 16 சர்வதேச தினங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஐ.நா. தனது ஐ.நா. சாசன நோக்கங்களை அடைவதற்காக முக்கிய அரசியல், பொருளாதாரம், பண்பாடு மற்றும் மனித உரிமைகள் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடாக இந்நாள்களைப் பிரகடனப்படுத்தியுள்ளது. சர்வதேச, தேசிய மட்டங்களில் அவற்றை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டங்களிலும் ஐ.நா. ஈடுபடுகின்றது.

அவற்றுக்கு மேலாக சர்வதேச ஆண்டுகளையும், ஆண்டு தோறும் பிரகடனப்படுத்திச் செயற்பட்டு வருகின்றது. 2014 ஆம் ஆண்டிற்கான சர்வதேச ஆண்டாக -

1. பலஸ்தீனிய மக்களுக்கான அக்கறையில் ஒருமைப்பாடு.
2. சிறிய தீவு நாடுகளை மேம்படுத்துதல்.
3. படிகங்களின் அணுக்கட்டமைப்பு ஆராய்தல்.
4. குடும்ப தோட்டச் செய்கை ஆகியவற்றில் கரிசனை காட்டி அதற்காக உழைக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

ஐ.நா. பிரகடனப்படுத்தியுள்ள சர்வதேச தினங்களில், மே 1 தொழிலாளர் தினம் அடங்காத போதிலும், உலக அளவில் கொண்டாடப்படும் தினங்களில் மே தினம் பிரபல்யமானது.

அதே போன்று பல்வேறு நாட்டு அரசுகளும், நாட்டிலுள்ள நிறுவனங்களும், மன்றங்களும் தமக்கே உரித்தான நோக்கங்களை இலக்காகக்கொண்டு விசேட தினங்களைப் பிரகடனப்படுத்தி செயலில் இறங்குகின்றன.

ஒருதினம் போதென்றால், விழிப்புணர்வு வாரம், மாதம் என அது தனது இலக்கை அடைய கால அளவு நீட்சியுறும்.

அனைத்திலும் தம் இலக்கினை அடைய மக்களைத் தயார்ப்படுத்துதல் முக்கியமான செயற்பாடாக அமையும் அமைய வேண்டும். இல்லையேல் உரிய தினம், வாரம், மாதம் தோல்வியைத் தழுவிய தினமாக, வாரமாக அல்லது மாதமாக அமைந்துவிடும். உதாரணமாக சுகாதார வாரமாகப் பிரகடனப்படுத்திவிட்டு மக்களைத் தயார்ப்படுத்தாது விடின் அது வீணான வாரமாகவே நிறைவடைந்து விடும். இன்னும் சில காலங்களில் ஒரு தேர்தல் வரக் கூடும்.


தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதும், மக்களைத் தயார்ப்படுத்தும் செயற்பாடு ஓரிரு மாதங்களுக்கு முன்னரே, முழு வீச்சில் ஆரம்பித்துவிடும். மக்கள் மீதான அத்தகைய அக்கறையை, ஏனைய தினம் விடயங்களில் நாம் காட்டாது, தினங்களைப் பிரகடனம் செய்வதனை விட, அத்தகைய தினங்களைக் கொண்டாடத் தீர்மானிக்காமலிருப்பதே சாலச் சிறந்தது.

---

■ முருகதாஸ்



# பழிவாங்கும் எண்ணம் மறையாத மனிதர்கள்



பழிவாங்கும் கதைகளையும் சினிமாவையும் பிரிக்கவே முடியாது. தமிழ் சினிமாவிலும் பழிவாங்கும் கதைகளுக்கு மவுசு குறையாமலே இருக்கின்றது. கணவனைத் தண்டித்த மன்னனை வீழச்செய்து மதுரையை எரித்த கண்ணகியின் வரலாற்றைப் பிரதிபலித்த பூம்புகார் வெளியான அறுபதுகளிலேயே பழிவாங்கும் படங்கள் துளிர்விடத் தொடங்கின.

எண்பதுகளில் ரஜினி, கமல் நடித்த *நான் சிகப்பு மனிதன், எனக்குள் ஒருவன், மங்கம்மா சபதம், கல்யாணராமன், அபூர்வசகோதரர்கள், நான் மகான் அல்ல, நீயா, பொல்லாதவன், குரு சிஷ்யன், மூன்று முகம், சிவா, மகாநதி, வெற்றி விழா, ஒரு கைதியின் டைரி* இப்படிப் பல படங்கள் பழிவாங்கும் கதைக்களத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன.

இந்தச் சரித்திரம் கமல் ரஜினியோடு மட்டும் நின்று விடாமல், மோகன்- *24 மணி நேரம்,* விஜய்காந்த்- *ஹானஸ்ட் ராஜ்,* பிரபு- *சீதனம்,* சரத்குமார்- *நம்ம அண்ணாச்சி,* சத்யராஜ்- *ஜீவா, வண்டிச்சோலை சின்னராசு,*



கார்த்திக்- *காத்திருக்க நேரமில்லை,* அர்ஜுன்- *பிரதாப்,* அஜித்- *வரலாறு, ஆழ்வார்,* விஜய் - *ஆதி,* மாதவன்- *ரெண்டு,* கார்த்தி- *நான் மகான் அல்ல,* சூர்யா- *ரத்த சரித்திரம்,* விஷால்- *பாண்டிய நாடு, நான் சிகப்பு மனிதன்...*

இப்படிப் பல நடிகர்களாலும் மணி ரத்தினம், பி.வாசு, பாலு மகேந்திரா, பாரதி ராஜா, கே.எஸ்.ரவிகுமார் போன்ற பல இயக்குநர்களாலும் இது கையாளப்பட்டது.

நாயகனின் பழிவாங்கும் நோக்கத்தில் மாறுபட்டு, *தேவர் மகன், காக்க காக்க, வேட்டையாடு விளையாடு* போன்ற படங்கள் வில்லன்களின் பழிவாங்கும் உணர்ச்சியைப் பதிவு செய்து விறுவிறுப்பைக் கூட்டின. நாயகன், ஈயாக மாறி வில்லனைப் பழிவாங்கும் *நான் ஈ* இவற்றில் புது ரகம்தான்.

மனைவியோ, காதலியோ, தங்கையோ, அம்மாவோ வில்லன்களின் இச்சைக்கு இரையாகி இறக்க வேண்டும், இல்லை கொஞ்சம் வித்தியாசமாக யோசித்தால் ஹீரோ கருவில் இருக்கும்போதோ அல்லது குழந்தையாக இருக்கும்போதோ, அவரின் அப்பா கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும். நாயகன் பழிவாங்கும் கதைகள் பலவும் இவ்வட்டாரத்திற்குள்ளே விழுந்தன. நாயகி பழிவாங்கும் கதை என்று சொன்னாலே ஒன்று அவள் பாம்பாக இருக்க வேண்டும் இல்லை பேயாக இருக்க வேண்டும். இவை தான் தொண்ணூறுகள் வரை வெளிவந்த படங்களில் வழக்கமாகக் காணப்பட்ட பாணி.

*சுப்ரமணியபுரம்* பழிவாங்கும் கதைக்குப் புதிய வடிவத்தைக் கொடுத்தது. *சுப்ரமணியபுரம்* வெளிவரும்வரை இந்தக் கதைகள் ஒரே வட்டத்தில் விழுந்தபோதும் பல படங்கள் வெற்றி பெற்றன. *மங்கம்மா சபதம், அபூர்வ சகோதரர்கள்* இரண்டுமே தந்தையைக் கொன்ற வில்லனைப் பழிவாங்கும் நாயகனின் கதைகள்தான். ஆனால் *அபூர்வ சகோதரர்கள்* அமோக வெற்றி. *மங்கம்மா சபதமோ* தோல்வி. காரணம் என்ன?

மங்கம்மாவின் மகன் அசோக் வலியவன் சண்டைபோடக் கற்றுக்கொண்டு சிறு வயதிலிருந்தே வஞ்சத்துடன் வளர்கிறான். அசோக் எப்படியும் வில்லனைச் சாய்த்திடுவான் என்று படம் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் தெரியும். அதனால் இந்தக் கதையில் சுவாரசியம் குறைவு. ஆனால் அப்பு அப்படியல்ல. உடல் ஊனமுற்ற ஒருவன், தன் காதலி மணமுடிக்கும் சோகத்தில், தன் அம்மாவே தன்னை ஏளனமாகப் பார்ப்பதாக எண்ணி உயிர் துறக்கப் பார்க்கிறான். "குள்ளமாகப் பிறந்தது என் தப்பம்மா? நீங்ககூட எனக்குக் குறை இருக்குன்னு சொல்லிட்டீங்களே?" என்று அழும் மகனிடம் - "இது உன் தப்பு இல்லடா, நிறைமாதமா இருந்த என்னை விசம் குடிக்க வைத்த அந்தப் பாவிகளுடைய தப்பு" என்று பின் கதையைக் கூறுகிறாள் தாய். அப்போது கண்ணீர் சிந்திய அப்புவின் கண்களில் வஞ்சம் பிறக்கிறது. இடைவேளை வருகையில் திடகாத்திரமான தந்தையை வீழ்த்திய வில்லன்களை, ஒரு பொடியன் எப்படி வீழ்த்தப் போகிறான் என்ற கேள்வியும் திரையில் வைக்கப்படுகிறது. கதையின் இந்த முடிச்சினால்தான் *அபூர்வ சகோதரர்கள்* வெற்றி பெற்றது. அப்பு கதாபாத்திரம் சாதாரண மனிதனாக அமைந்திருந்தால் இப்படம் அந்த அளவு ஈர்த்திருக்காது.

இப்படிப்பட்ட நாயகனால் எப்படிப் பழிவாங்க முடியும்? இது சாத்தியம்தானா என்ற சந்தேகமும் எதிர்பார்ப்பும் படம் பார்க்கும் ரசிகர்கள் மனதில் உருவாக வேண்டும். அப்படி உருவாகிவிட்டால் அது வெற்றிகரமான திரைக்கதை மட்டுமல்ல, வெற்றிபெறும் திரைக்கதையும் கூட.

*பாண்டிய நாடு* பார்க்கும்பொழுது இடைவேளை வரை நாயகனின் கதை சொல்லப்பட்டு வில்லனின் செயலால் அவன் குடும்பம் சிதைவதைக் கண்டு வெகுண்டெழுகிறோம். இனி இடைவேளைக்குப் பிறகு பயந்த சுபாவம் கொண்ட நாயகனின் வேட்டை எப்படி அரங்கேறுகிறது என்ற படபடப்பில்தான் படத்தின் வெற்றி அமைந்திருந்தது. பழிவாங்கும் உணர்வு அன்றிலிருந்து இன்றுவரை மாறவில்லை. ஆனால் யாரால் எப்படி அது அரங்கேறுகிறது என்பதைப் பொறுத்தே இதன் வெற்றி அமைகிறது.

நியாயமான கோபம், கடக்க முடியாத தடைகள், போராடிய பின்னர் கிடைக்கும் வெற்றி. இந்தச் சூத்திரத்தைப் பயன்படுத்தினால் பழிவாங்கும் படம் போட்ட முதலீட்டைப் பலி வாங்காது.



உலக நடப்பு

# புடினின் நண்பர்கள் மீது கெடுபிடிகளை மேற்குலகு நெருக்குகின்றது

■ ரெங்கன்

கிழக்கு உக்ரேனில் வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் குளிர் யுத்த தந்திரோபாயங்களை நிறுத்திக் கொள்ளுமாறு ரஷ்யாவை வலியுறுத்துவதற்கு அமெரிக்கா புது பொருளாதாரத் தடைகளை அந்த நாட்டின் நண்பர்கள் மீது விதிக்கத் தொடங்கியிருக்கிறது

ரஷ்ய அதிபர் புடினின் நண்பர் இகோர் செசின், றொஸ்னெப்ட் எண்ணெய் நிறுவனத் தலைவர் போன்றவர்களின் விசா நிராகரிப்பு, சொத்து முடக்கம் போன்ற செயற்பாடுகள் உள்நாட்டிலும் கூட ஒபாமாவின் விமர்சகர்களால் குறை கூறப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியமும் கூட தமது தடைப்பட்டியலில் 16 ரஷ்ய மற்றும் உக்ரேனிய பிரமுகர்களின் பெயர்களை சேர்த்துக் கொண்டுள்ளது. இந்தப் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிகின்றது.

கடந்த மாதம் கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டதைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளுடன் இந்தப் புதிய தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்தத் தடைகள் கிழக்கு உக்ரேனில் பெரிதாக எதுவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை. அப்பகுதியில் ரஷ்ய சார்பு குழுக்கள் சில ஜேர்மனியர்கள் மற்றும் இராணுவ அவதானிப்பாளர்களை நான்கு நாள்களுக்கு மேலாக பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க நடவடிக்கைகள் தற்போது பொதுவில் அதிபர் புடினின் நெருங்கிய நண்பர்களையே குறிவைப்பதாக இருக்கின்றன என்று வோஷிங்டனில் அதிகாரிகள் கூறினார்கள். செசின் உட்பட 7 நபர்கள் குறி வைக்கப்பட்டுள்ளன. இவர்களின் விசா இரத்து செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமுள்ள அமெரிக்க சொத்துகளும் முடக்கப்படவிருக்கின்றன. அந்த வகையில் 17 நிறுவனங்களும் குறிக்கப்பட்டுள்ளன. புடினுக்குப் பின்னால் செல்வதல்ல இதன் நோக்கம் என்று தெரிவித்துள்ள அதிபர் பராக் ஒபாமா, அவர் இப்போது மேற்கொண்டுள்ள காரியங்கள் ரஷ்ய பொருளாதாரத்தின் மீது காலப் போக்கில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அவைகளை மாற்றிக் கொள்ளும்படி செய்வதுதான் என்று கூறினார்.

**மேலும் அதிக இடங்களில் ஆக்கிரமிப்பு**

ரஷ்யா மீது மேற்கு நாடுகள் தமது பொருளாதார நெருக்குதலை இறுக்கிக் கொண்டு வரும் அதேவேளை ரஷ்ய சார்பு ஆயுததாரிகள் மேலும் அதிகமான கட் டடங்களை தம் வசப்படுத்தியுள்ளனர். உக்ரேனின் கிழக்குப் பகுதியில் ரஷ்ய எல்லைப் பகுதி தொழில் வள நகரங்களின் மீதான பிடியை கீவ் அதிகாரிகள் இழந்து வருவதை இது காட்டுவதாகக் கூறப்படுகின்றது. உக்ரேனின் கிழக்குப் பகுதி நகரான சுமார் 300,000 மக்கள் வாழும் ஹோர்விகாவில் புதன்கிழமை அதிகாலையில் வந்து சேர்ந்த ஆயுதம் தரித்த நபர்கள் அதிகாரத்தை தம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள் என்று ராயிட்டர் படப்பிடிப்பாளர் ஒருவர் கூறினார்.

இந்த ஆயுததாரிகள் ஏனைய இடங்களில் காணப்பட்ட அதே 'பச்சை' மனிதர்கள் தாம் என்று கூறப்பட்டது. அவர்களின் சீருடைகளில் அவர்கள் பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லையாம். இதேபோன்ற தடிகள், சங்கிலிகளுடன் வந்து சேர்ந்த நபர்கள். டொன்பாஸ் என்ற நிலக்கரி மற்றும் உருக்கு சுரங்கப் பகுதிகளைக் கைபற்றிக் கொண்டார்கள். அல்செவ்ஸ்க் என்ற இடத்தில் சுமார் 30 பேர் அடங்கிய குழுவினர் அந்த நகரின் சபை கட்டடத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

**புடினின் நோக்கம்**

ராணுவ பலவந்தம் இல்லாமலே முழு உக்ரேனையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே விளாடிமிர் புடின் நோக்கம் என்று ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஜோஸ் மனுவல் பரஸோ வாஷிங்டனில் கூறினார்.

ரஷ்யாவின் செயற்பாடுகள் சர்வதேச சட்டங்களை மீறுவதாக இருப்பதாகவும் அவர் கூறினார்



# எகிப்திய பிரமிட் மர்மம் துலங்கியது

எகிப்தியர்கள் பிரமிட் கட்டடங்களை கட்டி முடிப்பதற்குப் பயன்படுத்தியுள்ள இலகு முறைகளில் ஒன்றை இப்போது ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

பிரமிட்டுகளை நிர்மாணித்து முடிப்பதற்கு பெரும் பாறைக் கற்களை எவ்வாறு தொழிலாளர்கள் கொண்டு சென்றிருப்பார்கள் என்பது இவ்வளவு காலமாக மர்மமாகவே இருந்து வந்துள்ளது. ஈரமான மணல் என்பதுதான் அவர்கள் கண்டுபிடித்துள்ள மர்ம இரகசியம்.

பிரமிட்டுகளை கட்டி முடிப்பதற்கு பெரிய கற்களையும் சிலைகளையும் பாலைவனத்துக்கூடாக அவர்கள் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. என்று தெரிவித்துள்ள ஆராய்ச்சியாளர்கள் பாலைவனத்தினூடாகக் கொண்டு செல்ல வேண்டிய மிகப் பெரிய கற்களையும் கற்சிலைகளையும் பெரிய இழுவை அமைப்புகள் மீது வைத்து ஈரமான மணலின் மீது இழுத்துச் சென்றுள்ளார்கள். ஈரமான மணல் திட்டுக்களின் மீது பாரமான பொருள்களை வைத்து இழுத்துச் செல்வது அவர்களுக்கு சுலபமாக இருந்துள்ளது.

ஆய்வாளர்கள் இதனைத் தாமே செய்து பார்த்திருக்கிறார்கள். மணலில் ஏற்படும் போதிய அளவிலான ஈரத்தன்மை அதன் மீது வைத்து இழுக்கப்படும் பொருளை இழுப்பதற்கான சக்தியை அரைப்பங்கு குறைத்து விடுகிறது என்பது அனுபவத்தின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# பெண்
## சவால்களை எதிர்கொண்டு சமாளிப்பவள்

தட்சா.ஜோ

பெண் இல்லாத வீடும், வீடு இல்லாத பெண்ணும் மதிப்பிழந்தவையாகவே காணப்படும். இது நமது நாட்டுப் பழமொழி அல்ல. பாலஸ்தீனப் பழமொழி ஆகும். இருந்தாலும் அது நமக்கும் பொருந்துவதாக உள்ளது.

'பெண் இறைவனின் படைப்புக்களில் எல்லாம் அழகானது, மேலானது' என்பது மில்டனின் கருத்தாகும். இவை தவிர 'எந்த வீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகிறார்களோ, அங்கு தேவதைகள் குடியேறும்' என்றும் கூறுவார்கள். 'ஒரு பெண்ணைப் படிக்கவைப்பது ஒரு குடும்பத்தையே படிக்க வைப்பதற்கு நிகரானது', 'பெண்ணே மனிதனின் உயர்ந்த செயல்கள் எல்லாவற்றுக்கும் விளக்கானவள்' , 'உலகத்தின் உன்னதமானவள் பரிபூரணம் அடைந்த பெண்ணே', அவதூறு நல்ல பெண்ணின் வீட்டுவாசலில் பலமிழந்து மாய்ந்து விடுகிறது', 'பெண்ணின் மடியில் இறையன்பு வளர்கிறது', 'பெண் இல்லாத வீடும் வீடு இல்லாத பெண்ணும் மதிப்பில்லாதவை', வாழ்க்கை என்ற ஆற்றை, கடலைக் கடப்பதற்கு பெண் என்ற படகோ, கப்பலோ அவசியம் தேவை', 'பெண்ணின் அன்பும் பரிவும் எங்கு இருக்கிறதோ அங்கு பணிவும் பண்பும் அடக்கலமாகும்', 'பெண்ணின் வாழ்வு அன்பின் சரித்திரமாகும்', 'ஆணை அடக்கிப் பண்படுத்தவே ஆண்டவன் பெண் பிறவியைப் படைத்திருக்கிறான்', 'ஒரு நாட்டில் பெண்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களோ அவ்வளவு தூரம் அந்நாடு முன்னேறும்', 'காற்றை விட கடும் வேகம் கொண்டது பெண்ணின் எண் ணம்', 'அறிவின் தாயகமாய், அருள் நிறைந்த உள்ளமாய் இருப்பவள் பெண்', 'பெண்ணுரிமை இல்லாத நாடு காற்றில் லாத வீடு', 'சகிப்புத் தன்மையில் வலிமை மிகுந்தவள் பெண்', 'அன்பு செய்யும் பெண்ணின் நெஞ்சம் எப்போதும் இளமையு டையது', 'ஆண் தனக்குத் தெரிந்த தைத் சொல்வான், ஆனால் பெண் தனக்கு மகிழ்ச்சி அளிப்பதைத்தான் சொல் வாள்', 'பெண்கள் யாரை மனதால் காதலிக்கி றார்களோ அந்த ஆண்கள் அந்தப் பெண்கள் எதிரில் பச்சைக் குழந்தைகளாகி விடுவர்' இப்படியாக பல அறிஞர்கள் பெண்கள் பற்றிப் பலவாறு எழுதி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால் பெண்கள் இன்று இப்படியா இருக்கின்றார்கள் என்பது சிந்தனைக் குரியதாகவே உள்ளது.

'பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள். ஆனால் பெரும் புயலிலும் அவள் ஒடிந்து விழமாட்டாள்' என்று வேட்லி குறிப்பிட்டுள் ளதைக் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். நாம் எதற்கும் துவண்டு விடக்கூடாது என்று தினமும் காலையில் எழுந்தவுடன் சிந்தித்தாலே எம்மை அறியாமல் ஒரு கம்பீரம் நமக்குள் வருவதை உணர முடியும்.

'பெண்ணின் இதயம் அவளுடைய உதடுகளில் இருக்கிறது ஆனால், அவளுடைய ஆன்மாவோ அவளுடைய கண்களில் இருக்கிறது' பெண்களது வாழ்க்கை சவால்களுடன் பயணிக்கிறது என்பதைப் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். பெண்கள் கலாசாரம், சமூக பொருளாதாரம், சடங்கு, சம்பிரதாயங்கள் எனப் பல சவால்களைச் சந்திக்கின்றார்கள்.

ஆனால் இவைகளைப் பெண்கள் விரும்பி ஏற்றுக் கொண்டனரா? அல்லது அவர்கள் மீது திணிக்கப்பட்டனவா? ஒரு சில ஆண்களைப் பொறுத்தவரை பெண் என்பவள் பிள்ளை தயாரிக்கும் இயந்திரம், வீட்டைக் கவனித்தல், ஆணின் கீழ் அடங்கி அவனது தேவைகளைப் பூர்த்தி செய்பவள் போன்ற எண்ணங்களே உருப் பெற்றுள்ளன. இவர்களாலேயே ஆணாதிக்க சிந்தனைகள் மேலோங்கியிருக் கின்றது. இதை உடைத்தல் என்பது பெண்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.

பெண்கள் இன்று தமது பாதையில் வெகுதூரம் பயணித்து விட்டார்கள். கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தாலும் அவர்கள் உடல், உள, சமூக ரீதியாக எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பல. ஆண்கள் அவற்றைக் கருத்தில் கொள்வதில்லை. பெண்கள் தொழில் புரியும் நிலை இன்று காணப்படுகின்றது. ஆனாலும் ஆணைச் சார்ந்து இருக்கும் சூழலும் காணப்படுகின்றது. அதாவது திருமணம் செய்த பின்னர் பெண்கள் வேலைக்குச் செல்வதைப் பல கணவர்மார் நிறுத்தி விடுகிறார்கள். பிள்ளையைப் பார்க்க வேண்டும், வீட்டைக் கவனிக்க வேண்டும் எனப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

உறவுகள் கடமைக்காகவும் சமுகக்கட்டமைப்புக் களுக்காகவும் தீர்மானிக்கப்படாமல் ஆண் - பெண் உறவின் மூலமாகத் தீர்மானிக்கப்பட வேண்டும். சில ஆண்கள் பெண் விடுதலை, சீதனம் தொடர்பாக எழுது கிறார் கள், பேசுகிற ார்கள் ஆனால் அவர்கள் திருமணம் செய்யப் போகும் பெண்களை மட்டும் அவர்க ளுக்கு அடங்கி நடப் பவர்களாகத் தெரிவு செய்கிறார்கள். அதிக சீதனம் வாங்குகிறார்கள். அவர் களின் எழுத்துக்கள் பத்தி ...கையோடும் பேச்சுக்கள் காற் ...றோடும் போய் விடுகின்றன. ...ண் ணின் பலவீனமே அன்பு ...ள். அன்பை அன்போடு நிறுத் ...ல் அடிமையாக்கு கின்றனர். ...னால் ஆணாதிக் கவாதிகள் ... காதல் என்ற போர்வையில் ...டித்தது போதும், வேலைக் ... போகத் தேவையில்லை, ... மணம் முடிந்த பின்னர் ...து அம்மாவைப் பார் என்று ...கிறார்கள். இவர்கள் பெண் ...ளை அடிமைகளாக வைத்துக் ...ண்டு அவர்களுக்கு சுதந்திரம் ...கொடுத்து விட்டோம் என்று கூறு பவர்கள். இவற்றிலிருந்து பெண் கள் விடுதலை அடைவதென்பது பெரும் சவா லாகவுள்ளது.



ஆண்கள் சற்றுச் சிந்திக்கவேண்டும். ஒவ் வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள். இல்லை என்று சொல்லு வீர்களேயானால் அது போலியான திமிர்க்கு ணமாகும். ஏனெனில் பெண்களிடமிருந்து ஆண்கள் நிறையக்கற்றுக் கொள்கின்றனர். உதாரணமாக அம்மாவையே எடுத்துக் கொள்ளலாமே! அம்மாவிடமிருந்து தான் இதைக் கற்றுக் கொண்டேன் என்று பல ஆண்கள் கூறுவார்கள். இவ்வாறு அம்மா என்று சொல்லப்படுபவர் யார் என்று பார்த்தால் அது பெண் தான். மேலும் அம்மாவிடமிருந்து மட்டும் கற்றுக் கொள்வதில்லை. அம்மாவைப் போன்று வேறு பல உறவுமுறைகளில் உள்ள பெண்களிடமிருந்தும் பலவற்றை ஆண்கள் கற்றுக் கொள்கின்றனர். எனவேதான் சில ஆண்கள் எந்த ஒரு இடத் திலும் பெண்களுக்கு மதிப்பளிக்கின்றனர். பெண் களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக் கின்றனர். இத்தகைய பெண்களிடம் இருந்து எப்போதும் நல்லதை மட்டும் கற்றுக் கொள்ள முயல் வதில்லை.



> பெண்கள் இன்று தமது பாதையில் வெகுதூரம் பயணித்துவிட்டார்கள். கட்டுப்பாடுகள் தளர்த் தப்பட்டிருந்தாலும் அவர் கள் உட, உள, சமூக ரீதியாக எதிர்கொள்ளும் பிரச் சினைகள் பல. ஆண்கள் அவற்றைக் கருத்தில் கொள் வதில்லை.

மலருக்குக் கொடுக்கப்படும் அழகு எவருக்கும் இறைவனால் வழங் கப்படுவதில்லை. அதே மலரின் இதழை உதிர்த்து அதன் அழகைக் கலைத்து இறை வனுக்கு பூஜிக்கும் போது அது புனித மடைகிறது. பெண் ணும் அந்த மலரைப் போன்றவள்.

அவள் அழகு, குடும் பம் என்ற கோயி லுக்குள் சேர்க்கப் படும்போது உயர்வு பெறும். கணவன் என்றும் குழந்தை என்றும் தியாகம் என்றும்கடமை என் றும் அவள் அழகை இதழ் இதழாகப் பிரித்து அர்ச்சிக்கும் போது தான் அவள் புனிதமடைகிறாள். பட்டாம்பூச்சியின்சிற கசைப்பின் மென் மையும் கல்லின் உறு தியும் ஒன்று சேர்ந்து இருப்பது தான் பெண். அதைப் பெண்களும் தெரிந்து கொள்ள வேண் டும். ஆண்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

## பெண்ணே எதைத் தேடுகிறாய்...!



பெண்ணே !எதைத் தேடுகிறாய்?
நீ இழந்ததையா?
தேடிக் கொண்டேயிரு

உனது வளர்ச்சியை
எண்ணிக் கலங்கவில்லை
உனது நிலையை
எண்ணி ஏங்குகிறாயா?

நாகரிக மோகத்தில்தொலைந்த உனது
முகவரியைப் புதிப்பித்து
நடை பயிலஎழுந்து நீ வா
பெண்ணே !

மென்மையில்லாத பெண்மை
உயிரற்ற பொம்மை போன்றது
உனது இதயக் கதவை
ஒரு முறையாவது திறந்து
பார்பெண்ணே !

நீ உடுத்தும் உடையில்
தமிழ்ப் பண்பாடு
எங்கே போனது?
கண்ணில் பூசும் மை
உதட்டில் பூசும் சாயம்- இவை
உனது அழகின்
தோற்றக் கானல்களே !

பெண்ணே !கண்களில் கருணை
உதட்டில் புன்னகை
கனிவான வார்த்தை
இவை பெண்மைக்கேயுரித்தான
இறைவனின் கொடை

அதைப் புரிந்தும்
புரியாதது போல்
நாகரிக மோகத்தில் - உன்னைத்
தொலைத்துவிட்டு
பெண்ணே எதைத் தேடுகிறாய்?
தேடு .. தேடு.. தேடிக்கொண்டேயிரு.. !

*த.நி.ஷனா ஓட்டுமடம்.*

# சிறந்த வீரர் விருது லூயிஸ் சுவாரெஸுக்கு



இங்கிலாந்து தொழிற்சார் உதைபந்தாட்ட வீரர்கள் சங்கத்தினால் வருடத்தின் சிறந்த உதைபந்தாட்ட வீரராக லிவர்பூல் கழக வீரர் லூயிஸ் சுவாரெஸ் தெரிவாகியுள்ளார்.

உருகுவே நாட்டவரான லூயிஸ் சுவாரெஸ், தற்போது நடைபெறும் இங்கிலாந்து பிறீமியர் லீக் போட்டிகளில் லிவர் பூல் கழகத்தின் சார்பாக 30 கோல்களை அடித்துள்ளதுடன் மேலும் 12 கோல்களை அடிக்க உதவினார். இச்சுற்றுப்போட்டியில் லிவர் பூல் கழகத்தின் இன்னும் இரு போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் அவர் 30 கோல்களை அடித்துள்ளார்.

அதேவேளை பிரேஸிலில் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் உருகுவே அணிக்குத் தலைமை தாங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லிவர்பூல் கழகத்தின் பிரபல வீரர்களான ஸ்ரீபன் ஜெரார்ட், டானியல் ஸ்டுரிட்ஜ் மற்றும் செல்ஷி கழக வீரர் ஈடன் ஹஸார்ட், மன்செஸ்ரர் சிற்றி வீரர் யாயா டோர், அடம் லலானா ஆகியோரை விஞ்சி இவ் விருதை லூஜிஸ் சுவாரெஸ் வென்றுள்ளார்.

பிறீமியர் லீக் போட்டிகளில் தலைசிறந்த வீரர்கள் பலர் உள்ள நிலையில் இவ்விருதை தான் வென்றமை பெரும் கௌரவமாகும் என அவர் கூறியுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் போட்டியொன்றின்போது செல்ஷி கழக வீரர் பிரானிஸ்ஷாவ் இவானோவிக்கின் கையைக் கடித்ததால் 10 போட்டிகளில் பங்குபற்ற சுவாரெஸுக்குத் தடை விதிக்கப்பட்டது. எனினும் தான் பங்குபற்றிய போட்டிகளில் மிகச் சிறப்பாக விளையாடி கோல்களைக் குவிப்பதில் அவர் ஆர்வம் செலுத்தினார். (த)

# இலங்கைக்கு எதிரான இனவெறி வார்த்தைகளே எனது மிகப்பெரிய தவறு



இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு எதிரான இனவெறி வார்த்தைகளே எனது வாழ்க்கையின் மிகப் பெரிய தவறு என ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய பயிற்றுநருமான டரன் லீஹ்மன் தெரிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டில் இலங்கைக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்த லீஹ்மன் வீரர்கள் அறையில் வைத்து இனவெறி வார்த்தைப் பிரயோகத்தினை மேற்கொண்டிருந்தார். இது அப்போது பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் தற்போது மிச்செல் ஜோன்ஸன் முதல் டேவிட் வோர்ணர் வரையிலான பல்வேறுபட்ட வீரர்களைக் கொண்ட ஆஸ்திரேலிய அணிக்குச் சிறப்பாக பயிற்சியளித்து வருகிறார் டரன் லீஹ்மன்.

இந்நிலையில் பேட்டி ஒன்றில் கலந்துகொண்டபோது சுமார் 11 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற மேற்படி சம்பவத்தை லீஹ்மன் நினைவுகூர்ந்துள்ளார். இது குறித்து லீஹ்மன் கூறுகையில், இது எனது வாழ்க்கையின் மிகப்பெரிய தவறாக இருந்தது. அன்றிரவே இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார(அப்போது ஜயசூரிய தலைவராக இருந்தார்) மற்றும் இலங்கை அணியிடம் மன்னிப்புக் கோரினேன்.

அவர்கள் என்னை மன்னித்து விட்டார்கள் என நம்புகிறேன். இது குறித்து நான் நேர்மையாக பேசினேன். இந்த வியடம் எனது பெரிய தவறாக இருந்தது. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இது முக்கிய பாடமாகும். வீரர்கள் தவறுகள் செய்வது பரவாயில்லை இரு தடவைகள் செய்யக்கூடாது' எனத் தெரிவித்துள்ளார். (த)

# பிரீத்தி ஜிந்தா பரம ஏழையாம்

ஐ.பி.எல். உரிமையாளர்களில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர் நடிகை பிரீத்தி ஜிந்தா ஏழ்மையானவர் என ஆங்கில பத்திரிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் முக்கியப் பங்குதாரர் பிரீத்தி ஜிந்தா தான். ஆனால் பிரீத்தி ஜிந்தா மட்டுமே எட்டு ஐ.பி.எல். உரிமையாளர்களின் சொத்துக்களை விட கொஞ்சமாக வைத்திருப்பவர்.

பிரீத்தி ஜிந்தாவின் சொத்து மதிப்பு 30 மில்லியன் டொலர்தான. அதாவது இந்திய மதிப்பிற்கு ரூபா 183 கோடி.

முதலிடத்தில் உள்ளவர் மும்பை இந்தியன்ஸ் அணி உரிமையாளரான முகேஷ் அம்பானி. இவரின் சொத்து மதிப்போ ரூபா 1.29 லட்சம் கோடியாகும்.

2ஆவது இடத்தில் இருப்பவர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி உரிமையாளரான கலாநிதி மாறன். இவரது சொத்து மதிப்பு ரூபா 13 ஆயிரத்து 340 கோடியே. 80 லட்சமாகும். றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் விஜய் மல்லையா 840 மில்லியன் டொலருடன் 3ஆவது இடத்தில் இருக்கிறார். இவர் வங்கிகளுக்குக் கட்ட வேண்டிய கடன் தொகை ரூபா 7000 கோடி என்பது குறிப்பிடத்தக்கது. (த)



# 46 வருடத்தின் பின் இலங்கையில் சர்வதேச குத்துச்சண்டைப் போட்டி



பத்து நாடுகளின் குத்துச் சண்டை வீர, வீராங்கனைகள் பங்குபற்றும் லயன்ஸ் கிண்ண சர்வதேச குத்துச்சண்டை போட்டிகள் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் ஆரம்பமாகின.

லயன்ஸ் கிண்ண சர்வதேச குத்துச் சண்டைப் போட்டி ஒன்று இலங்கையில் நடைபெறுகின்றது. 1948 இல் இலங்கையில் ஆசிய குத்துச்சண்டை வல்லவர் போட்டி நடைபெற்றபோது எச். ஏ. கருணாரட்ன தங்கப் பதக்கம் சுவீகரித்ததாக தனது ஆரம்ப உரையில் போட்டி ஏற்பாட்டுக் குழுத் தலைவர் டயான் கோமஸ் தெரிவித்தார்.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மேஜர் ஜயலத் ஜயசூரிய, இலங்கை ஆமெச்சூர் குத்துச் சண்டை சங்கத் தலைவர் ஒப்ரிபீரிஸ், போட்டி ஏற்பாட்டுக் குழுத் தலைவரும் இலங்கை ஆமெச்சூர் குத்துச்சண்டை சங்கப் பொருளாளருமான டயான் கோமஸ் ஆகியோர் முறையே தேசியக் கொடி, குத்துச் சண்டை சங்கக் கொடி, லயன்ஸ் கிண்ணக் கொடி ஆகிய வற்றை வைபவரீதியாக ஏற்றிவைத்து போட்டிகளை ஆரம்பித்துவைத்தனர்.

ஆரம்ப விழாவில் போட்டிகளில் பங்குபற்றும் ஆஸ்திரேலியா, பெல்ஜியம், சைனீஸ் தாய்ப்பே, இந்தோனேஷியா, தென்கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட குத்துச்சண்டை வீர, வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர்.

இப் போட்டிகளில் இலங்கை சார்பாக ஏழு வீரர்களும், 3 வீராங்கனைகளும் பங்குபற்றுவதுடன் இரண்டாம் நிலை வீர, வீராங்கனைகளும் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த)



கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் ஐ.பி.எல். சூதாட்டத்தால் விளையாட தடை விதிக்கப்பட்டதை தொடர்ந்து, நடிகர் மற்றும் இசையமைப்பாளராக மாறி சினிமா வாழ்க்கையில் குதித்துள்ளார்.

கடந்த ஐ.பி.எல். போட்டிகளில் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதோடு கிரிக்கெட் விளையாடவும் தடை விதிக்கப்பட்டது. மேலும் இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்தில் நீடித்த நிலையில் உள்ளது. கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்பட்டதை அடுத்து என்ன செய்யப்போகிறார் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் ஸ்ரீசாந்த் நடிகர் மற்றும் இசை அமைப்பாளராக மாறியுள்ளார்.

நான் ஈ பட வில்லன் சுதீப் நடிக்கும் புதிய கன்னட படமொன்றில் நடிக்க ஸ்ரீசாந்துக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதுதவிர எஸ் 36 என்ற இசைக் குழு ஒன்றையும் உருவாக்கியுள்ளார். இதன் மூலம் பாடல் அல்பம் ஒன்றை சமீபத்தில் வெளியிட்டுள்ளார்.

சினிமாபடங்களுக்கு இசை அமைக்க முடிவு செய்துள்ள ஸ்ரீசாந்துக்கு அவரது மைத்துனரும், பாடகருமான மது பாலகிருஷ்ணா உடனிருந்து உதவி வருகிறார். மலையாள படங்களில் நடிக்கவும் ஸ்ரீசாந்துக்கு அழைப்பு வந்துள்ளது. தமிழ் படத்தில் நடிக்கவும் அவர் சில இயக்குநர்களுக்கு தூதுவிட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளது. (த)

# கிரிக்கெட் இல்லன்னா இருக்கின்றது சினிமா

# அரசியல் சதுரங்கம்



## வடக்கு முதல்வரின் கருத்தால் மீண்டும் சர்ச்சை

(அரசியல் ஆசிரியர்)

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரனைக் கொண்டு வருவதில் ஆரம்பித்த சர்ச்சைகள், அவர் வேட்பாளராகி வெற்றி பெற்று முதலமைச்சராகிய பின்பும் ஓயாமல் இருக்கின்றன.

அவரது பேச்சுகள் அடிக்கடி சர்ச்சைகளைக் கிளப்பிவிடுகின்றன.

வேட்பாளராக நியமிக்கப்பட்டவுடன், கணவன் - மனைவி பிரச்சினையில் வெளியார் தலையிடத் தேவையில்லை என்று தமிழ்நாட்டு விவகாரத்தில் தெரிவித்திருந்தார். இலங்கை அரசுக்கும் - தமிழ் மக்களுக்குமான பிரச்சினையில் வெளித் தரப்புகள் தலையிடத் தேவையில்லை என்ற அர்த்தப்பட அதனைக் குறிப்பிட்டிருந்தார். அது ஒரு சர்ச்சையாகியது.

பின்னர் வடமராட்சியில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனை மாவீரன் என்று இவர் புகழ்ந்து தள்ளியது தெற்கில் பெரும் எதிர்ப்பலைகளை உருவாக்கியது. காரசாரமான பதில்களை சிங்களக் கடும்போக்காளர்கள் அதற்கு கக்கித் துப்பினர்.

அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வில் அவர் ஆற்றிய உரை மீண்டும் ஒரு சர்ச்சைய்யைத் தோற்றுவித்திருக்கின்றது.

"ஒரு காலத்தில், பிரபாகரனும் கேட்பார் இன்றி அதிகாரத்தில் இருந்தவர்தான். இதை ஏன் ஜனாதிபதி (மஹிந்த ராஜபக்ஷ) புரிந்து கொள்ள மறுக்கின்றார்" என்று அந்த உரையின் நடுவே அவர் தெரிவித்திருந்தார். அவரது கூற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சர்வாதிகாரியாக இருந்தார் என்று அர்த்தப்பட இருந்தது. உடனேயே கூட்டத்துக்குள் சலசலப்பு எழுந்தது.

தனது உரையை முடித்த முதலமைச்சர் சற்று நேரத்தில் - நிகழ்வு முடிவதற்கு முன்னதாகவே - கூட்டத்திலிருந்து வெளியேறியிருந்தார். அவர் வெளியேறும் போது அங்கு நின்ற இளைஞர்களில் சிலர், "தேர்தலுக்கு முன்னர் வல்வெட்டித்துறையில் பிரபாகரன் மாவீரன், தேர்தலுக்குப் பின் சாவகச்சேரியில் சர்வதிகாரியா" என்று சத்தமிட்டனர் என்று கூட்டமைப்பு உறுப்பினர்களே தெரிவித்தனர்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது இராணுவம் - இராணுவப் புலனாய்வாளர்கள் என்று சகல தரப்புக்களின் அச்சுறுத்தலையும் தாண்டி கூட்டமைப்பின் வெற்றிக்காக பாடுபட்டதற்கு முதலமைச்சர் செய்யும் நன்றிக்கடன் இதுதானோ என்றும் அவர்கள் கொஞ்சம் காரசாரமாகவே கேள்வி எழுப்பினர்.

வடக்கு முதலமைச்சர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பற்றிக் கூறியதற்காக பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்று சில அரச அதிகாரிகளே பத்திரிகையாளர்களிடம் கண்டிக்கும் நிலையும் ஏற்பட்டது. மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் பல்வேறு அழுத்தங்களுக்குள்ளாக்கியுள்ள தாங்கள், கூட்டமைப்புக்கு வாக்களித்தது இவ்வாறு பேசுவதற்காக அல்ல என்றும் அவர்கள் கொந்தளித்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சிதான் கூட்டமைப்பு என்பது இப்போது முதலமைச்சருக்கு மறந்துபோய்விட்டதோ என்றும் அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

ஆனால் முதலமைச்சரோ இது சர்ச்சைக்குரிய விவகாரமே இல்லை என்கிறார்.

"அலெக்சாண்டர் ஒரு மகாவீரன். அதற்காக அவன் அதிகாரங்கள் அனைத்தையுந் தன் வசம் வைத்திருக்கவில்லை என்று கூறமுடியாது. பிரபாகரன் ஒரு மகாவீரன் என்று சரத்பொன்சேகாகூட அண்மையில் கூறியிருந்தார். அதற்காக அவர் அதிகாரங்கள் அனைத்தையும் தன்வசம் வைத்திருக்கவில்லை என்று கூறமுடியாது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 18ஆவது திருத்தச் சட்டத்தின் பின் அதிகார[illegible] அனைத்தையுந் தன்வசமே வைத்[illegible]றார். இன்று கேட்பாரின்றி அதிகாரத்[illegible] இருக்கின்றார். இவை எவ்வளவு காலத்திற்கு என்பதைப் பற்றி ஜனாதிபதி சிந்திக்க வேண்டும் என்றே மேற்கண்டவாறு கூறினேன்" என உதயன் பத்திரிகைக்கு விளக்கமளித்து இந்தச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் முதலமைச்சர்.

விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமான தொடர்பு, உறவு என்பன மானசீகமானது என்ற நிலையில் புலிகள் பற்றிய எந்தவொரு கருத்தும் பலரையும் சடக்கென உணர்ச்சிவசப்படுத்தி விடுகிறது. அந்த வகையில்தான் முதலமைச்சரின் கருத்துக்களும் சர்ச்சையை ஏற்படுத்தி விடுகின்றன. அவர் அதிக காலம் கொழும்பில் வாழ்ந்தவர் என்பதும் அவரது பிள்ளைகள் சிங்களவர்களைத் திருமணம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் முதலமைச்சர் மீதான எதிரான கருத்துக்களைப் பரப்புவோருக்கு வாய்ப்பாகி விடுகிறது. முதலமைச்சர் பழுத்த அரசியல்வாதி இல்லை என்பதால் நெளிவு சுளிவுகள் இல்லாமல் படக்கென மனதில் பட்டதைச் சொல்லிவிடுவது அவர்களுக்கு மேலும் வசதியாகிவிடுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது. கூட்டம் கடுமையான - காரசாரமான - வாதப் பிரதிவாதங்களால் நிரம்பி வழிந்தது.

இந்தக் கூட்டத்திற்கு முன்பாக, உறுப்பினர்கள் சிலர் கொடுத்திருந்த தீர்மான முன்மொழிவுகளை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் நிராகரித்திருந்தார். அவை அடுத்த அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் தூக்கி எறியப்பட்டமையே கூட்டம் சூடுபிடிக்கக் காரணமானது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சிற்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்குவதற்கான கேள்வி கோரலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பில் விசாரைணக் குழு அமைக்கப்பட வேண்டும் எனவும், விசாரணைக் குழுவின் அறிக்கை வடக்கு மாகாணசபையில் சமர்பிக்கப்பட வேண்டும் எனவும் கோரும் தீர்மான வரைவு ஒன்றைக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈபிஆர்எல்எவ்கட்சியின்சார்பிலான உறுப்பினர் சர்வேஸ்வரன் முன்வைத்திருந் தார்.

இந்த வரைவு நடக்க இருந்த சபை அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் அவைத் தலைவரால் நிராகரிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே இந்தத் தீர்மான வரைவு குறித்து கொந்தளிக்க ஆரம்பித்திருந்தார். "இந்த விடயத்தை ஊடகங்களுக்கு யார் கொண்டு சென்றார்கள் என்பது எனக்குத் தெரியும். வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஒருவரின் எந்த மின்னஞ்சலில் இருந்து ஊடகங்களுக்கு இந்தத் தகவல் சென்றது என்பது வரையில் நான் அறிவேன்"என்றுசூட்டைக்கிளப்பினார்அமைச்சர். பின்னர் திடீரென சுருதியை மாற்றி அழுவாரைப் போலானார். தன்மீது பல்வேறு தரப்பினரும் குற்றம்சாட்டுகின்றனர் என்று குற்றஞ்சாட்டிய அவர், இதனால் தான் பதவியை விட்டு விலக எண்ணி தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை.சேனதிராஜாவுடன் கூடக் கதைத்தார் என்றும் சொன்னார். அப்போது அவரது குரல் தழுதழுக்க ஆரம்பித்து விட்டது.

அவர் இப்படி அளவுக்குமீறி உணர்ச்சி வசப்பட்டது, பல உறுப்பினர்களுக்கும் வேடிக்கையான அதேநேரத்தில் இவர் ஏன் இந்தச் சின்ன விசயத்துக்கு இப்படிக் கொந்தளிக்கிறார் என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தி விட்டது. "கொடுவரப்பட இருந்த தீர்மானம் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற மோசடி தொடர்பானது. அமைச்சர் மோசடி செய்தார் என்று அதில் எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை. அதையும்மீறி அந்த மோசடி நடந்ததோ இவர் பதவியில் இல்லாதபோது. அப்படியிருக்க இவர் ஏன் தன்னை இலக்கு வைக்கிறார்கள் என்பது போல அழ முயன்றார்?" என்று அவர்கள் கேள்வி எழுப்பத் தொடங்கிவிட்டார்கள். அவர் அப்படி நடந்துகொண்டதால் விடயம் திசை திருப்பப்பட்டுவிட்டதாகவும் அவர்கள் கருதுகிறார்கள்.

பிரச்சினையை நீடிக்க விரும்பாத முதலமைச்சர், "கடந்த காலங்களில் நடந்த பிரச்சினைகளைக் கிளற வேண்டாம். அவற்றைக் கிளறிக் கொண்டிருந்தால் எங்களது ஆட்சிக் காலம் அதிலேயே முடிந்து விடும். நடக்க வேண்டியதைப் பாருங்கள் " என்று கூறி அந்த விடயத்தை அத்துடன் முடித்துவிட எண்ணினார். ஆனால், குறிப்பிட்ட தீர்மான வரைவை முன் வைத்த உறுப்பினர் சர்வேஸ்வரன் அதனை ஏற்பதற்குத் தயாராக இருக்க வில்லை. இதனால் முதலமைச்சருக்கும் அவருக்கும் இடையில் சில காரசாரமான கருத்துக்கள் பறிமாறப்படும் நிலைமை ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் முதலமைச்சர் குரலை உயர்த்தி சத்தமிட வேண்டியும் இருந்தது.

இப்படிப்பட்ட வடக்கு மாகாண சபை பற்றிய விடயங்கள் ஊடகங்களில் வெளிவருவது குறித்துத் அவைத் தலைவரும் சற்றே குரலை உயர்த்தினார். "ஊடகங்களில் என்னைப் பற்றி எழுதுகிறார்கள். இவற்றுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்" என்று வீறாப்புக் காட்டினார் அவர். அதற்கு முன்னதாக "ஊடகங்களில் எழுதுபவற்றைப் பார்த்து நீங்கள் பயப்படுகிறீர்களா?" என்று ஒருவர்தானும் அவரிடம் கேட்டிருக்கவில்லை.

இவர் இப்படிக் கருத்துத் தெரிவித்தபோது, கூட்டத்தில் இருந்த சில உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னரான முதலமைச்சர் தெரிவின் போது இவர் நகர்த்திய காய்களைப் பற்றிய விவரங்கள் ஊடகங்களில் வெளியான போது, அதை மறுக்க சில ஊடகங்களிடம் இவர் மன்றாடியதைத் தாம் இன்னும் மறந்துவிடவில்லை என்று குசுகுசுத்துக் கொண்டனர்.

(03 ஆம் பக்கம் பார்க்க)